الصراط المستقيم

# அஸ்ஸிறாத்

## தேர்ந்தெடுக்கப்பட்டவை

**பாகம் - 01**

**நூலாசிரியர்**

அல்ஹாபிழ், அஷ்ஷைய்க்

**அப்துழ்ழாஹ் அல்ஹறரீ றஹிமஹுழ்ழாஹ்**

(வபாத் ஹிஜ்ரீ 1429, கி.பி. 2008)

بسم الله الرحمن الرحيم


| | |
|---|---|
| **நூலின் பெயர்** | *:அஸ்ஸிறாத் தேர்ந்தெடுக்கப்பட்டவை -பாகம் 01* |
| **நூலாசிரியர் பெயர்** | *:அல்-ஹாபிழ் அஷ்ஷைய்க் அப்துழ்ழாஹ் அல்-ஹறரி றஹிமஹுழ்ழாஹ்* |
| **தமிழாக்கம்** | *:இமாம் அல்-அஷ்அரீ கலாபீடம் - கொழும்பு,* |
| **பதிப்பு** | *:முதலாவது* |
| **ஆண்டு** | *:ஹிஜ்ரீ 1443 ரஜப் -கி.பி. 2022 ஜனவரி* |
| **பக்கங்கள்** | *: 178* |
| **பிரதிகள்** | *: 2000* |
| **வெளியீட்டு எண்** | *: 11* |
| **வெளியீடு** | *:இமாம் அல்-அஷ்அரீ கலாபீடம் - கொழும்பு* |
| **தொடர்புகளுக்கு** | *: 077 077 9406 – 077 232 8686* |

أخي القارئ الكريم ما كان من خطأ في ترجمتنا أرشدنا إليه فإننا لا ندعي العصمة ونحن لك من الشاكرين

**மதிப்புக்குரிய சகோதரரே! எங்கள் மொழிபெயர்ப்பில் தவறேதும் இருந்தால் அதை எமக்கு தெரியப்படுத்துங்கள். நாம் தவறிலிருந்து பாதுகாப்பை வாதிடுபவர்களல்ல. நாம் உமக்கு நன்றியுடையவர்களாக இருப்போம்.**

## தமிழாக்கம் மற்றும் பகுப்பாய்வுக் குழு

அஷ்ஷைய்க் K.R. அப்துழ்ழாஹ் மாஜித் (பஹ்ஜீ)

அஷ்ஷைய்க் M.M. அஷ்ரப் (பாஸீ B.A.)

அஷ்ஷைய்க் M.L.M. ஸப்றாஸ் (பஹ்ஜீ)

அஷ்ஷைய்க் M.R.M. ரிஸ்மீ (ரிழ்வீ)

அஷ்ஷைய்க் S.M. அஸ்வர் (மஜீதீ)

அஷ்ஷைய்க் P.T.M. கியாஸ் (அஷ்அரீ)

## பொருளடக்கம்

அல்-அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் அணிந்துரை ........ 9
இமாம் அப்துல்லாஹ் அல்-ஹறரீ றஹிமஹுல்லாஹ்வின் வாழ்க்கைச் சுருக்கம் ........ 10
முன்னுரை ........ 14
அல்லாஹ்வுக்கு அடியார்கள் செய்ய வேண்டிய கடமைகளில் மிக முக்கியமானது ........ 19
இரு ஷஹாதஹ் கலிமஹ்களின் பொருள் ........ 23
இஸ்லாமிய கடமைகளைச் செய்யப் பணிக்கப்பட்ட ஒவ்வொருவர் மீதான கடமை ........ 26
இஸ்லாமன்றி வேறு உண்மையான மார்க்கம் எதுவுமில்லை ........ 28
யதார்த்தத்தில் இஸ்லாத்திற்கு முரண்பட்டவராக வார்த்தை ரீதியில் இஸ்லாத்தை வாதிடுபவரின் சட்டம் ........ 31
நம்பிக்கை சார்ந்த குப்ர்: ........ 34
செயல் சார்ந்த குப்ர்: ........ 35
சொல் சார்ந்த குப்ர்: ........ 35
சொல் சார்ந்த குப்ரிலிருந்து விதிவிலக்கானவை ........ 39
வாய் தவறும் தருணம்: ........ 39
பகுத்தறிவு நீங்கும் தருணம்: ........ 39
வற்புறுத்தப்படும் தருணம்: ........ 39
பிறரின் குப்ரை அறிவிக்கும் தருணம்: ........ 40
ஒரு மனிதன் மார்க்கத்தை விளங்குவதில் தனது வலிந்துரையின் மூலம் வலிந்துரைக்கும் தருணம்: ........ 40
தெளிவாகவே குப்ரை அறிவிக்கும் வார்த்தை, வெளிப்படையில் குப்ரை அறிவிக்கும் வார்த்தை பற்றிய தெளிவு ........ 44
ரித்தஹ்வின் விபரீதம் ........ 47
மதம்மாற்றத்துடன் தொடர்புடைய சட்டங்கள் சில ........ 50
மேலதிக பலனுக்காக குப்ரை மீள் வகைப்படுத்தல் ........ 52
அவற்றில் முதலாவது தஷ்பீஹ்: ........ 52
அவற்றில் இரண்டாவது தக்தீப்: ........ 52
அவற்றில் மூன்றாவது தஃதீல்: ........ 53
இமாம் அர்ரிபாஈ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள் ........ 54
பயன்மிக்க விடயமொன்று ........ 55

நரகத்தை விட்டும் பாதுகாப்புப் பெறல்........................................................ 58

படைப்புகளின் ஆரம்பம் பற்றி வந்துள்ள சில தகவல்கள்..................................... 59

“உள்ளமையில் இருப்பவை மூன்று பிரிவுகளாகும்” ............................................60

அறிந்து கொள்ளுங்கள்: பகுத்தறிவு ரீதியான தீர்ப்பு ..........................................61

அல்லாஹ்வின் ஆரம்பமின்மை காலம் தொடர்புடையதல்ல .................................. 62

(اللطيف) “அல்லதீப்” என்ற அல்லாஹ்வின் நாமத்தின் சரியான பொருள் ................ 62

அல்லாஹ்வை இடத்தை விட்டும் பரிசுத்தப்படுத்துவதும், அவனது உள்ளமைக்கு இடமின்மையை பகுத்தறிவு ரீதியாக சரிபடுத்துவதும் ........................................... 66

நம்பிக்கைக் கோட்பாட்டின் அடிப்படை, கற்பனையின் பிரகாரம் அல்ல.................... 68

“ஒவ்வொரு இடத்திலும் அல்லது எல்லா இடங்களிலும் அல்லாஹ்” என்று கூறுபவனுக்குரிய தீர்ப்பு ............................................................................ 69

வானத்தின் பக்கம் கைகளை உயர்த்தி பிரார்த்திப்பது அல்லாஹ் வானத்திலிருக்கின்றான் என்பதற்காக அல்ல .................................................. 69

மேலும் நாங்கள் பிரார்த்தனையின் போது வானத்தின் பால் கைகளை உயர்த்துவது ஏன்?............................................................................................... 69

மிஃராஜின் மூலம் நாடப்படுவது.........................................................................71

“ஹதீஸுல் ஜாரியஹ்” (அடிமைப்பெண் தொடர்பான) ஹதீஸ் பற்றிய தெளிவு ......... 78

இந்த ஹதீஸ் மறுக்கப்படுவதற்கான இரு காரணங்கள் ..................................... 79

இமாம் முஸ்லிம் அவர்களின் ஹதீஸ்களில் சிலவற்றை ஹதீஸ்துறை அறிஞர்கள் நிராகரித்து, அவற்றை அவர்களின் நூல்களில் குறிப்பிட்டுமுள்ளார்கள்................. 80

அர்ஷுக்கு மேலே இருப்பது என்ன? ................................................................. 82

முஷப்பிஹாக்கள் அல்லாஹ் அர்ஷின் மீது உட்கார்ந்திருக்கிறான் என்று கூறுவது அவனைத் திட்டுவதாகும்.................................................................................. 83

தஃவீலை புறக்கணிப்பவனிடம் கேட்கப்பட வேண்டிய சில கேள்விகள் ................... 89

குர்ஆனிலும், ஹதீஸிலும் வந்துள்ள من فى السماء என்ற வார்த்தையின் மூலம் மலக்குமார்களையே நாடப்படும் ............................................................... 90

அல்லாஹ்வின் பதின்மூன்று பண்புகள் ............................................................. 95

உள்ளமை ................................................................................................... 97

பூர்வீகம் அதாவது ஆரம்பமின்மை .................................................................. 98

(الدور) “அத்தவ்ர்” (சுற்று), (التسلسل) “அத்தஸல்ஸுல்” (முடிவில்லா சங்கிலித் தொடர்) .................................................................................................... 99

முடிவின்மை ............................................................................................... 100

கேட்டல் .......... 101
பார்த்தல் .......... 102
பேச்சு .......... 104
நாட்டம் .......... 108
வல்லமை .......... 110
அறிவு .......... 114
மரணமில்லாமை .......... 115
இணையின்றித் தனித்தல் .......... 115
دلالة التمانع "திலாலதுத் தமானுஃ" என்றால் என்ன? .......... 116
தன்னிலே நிலைத்திருத்தல் (பிற பொருளின் தேவையற்றிருத்தல்) .......... 118
படைப்புகளுக்கு மாற்றமாயிருத்தல் .......... 119
அல்லாஹ்வின் பண்புகள் அனைத்தும் பரிபூரணமானவையே .......... 122
﴿وَمَكَرُواْ وَمَكَرَ اللهُ وَاللهُ خَيْرُ الْمَاكِرِينَ﴾ என்ற அல்லாஹ்வின் கூற்றின் விளக்கம் .......... 123
﴿اللهُ يَسْتَهْزِىءُ بِهِمْ﴾ என்ற அல்லாஹ்வின் கூற்றின் விளக்கம் .......... 124
இஹ்லாஸ் எனும் அத்தியாயம் இறங்கியதன் காரணம் .......... 126
முஹ்கமான, முதஷாபிஹான வசனங்கள் .......... 130
முஹ்கமதான வசனங்கள் .......... 131
முதஷாபிஹான வசனங்கள் .......... 131
முதஷாபிஹான வசனங்களை கையாளுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட இரு வழிமுறைகள் .......... 132
﴿كُلُّ شَىْءٍ هَالِكٌ إِلاَّ وَجْهَهُ﴾ என்ற வசனத்தின் விளக்கம் .......... 133
﴿مِن رُّوحِي﴾ மற்றும் ﴿مِن رُّوحِنَا﴾ என்ற அல்லாஹ்வின் கூற்றின் விளக்கங்கள் .......... 138
﴿الرَّحْمَنُ عَلَى الْعَرْشِ اسْتَوَى﴾ என்ற வசனத்தின் விளக்கம் .......... 141
﴿الرَّحْمَنُ عَلَى الْعَرْشِ اسْتَوَى﴾ எனும் வசனத்தை வைத்து அல்லாஹ்வுக்கு இடமுண்டு என வாதிடுவோருக்கான மறுப்பு .......... 142
'மஅ' (مع) எனும் அறபுப் பதம் அல்லாஹ்வுடன் இணைத்துக் கூறப்பட்டு வந்த குர்ஆன் வசனங்களின் விளக்கம் .......... 149
﴿فَأَيْنَمَا تُوَلُّواْ فَثَمَّ وَجْهُ اللهِ﴾ என்ற அல்லாஹு தஆலாவின் கூற்றின் விளக்கம் .......... 152

﴿اللهُ نُورُ السَّمَوَاتِ وَالأَرْضِ﴾ என்ற வசனத்தின் விளக்கம் ........................................153

**கதர் (விதி) பற்றிய விளக்கமும் அதனை ஈமான் கொள்வதும் ...............................160**

நலவு, கெடுதி அனைத்துமே அல்லாஹ்வின் ஏற்பாட்டின் மூலமே உண்டாகின்றன என்பதின் விளக்கம் ......................................................................160

**உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் விரும்பிக் கேட்ட கவிவரிகள் ......................163**

**இமாம் ஷாபிஈ றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கதர் பற்றி கூறிய கவிவரிகள்......164**

**அமீன் ஷைஹு அவர்களது ஜமாஅத்தினரின் வழிகேடுகள் சில.............................165**

إذا ذُكِرَ الْقَدَرُ فَأَمْسِكُوا என்ற ஹதீஸின் விளக்கம் ......................................................174

நபி ﷺ அவர்கள் கதரிய்யஹ்களை இகழ்ந்துள்ளார்கள்....................................174

“ஹிதாயத்” எனும் வார்த்தை இரு பொருளில் வரும்..........................................175

**அல்-ஹாபிழ், ஷைய்க் அப்துல்லாஹ் அல்-ஹறரீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் தனது மன்ஹஜ் பற்றி பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்கள்.......................................177**

# تقريظ من جامعة الأزهر

أصدرت لجنة من أساتذة كلية أصول الدين في جامعة الأزهر تقريرًا علميا مفصلاً عن كتابَي العلامة المحدث الشيخ عبدِ الله الهرري رحمه الله تعالى :

- الصراط المستقيم .
- بغية الطالب لمعرفة العلم الديني الواجب .

وجاء في خاتمة هذا التقرير ما نصه:

"إن ما في هذين الكتابين من العلم يتوافق تمامًا مع عقيدة الإمام أبي الحسن الأشعري إمام أهل السنة والجماعة ، ولا يتناقض مع شيء منها ، بل هو يشرحها شرحًا يقربها من العقول والقلوب ، ويدعو الناس إلى اعتقادها لأنها عقيدة أهل السنة والجماعة التي بها النجاة يوم القيامة. ومؤلفهما الشيخ عبد الله الهرري يمتاز بالدقة والرجوع إلى المراجع الأصلية في العقيدة والشريعة ، ويمتاز بالإخلاص لله تعالى في القول والعمل ، والدعوة إلى الله تعالى بجد واجتهاد . والله تعالى نسأل أن يوفقه لخدمة العلم والدين".

| | | | |
|---|---|---|---|
| أ.د / محيي الدين الصافي | أ.د / عبد المنعم نجم | أ.د / صفوت مبارك | أ.د / عبد المهدي عبد القادر |
| عميد كلية أصول الدين | وكيل كلية أصول الدين | أستاذ بقسم العقيدة | أستاذ الحديث |
| جامعة الأزهر | | بكلية أصول الدين | بكلية أصول الدين |
| ٢٠/٤/١٩٩٧ | | | |

## அல்–அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் அணிந்துரை

மிஸ்ர் அல் அஸ்ஹர் பல்கலைக்கழக உஸூலுத் தீன் பிரிவின் ஆசிரியர் குழாம் அல்அல்லாமதுல் முஹத்திஸ் அப்துல்லாஹில் ஹறரீ றஹிமஹுல்லாஹ் அவர்களின் ''அஸ்ஸிறாதுல் முஸ்தகீம்'' மற்றும் ''பு.ஃ.யதுத் தாலிபி லிம.ஃ.ரிபதில் இல்மித் தீனிய்யில் வாஜிபி'' என்ற இரு நூல்கள் தொடர்பாக மிக விரிவான அறிவுசார் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

**''இவ்விரு நூற்களிலுமுள்ள மார்க்க அறிவாகிறது அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தின் இமாமாகிய இமாம் அபுல் ஹஸனில் அஷ்அரீ றழியல்லாஹு அன்ஹு அவர்களின் கொள்கைக்கு முழுமையாகவே நேர்படுவதுடன் அவற்றில் எதற்கும் முரண்படவில்லை.**

**என்றாலும் அவர்கள் அதனை புத்திகளுக்கும், உள்ளங்களுக்கும் நெருக்கும் விதத்தில் விரிவுரை செய்கின்றார்கள். மேலும் அதனை உறுதிகொள்ளவும் மக்களை அழைக்கின்றார்கள். ஏனெனில் அதுவே கியாமத்துடைய நாளில் வெற்றியளிக்கும் அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தினரின் கொள்கையாகும்.**

**இவற்றின் நூலாசிரியர் அஷ்ஷைய்க் அப்துல்லாஹில் ஹறரீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் நுட்பத்திலும் மற்றும் அகீதஹ், ஷரீஅஹ் விடயங்களில் மூலநூற்களின் பக்கம் மீளுவதிலும் தனித்துவம் பெறுகின்றார்கள். இன்னும் அவர்கள் சொல்லிலும், செயலிலும் தெண்டிப்புடனும் முயற்சியுடனும் அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதிலும் அல்லாஹ்வுக்கென்றே செயல்படுவது கொண்டும் தனித்துவம் பெறுகின்றார்கள்.**

**அல்லாஹு தஆலா அறிவுக்கும் மார்க்கத்திற்கும் அவர்கள் பணிவிடை செய்ய அனுகூலமளிப்பதை நாம் அவனிடம் வேண்டுகிறோம்''.**

# இமாம் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

**அவர்களின் பிறப்பு:**

இமாம் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் ''ஹபஷா'' (எதியோப்பியா)வில் ''ஹறர்'' எனும் ஊரில் ஹிஜ்ரீ 1327, கி.பி. 1910ல் பிறந்தார்கள். இவர் தனது பத்தாவது வயதை அண்மிக்கும் முன்னரே புனித குர்ஆனை மனனமிட்டார்கள். தன் சிறு வயதிலிருந்தே விளையாடுவது போன்ற விடயங்களில் தன் கவனத்தைச் செலுத்தாது, குர்ஆன் ஓதல் மற்றும் நூல்கள் வாசித்தல் போன்ற விடயங்களில் தன் நேரங்களைக் கழித்து வந்தார்கள்.

இமாம் அப்துழ்ழாஹ் அல்ஹழ்றமி என்ற ஷாபிஈ மத்ஹபில் பிரபல்யமிக்க அறிஞரின் ''அல் முகத்திமதுல் ஹழ்ரமிய்யஹ்'' (المقدمة الحضرمية) மற்றும் ''அல்முஹ்தஸர்ஸ் ஸஹீர் பீமா லா புத்த லி குல்லி முஸ்லிமின் மின் ம.ஃரிபதிஹி'' (المختصر الصغير فيما لا بد لكل مسلم من معرفته) ஆகிய நூற்களை அவரது தந்தை சிறுவயதிலேயே அவருக்கு கற்றுக் கொடுத்தார்கள். அழ்ழாஹ் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக!

பின்னர் இமாமவர்களுக்கு கல்வி கற்பதில் ஆர்வம் ஏற்பட்டது. தன் ஊர் மற்றும் அதனை அண்டிய ஊர்களிலுள்ள ஆலிம்களிடம் சென்று படிக்கலானார்கள். எனினும் ஹதீஸ் துறை சார்ந்த கல்வியிலேயே இமாமவர்கள் அதிக கவனம் செலுத்தினார்கள்.

**அவர்களுடைய குணாதிசயங்கள்:**

இமாம் அப்துழ்ழாஹ் அல்ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் மிகவும் பேணுதல் மிக்கவராகக் காணப்பட்டார்கள். உபதேசம் செய்ய முன்னரே தன்னடத்தையால் மக்களுக்கு ஒழுக்கத்தைப் போதித்தார்கள். மற்றும் சிறியவர்களுடனும், பெரியவர்களுடனும் பணிவாக நடந்து கொண்டார்கள்.திக்ர், தொழுகை மற்றும் ஏனைய வணக்க வழிபாடுகளில் அதிகமாக ஈடுபடக்கூடியவர்களாக இருந்தார்கள்.

தன்னுடைய எல்லா நேரங்களையும் கற்றல், கற்பித்தல், உபதேசித்தல், வழிகாட்டல், வணக்க வழிபாடு புரிதல் போன்றவற்றிலே ஈடுபடுத்துபவராகவே காணப்பட்டார்கள். அதிக நேரத்தை கிதாப்களுடன் கழிக்கக்கூடியவர்களாகவும், அழ்ழாஹ்வை மிகவும் அறிந்தவர்களாகவும், குர்ஆன், சுன்னாவைப் பற்றிப் பிடித்தவர்களாகவும், புத்திக் கூர்மையுடையவர்களாகவும், பலமான, தெளிவான ஆதாரங்களைக்

கொண்டு கொள்கையை நிலைநாட்டக் கூடியவர்களாகவும், ஹிக்மத்துடன் வேலைகளை அந்தந்த நேரங்களில் செய்யக் கூடியவர்களாகவும், அவர்களுக்கு கெடுதி இழைத்தவர்களை மன்னிக்கக்கூடிய நற்குணம் கொண்டவர்களாகவும் இருந்தார்கள்.

மேலும் ஷைக் அப்துல்லாஹ் அல்-ஹறரீ றஹிமஹுல்லாஹ் அவர்களை விட்டும் மக்களை தூரப்படுத்துவதற்காக பித்அத்காரர்களும், வழிகெட்ட பிரிவினர்களும் அவர்களுக்கெதிராக பொய்களையும், வதந்திகளையும் சொல்லிக் குவித்தும் ஷைக் அவர்கள் மார்க்கத்திற்கு முரணாக நடக்கக்கூடியவர்களைக் கடுமையாக எச்சரிக்கக் கூடியவர்களாகவும் அல்லாஹ்வுடைய விடயத்தில் பழிக்கக்கூடியவர்களின் பழிப்புக்குத் தயங்காது, நல்லதை ஏவி, தீயதைத் தடுக்கும் விடயத்தில் தீவிரக் கவனம் செலுத்தக்கூடியவர்களாகவும் இருந்தார்கள்.

**அவர்களின் கல்விக்கான பயணங்களும் மற்றும் கல்வியைக் கற்பித்தலும்**

இமாம் அப்துல்லாஹ் அல்-ஹறரீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் அவர்களுடைய ஊர் மற்றும் அதனை அண்மித்த ஊர்களிலுள்ள அறிஞர்களிடத்தில் கற்றுக்கொண்டதைப் போதுமாக்கிக் கொள்ளாமல் ‘‘எதியோப்பியா’’ மற்றும் ‘‘சோமாலியா’’வின் பகுதிகளில் மார்க்க அறிவிற்காக வேண்டி சுற்றித்திரிந்தார்கள். இவ்விடயத்தில் அவர்களுக்கு பல பிரயாணங்கள் உள்ளன. அவற்றில் அவர்கள் பல கஷ்டங்களையும் சிரமங்களையும் எதிர்கொண்டார்கள். அவ்வாறுதான் அவர்கள் யாராவதோர் ஆலிம் எங்காவது ஓரிடத்தில் உள்ளார் என்று கேள்விப்பட்டால் அவரிடத்தில் பிரயோசனத்தை அடைய வேண்டும் என்ற நோக்கில் எவ்வித சிரமமும்பாராது பயணங்களை மேற்கொள்ளக்கூடியவர்களாக இருந்தார்கள். இதுவே ஸலபுஸ் ஸாலிஹீன்களுடைய வழமையாகவும் இருந்தது.

மேலும் அவர்களிடம் காணப்பட்ட புத்திக் கூர்மையும் மனனசக்தியும் ஷாபிஈ மத்ஹபுடைய சட்டங்களையும் அடிப்படைகளையும் அதிலுள்ள கருத்து வேற்றுமைகளையும் திறம்பட கற்பதற்கு மிக உதவியாக இருந்தது. மட்டுமல்லாமல் மற்றைய மூன்று மத்ஹப்களுடைய சட்டங்களையும், அடிப்படைகளையும் திறமையாகக் கற்பதற்கும் வழிவகுத்தது. ஆகையால் அவர்களின் பக்கம் விரல்களால் சுட்டிக்காட்டப்படும் அளவுக்கும், ‘‘எதியோப்பியா’’ மற்றும் ‘‘சோமாலியா’’வின் தூரப் பகுதிகளிலிருந்து மக்கள் அவர்களை நாடி பயணங்கள் மேற்கொள்ளும் அளவுக்கும் அவர்களின் திறமை காணப்பட்டது. எனவே அவர்களின் ஊராகிய ‘‘ஹறர்’’ மற்றும் அதனைய அண்டிய பகுதிகளின் மார்க்கத் தீர்ப்பு வழங்கும் பொறுப்பு அவர்களுக்கு சாட்டப்பட்டது. சுமாராக ஹிஜ்ரீ 1369 கி.பி. 1949 களில்

மக்காவிற்கு சென்றுவிட்டார்கள். அங்கே ஹஜ்ஜும் செய்தார்கள். அங்கே அஷ்-ஷைக் அல்ஆலிம் அஸ்ஸைய்யித் அல்அலவி அல்மாலிகி றஹிமஹுழ்ழாஹ் போன்ற மக்காவின் பல ஆலிம்களுடன் அறிமுகமானார்கள். பின்பு மக்காவிலிருந்து மதீனாவிற்கு பயணத்தை மேற்கொண்டு, அங்கும் சில உலமாக்களுடன் அறிமுகமானார்கள்.

அதன் பின் பலஸ்தீனிலுள்ள பைதுல் முகத்தஸ் என்ற இடத்திற்கு ஹி 1370 கி.பி. 1950ம் ஆண்டு சென்றார்கள். அதன் பின் அங்கிருந்து டமஸ்கஸிற்கு சென்றார்கள். டமஸ்கஸ் நகர மக்களும் அவர்களை வரவேற்றார்கள்.

பின்னர் மேலும் அவர்கள் ஷாம் தேசத்து ஊர்களான திமஷ்க், பைரூத், ஹிம்ஸ், ஹலப், ஹமாத், போன்ற சிரியா, லெபனான் நகரங்களுக்கு சென்றுவருபவர்களாக இருந்தார்கள். இறுதியாக பைரூத்தில் குடியேறினார்கள்.

### ஷைக் அவர்களுடைய ஆசிரியர்கள்:

ஆரம்பத்தில் அவரது தந்தையாகிய محمد بن يوسف முஹம்மத் இப்னு யூஸுப் அவர்களிடம் கல்வியைக் கற்றார்கள். மேலும் الشيخ العالم علي شريفஅஷ்ஷைய்க் அல் ஆலிம் அலீ ஷரீப் அவர்களிடம் தஜ்வீத், தர்தீல் மற்றும் ஹிப்ழாகக் குர்ஆனையும் இன்னும் அகீதாவுடைய அறிவையும் எடுத்ததோடு ஷாபிஈ சட்டக்கலையையும், அறபு இலக்கணத்தையும் العالم النحرير الشيخ الولي محمد بن عبد السلام الهرري அஷ்ஷைய்க் அல்வலிய்யு அல்ஆலிம் முஹம்மத் இப்னு அப்திஸ்ஸலாம் அல்ஹறரீ அவர்களிடமும் கற்றுக் கொண்டார்கள்.

### ஷைக் அவர்களின் பைரூத் வருகையும், வபாத்தும்

ஷைக் அவர்கள் ஹிஜ்ரீ 1370, கி.பி. 1950ல் பைரூத்திற்கு வந்தார்கள். இமாம் அப்துழ்ழாஹ் அல்ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களுக்கு நோய் கடுமையானது. அப்போது கூட அவர்கள் அகீதா பற்றியும் வழிகேடான சிந்தனைகளை எச்சரிப்பதையும் விடாது தன்னை சந்திக்க வருபவர்களிடமெல்லாம் நினைவூட்டிக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் ஹிஜ்ரீ 1429, கி.பி. 2008ம் ஆண்டு ரமழான் மாதம் இரண்டாம் நாள் செவ்வாய் கிழமை பஜ்ருடைய நேரத்தில் மரணித்தார்கள். அவர்கள் பைரூத்திலே அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

**ஷைக் அவர்களின் நூற்கள்:**

மக்களின் நம்பிக்கைக் கோட்பாட்டை சீர் செய்தல், மார்க்கத்திற்கு முரணானவர்களை எதிர்த்தல், வழிகெட்ட பித்அத்வாதிகளின் பித்னாக்களை அடக்குதல் போன்றவற்றில் ஷைக் அவர்கள் மும்முறமாக ஈடுபட்டதாலும், இதற்காக வெனவே நேரடியாக களத்தில் இறங்கி பல இடங்களுக்கு பயணம் மேற்கொண்டு சத்தியத்தை பாதுகாக்க குரல் கொடுத்து வந்ததாலும் கிதாபுகளை கோர்வை செய்வதில் பெரிதும் அவர்களால் கவனம் செலுத்த முடியாமல் போனது. அவ்வாறிருந்தும் பல பெறுமதிமிக்க கிதாபுகளை விட்டுச் சென்றுதான் உள்ளார்கள். அவற்றில் சில:

1. **அஸ்ஸிறாதுல் முஸ்தகீம்.**
2. **அஷ்ஷர்ஹுல் கவீம்.**
3. **ஸரீஹுல் பயான்.**
4. **இழ்ஹாருல் அகீததிஸ் ஸுன்னிய்யஹ்.**
5. **அல் மதாலிபுல் வபிய்யஹ்.**
6. **ரிஸாலதுர் றத்தி அலத் தாஈ அல் காதியானீ.**
7. **அத்தஅக்குபுல் ஹஸீஸ்.**
8. **அந் நஹ்ஜுஸ் ஸவீய்.**
9. **முஹ்தஸர்.**
10. **பு.்.யதுத் தாலிப்.**

மேலும் இங்கு குறிப்பிடப்படாத பெறுமதியான இன்னும் பல நூற்கள் அவர்களுக்குள்ளன.

அழ்ழாஹ் அவர்களது ஹித்மஹ்களைப் பொருந்திக் கொண்டு, மேலான பிர்தௌஸை அவர்களுக்குக் கூலியாக வழங்குவானாக!

بسم الله الرحمن الرحيم

## முன்னுரை

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலாதும், ஸலாமும் எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார் மற்றும் ஸஹாபாக்கள் மீதும் உண்டாகட்டுமாக!

அஹ்லுஸ்ஸுன்னஹ் வல்ஜமாஅத்தினரே மறுமை வெற்றியடைவர். அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தினர் என்போர் அஷாஇரஹ்களும் மாதுரீதிய்யஹ்களுமே ஆவர். குர்ஆன், சுன்னஹ் கற்றுத்தந்த சத்தியக் கொள்கையை பாதுகாத்த பெருமையும் அவர்களையே சேரும். குர்ஆன், சுன்னஹ்வின் தூயகொள்கை பாதுகாக்கப்பட அவர்கள் காலநெடுகிலும் அரும்பாடுபட்டே வந்துள்ளனர். வருகின்றனர். அல்லாஹ் அவர்களை மேலும் பலப்படுத்துவானாக! ஆமீன்.

குர்ஆன், சுன்னஹ்வின் கொள்கைக் கோட்பாடுகளை மாசுபடுத்தும் வழிகேடுடைய கொள்கைவாதிகள் அவ்வப்போது தோன்றினாலும் அஹ்லுஸ்ஸுன்னஹ்களின் அறிவு பலத்துக்கு முன் தாக்குப்பிடிக்க முடியாது பின்வாங்கிவிடுவர். இதுவே தொண்டுதொட்டு காணப்பட்டுவரும் உண்மையாகும்.

சில தசாப்தங்களாக பித்அத்வாதிகளின் அசத்தியக் குரல்கள் மேலோங்கி, அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தினரின் குரல் வலுவிழந்திருப்பதை கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது. இதற்கான முக்கிய காரணி அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தினரின் கல்வி முறையாக போதிக்கப்படாமையும், கற்கப்படாமையுமே ஆகும்.

தற்காலத்தில் பித்அத்வாதிகளினால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களும், தகுந்த பதில்களை வழங்கும் பயிற்சிகளும் முறையாக போதிக்கப்படாமல் இருப்பதனால், பித்அத்வாதிகள் தங்களது மோசமான கொள்கைகளை மிக இலகுவாக பரப்பி, மக்களை வழிகெடுத்து வருகின்றனர். நம் நாட்டின் தற்போதைய நிலையும் அதுவே. அறபுக்கல்லூரிகள் உட்பட மார்க்க வழிகாட்டல் நிறுவனங்கள் அகீதாகல்வி தொடர்பாக சரியான முன்னெடுப்புகளை மேற்கொள்ளாமலிருப்பதும், தற்காலத்தில் அகீதா தொடர்பாக எழும் குழப்பங்களுக்கான தகுந்த தீர்வுகளை நேரடியாக

முன்வைக்கும் கல்விமான்களை உருவாக்குவதில் பொடுபோக்காக செயல்பட்டுவருவதும் மிக வேதனைக்குரிய விடயங்களாகும். மேலும் நவீன குழப்பவாதிகளின் சிந்தனைகளை மறுத்து, அவற்றிற்கான தெளிவான தீர்வுகளை குர்ஆன், சுன்னஹ் அடிப்படையில் முன்வைக்கும் நூல்களை பாடத்திட்டங்களுக்குள் உள்வாங்காமல் இருப்பதும் கவலையளிக்கும் விடயமாகும். இந்நிலை மாறி அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தினரின் சத்தியக் குரல் ஓங்க அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தினரின் கல்வியை முறைப்படி ஆதாரத்துடன் கற்பிப்பதும், கற்பதும் இன்றியமையாததாகும்.

அந்தவகையில் தற்போது உங்கள் கைகளில் தவழும் **“அஸ்ஸிறாத் தேர்ந்தெடுக்கப்பட்டவை”** என்ற இந்த நூல் நாம் பேசிக்கொண்டிருக்கும் பிரச்சினைக்கான மிகப் பொருத்தமான தீர்வாக நிச்சயம் அமையும்.

அல்லாமஹ், அல்ஹாபிழ் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள், அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தினரின் கொள்கையை பாதுகாக்கும், பலப்படுத்தும் நோக்கில் தொகுத்த நூற்றுக்கணக்கான நூல்களில் இந்நூல் மிக முக்கியமானதாகும். மேலும் கொள்கை ரீதியாக முன்வைக்கப்படும் பல கேள்விகளுக்கான தக்க பதில்களை இந்நூல் உள்ளடக்கி இருப்பதும் இதன் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். நம் நாடு உட்பட பல நாடுகளிலில் உள்ள அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தினரின் கல்லூரிகளில் இதன் மூலநூல் பாடத்திட்ட நூலாக இணைக்கப்பட்டு போதிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அஷ்அரிய்யஹ்களின் கொள்கை கோட்பாடுகள் தொடர்பான ஆதாரங்களை பிரதானப்படுத்தி, தற்காலத்தில் எதிர்கொள்ளப்படும் அகீதஹ் தொடர்பான பல சவாலான மஸ்அலாக்களுக்கு தரமான தீர்வுகளை உள்ளடக்கியதாக தொகுக்கப்பட்ட நூல்களில் இந்த நூலுக்குத் தனிச் சிறப்புண்டு.

அழ்ழாஹ்வின் ஸிபாத்கள் (பண்புகள்) எவ்வாறு நம்பிக்கை கொள்ளப்படவேண்டும், முதஷாபிஹான வசனங்கள் எவ்வாறு கையாளப்படவேண்டும், முக்கிய சில முதஷாபிஹான வசனங்களை ஸலபுகள், ஹலபுகள் கையாண்ட விதம், த.்.வீல் (வலிந்துரை) என்றால் என்ன? த.்.வீல் தப்ஸீலீ, த.்.வீல் இஜ்மாலீ என்றால் என்ன? த.்.வீல் செய்ய அனுமதியுண்டா?, த.்.வீல் செய்வதை மறுப்போருக்கு

எதிராக முன்வைக்க வேண்டிய கேள்விகள், அணுகுமுறைகள், பிழையான முறையில் த..வீல் செய்து அகீதாவுக்கெதிரான கருத்துகளை நம்பியிருப்போர் தொடர்பான தீர்ப்பு, அழ்ழாஹ் அர்ஷிலோ, வானத்திலோ தரிபடுபவன் அல்ல. அவன் இடமோ, திசையோ இன்றி உள்ளவன் என்பதை குர்ஆன், சுன்னஹ் ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் நிறுவும் முறை, அழ்ழாஹ் அர்ஷில் தரிபட்டுள்ளான் போன்ற குப்ரிய்யத்தான சிந்தனைகளை பொய்யானவை என்பதை குர்ஆன், ஹதீஸ் ரீதியாக நிரூபித்தல். குப்ரை ஏற்படுத்தும் காரியங்கள் என்னென்ன? ''ஹதீஸுல் ஜாரியஹ்'' என்றழைக்கப்படும் அடிமைப்பெண் தொடர்பான ஹதீஸ் பற்றிய விரிவான விளக்கம், வஹ்ஹாபிகள், மு..தஸிலஹ்கள் போன்ற பித்அத்வாதிகளின் வழிகேடுகளை முறியடிப்பது எவ்வாறு? அழ்ழாஹ்வின் கலாம் (பேச்சு) தொடர்பான சரியான நம்பிக்கை போன்ற இன்னும் பல மஸ்அலஹ்களை அஷ்அரிய்யஹ்களின் போங்கில் தெளிவுபடுத்தும் தனித்துவம் வாய்ந்த நூலாகும்.

மேலும் இதன் மூலநூலாகிய அஸ்ஸிறாதுல் முஸ்தகீம் எகிப்திலுள்ள அல்-அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் உஸூலுத்தீன் பிரிவின் ஆசிரியர் குழாமினால் ஆய்வு செய்யப்பட்டு அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளதுடன், அணிந்துரையும் வழங்ப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

அஷ்அரிய்யஹ்களின் அகீதாவை தெளிவுபடுத்தும் இவ்வாறான சிறப்பம்சங்களை உள்ளடக்கிய தமிழ் மொழியினாலான ஒரு நூல் இதுவரை காலமும் நம் நாட்டில் காணப்படாத குறையை இந்நூல் நிவர்த்தி செய்யும் என்பதில் ஐயமில்லை.

அறபுக் கல்லூரிகளின் பாடத்திட்டங்களில் அகீதா தொடர்பான பாடத்திட்டத்தில் இணைக்கப்பட வேண்டிய மிக முக்கியமான நூல் என்றும் நாம் பரிந்துரை செய்வதோடு, பொதுமக்களும் முறையாக வாசித்து விளங்கிக் கொள்ளும் எளிய நடையிலேயே இந்நூல் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். அஷ்ஷைய்க் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களின் ''அஸ்ஸிறாதுல் முஸ்தகீம்'' என்ற நூலே ''அஸ்ஸிறாத் தேர்ந்தெடுக்கப்பட்டவை'' எனும் பெயரில் முதல் பாகமாக வெளியிடப்பட்டுள்ளது. இதில் மூல நூலில் கூறப்பட்டிருந்த சில மஸ்அலாக்கள் சுருக்கத்தை கருத்திற்கொண்டு மொழிபெயர்ப்பு

செய்யப்படாமலும், தெளிவுக்காக சில வாசகங்கள் சேர்க்கப்பட்டதாகவும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இங்கு கூறப்பட்டுள்ள குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்கள், இமாம்களின் கூற்றுகள், ஆதாரங்கள், தீர்ப்புகள், சட்டங்கள் அனைத்துக்குமான உசாத்துணை நூல்களின் விபரங்கள், பாகம் மற்றும் பக்கங்களின் இலக்கங்கள்; அறபு வாசகங்கள் இடப்பட்ட பகுதியின் அடிக்குறிப்புக்களாக வழங்கப்பட்டுள்ளன.

இந்நூலை தமிழாக்கம் செய்து வெளியிடுவதில் இமாம் அல்-அஷ்அரீ கலாபீடம் மகிழ்ச்சியடைகிறது. இதற்காக உழைத்த அனைவரையும் அல்லாஹ் பொருந்தி, அவர்களுக்கு ஈருலக நற்பாக்கியங்களையும் வழங்குவானாக!

இரு பாகங்களாக வெளிவர இருக்கும் இந்நூலின் முதல் பாகம் அல்லாஹ்வின் அருளால் தற்போது வெளிவந்துள்ளது. அதன் இரண்டாம் பாகத்தின் வெளியீட்டுக்கான பணிகளும் தொடர்ந்த வண்ணமுள்ளன. இன் ஷா அல்லாஹ்.

அல்லாஹ்வின் திருப்பொருத்தம் நாடி செய்யப்பட்ட இந்த அமலை அல்லாஹ் ஏற்று, இந்நூலின் பயன் அனைவருக்கும் கிடைக்க அனுகூலம் புரிவானாக ஆமீன்.

## الصراط المستقيم

بسم الله الرحمن الرحيم

الحمد لله والصلاة والسلام على رسول الله.

قال الله تعالى: ﴿يَا أَيُّهَا الَّذِينَ ءامَنُوا اتَّقُوا اللهَ وَلْتَنظُرْ نَفْسٌ مَّا قَدَّمَتْ لِغَد {18}﴾ [سورة الحشر].

وقالَ عليٌّ رضي الله عنهُ وكَرَّمَ وجهَهُ: "اليومَ العَملُ وغَدًا الحسابُ"، رواهُ البُخاريُّ في كتابِ الرِّقاق1.

## أعظَمُ حُقوقِ الله على عِبادِه

اعلم أنَّ أعظمَ حقوقِ الله تعالى على عباده هوَ توحيدُه تعالى وأن لا يُشرَك به شيءٌ، لأنَّ الإشراكَ بالله هوَ أكبرُ ذنبٍ يقترفُه العبدُ وهوَ الذَّنبُ الذي لا يغفرُه الله ويَغفرُ مَا دُونَ ذلكَ لمن يَشاءُ. قال تعالى: **﴿إِنَّ اللهَ لاَ يَغْفِرُ أَن يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَلِكَ لِمَن يَشَاء (48)﴾** [سورة النساء].

وكذلكَ جميعُ أنواعِ الكُفرِ لا يَغفرُها الله لقولِه تعالى: **﴿إِنَّ الَّذِينَ كَفَرُوا وَصَدُّوا عَن سَبِيلِ اللهِ ثُمَّ مَاتُوا وَهُمْ كُفَّارٌ فَلَن يَغْفِرَ اللهُ لَهُمْ (34)﴾** [سورة محمد].

وقد قال رسول الله صلى الله عليه وسلم: **"من شهِدَ أَنْ لا إله إلا الله وحدَهُ لا شريكَ لهُ وأنّ محمدًا عبدُه ورسولُه وأنّ عيسى عبدُ الله ورسولُه وكلمتُه ألقاها إلى مريمَ وروحٌ منه والجنةَ حقٌّ والنارَ حقٌّ أدخَلَهُ الله الجنةَ على ما كانَ منَ العملِ"،** رواه البخاري ومسلم2. وفي حديثٍ ءاخَر: **"فإنَّ الله حرَّمَ على النار من قالَ لا إله إلا الله يبتغي بذلكَ وجهَ الله"** رواه البخاري3.

ويجبُ قرنُ الإيمانِ برسالةِ محمدٍ بشهادةِ أن لا إله إلا الله وذلك أقلُّ شيءٍ يحصلُ به النجاةُ من الخلودِ الأبديّ في النارِ.

---

1 أخرجه البخاري في صحيحه: كتاب الرقاق: باب في الأمل وطوله.

2 أخرجه البخاري في صحيحه: كتاب أحاديث الأنبياء: باب قوله {يَا أَهْلَ الكِتَابِ لا تَغْلُوا فِي دِينِكُمْ(171)} [سورة النساء]، ومسلم في صحيحه: كتاب الإيمان: باب الدليل على أن من مات على التوحيد دخل الجنة قطعًا.

3 رواه البخاري في صحيحه: كتاب الصلاة: باب المساجد في البيوت.

அனைத்துப் புகழும் அழ்ழாஹ்வுக்கே உரியதாகும். ஸலாதும், ஸலாமும் அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மீது உண்டாவதாக!

அழ்ழாஹ் குர்ஆனிலே கூறியுள்ளான்.

﴿يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا اتَّقُوا اللَّهَ وَلْتَنْظُرْ نَفْسٌ مَّا قَدَّمَتْ لِغَدٍ﴾

விளக்கம் :
“ஈமான் கொண்டோர்களே! அழ்ழாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! மேலும் ஒவ்வொரு ஆத்மாவும் நாளை மறுமைக்காக எதனை தயார் செய்து வைத்துள்ளது என்பதனை அவதானித்துக் கொள்ளட்டும்.”

அத்தியாயம் : அல் ஹஷ்ர் வசனம்:18

அலீ ரழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்: “இவ்வுலகம் அமல் செய்வதற்குரிய இடமாகும். மறுமை விசாரனைக்குரிய இடமாகும்”

அறிவிப்பவர் இமாம் புகாரீ றஹிமஹுழ்ழாஹ்,

## அழ்ழாஹ்வுக்கு அவனுடைய அடியார்கள் செய்ய வேண்டிய கடமைகளில் மிக முக்கியமானது

அறிந்து கொள்வீர்! அழ்ழாஹ்விற்கு அவனுடைய அடியார்கள் செய்ய வேண்டிய கடமைகளில் மிக முக்கியமானது அவனை, படைப்புகளை விட்டும் தனித்துவப்படுத்தி, அவனுக்கு எதனையும் இணையாக்காமலிருப்பதாகும்.

ஏனெனில் அழ்ழாஹ்விற்கு இணைவைப்பது, ஒரு அடியான் செய்யும் மிகப்பெரும் பாவமாகும். மேலும் இது அழ்ழாஹ் மன்னிக்காத பாவமுமாகும். இது அல்லாத ஏனைய பாவங்களை அவன் நாடியவர்களுக்கு மன்னிப்பான்.

அழ்ழாஹ் குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்

﴿إِنَّ اللَّهَ لا يَغْفِرُ أَنْ يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَلِكَ لِمَنْ يَشَآءُ﴾

விளக்கம் :

“நிச்சயமாக அழ்ழாஹ் அவனுக்கு இணைவைப்பதை ஒரு போதும் மன்னிக்க மாட்டான் மேலும் அது அல்லாத ஏனைய பாவங்களை அவன் நாடியோருக்கு மன்னிப்பான்”

அத்தியாயம்: அன் நிஸாஉ வசனம்: 47

இவ்வாறுதான் குப்ரின் அனைத்து வகைகளையும் அழ்ழாஹ் மன்னிக்கமாட்டான்.

அழ்ழாஹ் குர்ஆனில் கூறியுள்ளான்

﴿إِنَّ الَّذِينَ كَفَرُوا وَصَدُّوا عَنْ سَبِيلِ اللَّهِ ثُمَّ مَاتُوا وَهُمْ كُفَّارٌ فَلَنْ يَغْفِرَ اللَّهُ لَهُمْ﴾

விளக்கம் :

“யாரெல்லாம் இஸ்லாமிய கொள்கையை நிராகரிப்புச் செய்து மேலும் மக்களை இஸ்லாத்தில் நுழைய விடாது தடுப்பார்களோ அவர்கள் அனைவரும் காபிர்களாகும். அவர்கள் குப்ரின் மீது மரணித்தால் அவர்களுக்கு மறுமையில் மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது. மேலும் அவர்கள் முடிவில்லாத வேதனையை அனுபவிப்பார்கள்.”

அத்தியாயம்: முஹம்மத் வசனம்: 34

முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்

"من شهِدَ أَنْ لا إله إلا الله وحدَهُ لا شريكَ لهُ وأنّ محمدًا عبدُه ورسولُه وأنّ عيسى عبدُ الله ورسولُه وكلمتُه ألقاها إلى مريمَ وروحٌ منه والجنةَ حقٌّ والنارَ حقٌّ أدخَلَهُ الله الجنةَ على ما كانَ منَ العملِ"

“யார் நிச்சயமாக உண்மையில் வணங்கி வழிபடத் தகுதியானவன் அழ்ழாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை அவன் இணையின்றித் தனித்தவன். மேலும் நிச்சயமாக முஹம்மத் ﷺ அவர்கள் அழ்ழாஹ்வின் அடியாரும், தூதருமாவார்கள். மேலும் நிச்சயமாக ஈஸா அவர்கள் அழ்ழாஹ்வின் அடியாரும் தூதரும் மேலும் மர்யம் அவர்களுக்கு அழ்ழாஹ் அறிவித்த நற்செய்தியும் மேலும்

அழ்ழாஹ்விடத்தில் சிறப்புப்படுத்தப்பட்ட ரூஹாகும் என்றும் இன்னும் சுவர்க்கம், நரகம் உண்மை என்றும் யார் சாட்சி கூறுகின்றாரோ அழ்ழாஹ் அவரை அவர் செய்த அமலின் பிரகாரம் சுவர்க்கத்தில் நுழைவிப்பான்.''

அறிவித்தவர் : இமாம் புகாரீ, முஸ்லிம்

மற்றுமொரு ஹதீஸில்,

"فإنّ الله حرّمَ على النار من قالَ لا إله إلا الله يبتغي بذلكَ وجهَ الله"

''யார் ''**لا إله إلا الله**'' என்ற கலிமாவை அழ்ழாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி கூறுகின்றாரோ அவருக்கு அழ்ழாஹ் (நிரந்தர) நரகத்தை ஹறாமாக்கி விடுகின்றான்'' என்று வந்துள்ளது.

அறிவித்தவர் : இமாம் புகாரீ

மேலும் நிச்சயமாக உண்மையில் வணங்கப்படத் தகுதியானவன் அழ்ழாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை என்று சாட்சி கூறுவதோடு முஹம்மத் ﷺ அவர்கள் அழ்ழாஹ்வினால் அனுப்பப்பட்ட தூதர் என்ற நம்பிக்கையை இணைப்பது கடமையாகும். மேலும் அதுவே நரகில் நிரந்தரமாக இருப்பதை விட்டும் பாதுகாப்பு உண்டாகும் விடயத்தில் மிகக் குறைந்த பட்சமாகும்.

## معنَى الشّهادتين

فمعنَى شهادة أَنْ لا إله إلا الله إجمالا أعترفُ بلساني وأعتقدُ وأذعن بقلبي أَنّ المعبودَ بحقٍّ هوَ الله تعالى فقط. ومعنَى شهادةِ أنّ محمّدًا رسولُ الله أعترفُ بلساني وأُذعِنُ بقلبي أنّ سيّدَنا محمّدًا صلى الله عليه وسلم مرسَلٌ من عندِ الله إلى كافّةِ العالمينَ من إنسٍ وجنٍّ. صادقٌ في كلِّ ما يبَلّغُه عن الله تعالى ليُؤمنُوا بشَريعتَه ويتّبعُوه.

والمرادُ بالشّهادتينِ نفيُ الألوهيةِ عمّا سوَى الله وإثباتُها لله تعالى معَ الإقرارِ برسالةِ سيدِنا محمدٍ صلى الله عليه وسلم.

قال الله تعالى: ﴿وَمَن لَّمْ يُؤْمِن بِاللهِ وَرَسُولِهِ فَإِنَّا أَعْتَدْنَا لِلْكَافِرِينَ سَعِيرًا (13)﴾ [سورة الفتح]. فهذه الآيةُ صريحَةٌ في تكفيرِ من لم يؤمن بمحمدٍ صلى الله عليه وسلم فمن نازعَ في هذا الموضوعِ يكونُ قد عاندَ القرءانَ ومن عاندَ القرءانَ كَفرَ.

وأجمعَ4 الفقهاءُ الإسلاميّونَ على تكفيرِ من دانَ بغيرِ الإسلامِ. وعلَى تكفيرِ من لم يكفِّرْهُ أو شَكَّ أو توقّفَ كأن يقولَ أنا لا أقولُ إنّه كافرٌ أو غيرُ كافر.

واعلَم باستيقان أنّهُ لا يصحُّ الإيمانُ والإسلامُ ولا تُقبلُ الأعمالُ الصالحةُ بدونِ الشهادتينِ بلفظِ أشهدُ أن لا إله إلا الله وأشهدُ أنّ محمّدًا رسولُ الله أو ما في معناهما ولو بغَيرِ اللغةِ العربيةِ.

ويكفي لصحةِ الإسلامِ النطقُ مرّةً في العُمُرِ ويبقى وجوبُها في كلِّ صلاةٍ لصِحّةِ الصّلاةِ، هذا فيمن كانَ على غيرِ الإسلامِ ثمّ أرادَ الدخولَ في الإسلامِ.

وأمّا من نشأَ على الإسلامِ وكانَ يعتقدُ الشّهَادتينِ فلا يُشترط في حَقّه النُّطقُ بهما بل هو مسلمٌ لو لَم يَنطِق.

وقالَ صلى الله عليه وسلم: "قالَ الله تَعالى: **وما تقرّبَ إليّ عبدي بشيءٍ أحبَّ إليّ مما افترَضتُ عليه**" حديث قدسيٌّ رواه البخاريُّ5. وأفضلُ وأوّلُ فرضٍ هوَ الإيمانُ بالله ورسوله.

واعتقادُ أن لا إله إلا الله فقط لا يكفي ما لَم يُقرن باعتقاد أنّ محمداً رسولُ الله.

قالَ تعالى: **﴿قُلْ أَطِيعُواْ اللّهَ وَالرَّسُولَ فإِن تَوَلَّوْاْ فَإِنَّ اللّهَ لاَ يُحِبُّ الْكَافِرِينَ (32)﴾** [سورة ءال عمران] أي لا يُحبُّ الله من تولّى عن الإيمانِ بالله والرسولِ لكفرهم والمراد بطاعة الله والرسول في هذه الآية الإيمان بهما.

فهذَا دليلٌ على أنّ من لم يؤمن بالله ورسوله محمد صلى الله عليه وسلم فهُوَ كافرٌ وأنّ الله تَعالى لا يُحبُّه لكُفره. فمن قالَ إنّ الله يحبُّ المؤمنينَ والكافرينَ لأنه خلقَ الجميعَ فقد كذّبَ القرءانَ فيقالُ لَهُ الله خلَقَ الجميعَ لكن لا يُحِبُّ الكُلَّ.

## الفَرضُ على كلِّ مكلّفٍ

واعلم أنّ النطقَ بالشهادَتين بعدَ البلوغ فرضٌ على كلِّ مكلّفٍ مرّةً واحدةً في عُمرِه بنيّة الفرضِ عندَ المَالكيةِ لأنّهُم لا يُوجبونَ التّحيّاتِ في الصّلاةِ إنّما هم يعتبرونَها سنّةً وعندَ غيرهم كالشافعيةِ والحَنابلةِ تجبُ في كلِّ صلاةٍ لصحةِ الصلاةِ.

---

4 الشفا بتعريف حقوق المصطفى (286/2).

5 أخرجه البخاري في صحيحه: كتاب الرقاق: باب التواضع.

## இரு ஷஹாதஹ் கலிமஹ்களின் பொருள்

**شهادة أن لا إله إلا الله என்பதன் சுருக்கமான பொருள்:** உண்மையில் வணங்கி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ் மாத்திரமே என்று உள்ளத்தினால் உறுதி கொண்டு நாவினால் மொழிகிறேன் என்பதாகும்.

**شهادة أن محمدا رسول الله صلى الله عليه وسلم என்பதன் பொருள்:** நிச்சயமாக எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ அவர்கள் மனித, ஜின் வர்க்கங்களாகிய உலகத்தார் அனைவரும் அவர்களின் ஷரீஅத்தை ஈமான் கொண்டு அவர்களை பின்பற்றுவதற்காக வேண்டி அவர்களுக்கு அல்லாஹ்வினால் அனுப்பப்பட்டவர்கள் என்றும், அல்லாஹ்வினால் அறிவிக்கப்படும் அனைத்தையும் மக்களுக்கு எத்திவைப்பதில் அவர்கள் உண்மையாளர் என்றும் உள்ளத்தினால் உறுதி கொண்டு நாவினால் மொழிகிறேன் என்பதாகும்.

இரு ஷஹாதஹ் கலிமஹ்களின் நோக்கம் இல்லாமையிலிருந்து உருவாக்கும் ஆற்றல் (தெய்வீகம்) எனும் தன்மையை அல்லாஹ் அல்லாதவருக்குக் கொடுக்காது, அதனை அல்லாஹ்விற்கு மாத்திரம் தரிபடுத்துவதுடன் எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ அவர்களின் ரிஸாலத்தை ஏற்றுக்கொள்வதாகும்.

அல்லாஹ் குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்:

﴿وَمَنْ لَّمْ يُؤْمِنْ بِاللَّهِ وَرَسُولِهِ فَإِنَّا أَعْتَدْنَا لِلْكَافِرِينَ سَعِيراً﴾

விளக்கம் :

“யார் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்பிக்கை கொள்ளவில்லையோ நிச்சயமாக நாங்கள் நிராகரித்தோருக்கு கொழுந்து விட்டெரிகின்ற நெருப்பை தயார் செய்து வைத்துள்ளோம்.”

அத்தியாயம் : அல் பத்ஹு. வசனம் : 13

இவ்வசனம் முஹம்மத் ﷺ அவர்களை யார் ஈமான் கொள்ளவில்லையோ அவர் காபிர் தான் எனும் விடயத்தில் மிகத் தெளிவானதாகும். எனவே யார் இவ்விடயத்தில் மறுப்புத் தெரிவிப்பாரோ அவர் குர்ஆனை மறுத்தவராகி விடுகின்றார். யார் குர்ஆனை மறுக்கின்றாரோ அவர் காபிராகி விடுகின்றார்.

“இஸ்லாம் மார்க்கம் அல்லாத வேறு ஒன்றைத் தனது மார்க்கமாக எடுத்துக் கொண்டவர் மேலும் அவரைக் காபிர் என்று ஏற்றுக்கொள்ளாதவர் அல்லது (அவர் காபிரா? அல்லது காபிர் இல்லையா? என்று) சந்தேகிப்பவர் அல்லது அவர் காபிர் என்றோ அல்லது காபிர் இல்லையென்றோ நான் சொல்லமாட்டேன் என்று நிறுத்திக்கொள்பவர் இவர்கள் அனைவரும் காபிராகிவிடுவார்கள்” என இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் ஏகோபித்துக் கூறியுள்ளார்கள்.

இரு ஷஹாதஹ் கலிமஹ்வாகிய **أشهد أن لا إله إلا الله وأشهد أن محمدا رسول الله** என்பதை அல்லது அவ்விரண்டின் அர்த்தத்தைப் பொதிந்த அறபுப் பாஷை அல்லாத வேறு பாஷையினால் இருப்பினும் அவ்விரண்டையும் மொழியாமல் ஈமான், இஸ்லாம் மற்றும் ஸாலிஹான நல் அமல்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதை உறுதியாக அறிந்து கொள்வீர்!

இஸ்லாம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு வாழ்நாளில் ஒரு தடவை இரு ஷஹாதஹ்வை மொழிந்திருத்தல் போதுமானதாகும். மேலும் தொழுகை ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அவ்விரு ஷஹாதஹ் கலிமஹ்வையும் ஒவ்வொரு தொழுகையிலும் மொழிவது கட்டாயமாகும். இது காபிராக இருந்து பின்னர் இஸ்லாத்தில் நுழைய விரும்பும் ஒருவர் விடயத்திலாகும்.

எனவே இஸ்லாத்தின் அடிப்படையில் வாழ்ந்து, இரு ஷஹாதஹ் கலிமஹ்வையும் ஏற்று உறுதி கொண்டிருந்த ஒருவரைப் பொறுத்தமட்டில் அவ்விரண்டையும் மொழிவது நிபந்தனையிடப்பட மாட்டாது. மாறாக அவர் அவ்விரண்டையும் மொழியவில்லையென்றாலும் முஸ்லிமாவார்.

அழ்ழாஹ் கூறியதாக முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்:

"وما تقرّبَ إليّ عبدي بشيءٍ أحبّ إليّ مما افتَرضتُ عليه"

“நான் கடமையாக்கிய விடயங்களை நிறைவேற்றுவதை விட என்னால் பொருந்திக்கொள்ளப்பட்ட வேறு எதைக் கொண்டும் எனது அடியான் எனது றஹ்மத்தை நெருங்குவதில்லை”.

இது ஹதீஸ் குத்ஸீயாகும். இமாம் புகாரீ இதனை அறிவித்துள்ளார்கள். மிகச்சிறந்ததும், முதல் கடமையுமானது அல்லாஹ்வையும், அவனது தூதர் முஹம்மத் ﷺ அவர்களையும் ஈமான் கொள்வதாகும். முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்று உறுதிகொள்ளாமல் வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை என்பதை மாத்திரம் உறுதிகொள்வது போதுமாகாது. அல்லாஹ் குர்ஆனில் கூறியுள்ளான்:

﴿قُلْ أَطِيعُوا اللَّهَ وَالرَّسُولَ فَإِنْ تَوَلَّوْا فَإِنَّ اللَّهَ لا يُحِبُّ الْكَافِرِينَ﴾

விளக்கம் :

“நபியே! அல்லாஹ்வுக்கும், தூதருக்கும் வழிப்படுங்கள் என்று கூறுங்கள். அவர்கள் அதைப் புறக்கணித்தால் நிச்சயமாக அல்லாஹ் அந்தக் காபிர்களைப் பொருந்திக்கொள்ளமாட்டான்.”

அத்தியாயம்: ஆல இம்றான் வசனம்:32

அதாவது எவர்கள் அல்லாஹ்வையும், தூதரையும் ஈமான் கொள்ளாது புறக்கணித்தார்களோ அவர்கள் காபிரானதால் அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொள்ளமாட்டான். இவ்வசனத்தில் அல்லாஹ்வுக்கும், தூதருக்கும் வழிப்படுங்கள் என்பதைக் கொண்டு நாடப்படுவது அவ்விருவரையும் நம்பிக்கை கொள்வதாகும். எனவே யார் அல்லாஹ்வையும், அவனது தூதரையும் ஈமான் கொள்ளவில்லையோ அவர் காபிர் என்பதற்கு இது ஒரு ஆதாரமாகும். மேலும் நிச்சயமாக அல்லாஹ் அவரை அவரின் குப்ரின் காரணமாக பொருந்திக் கொள்ளமாட்டான்.

எனவே யார் “நிச்சயமாக அல்லாஹ் முஃமின்களையும், காபிர்களையும் பொருந்திக் கொண்டுள்ளான்; ஏனெனில் அவன்தான் அனைத்தையும் படைத்தான்” என்று கூறுகின்றாரோ திட்டமாக அவர் குர்ஆனைப் பொய்ப்பித்துவிட்டார். இவ்வாறு கூறும் நபரிடத்தில் “அல்லாஹ் அனைத்தையும் படைத்தான் ஆனால் அனைவரையும் நேசிக்கமாட்டான்” எனக் கூறப்படும்.

## இஸ்லாமிய கடமைகளைச் செய்யப் பணிக்கப்பட்ட ஒவ்வொருவர் மீதான கடமை

அறிந்து கொள்ளுங்கள்! பருவத்தை அடைந்த ஒவ்வொரு முகல்லபும் வாழ்நாளில் ஒரு தடவை இரு ஷஹாதஹ் கலிமஹ்களை கடமையென்ற நிய்யத்துடன் மொழிவது மாலிக் மத்ஹபைச் சேர்ந்தோரிடத்தில் கட்டாயமாகும். ஏனெனில் அவர்கள் தொழுகையில் அத்தஹிய்யாத் ஓதுவதை கடமையெனக் கருதுவதில்லை. மாறாக அதனை சுன்னத்தாக கருதுகின்றார்கள். மேலும் அவர்களல்லாத ஷாபிஈ மற்றும் ஹன்பலி ஆகிய மத்ஹபுகளை பின்பற்றுவோரிடத்தில் தொழுகை நிறைவேறுவதற்காக ஒவ்வொரு தொழுகையிலும் ஷஹாதஹ் கலிமஹ்வை ஓதுவது கட்டாயமாகும்.

### لا دينَ صحيحٌ إلا الإسلامُ

الدينُ الحقُّ عندَ الله الإسلامُ قالَ تعالى: ﴿وَمَن يَبْتَغِ غَيْرَ الإِسْلاَمِ دِيناً فَلَن يُقْبَلَ مِنْهُ وَهُوَ فِي الآخِرَةِ مِنَ الْخَاسِرِينَ (85)﴾ [سورة ءال عمران]. وقالَ تَعالى أيضًا: ﴿إِنَّ الدِّينَ عِندَ اللّهِ الإِسْلاَمُ (19)﴾ [سورة ءال عمران].

فكُلُّ الأنبياءِ مسلمونَ فمن كانَ متّبعًا لموسى صلى الله عليه وسلم فهو مسلمٌ موسويٌّ، ومن كانَ متّبعًا لعيسى صلى الله عليه وسلم فهوَ مسلمٌ عيسويٌّ، ويَصحُّ أن يُقالَ لمن اتّبعَ محمدًا صلى الله عليه وسلم مسلمٌ محمديٌّ.

والإسلامُ هو الدّينُ الذي رضيَهُ اللهُ لعباده وأمرَنا باتّباعه.

ولا يُسمّى اللهُ مسلمًا كما تلفظَ به بعضُ الجهال.

فقديمًا كان البشرُ جميعُهم على دينٍ واحدٍ هو الإسلامُ. وإنّما حدثَ الشركُ والكفرُ بالله تعالى بعد النبي إدريس. فكان نوحٌ أوّلَ نبيٍ أُرسِلَ إلى الكفارِ يدعو إلى عبادةِ اللهِ الواحدِ الذي لا شريكَ له. وقد حذّرَ اللهُ جميعَ الرُّسُلِ من بعده منَ الشركِ.

فقام سيدُنا محمد صلى الله عليه وسلم بتجديدِ الدعوةِ إلى الإسلام بعد أن انقطعَ فيما بينَ الناسِ في الأرضِ مؤيّدًا بالمعجزاتِ الدّالّةِ على نبوته. فَدَخَلَ البعضُ في الإسلامِ، وجَحَدَ بنبوتِه أهلُ الضلالِ الذين منهم مَن كان مشركًا قبلا كفرقةٍ من اليهودِ عَبَدَت عُزيرًا فازدادُوا كفرًا إلى كفرهم. ءامنَ به بعضُ أهلِ الكتابِ اليهودِ والنصارى

كعبدِ الله بن سلامٍ عالم اليهودِ بالمدينةِ، وأصحَمةَ النّجاشيّ ملكِ الحبشةِ وكان نصرانيًّا ثم اتّبعَ الرسولَ اتباعًا كاملا وماتَ في حياةِ رسولِ الله صلى الله عليه وسلم وصلّى عليه الرسولُ صلاةَ الغائب يومَ ماتَ[6]. أوحى الله إليه بموتِهِ. ثم كان يُرى على قبرهِ في الليالي نورٌ وهذا دليلٌ أنه صارَ مسلمًا كاملا وليًّا مِن أولياءِ الله رضيَ الله عنه.

والمبدأُ الإسلاميُّ الجامعُ لجميعِ أهلِ الإسلامِ عبادةُ الله وحدَه.

6 أخرجه أبو داود في سننه: كتاب الجنائز: باب الصلاة على المسلم يموت في بلاد الشرك.

## இஸ்லாமன்றி வேறு உண்மையான மார்க்கம் எதுவுமில்லை

அழ்ழாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாமாகும். இதனைத் தான் அழ்ழாஹ் கூறியுள்ளான்:

﴿وَمَنْ يَبْتَغِ غَيْرَ الإِسْلامِ دِينًا فَلَنْ يُقْبَلَ مِنْهُ وَهُوَ فِي الآخِرَةِ مِنَ الْخَاسِرِينَ﴾

விளக்கம்:

"யார் இஸ்லாம் அல்லாத வேறு ஒரு மார்க்கத்தை பின்பற்றுவாரோ அதை அழ்ழாஹ் அவரிடமிருந்து ஏற்றுக்கொள்ளமாட்டான். மேலும் அவர் நாளை மறுமையில் நஷ்டவாளிகளில் ஆகிவிடுவார்"

அத்தியாயம் : ஆல இம்ரான் வசனம் : 85

மேலும் அழ்ழாஹ் கூறியுள்ளான்

﴿إِنَّ الدِّينَ عِنْدَ اللَّهِ الإِسْلامُ﴾

விளக்கம்:

"அழ்ழாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாமே"

அத்தியாயம் : ஆல இம்ரான் வசனம் : 19

நபிமார்கள் அனைவரும் முஸ்லிம்களாவர். எவர் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பின்பற்றுகிறாரோ அவர் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சேர்ந்த முஸ்லிமாவார். மேலும் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பின்பற்றுகிறாரோ அவர் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சேர்ந்த முஸ்லிமாவார். மேலும் யார் முஹம்மத் ﷺ அவர்களைப் பின்பற்றுகிறாரோ அவர் முஹம்மத் ﷺ அவர்களைச் சேர்ந்த முஸ்லிம் என்று கூறப்படுவது ஆகுமாகும். அழ்ழாஹ் அடியார்களுக்கு பொருந்திக்கொண்ட மார்க்கமே இஸ்லாமாகும். அதனையே ஏற்று, பின்பற்றுமாறு எங்களுக்கு கட்டளையிட்டுள்ளான்.

சில அறிவிலிகள் சொன்னது போன்று அழ்ழாஹ்வுக்கு "முஸ்லிம்" என்று பெயர் கூறப்படமாட்டாது.

அன்றைய காலத்தில் அனைத்து மனிதர்களும் இஸ்லாம் என்ற ஒரே மார்க்கத்தில் தான் இருந்தார்கள். இணைவைத்தலும் (ஷிர்க்),

அழ்ழாஹ்வை நிராகரித்தலும் நபி இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு பின்னரே உண்டானது.

நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காபிர்களுக்கு அனுப்பப்பட்ட ரஸூல்மார்களில் முதன்மையானவராவார். அவர்கள் இணையின்றி தனித்த அழ்ழாஹ்வை வணங்குவதின் பால் அழைத்தார்கள். அழ்ழாஹு தஆலா நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பின்னர் வந்த அனைத்து றஸூல்மார்களின் உம்மத்தினரையும் இணைவைத்தலை விட்டும் எச்சரித்தான்.

பூமியிலே மனிதர்களுக்கு மத்தியில் இஸ்லாம் துண்டித்திருந்த பின்னர் முஹம்மத் ﷺ அவர்கள் தன் நுபுவ்வத் மீது அறிவிக்கக்கூடிய முஃஜிஸத்களைக் கொண்டு பலப்படுத்தப்பட்டவர்களாக இஸ்லாத்தின் பக்கம் பிரச்சாரத்தை மீண்டும் ஆரம்பித்தார்கள்.சிலர் இஸ்லாத்தில் நுழைந்தனர். வழிகெட்டவர்கள் நுபுவ்வத்தை மறுத்தனர். உஸைர் அலைஹிஸ்ஸலாம் அவர்களை வணங்கிய சில யஹூதிகளைப் போன்று முன்னரே அழ்ழாஹ்வுக்கு இணைவைத்தவர்களாக இருந்த அவர்கள், முஹம்மத் ﷺ அவர்களின் நுபுவ்வத்தையும் மறுத்து, குப்ரை மென்மேலும் அதிகரித்துக்கொண்டனர். மேலும் வேதத்தையுடைய யஹூதிகள், நஸாராக்களில் சிலர் அவர்களை ஈமான் கொண்டனர். உதாரணமாக மதீனாவில் யஹூதிகளின் அறிஞராக காணப்பட்ட அப்துழ்ழாஹ் இப்னு ஸலாம் என்பவரைப் போன்று. மேலும் ஹபஷா நாட்டு மன்னர் (أشحمة النجاشي) அஷ்ஹமதுன் நஜாஷி என்பவரைப் போல இவர் ஒரு நஸ்ரானியாக இருந்தார். பின்னர் முஹம்மத் ﷺ அவர்களை பரிபூரணமாக பின்பற்றி, முஹம்மத் ﷺ அவர்கள் உயிரோடு இருக்கும் காலத்திலேயே மரணித்தார். மேலும் அவர் மரணித்த அன்று அவருக்காக முஹம்மத் ﷺ அவர்கள் மறைவான ஜனாஸாத் தொழுகை நடத்தினார்கள். அழ்ழாஹ் முஹம்மத் ﷺ அவர்களுக்கு அவரின் மரணத்தை வஹீ மூலம் அறிவித்துக் கொடுத்தான். அவர் மரணித்த பின்னர் இரவு நேரங்களில் அவரின் கப்ரின் மீது ஒளி வெளிப்படக்கூடியதாக இருந்தது. இது அவர் ஒரு பரிபூரண

முஸ்லிமாகவும், அழ்ழாஹ்வின் வலிமார்களில் ஒருவராகவும் இருந்தார்கள் என்பதற்கு ஒரு சான்றாகும்.

அனைத்து முஸ்லிம்களையும் ஒன்று சேர்க்கக்கூடிய இஸ்லாமிய அடிப்படை அழ்ழாஹ்வை மாத்திரம் வணங்குவதாகும்.

## حُكمُ من يَدّعي الإسلامَ لفظًا

## وهو مناقضٌ للإسلامِ معنًى

هناكَ طوائف عديدة كَذّبت الإسلامَ معنًى ولو انتموا للإسلام بقولهم الشهادتين أشهدُ أن لا إله إلا الله وأشهدُ أن محمدًا رسولُ الله وصلوا وصاموا لأنّهم ناقضوا الشهادتين باعتقادِ ما ينافيهما فإنّهم خرجوا من التوحيدِ بعبادتهم لغيرِ الله فهم كفّارٌ ليسوا مسلمينَ كالذين يعتقدونَ ألوهيّةَ علي بن أبي طالبٍ أو الخَضِرِ أو الحاكمِ بأمرِ الله وغيرِهم أو بما في حكمِ ذلكَ منَ القولِ والفعلِ.

وحُكمُ من يجحدُ الشهادتين التكفيرُ قطعًا ومأواه جهنّمُ خالدًا فيها أبدًا لا ينقطعُ في الآخرة عنه العذابُ إلى ما لا نهايةَ له وما هو بخارجٍ من النارِ.

ومن أدّى أعظمَ حقوقِ الله بتوحيدِه تعالى أي ترك الإشراكِ به شيئًا وتصديقِ رسولِه صلى الله عليه وسلم لا يخلدُ في نارِ جهنّم خلودًا أبديًّا وإن دخلَها بمعاصيه ومآله في النهايةِ على أيّ حالٍ كان الخروج من النّار ودخول الجنّة بعد أن يكون قد نالَ العقابَ الذي يستحقُّ إن لم يَعفُ الله عنه. قالَ رسولُ الله صلى الله عليه وسلم: "يخرجُ من النّارِ من قالَ لا إله إلا الله وفي قلبِه وزن ذَرّةٍ من إيمان" رواه البخاريُّ7.

وأمّا الذي قامَ بتوحيدِه تعالى واجتنبَ معاصيه وقامَ بأوامره فيدخل الجنّةَ بلا عذابٍ حيث النعيمُ المقيمُ الخالدُ بدلالة الحديث القدسي الذي رواهُ أبو هريرة قالَ رسولُ الله صلى الله عليه وسلم: قال الله عزّ وجلّ: "أعددتُ لعبادي الصالحين ما لا عينٌ رأت ولا أذنٌ سَمعَت ولا خَطَرَ على قلبِ بشر". وقال أبو هريرة: "اقرؤوا إن شئتم قوله تعالى: ﴿فَلا تَعْلَمُ نَفْسٌ مَّا أُخْفِيَ لَهُم مِّن قُرَّةِ أَعْيُنٍ جَزَاء بِمَا كَانُوا يَعْمَلُونَ (17)﴾ [سورة السجدة] رواهُ البخاري في الصحيحِ8.

---

7 أخرجه البخاري في صحيحه: كتاب الإيمان: باب زيادة الإيمان ونقصانه.

8 أخرجه البخاري في صحيحه: كتاب بدء الخلق: باب ما جاء في صفة الجنة وأنها مخلوقة.

## யதார்த்தத்தில் இஸ்லாத்திற்கு முரண்பட்டவராக வார்த்தை ரீதியில் இஸ்லாத்தை வாதிடுபவரின் சட்டம்

இங்கு பல பிரிவினர் இரு ஷஹாதஹ்களைக் கூறுவதன் மூலமும் மேலும் தொழுதல், நோன்பு நோற்றல் மூலமும் தங்களை இஸ்லாத்தின் பக்கம் இணைத்துக் கொண்ட போதிலும் யதார்த்தத்தில் இஸ்லாத்தை பொய்ப்பித்துவிட்டனர். ஏனெனில் அவர்கள் அவ்விரு ஷஹாதஹ்களுக்கும் மாறுபாடானதை நம்புவது கொண்டு அவ்விரண்டிற்கும் முரண்பட்டு, அழ்ழாஹ் அல்லாததை வணங்கியதனால் தௌஹீதை விட்டும் வெளியேறிவிட்டனர். அவர்கள் காபிர்களாவர். முஸ்லிம்களல்லர். உதாரணமாக அலீ இப்னு அபீதாலிப் அல்லது (الخضر) ஹழிர் அலைஹிஸ்ஸலாம் அல்லது (الحاكم بأمر الله) அல்-ஹாகிம் பிஅம்ரில்லாஹ் மேலும் அவர்களல்லாதோரை கடவுள் என நம்பும் சிலர் போன்று. அல்லது அவ்விரண்டிற்கும் மாறுபாடானதை நம்புவதன் சட்டத்தைக் கொண்டுள்ள சொல், செயலில் ஈடுபடுவதைக் கொண்டு அவ்விரு ஷஹாதஹ்களுக்கும் மாறுபட்டுவிட்டனர்.

இரு ஷஹாதஹ்களை மறுப்பவரின் சட்டம் கருத்து வேறுபாடின்றி அவர் காபிர் என்பதாகும். அவர் ஒதுங்கும் தலம் நரகமே. அதில் அவர் நிரந்தரமாக இருப்பார். மறுமையில் நிரந்தரமான வேதனை அவரை விட்டும் நின்றுவிடமாட்டாது. மேலும் அவரால் நரகிலிருந்து வெளியேறவே முடியாது.

எவர் அழ்ழாஹ்வுக்கு எதைக் கொண்டும் இணைவைக்காமல் அவனை தனித்துவப்படுத்துவதன் மூலமும் மேலும் முஹம்மத் ﷺ அவர்களை உண்மைப்படுத்துவதன் மூலமும் அழ்ழாஹ்விற்கு செய்ய வேண்டிய கடமைகளில் மிக முக்கியமானதை நிறைவேற்றுகிறாரோ இவர் பாவச் செயல் காரணமாக நரகம் நுழைந்த போதிலும் அதில் நிரந்தரமாக இருக்கமாட்டார். இறுதியில் அவருடைய முடிவு, அழ்ழாஹு தஆலா அவருடைய குற்றத்தை மன்னிக்காத பட்சத்தில் அவருக்கேற்ற தண்டனையை பெற்றதன் பின் நரகிலிருந்து வெளியேறி சுவர்க்கத்தில் நுழைவதாகும்.

முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்:

يخرجُ من النّارِ من قالَ لا إله إلا الله وفي قلبهِ وزن ذَرّةٍ من إيمانٍ

விளக்கம்:

“எவர் (لا إله إلا الله) “லா இலாஹ இல்லழ்ழாஹு” என்று கூறி அவர் உள்ளத்தில் அடிப்படை ஈமான் இருக்கிறதோ அவர் நரகிலிருந்து வெளியேறிவிடுவார்.” அறிவித்தவர் - புகாரீ.

எவர் அழ்ழாஹ்வுக்கு எதனையும் இணைவைக்காமல் அவனை தனித்துவப்படுத்தி, அவனுடைய விலக்கல்களை தவிர்ந்து மேலும் கட்டளைகளை எடுத்து நடக்கின்றாரோ அவர் அல்-ஹதீஸுல் குத்ஸிய்யின் அறிவிப்பின் பிரகாரம் எவ்வித வேதனையுமின்றி நிரந்தர சுகம் இருக்கும் சுவர்க்கத்தில் நுழைவார். அழ்ழாஹு தஆலா கூறியதாக முஹம்மத் ﷺ அவர்கள் கூறியதை அபூ ஹுரைரா றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். “எந்தக் கண்ணும் கண்டிராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த மனித உள்ளத்திலும் தோன்றிடாத சுகமானவற்றை எனது நல்லடியார்களுக்காக நான் தயார் செய்திருக்கின்றேன்.” மேலும் அபூ ஹுரைரா றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள் : “நீங்கள் விரும்பினால் அழ்ழாஹு தஆலாவுடைய கூற்றாகிய

﴿فَلا تَعْلَمُ نَفْسٌ مَّا أُخْفِيَ لَهُم مِّنْ قُرَّةِ أَعْيُنٍ جَزَاءً بِمَا كَانُوا يَعْمَلُونَ﴾

என்பதை ஓதிக்கொள்ளுங்கள்”. இதனை இமாம் புகாரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் ஸஹீஹுல் புகாரியில் பதிவிட்டுள்ளார்கள்.

## بيانُ أقسامِ الكفرِ

واعلم يا أخي المسلم أن هناكَ اعتقادات وأفعالا وأقوالا تنقضُ الشهادتين وتوقِعُ في الكفرِ لأن الكفرَ ثلاثةُ أنواع: كفرٌ اعتقاديٌّ وكفرٌ فعليٌّ وكفرٌ لفظيٌّ، وذلك باتفاقِ المذاهبِ الأربعة كالنووي9 وابن المقري10 من الشافعيةِ وابن عابدين11 من الحنفيةِ والبُهُوتي12 من الحنابلةِ والشيخ محمد عِلّيش13 من المالكيةِ وغيرِهم فلينظرها من شاءَ. وكذلك غيرُ علماء المذاهبِ الأربعةِ من المجتهدينَ الماضينَ كالأوزاعيّ فإنه كان مجتهدًا له مذهبٌ كان يُعْمَلُ به ثم انقرضَ أتباعُهُ. الكفرُ الاعتقاديُّ مكانُهُ القلبُ كنفيِ صفةٍ من صفاتِ الله تعالى الواجبةِ له إجماعًا كوجوده وكونه قادرًا وكونه سميعًا بصيرًا أو اعتقادِ أنه نورٌ بمعنى الضوءِ أو أنه روحٌ. قال الشيخُ عبدُ الغنيّ النابلسيّ14: "مَن اعتقدَ أن الله ملأ السموات والأرضَ أو أنه جسمٌ قاعدٌ فوقَ العرشِ فهو كافرٌ وإن زعمَ أنه مسلمٌ".

الكفرُ الفعليُّ: كإلقاءِ المصحفِ في القاذورات قال ابنُ عابدينَ15: ولو لم يقصد الاستخفافَ لأن فعلَه يدلُّ على الاستخفاف. أو أوراقِ العلومِ الشرعيةِ، أو أيِّ ورقةٍ عليها اسمٌ من أسماءِ الله تعالى معَ العلمِ بوجودِ الاسمِ فيها. ومن عَلّقَ شعَارَ الكفرِ على نفسه فإن كان بنيةِ التبرّك أو التّعظيمِ أو الاستحلالِ من غير ضرورة كان مرتدا.

الكفرُ القوليُّ: كمن يشتم الله تعالى بقوله والعياذُ بالله ابنَ الله، يقعُ الكفر هنا ولو لم يعتقد أن لله ابنًا. ولو نادى مسلمٌ مسلمًا ءاخرَ بقوله: يا كافرُ بلا تأويلٍ كفرَ القائلُ لأنه سمّى الإسلامَ كفرًا. ويكفرُ من يقولُ للمسلمِ يا يهوديُّ أو أمثَالها منَ العبارات بنيّة أنّه ليسَ بمسلم إلا إذا قَصدَ أنّه يشبهُ اليهودَ فلا يكفُر. كَذَلِكَ الْقَوْلُ لِلْكَافِرِ (اللَّهُ يَغْفِرُ لَكَ)، إنْ قَصَدَ أَنَّ اللَّهَ تَعَالَى يَغْفِرُ لَهُ وَهُوَ عَلَى كُفْرِهِ إلَى الْمَوْتِ.

---

9 المنهاج (ص/131)، روضة الطالبين: كتاب الردة (64/10).

10 الإرشاد (ص/181-182).

11 رد المحتار على الدر المختار، باب المرتد (283/3).

12 شرح منتهى الإرادات، باب حكم المرتد (386/3).

13 منح الجليل شرح مختصر خليل (205/9).

14 الفتح الرباني (ص/124).

15 رد المحتار (222/4).

## குப்ருடைய வகைகள் பற்றிய தெளிவு

எனது முஸ்லிம் சகோதரா! இரு ஷஹாதஹ்களை முறித்து, குப்ரில் வீழ்த்திவிடக்கூடிய நம்பிக்கைகளும், செயல்களும், வார்த்தைகளும் இருக்கின்றன என்பதை நீ அறிந்து கொள். ஏனெனில் குப்ரானது

- **நம்பிக்கை சார்ந்த குப்ர்**
- **செயல் சார்ந்த குப்ர்**
- **சொல் சார்ந்த குப்ர்**

என்று மூன்று வகைகளாகும். இதுவானது ஷாபிஇய்யஹ்களில் இமாம் நவவீ றஹிமஹுல்லாஹ் மற்றும் இப்னு முக்ரிஃ றஹிமஹுல்லாஹ் மேலும் ஹனபிய்யஹ்களில் இப்னு ஆபிதீன் றஹிமஹுல்லாஹ் மேலும் ஹன்பலிய்யஹ்களில் அல்-புஹூதி றஹிமஹுல்லாஹ் மேலும் மாலிகிய்யஹ்களில் அஷ்ஷைய்ஹ் முஹம்மத் இல்லைஷ் றஹிமஹுல்லாஹ் மற்றும் அவர்களல்லாதவர்கள் போன்ற நான்கு மத்ஹப்களின் அறிஞர்களுடைய ஒருமித்த முடிவைக் கொண்டதாகும். விரும்பியவர் அவற்றைப் பார்த்துக் கொள்ளட்டும். அவ்வாறே நான்கு மத்ஹபுகளுடைய அறிஞர்களல்லாத இமாம் அவ்ஸாயீ போன்ற முன்வாழ்ந்த முஜ்தஹிதுகளும் ஒன்றுபட்டுள்ளார்கள். ஏனெனில் அவர் ஒரு முஜ்தஹிதாகும். நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த ஒரு மத்ஹபும் அவருக்கிருந்தது. பின்னர் அதனைப் பின்பற்றிவந்தோர் மறைந்துவிட்டனர்.

**நம்பிக்கை சார்ந்த குப்ர்:** அது ஏற்படும் இடம் உள்ளமாகும். உதாரணமாக அல்லாஹு தஆலாவின் உள்ளமை, அவன் வல்லமையுடையவனாக இருத்தல், அவன் கேட்பவனாக, பார்ப்பவனாக இருத்தல் போன்ற இஜ்மாவுடைய ரீதியில் அவனுக்கு அவசியம் இருக்க வேண்டிய பண்புகளில் ஒரு பண்பை மறுப்பதையும் அல்லது வெளிச்சம் எனும் கருத்தில் அவன் "நூர்" என்று அல்லது அவன் ஒரு ரூஹ் என்று நம்புவதையும் குறிப்பிடலாம்.

(الشيخ عبد الغني النابلسي) அஷ்ஷைய்க் அப்துல் கனீய் அன்னாபுலுஸீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள்:

"مَن اعتقدَ أن الله ملأ السموات والأرضَ أو أنه جسمٌ قاعدٌ فوقَ العرشِ فهو كافرٌ وإن زعمَ أنه مسلمٌ".

“அழ்ழாஹ் வானங்களிலும், பூமிகளிலும் நிரம்பியிருக்கின்றான் என்றோ அல்லது அவன் அர்ஷுக்கு மேல் உட்கார்ந்திருக்கும் ஜடம் என்றோ நம்புமொருவர் காபிராவார். அவர் தன்னை முஸ்லிமாக கருதினாலும் சரியே”

**செயல் சார்ந்த குப்ர்:** குர்ஆனை அழுக்குகளில் வீசுவதைப் போல. இமாம் இப்னு ஆபிதீன் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் “குறைத்து மதிப்பிடுவதை நாடாமல் இவ்வாறு செய்தாலும் சரி. ஏனெனில் அவரின் செயலே குறைத்து மதிப்பிடுவதை அறிவிக்கின்றது.”

மார்க்கம் சார்ந்த அறிவுகளை உள்ளடக்கிய தாள்களை வீசுவதையும் அல்லது அழ்ழாஹு தஆலாவுடைய நாமங்களில் ஒரு நாமம் தாளில் இருப்பதை அறிந்திருப்பதுடன் அத்தாளை வீசுவதையும் போல. எவ்வித தங்கடமுமின்றி ஒருவர் தன்மீது குப்ருடைய அடையாளச்சின்னத்தை அணிவது. பறகத் பெறுதல் அல்லது கண்ணியப்படுத்துதல் அல்லது ஹலாலாக்கத்தேடுதல் எனும் நோக்கத்தை கொண்டதாக அது இருந்தால் அவன் முர்தத்தாகிவிடுவான். எனினும் மேற்குறித்த எந்தவித நோக்கமுமின்றி குப்ருடைய அடையாள சின்னத்தை எவ்வித நிர்ப்பந்தமும் இல்லாமல் அணிந்தால் காபிராகமாட்டார். என்றாலும் பெரும்பாவியாகிவிடுவார்.

**சொல் சார்ந்த குப்ர்:** உதாரணமாக ஒருவர் மற்றொருவருக்கு “நீ அழ்ழாஹ்வின் மகன்” என்று சொல்வதைப் போல. இது அழ்ழாஹ்வைத் திட்டுவதாகும். அழ்ழாஹு தஆலா குப்ரை விட்டும் பாதுகாப்பானாக. அவன் அழ்ழாஹ்வுக்கு பிள்ளை இருப்பதாக நம்பிக்கை கொள்ளாத போதிலும் இங்கு குப்ர் ஏற்பட்டுவிடும்.

ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமை எவ்வித தஃவீலுமின்றி (வலிந்துரையுமின்றி) “காபிர்” என்று அழைப்பாராயின் அவ்வாறு அழைத்தவர் காபிராகிவிடுவார். ஏனெனில் அவர் இஸ்லாத்தை குப்ர் என குறிப்பிட்டமையினாலாகும். மேலும் ஒரு முஸ்லிமை

"யஹூதியே!" அல்லது அதுபோன்ற வார்த்தைகளை அவர் முஸ்லிமாக இல்லை என எண்ணிக் கூறுபவர் காபிராகிவிடுவார். என்றாலும் அவன் யஹூதிகளுக்கு ஒப்பாகுகிறான் என்பதை நாடிக் கூறுவாரேயானால் அவர் காபிராகமாட்டார்.

காபிரான ஒருவன் மரணிக்கும் வரையில் குப்ரிலேயே இருப்பார் என்ற போதிலும் அழ்ழாஹ் அவனை மன்னிப்பான் என்ற அர்த்தத்தில் அக்காபிரை நோக்கி "அழ்ழாஹ் உன்னை மன்னிப்பானாக" என்று சொல்வதும் குப்ராகும்.

## ما يستثنى من الكفرِ القولي

يُستثنَى من الكفرِ اللفظي: حالةُ سبقِ اللسانِ: أي أن يتكلمَ بشيءٍ من ذلكَ من غيرِ إرادةٍ بَل جَرى على لسانِه و لم يقصدْ أن يقولَه بالمرة.

وحالةُ غيبوبةِ العَقل: أي عَدَمِ صَحوِ العقلِ.

وحالةُ الإكراه: فمن نطقَ بالكفرِ بلسانه مُكرهًا بالقتل ونحوه وقلبُه مطمئنٌ بالإيمان فلا يكفرُ قال تعالى: ﴿مَن كَفَرَ بِاللهِ مِن بَعْدِ إيمَانِه إلاّ مَنْ أُكْرِهَ وَقَلْبُهُ مُطْمَئِنٌّ بِالإِيمَانِ وَلَكِن مَّن شَرَحَ بِالْكُفْرِ صَدْرًا فَعَلَيْهِمْ غَضَبٌ مِّنَ اللهِ (106)﴾ الآية [سورة النحل].

حَالةُ الحكايةِ لكفرِ الغَيرِ: فلا يَكفر الحاكي كُفْرَ غيره على غيرِ وجه الرِّضَى والاستحسان، ومستندُنا في استثناءِ مسئلةِ الحكايةِ قولُ الله تعالى: ﴿وَقَالَتِ الْيَهُودُ عُزَيْرٌ ابْنُ اللهِ وَقَالَتِ النَّصَارَى الْمَسِيحُ ابْنُ اللهِ (30)﴾ [سورة التوبة]، ﴿وَقَالَتِ الْيَهُودُ يَدُ اللهِ مَغْلُولَةٌ (64)﴾[سورة المائدة].

ثم الحكايةُ المانعَةُ لكفرِ حاكي الكفرِ إمّا أن تكونَ في أوّلِ الكلمةِ التي يحكيها عمّن تكلم بكفرٍ، أو بعدَ ذكره الكلمةَ عقبَها وقد كان ناويًا أن يأتي بأداةِ الحكايةِ قبلَ أن يقولَ كلمة الكفرِ، فلو قال: المسيحُ ابنُ الله قولُ النصارى، أو قالته النصارى فهي حكاية مانعةٌ للكفرِ عن الحاكي.

وحالةُ كونِ الشخصِ متأوّلا باجتهاده في فهمِ الشرع: فإنه لا يكفرُ المتأوّلُ إلا إذا كان تأوُّله في القطعيّات فأخطأ فإنّه لا يُعذَر كتأوُّلِ الذين قالوا بقِدَمِ العالَم وأزليته كابن تيمية[16]. وأما مثالُ من لا يكفر ممّن تأوّل فهو كتأوُّلِ الذين منعوا الزكاةَ في عهدِ أبي بكر بأن الزكاةَ وجبَت في عهدِ الرسول لأن صلاتَهُ كانت عليهم سَكَنًا لهم

16 الموافقة (75/2)، المنهاج (83/1)، نقد مراتب الإجماع (ص/168)، الفتاوى (300/6)، مجموعة تفسير (/13-12).

وطُهرَةً ـــ أي رحمةً وطمأنينة ـــ وأن ذلك انقطعَ بموته فإنّ الصحابةَ لم يكفّروهم لذلك لأنّ هؤلاء فهموا من قوله تعالى: ﴿خُذْ مِنْ أَمْوَالِهِمْ صَدَقَةً تُطَهِّرُهُمْ وَتُزَكِّيهِم بِهَا وَصَلِّ عَلَيْهِمْ إِنَّ صَلاَتَكَ سَكَنٌ لَّهُمْ (103)﴾ [سورة التوبة] أن المرادَ من قوله خذ أي يا محمدُ الزكاةَ لتكون إذا دفعوها إليكَ سَكَنًا لهم، وأن هذا لا يحصلُ بعد وفاتِه فلا يجبُ عليهم دفعُهَا لأنه قد ماتَ وهو المأمورُ بأخذها منهم، ولم يفهموا أن الحكمَ عامٌّ في حالِ حياتِه وبعد موتِه وإنما قاتَلَهُم أبو بكرٍ كما قاتلَ المرتدينَ الذينَ اتبعُوا مسيلمةَ الكذاب في دعواهُ النُّبوَّةَ لأنه ما كان يُمكنهُ أن يأخذَ منهُم قَهْرًا بدونِ قتالٍ لأنهم كانوا ذَوي قوة فاضطرَّ إلى القتالِ. وكذلك الذين فسّروا قول الله تعالى:﴿فَهَلْ أَنتُم مُّنتَهُونَ (91)﴾ بأنّه تخييرٌ وليس تحريمًا للخمرِ فشربوها لأن عُمرَ ما كفّرهم وإنما قال: "اجلدوهم ثمانينَ ثمانينَ، ثم إن عادوا فاقتلُوهُم" اهـــ. رواهُ ابنُ أبي شيبة[17].

ومما يشهدُ من المنقولِ في مسئلةِ الاجتهاد بالتأوّلِ وحكاية الكفرِ قولُ شمس الدين الرمليّ في شرحه على منهاج الطالبينَ في أوائلِ كتابِ الرّدّةِ في شرح قولِ النووي: الردّةُ قطعُ الإسلام بنيّةٍ أو قولِ كفرٍ ما نَصُّه[18]: "فلا أثَر لسَبْقِ لسانٍ أو إكراهٍ واجتهادٍ وحكايةِ كُفْرٍ".

وقولُ المحشي ـــ أي صاحب الحاشية على الشرح ـــ نور الدين علي الشّبرامَلّسي المتوفَى سنة ألف وسبعٍ وثمانين عند قولِ الرملي: "واجتهادٍ" ما نَصُّه[19]: "أي لا مطلقًا كما هو ظاهرٌ لِمَا سيأتي من نحوِ كُفرِ القائلينَ بقدَمِ العالَم مع أنّه بالاجتهادِ والاستدلالِ". قال المحشي الآخَرُ على الرمليّ أحمدُ بنُ عبد الرزاق المعروفُ بالمغربي الرّشيدي المتوفّى سنة ألف وستّ وتسعين قولُه[20]: "واجتهاد" أي فيما لم يقُم الدليلُ القاطعُ على خلافِه بدليلِ كفرِ نحو القائلينَ بقدَم العالَم مع أنّه بالاجتهادِ اهـــ، من هنا يُعلم أنه ليس كلُّ متأوّلٍ يمنَعُ عنه تأويلُه التكفيرَ، فليجعلْ طالبُ العلم قولَ الرشيديّ المذكورَ فيما لم يَقُمْ دليلٌ قاطعٌ على ذُكْرٍ ـــ يعني أن يكون مستحضراً لهذه الكلمة في قلبه لأنها مهمّة ـــ، لأن التأوُّلَ مع قيامِ الدليلِ القاطعِ لا يمنَعُ التكفيرَ عن صاحبِه.

ألا ترى أن كثيراً من المنتسبينَ إلى الإسلام المشتغلينَ بالفلسفة مَرَقوا من الدين باعتقادهم القولَ بأزلية العالم اجتهاداً منهم ومع ذلك أجمع المسلمونَ على تكفيرهم كما ذكر ذلك المحدّثُ الفقيه بدرُ الدينِ الزركشيُّ في

---

17 المصنف (503/5)، وتاريخ ابن عساكر (390/24)، وسنن النسائي (252/3): كتاب الحد في الخمر: باب (2).

18 نهاية المحتاج إلى شرح المنهاج (414/7).

19 نهاية المحتاج إلى شرح المنهاج (414/7).

20 حاشية المغربي على نهاية المحتاج (414/7).

شرح جمع الجوامع فإنه قال بعد أن ذكرَ الفريقين منهُم الفريقَ القائل بأزلية العالم بمادته وصورته والفريقَ القائلَ بأزلية العالم بمادته أي بجنسه فقط ما نصّه[21]: "اتّفقَ المسلمونَ على تَضليلهم وتكفيرهم".

وكذلك المرجئة القائلون بأنه لا يضرُّ مع الإيمان ذنبٌ كما لا تنفع مع الكفر حسنةٌ إنما قالوا ذلك اجتهاداً وتأويلاً[22] لبعض النصوص على غير وجهها فلم يُعذَروا،

قاعدة: اللفظُ الذي له مَعنيان أحدُهما نوعٌ من أنواع الكفرِ والآخر ليسَ كفرًا، وكان المعنى الذي هو كفرٌ ظاهرًا لكن ليسَ صريحًا، لا يُكفَّر قائلُه حتى يُعرَفَ منه أيّ المعنيين أرادَ، فإن قال أردتُ المعنى الكفريّ حُكِم عليه بالكفرِ وأجري عليه أحكامُ الردّة وإلا فلا يُحكمُ عليه بالكفر؛ وكذلكَ إن كانَ اللفظُ له معان كثيرةٌ وكان كلُّ معانيه كفرًا وكان معنًى واحدٌ منها غيرَ كُفر لا يكفَّرُ إلا أن يُعرَفَ منه إرادةُ المعنى الكفريّ، قالَ العلماءُ: أما الصريحُ أي الذي ليسَ له إلا معنًى واحدٌ يقتضي التكفيرَ فيُحكم على قائله بالكفرِ كقول أنا الله حتّى لَو صَدَرَ هذا اللفظُ من وليّ في حالة غيبة عقله يُعَزّرُ ولو لم يكن هُوَ مكلّفًا تلك الساعة قال ذلك عزُّ الدين بنُ عبد السلام[23]، قالَ إمامُ الحرمين الجُوينيُّ[24]: "اتفقَ الأصوليونَ على أنّ من نطقَ بكلمة الرّدةِ ـــ أي الكفر ـــ وزعَمَ أنّه أضمرَ توريةً كُفّرَ ظاهرًا وباطنًا" وأقرّهم على ذلك أي فلا ينفعهُ التأويلُ البعيدُ كالذي يقولُ: (يلعن رسول الله) ويقول قصدي برسولِ الله الصّواعق. وقَدْ عَدّ كثيرٌ من الفُقَهاءِ كالفَقيهِ الحنفيّ بَدْرِ الرّشيد[25] وهو قريبٌ من القرنِ الثامنِ الهجريّ أشْياءَ كثيرةً فينبغي الاطّلاعُ عليها فإنّ منْ لم يعرفِ الشرّ يَقَعْ فيه فليُحْذَرْ، فقد ثبتَ عنْ أحد الصحابة أنّهُ أخَذَ لسَانَهُ وخاطبَه: يا لسَانُ قلْ خيرًا تَغْنَمْ، واسْكُتْ عن شرّ تَسْلَم، من قَبْلِ أن تَندمَ، إنّي سَمعْتُ رَسُولَ الله صلى الله عليه وسلم يقولُ: "أكثرُ خطايا ابنِ ءادَمَ منْ لسانِهِ"[26]، ومنْ هذه الخطايا الكفرُ والكبائرُ.

---

21 تشنيف المسامع (70/4).

22 فإنهم تأولوا هذه الآية: ﴿وَهَلْ نُجَازِي إِلا الكَفُورَ (17)﴾ حملوها على أن معناها لا عقوبة في الآخرة إلا على الكافر. وهذا التأول لا ينفعهم.

23 حاشية الجمل (568/7).

24 عزاه في الزواجر إلى إمام الحرمين (32/1).

25 انظر رسالة البدر الرشيد في الألفاظ المكفرات.

26 رواه البطراني في المعجم الكبير (197/10) بإسناد صحيح من حديث عبد الله بن مسعود. قال الهيثمي "ورجاله رجال الصحيح".

وفي حديثٍ ءاخرَ للرسولِ صلى الله عليه وسلم "إنّ العبدَ ليتكلّمُ بالكلِمَةِ ما يَتَبَيّنُ فيها يهوي بِهَا في النّارِ أَبْعَدَ مما بينَ المشْرِقِ والمغرب" رواه البخاريٌّ ومسلمٌ من حديثِ أبي هريرة27.

## சொல் சார்ந்த குப்ரிலிருந்து விதிவிலக்கானவை

பின்வருவன சொல்சார்ந்த குப்ரை விட்டும் விதிவிலக்கானவையாகும்:

**வாய் தவறும் தருணம்:** அதாவது குப்ரான வார்த்தைகளிலொன்றை எவ்வித நாட்டமுமின்றி பேசுவது அதாவது எவ்விதத்திலும் அவர் அதனைக் கூற நாடாதவராக அவரது நாவிலிருந்து அவ்வார்த்தை வெளிப்படுவதாகும்.

**பகுத்தறிவு நீங்கும் தருணம்:** அதாவது புத்தி தெளிவின்மை.

**வற்புறுத்தப்படும் தருணம்:** ஈமான் உள்ளத்தில் இருக்கும் நிலையில் கொலை அல்லது அது போன்றதைக் கொண்டு வற்புறுத்தப்பட்டவராக குப்ரை மொழிந்த ஒருவர் காபிராகமாட்டார்.

அழ்ழாஹ் கூறியுள்ளான்

﴿مَنْ كَفَرَ بِاللَّهِ مِنْ بَعْدِ إِيمَانِهِ إِلَّا مَنْ أُكْرِهَ وَقَلْبُهُ مُطْمَئِنٌّ بِالْإِيمَانِ وَلَكِنْ مَنْ شَرَحَ بِالْكُفْرِ صَدْرًا فَعَلَيْهِمْ غَضَبٌ مِنَ اللَّهِ﴾

விளக்கம்: “எவரேனும் ஈமான் கொண்டதன் பின்னர் அழ்ழாஹ்வை நிராகரித்தால் அவருக்கு அழ்ழாஹ்வின் தண்டனை உண்டு. என்றாலும் எவருடைய உள்ளம் நம்பிக்கை கொண்டு, முற்றிலும் திருப்தி அடைந்திருக்கும் நிலையில் வற்புறுத்தப்பட்டவராக வெளிப்படையில் நிராகரித்தால் அவர் மீது யாதொரு குற்றமுமில்லை. என்றாலும் வற்புறுத்தப்பட்ட நிலையில் நிராகரிப்பை அவருடைய உள்ளம் ஏற்றுக்கொள்ளுமாயின் அவருக்கு அழ்ழாஹ்வின் தண்டனையே உள்ளது.”

அத்தியாயம் : அன்நஹ்ல் வசனம் : 106

27 أخرجه البخاري في صحيحه: كتاب الرقاق: باب حفظ اللسان، أخرجه مسلم في صحيحه: كتاب الزهد والرقائق: باب التكلم بالكلمة يهوي بها في النار.

**பிறரின் குப்ரை அறிவிக்கும் தருணம்:** எனவே பிறரின் குப்ரை பொருந்திக்கொள்ளலும், சரிகாணுதலுமில்லாமல் சொல்லிக் காட்டுபவர் காபிராகிவிடமாட்டார்.

பிறரின் குப்ரை சொல்லிக்காட்டுவது விதிவிலக்கானது என்பதற்கு எங்களுடைய ஆதாரம்

﴿وَقَالَتِ الْيَهُودُ عُزَيْرٌ ابْنُ اللَّهِ وَقَالَتِ النَّصَارَى الْمَسِيحُ ابْنُ اللَّهِ﴾

விளக்கம்: "யஹூதிகள் உஸைர் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அழ்ழாஹ்வின் மகன் என்று கூறினார்கள் மேலும் நஸாராக்கள் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை அழ்ழாஹ்வின் மகன் என்று கூறினார்கள்."

அத்தியாயம் : அத்தௌபஹ் வசனம் : 30

﴿وَقَالَتِ الْيَهُودُ يَدُ اللَّهِ مَغْلُولَةٌ﴾

விளக்கம்: "யஹூதிகள் அழ்ழாஹ்வை கஞ்சன் என்று கூறினார்கள்" என்ற அழ்ழாஹு தஆலாவின் கூற்றுக்களாகும்.

அத்தியாயம் : அல் மாஇதஹ் வசனம் : 64

பின்னர் பிறரைத் தொட்டும் குப்ரை சொல்லிக்காட்டுபவர் காபிராகுவதை தடுக்கும் அறிவிப்புக் குறியீடு அவசியமாகும். அக்குறியீடு ஒன்று குப்ரை மொழிந்தவரைத் தொட்டும் சொல்லிக்காட்டக்கூடிய வசனத்தின் ஆரம்பத்தில் இருக்க வேண்டும். அல்லது அவ்வசனத்தைக் கூறியதன் பின் அக்குறியீட்டைக் கூறவேண்டும். எனினும் இச்சந்தர்ப்பத்தில் குப்ரான வசனத்தை கூற முன் அறிவிப்புக் குறியீட்டை இறுதியில் குறிப்பிடுவதாக நாடியிருத்தல் வேண்டும். எனவே "ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அழ்ழாஹ்வின் பிள்ளை என்பது நஸாராக்களின் **கூற்றாகும்** அல்லது **நஸாராக்கள் அவ்வாறு கூறுகிறார்கள்"** என்று ஒருவர் கூறினால் அதுவே சொல்லிக்காட்டுபவர் காபிராகுவதை விட்டும் தடுக்கும் அறிவிப்புக் குறியீடாகும்.

**ஒரு மனிதன் மார்க்கத்தை விளங்குவதில் தனது வலிந்துரையின் மூலம் வலிந்துரைக்கும் தருணம்:** எனவே இவ்வாறு வலிந்துரைப்பவர் காபிராகமாட்டார்.

என்றாலும் அவர் பலமான ஆதாராங்களைக் கொண்டு உறுதிப்படுத்தப்பட்ட விடயங்களில் வலிந்துரைத்து, தவறுவிடுவாரானால் அவருக்கு மன்னிப்பு வழங்கப்படமாட்டாது. ‘‘உலகம் பூர்வீகமானது, அதன் உள்ளமைக்கு ஆரம்பமில்லை’’ என்று இப்னு தைமிய்யா மற்றும் சிலர் பிழையாக வலிந்துரைத்துக் கூறியுள்ளதை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

தவறாக வலிந்துரைத்து காபிராக்கப்படாதவர்களுக்கு உதாரணமாக அபூபக்ர் றழியல்லாஹு அன்ஹு அவர்களது காலத்தில் ஸகாத் கொடுக்க மறுத்தோரைக் குறிப்பிடலாம். அவர்கள் ‘‘ரஸூலுல்லாஹி ﷺ அவர்களது காலத்தில் மாத்திரமே ஸகாத் கொடுப்பது கடமையாகும். ஏனெனில் அவர்களுக்காக ரஸூலுல்லாஹி ﷺ செய்யும் பிரார்த்தனை அவர்களுக்கு றஹ்மத்தாகவும், சாந்தமாகவும், சுத்தப்படுத்தக்கூடியதாகவும் இருந்தது. அது ரஸூலுல்லாஹி ﷺ அவர்களின் வபாத்துடன் நின்றுவிட்டது’’ என பிழையாக வலிந்துரைத்துக் கூறினர்.

அவ்வாறிருந்தும் சஹாபாக்கள் இதற்காக அவர்களை காபிர் ஆக்கவில்லை. ஏனெனில் ﴿خُذْ مِنْ أَمْوَالِهِمْ صَدَقَةً﴾ என்ற அல்லாஹ்வின் கூற்றிலிருந்து அவர்கள் வலிந்துரைத்து விளங்கியது ‘‘*இங்கு* خُذْ *என்பதின் மூலம் நாடப்படுவது ‘‘முஹம்மத் ﷺ அவர்களே! ஸகாத்தை நீங்கள் எடுங்கள். ஏனெனில் அவர்கள் உங்களுக்கு அதனை ஒப்படைத்தால் அது அவர்களுக்கு சாந்தமானதாக ஆகிவிடும்’’ என்பதையாகும். மேலும் இது முஹம்மத் ﷺ அவர்களின் வபாத்துக்குப் பின் நடைபெற முடியாது. ஆகையால் ஸகாத்தை கொடுப்பது அவர்கள் மீது கடமையாகமாட்டாது. ஏனெனில் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் வபாத்தாகிவிட்டார்கள். முஹம்மத் ﷺ அவர்களே அதனை அவர்களிடமிருந்து எடுக்குமாறு வேண்டப்பட்டிருந்தார்கள்.’’* இவ்வாறு அவர்கள் விளங்கியதன் காரணமாகவே ஸகாத்தை அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு வழங்க மறுத்தனர்.

இந்த சட்டமானது றஸூலுழ்ழாஹி ﷺ அவர்கள் வாழும் காலத்திலும் அவர்கள் மரணித்த பின்பும் அமுல்படுத்தப்படும் பொதுவான ஒன்றே என்பதை அவர்கள் விளங்கி இருக்கவில்லை. அபூபக்ர் ரழியழ்ழாஹு அன்ஹு அவர்களுடன் யுத்தம் செய்யக் காரணம் ஸகாத் தர மறுத்து அவர்கள் காபிர்களாகிவிட்டனர் என்பதற்காக அல்ல. மாறாக அவர்களிடமிருந்து ஸகாத்தை எடுப்பதற்காகவாகும். ஏனெனில் அவர்கள் பலமிக்கவர்களாக இருந்ததனால் அவர்களுடன் யுத்தம் செய்து ஸகாத்தை எடுக்கும் நிலைக்கு நிர்ப்பந்தமாகியே செய்யிதுனா அபூபக்ர் ரழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் அவர்களுடன் யுத்தம் செய்தார்கள்.

மேலும் மற்றுமொரு உதாரணமாக பின்வருவதைக் குறிப்பிடலாம்

﴿فَهَلْ أَنتُم مُّنتَهُونَ﴾

என்ற அழ்ழாஹ்வின் கூற்றை சிலர் “இவ்வசனம் மது அருந்துவதை தடுக்கவில்லை. இது மது அருந்துவது அவரவர் விருப்பத்துக்குரியது என்பதையே விளக்குகின்றது.” என்று பிழையாக வலிந்துரைத்து, மது அருந்தினர். செய்யிதுனா உமர் றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் இவ்வாறு வலிந்துரைத்து, மது அருந்திய அவர்களைக் காபிர்களாக்காது, “அவர்களுக்கு எண்பது, எண்பது கசையடி அடியுங்கள். பின்னரும் அவர்கள் அதே போன்று கூறினால் அவர்களை கொன்றுவிடுங்கள்.” என்று உத்தரவிட்டார்கள். அறிவித்தவர் இப்னு அபீ ஷைபா

மார்க்கத்தை விளங்குவதில் தவறாக வலிந்துரை (தஃவீல்) செய்தல், குறியீட்டு வார்த்தைகளின் மூலம் குப்ரை சொல்லிக்காட்டுதல் ஆகியவற்றிற்கு மத்ஹப் ரீதியான ஆதாரங்களிலுள்ளதுதான் இமாம் ஷம்ஸுத்தீன் அர்றம்லீ அவர்கள் ‘மின்ஹாஜுத் தாலிபீன்’ எனும் நூலிற்கான அவர்களது விளக்கவுரையில் ‘கிதாபுத் ரித்தஹ்’ எனும் பாடத்தின் ஆரம்பத்தில் இடம் பெற்றுள்ள இமாம் நவவீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களின் “ரித்தஹ் என்பது (அதாவது மதம் மாறுவதென்பது) குப்ரான எண்ணங்கள் மற்றும் குப்ரான வார்த்தை மூலம் இஸ்லாத்தைத் துண்டிப்பதாகும்.” எனும் வார்த்தைக்கு “நாவு

முந்துதல், வற்புறுத்தப்படுதல், மார்க்கத்தை விளங்குவதில் தவறாக வலிந்துரை செய31தல், குறியீட்டு வார்த்தைகளின் மூலம் குப்ரை சொல்லிக்காட்டுதல் என்பவற்றில் எவ்விதப் பாதிப்பும் கிடையாது'' என்று விளக்கமளித்ததாகும்.

''மார்க்கத்தை விளங்குவதில் தவறாக வலிந்துரை செய்தல்'' என்ற அர்றம்லீ றஹிமஹுல்லாஹ் அவர்களின் வார்த்தைக்கு ஹிஜ்ரி 1087ம் வருடம் மரணித்த நூருத்தீன் அலீ அஷ்ஷப்றாமல்லிஸீ அவர்கள் பின்வருமாறு விளக்கமளித்துள்ளார்கள் ''இது பொதுவான விதிமுறையல்ல. ஏனெனில் சிலர் உலகம் பூர்வீகமானது என்று வலிந்துரை செய்து கூறிய போதிலும் காபிராகி விட்டனர்.''

மேலம் ஹிஜ்ரி 1098ம் வருடம் மரணித்த அல் மஃரிபிய்யி அர்ரஷீதிய்யி என அறியப்பட்ட இமாம் அஹ்மதிப்னு அப்திர் ரஸ்ஸாக் என்பவர் இமாம் அர்றம்லீ றஹிமஹுல்லாஹ் அவர்களின் ''மார்க்கத்தை விளங்குவதில் தவறாக வலிந்துரை செய்தல்'' என்ற வார்த்தைக்கு பின்வருமாறு விளக்கமளித்துள்ளார்கள். ''அதாவது மார்க்கத்தை விளங்குவதில் தவறாக வலிந்துரை செய்வதற்கு எதிராக பலமான ஆதாரம் நிலைபெறாத விடயங்களிலேயாகும். ஏனெனில் சிலர் ''உலகம் ஆரம்பமற்றது'' என்று வலிந்துரை செய்த போதிலும் அவர்கள் காபிராகி விட்டனர்.''

மார்க்கத்தை விளங்குவதில் தவறாக வலிந்துரை செய்தோர் அனைவரையும் அவர்களது வலிந்துரையானது அவர்கள் காபிராகுவதை விட்டும் தடுக்காது என்பதை இதன் மூலம் அறியப்படுகிறது. எனவே மார்க்கக் கல்வியைக் கற்கும் மாணவன் மேற்கூறப்பட்ட **அதாவது மார்க்கத்தை விளங்குவதில் தவறாக வலிந்துரை செய்வதற்கு எதிராக பலமான ஆதாரம் நிலைபெறாத விடயங்களிலேயாகும்** என்ற அர்றஷீதீ றஹிமஹுல்லாஹ் அவர்களின் வார்த்தையை நினைவில் வைத்துக்கொள்ளட்டும். ஏனெனில் அது முக்கியமான ஒரு விடயமாகும். காரணம் பலமான ஆதாரம் நிலை பெற்றிருக்கும் போது மார்க்கத்தை விளங்கும் விடயத்தில் தவறாக வலிந்துரை செய்வது அவ்வாறு வலிந்துரை செய்தவரை காபிராக்குவதைத் தடுக்கமாட்டாது.

இஸ்லாத்தின் பால் இணைந்து கொண்டு பல்ஸபாவில் ஈடுபடக்கூடிய அதிகமானோர் தவறாக வலிந்துரை செய்வதன் மூலம் இவ்வுலகம் ஆரம்பமற்றதென நம்பிக்கை கொள்வதனால் மார்க்கத்தை விட்டு வெளியேறிவிடுகின்றனர். தஃவீல் செய்துதான் அவர்கள் இவ்வாறு நம்பினாலும் முஸ்லிம்கள் அவர்களைக் காபிர் என்று கூறுவதில் ஏகோபித்த கருத்திலேயே உள்ளனர்.

(الحافظ الفقيه بدر الدين الزركشي) அல்ஹாபிழ் அல்பகீஹ் பத்ருத்தீன் அஸ்ஸர்கஷீ அவர்கள் (شرح جمع الجوامع) 'ஷர்ஹு ஜம்இல் ஜவாமிஃ' எனும் தனது நூலில் "இவ்வுலகம் ஆரம்பமற்றது என்று கூறக்கூடிய பல்ஸபாக்களின் இரு பிரிவினர்களைப் பற்றி குறிப்பிட்டதன் பின் முஸ்லிம்கள் அவர்களை அவ்விடயத்தில் வழிகேடர்கள் எனக்கூறி அவர்களைக் காபிராக்கினார்கள்" எனக்கூறியுள்ளார்கள்.

மேலும் முர்ஜிஅஹ்களும் அவர்களைப் போன்றோரே. அவர்கள் "குப்ருடன் நன்மை செய்வது பிரயோசனமளிக்காதது போன்று ஈமானுடன் பாவம் செய்வது பாதிப்பை ஏற்படுத்தாது" எனக் கூறுகின்றனர். அவர்கள் இவ்வாறு கூறியது சில அறிவிப்பு ரீதியான கூற்றுக்களை தவறாக வலிந்துரை செய்தமையினாலாகும். இவ்வாறு வலிந்துரை செய்த போதிலும் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படவில்லை. (காபிர்கள் என்றே தீர்ப்பளிக்கப்பட்டுள்ளனர். இஸ்லாத்தின் பால் தங்களை இணைத்துக்கொள்ளக்கூடிய மேற்குறித்தோரல்லாத வேறு பல சிந்தனைப்பிரிவினர்களும் வழிதவறிவிட்டனர். இவர்களின் வழிகேட்டுக்கான காரணங்களில் தவறான முறையில் வலிந்துரை செய்ததும் ஒன்றாகும். அல்லாஹ் நம்மை சத்தியத்தில் நிலைத்திருக்கச்செய்வானாக!)

## தெளிவாகவே குப்ரை அறிவிக்கும் வார்த்தை, வெளிப்படையில் குப்ரை அறிவிக்கும் வார்த்தை பற்றிய தெளிவு

மேலும் இரு கருத்துக்கள் உள்ள ஒரு சொல் அதிலொன்று குப்ரான அர்த்தத்தையுடையது மற்றையது குப்ருடைய அர்த்தம் இல்லாதது. அதில் குப்ரான அர்த்தமே வெளிப்படையாக இருக்கும். இவ்வாறான வார்த்தையைக் கூறியவர் இரு கருத்துக்களில் எதனை அவர் நாடினார்

என்பதை அறியப்படும் வரை அவரைக் காபிராக்கப்படமாட்டாது. எனவே அவர் “நான் குப்ரான கருத்தையே நாடினேன்” எனக்கூறினால் அவர் காபிர் என தீர்ப்பளிக்கப்பட்டு, ரித்தத்துடைய சட்டங்கள் அவருக்கு அமுல்படுத்தப்படும். அவ்வாறு இல்லையாயின் அவர் காபிர் என்பதாக தீர்ப்பளிக்கப்படமாட்டார். அதே போன்றுதான் பல அர்த்தங்களைக் கொண்ட ஒரு வார்த்தையும். அவ்வர்த்தங்களில் பெரும்பாலானவை குப்ரான அர்த்தங்களைக் கொண்டிருக்கும். மற்றைய அர்த்தம் குப்ரல்லாததாகும். எனவே இவ்வாறான வார்த்தையைக் கூறியவர் குப்ரான அர்த்தத்தை நாடியதாக அவரிடமிருந்து அறியப்பட்டாலே தவிர அவர் காபிராகமாட்டார்.

அறிஞர்கள் கூறியுள்ளார்கள் : குப்ரான அர்த்தத்தைத் தவிர வேறு அர்த்தத்திற்கு இடம்பாடற்ற தெளிவான குப்ருடைய வார்த்தையை மொழியக்கூடியவன் காபிர் என்பதாக தீர்ப்பளிக்கப்படும். அதற்கு உதாரணம் “நான் அல்லாஹ்” என்று சொல்வதைப் போல் இவ்வார்த்தையானது ஒரு இறைநேசர் அவரது பகுத்தறிவு நீங்கிய தருணத்தில் அவரிடமிருந்து அது ஏற்பட்டபோதிலும் கூட கண்டிக்கப்படுவார். அவர் அவ்வேளையில் இஸ்லாமிய கடமைகளைச் செய்யப்பணிக்கப்பட்டவராக இல்லாமலிந்த போதிலும் சரியே! இதனை இஸ்ஸுத்தீன் இப்னு அப்திஸ்ஸலாம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இமாமுல் ஹறமைன் அல் ஜுவைனீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியுள்ளார்கள்: “எவர் ரித்தத்துடைய வார்த்தையை மொழிந்து, அந்த வார்த்தைக்கு இல்லாத அர்த்தத்தை எண்ணுகிறாரோ அவர் வெளிரங்கத்திலும் உள்ரங்கத்திலும் காபிராக்கப்படுவார் எனும் கருத்தில் அகீதா கலை அறிஞர்கள் ஒன்றுபட்டுள்ளனர்.” மேலும் அக்கருத்தை இமாம் அல் ஜுவைனி றஹிமஹுல்லாஹ் அவர்கள் ஆமோதித்துள்ளார்கள். ஆகவே ஒரு வார்த்தை அது ஏற்றுக்கொள்ளாத அர்த்தத்தை அதற்கு வழங்குவது பலனளிக்காது.

ஹிஜ்ரி 8ம் நூற்றாண்டை அண்மித்தவராக வாழ்ந்த, ஹனபி மத்ஹபைச் சேர்ந்த இமாம் பத்ருர் றஷீத் போன்ற சட்டக்கலை அறிஞர்கள் பலர் குப்ரை ஏற்படுத்தக்கூடிய வார்த்தைகளை

கணக்கிட்டுள்ளனர். அவற்றை கவனத்தில் கொள்வது அவசியமாகும். ஏனெனில் எவர் கெடுதியை அறியவில்லையோ அவர் அதில் மாட்டிக்கொள்ள நேரிடும்.

ஸஹாபாக்களில் ஒருவரைத் தொட்டும் நிரூபனமாகியிருக்கின்றது. அவர் தனது நாவை நோக்கி "நாவே! நல்லதைக் கூறு பயனடைவாய். தீயதைப் பேசாது மௌனமாக இரு நீ கவலைப்பட முன்னதாக ஈடேற்றம் அடைவாய்" நிச்சயமாக நான் நம் தூதர் ﷺ அவர்கள் கூறக்கேட்டேன் "மனிதன் செய்யும் அதிக பாவங்கள் அவனது நாவினாலேயே இடம்பெறுகின்றன".

அறிவித்தவர்: இமாம் அத்தபரானி

நாவினால் ஏற்படும் பாவங்களிலுள்ளதே குப்ரும், பெரும் பாவங்களுமாகும்.

மற்றுமொரு ஹதீஸில் வந்துள்ளது: முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்: "நிச்சயமாக அடியான் தெளிவு பெறாதவனாக குறித்த ஒரு வார்த்தையைப் பேசுவான். அதனால் அவன் நரகில் கிழக்கிற்கும், மேற்கிற்கும் இடையில் இருக்கும் தூரத்தை விட மிகத்தூரமான ஓர் இடத்தில் போய் விழுவான்." அபூ ஹுரைரா றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் ஹதீஸின் வாயிலாக இமாம் முஸ்லிம், இமாம் புகாரி றஹிமஹுமழ்ழாஹ் அறிவிக்கிறார்கள்.

## فائدةٌ مُهِمّةٌ

حكمُ من يأتِي بإحدى أنواعِ هَذِه الكُفريّات هو أن تَحْبَطَ أَعْمالُهُ الصالحةُ وحسنَاتُه جميعُهَا، فلا تُحسَبُ له ذرّةٌ من حَسَنَة كانَ سَبَقَ لَهُ أن عَملهَا من صَدقةٍ أو حَجّ أو صيام أو صَلاة ونَحْوِهَا. إنّما تُحسَبُ له الحسناتُ الجديدَةُ التي يقومُ بها بَعْدَ تَجديد إيمانه قال تعالى: ﴿وَمَن يَكْفُرْ بِالإِيمَانِ فَقَدْ حَبِطَ عَمَلُهُ (5)﴾ [سورة المائدة]. وإذَا قالَ أستغفرُ الله قبلَ أنْ يُجَدّدَ إيْمانَه28 بقولِه أشْهدُ أن لا إله إلا الله وأشهدُ أن محمداً رَسُولُ الله وهو على

28 أي بعد دخوله في الإسلام من جديد.

حالَته هَذه فَلا يَزيدُهُ قولُه أستَغْفرُ الله إلا إثْمًا وكُفْرًا، لأنّهُ يكذّبُ قولَ الله تعالى: ﴿إنّ الّذينَ كَفرُوا وَصَدُّوا عَن سَبيلِ الله ثُمَّ مَاتُوا وَهُمْ كُفّارٌ فَلَن يَغْفرَ اللهُ لَهُمْ (34)﴾ [سورة محمد]، وقوله تعالى: ﴿إنّ الّذينَ كَفَرُواْ وَظَلَمُواْ لَمْ يَكُنِ اللهُ لِيَغْفرَ لَهُمْ وَلاَ لِيَهْدِيَهُمْ طَرِيقًا (168) إلاّ طَرِيقَ جَهَنّمَ خَالدِينَ فِيهَا أَبَدًا (169)﴾ [سورة النساء]. روى ابن حبانَ29 عن عِمران بنِ الحُصَيْن أتى رسولَ الله رجلٌ فقال يا محمدُ، عبدُ المطلب خيرٌ لقومه منك كان يُطعمُهُم الكبدَ والسّنَام وأنت تَنحَرُهم فقال رسولُ الله ما شاء الله30 فلما أرادَ أن ينصرفَ قالَ: ما أقولُ، قال: "قل اللهم قِني شرّ نفسي واعزِم لي على أرْشَدِ أمري" فانطلق الرجلُ و لم يكنْ أسلمَ، ثم قال لرسول الله إني أتيتُكَ فقلتُ علّمني فقلْتَ: "قُل اللهم قِني شرّ نفسي واعزِمْ لي على أرْشَدِ أمري" فما أقولُ الآن حينَ أسلَمْتُ قال: "قل اللهمّ قِني شرّ نفسي واعزِم لي على أرْشد أمري اللهمّ اغفر لي ما أسررتُ وما أعلنْتُ وما عَمَدتُ وما أخطأتُ وما جَهِلْتُ". وَمِن أحكامِ الردة أنّ المرتدّ يَفسُدُ نكاحُه قبلَ الدخولِ وكذا بعدَهُ إن لم يرجعْ إلى الإسلامِ في العدّةِ، ولا يصِحُّ عقدُ نِكاحِهِ لا على مسلمةٍ ولا كافرةٍ ولوْ مرتدة مثله.

## ரித்தஹ்வின் விபரீதம்

மேற்குறித்த இந்தக் குப்ரிய்யத்தான வகையில் ஒன்றில் ஈடுபட்டவரின் சட்டமானது அவருடைய நற்கருமங்களனைத்தும் அழிந்து போய்விடுமென்பதாகும். எனவே அவர் செய்திருந்த ஸதகா அல்லது ஹஜ் அல்லது நோன்பு அல்லது தொழுகை மேலும் அதுபோன்ற நல்ல விடயங்களில் தூசியளவும் கணக்கில் கொள்ளப்படமாட்டாது. மாறாக அவருடைய ஈமானை புதுப்பித்ததன் பின்னரே அவர் செய்யும் புதிய நற்கருமங்கள் அவருக்கு கணக்கிடப்படும்.

அழ்ழாஹு தஆலா பின்வருமாறு கூறியுள்ளான் :

﴿وَمَنْ يَكْفُرْ بِالإِيـــمَانِ فَقَدْ حَبِطَ عَمَلُهُ﴾

விளக்கம் :

“யார் முஃமினாக இருந்து காபிராகிவிட்டாரோ நிச்சயமாக அவரது நல்லமல்கள் அழிந்து விடும்.” அத்தியாயம் : அல்-மாஇதஹ் வசனம் : 05

29 الإحسان بترتيب صحيح ابن حبان (128/2).

30 معناه رد عليه.

## இஸ்லாத்தை தழுவும் முறை

மேலும் அவர் **"அஷ்ஹது அன்லா இலாஹ இல்லழ்ழாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதர் றஸூலுழ்ழாஹ்"** என்ற கலிமஹ்வைச் சொல்லி ஈமானை புதுப்பித்துக் கொள்வதற்கு முன் அதே நிலைமையில் இருந்து கொண்டு "அஸ்தஃபிருழ்ழாஹ்" என்று அழ்ழாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரினால், அவரின் அந்த "அஸ்தஃபிருழ்ழாஹ்" என்ற வார்த்தை மேலும் பாவத்தையும் குப்ரையுமே அதிகப்படுத்துகிறது.

ஏனெனில் அவர் இவ்வாறு செய்வதன் மூலம் பின்வரும் குர்ஆன் வசனங்களை பொய்ப்பிக்கின்றார்.

﴿إِنَّ الَّذِينَ كَفَرُوا وَصَدُّوا عَنْ سَبِيلِ اللَّهِ ثُمَّ مَاتُوا وَهُمْ كُفَّارٌ فَلَنْ يَغْفِرَ اللَّهُ لَهُمْ﴾

விளக்கம் :

"யாரெல்லாம் இஸ்லாமிய கொள்கையை நிராகரிப்புச் செய்து மேலும் மக்களை இஸ்லாத்தில் நுழைய விடாது தடுப்பார்களோ அவர்கள் அனைவரும் காபிர்களாகும். அவர்கள் குப்ரின் மீது மரணித்தால் அவர்களுக்கு மறுமையில் மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது. மேலும் அவர்கள் முடிவில்லாத வேதனையை அனுபவிப்பார்கள்."

அத்தியாயம் : முஹம்மத் வசனம் : 34

மேலும்

﴿إِنَّ الَّذِينَ كَفَرُوا وَظَلَمُوا لَمْ يَكُنِ اللَّهُ لِيَغْفِرَ لَهُمْ وَلَا لِيَهْدِيَهُمْ طَرِيقًا إِلَّا طَرِيقَ جَهَنَّمَ خَالِدِينَ فِيهَا أَبَدًا﴾

விளக்கம் :

"நிச்சயமாக நிராகரித்துவிட்டு, அநியாயமும் செய்தார்களே அத்தகையவர்கள் அவர்களை அழ்ழாஹ் மன்னிப்பவனாகவுமில்லை. மேலும் அவர்களை நேரான வழியில் செலுத்துபவனாகவுமில்லை. நரகத்தின் வழியைத் தவிர. அதில்தான் அவர்கள் நிரந்தரமாக என்றென்றும் தங்கியிருப்பார்கள்."

அத்தியாயம் : அன்நிஸாஉ வசனம் : 05

இம்றான் இப்னுல் ஹுஸைன் றழியழ்ழாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் இமாம் இப்னு ஹிப்பான் றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளார்கள் "ஒரு மனிதர் றஸூலுழ்ழாஹி ﷺ அவர்களிடம் வந்து கூறினார்: "முஹம்மதே! உங்களை விட அப்துல் முத்தலிப் அவருடைய கூட்டத்தினருக்கு மிகச்சிறந்தவர். ஏனெனில் ஈரலையும், ஒட்டகத் திமிலையும் அவர்களுக்கு உணவளிப்பவர்களாக இருந்தார்கள். நீங்களோ அவர்களைப் பலியிடுகிறீர்கள்." அதற்கு றஸூலுழ்ழாஹி ﷺ அவர்கள் அழ்ழாஹ் நாடியதை அவருக்கு கூறினார்கள். அதாவது அவருக்கு மறுப்புத் தெரிவித்தார்கள். அம்மனிதர் திரும்பிச் செல்ல நாடிய வேளை "நான் என்ன கூறுவது?" என்று கேட்டார். அதற்கு அவர்கள்

"اللهم قِني شرّ نفسِي واعزِم لي على أرْشَدِ أمري"

("யா அழ்ழாஹ்! எனது ஆத்மாவின் கெடுதியை விட்டும் என்னைப் பாதுகாத்துவிடுவாயாக மேலும் நேரான வழியின் மீது எனது உள்ளத்துக்கு உறுதியளித்துவிடுவாயாக")

என்று கூறுமாறு சொன்னார்கள். அதைக் கேட்டதும் அம்மனிதர் திரும்பிச் சென்றுவிட்டார். அவர் இஸ்லாத்தை தழுவியவராக இருக்கவில்லை. பின்பு அழ்ழாஹ்வின் தூதரிடம் வந்து கூறினார்: "நான் உங்களிடம் வந்து எனக்குக் கற்றுத்தாருங்கள்" எனக் கேட்டேன். அதற்கு "நீங்கள்

"اللهم قِني شرّ نفسِي واعزِم لي على أرْشَدِ أمري"

என்று கூறுமாறு" சொன்னீர்கள். "இப்பொழுது நான் இஸ்லாத்தை தழுவிக்கொண்ட நிலையில் என்ன கூறுவது?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள்

"قل اللهمّ قِني شرّ نفسي واعزِم لي على أرْشدِ أمري اللهمّ اغفر لي ما أسررتُ وما أعلنْتُ وما عَمَدتُ وما أخطأتُ وما جَهِلْتُ".

("யா அழ்ழாஹ்! எனது ஆத்மாவின் கெடுதியை விட்டும் என்னைப் பாதுகாத்துவிடுவாயாக மேலும் நேரான வழியின் மீது எனது உள்ளத்துக்கு உறுதியளித்துவிடுவாயாக! யா அழ்ழாஹ் நான்

இரகசியமாகவும், பரகசியமாகவும், மனமுரண்டாகவும், தவறுதலாகவும், அறியாமையினாலும் செய்த பாவங்களை மன்னிப்பாயாக!) என்று கூறுமாறு சொன்னார்கள்.

மேற்கூறப்பட்ட ஸஹீஹான ஹதீஸிலிருந்து விளங்கப்படுவதானது ஒரு மனிதர் காபிராக உள்ள நிலையில் “யா அல்லாஹ் எனது பாவத்தை மன்னித்துவிடு” என்று கேட்பது ஆகுமாகமாட்டாது. ஏனெனில் அவ்வாறு கேட்பது ஆகுமாக இருந்திருந்தால் ரஸுலுல்லாஹி ﷺ அவர்கள் ஹதீஸில் குறிப்பிடப்பட்ட நபருக்கு இஸ்லாத்தை தழுவ முன்னதாகவே அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்பு வேண்டும் வார்த்தைகளை கற்றுக் கொடுத்திருப்பார்கள். மாறாக அவர் இஸ்லாத்தை தழுவிய பின்னரே அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்புக் கேட்கும் வார்த்தைகளைக் அவருக்கு கற்றுக்கொடுத்தார்கள்.

## மதம்மாற்றத்துடன் தொடர்புடைய சட்டங்கள் சில

மதம்மாற்றத்தின் சட்டங்களில் உள்ளதே மதம்மாறிய ஒருவர் அவரின் நோன்பும், தயம்முமும் முறிந்துவிடும். மேலும் திருமண ஒப்பந்தம் முடிந்து உடலுறவுக்கு முன்பு மதம்மாற்றம் ஏற்பட்டால் அவரது திருமண ஒப்பந்தமும் முறிந்துவிடும். மேலும் உடலுறவிற்குப் பின்பு மதம்மாற்றம் ஏற்பட்டு இத்தஹ்வுடைய காலப்பகுதியிலே இஸ்லாத்திற்கு மீளாவிட்டாலும் அவரது திருமணம் முறிந்துவிடும்.

மேலும் அவர் முஸ்லிமான பெண்ணையோ மற்றும் காபிரான பெண்ணையோ திருமண ஒப்பந்தம் செய்வதும் செல்லுபடியாகமாட்டாது. அப்பெண் அவனைப் போன்று மதம்மாறியவளாக இருந்தாலும் சரியே.

### عَودٌ إلى تقسيم الكُفرِ لزيادةِ فائدة

واعلم أن الكفرَ ثلاثةُ أبواب: إمّا تشبيهٌ، أو تكذيبٌ، أو تعطيلٌ.أحدُها التشبيهُ: أي تشبيهُ الله بخلْقِه كمن يصفُه بالحدوثِ أو الفناءِ أو الجسمِ أو اللونِ أو الشكلِ أو الكمّية أي مقدار الحَجْم أما ما ورَد في الحديثِ "إن الله جميلٌ" فليس معناهُ جميلَ الشكلِ وإنّما معناهُ جميلُ الصّفاتِ أو محسنٌ.

ثانيها التكذيبُ: أي تكذيبُ ما وردَ في القرءانِ الكريم أو ما جاءَ به الرسولُ صلى الله عليه وسلم على وجه ثابت وكان مما عُلم من الدين بالضرورة كاعتقاد فَنَاء الجنّة والنار، أو أن الجنةَ لذاتٌ غيرُ حسّية وأنّ النارَ ءالامٌ معنويّةٌ، أو إنكار بعث الأجساد والأرواح معًا أو إنكار وجوب الصلاة أو الصيام أو الزكاة، أو اعتقاد تحريم الطّلاق أو تحليلِ الخمرِ وغيرِ ذلك ممّا ثبتَ بالقطعِ وظهرَ بين المسلمين.وهذا بخلاف من يَعتقدُ بوجوب الصلاة عليه مثلا لكنه لا يصلي فإنه يكونُ عاصيًا لا كافرًا كمن يعتقدُ عَدمَ وجوبها عليه. ثالثُها التعطيلُ: أي نفيُ وجودِ الله وهو أشدُّ الكفر.وحكمُ من يُشبّهُ الله تعالى بخلقه التكفيرُ قطعًا.والسَّبيلُ إلى صَرف التّشبيه اتباعُ هذه القَاعدَة القَاطعَة: "مَهْما تَصَوَّرتَ ببَالكَ فَالله بخلاف ذَلكَ" وَهيَ مُجمَعٌ عَلَيها عندَ أهلِ الحَقّ، وهي مَأخُوذَةٌ من قَوله تَعالى: ﴿لَيْسَ كَمثْله شَىْءٌ (11)﴾ [سورة الشورى].

ومُلاحَظَةُ مَا رُويَ عن الصّدّيق (شعرٌ من البَسيْط) العَجْزُ عَنْ دَركِ الإدْرَاك إدْرَاكُ والبَحثُ عنْ ذَاته كُفرٌ وإشراكُ[31] وقول بَعْضهم: لا يَعْرفُ الله على الحقيقَة إلا الله تعالى. ومَعرفُتنا نحنُ بالله تَعالى لَيْسَتْ عَلى سَبيلِ الإحَاطَة بلْ بمَعْرفَة مَا يَجبُ لله تَعَالى كوُجُوب القدَم لَهُ، وتَنْزيهه عَمّا يَستحيلُ عليه تَعالى كاستْحالة الشّريك لهُ وما يجوزُ في حقّه تعالى كَخلْقِ شَىءٍ وتركه.

قالَ الإمامُ[32] الرفاعيُّ[33]: "غايةُ المعْرفةِ بالله الإيقانُ بوجُودِه تعالى بلا كيفٍ ولا مَكانٍ".

31 أورده الفقيه المحدث بدر الدين الزركشي الشافعي في تشنيف المسامع (80/4).

32 الرفاعي هو أحمد بن أبي الحسن علي وكان ممن جمع بين العلم والعمل والزهد. كان فقيهًا محدثًا مفسرًا ألف تآليف منها كتاب شرح التنبيه في الفقه الشافعي وألف في الحديث أربعين حديثًا بالإسناد، وتوفي سنة خمسمائة وثمانية وسبعين. ألف في ترجمته الإمام أبو القاسم الرافعي تأليفًا سماه "سواد العينين في مناقب أبي العلمين".

33 كتاب الحكم (ص/36).

## மேலதிக பலனுக்காக குப்ரை மீள் வகைப்படுத்தல்

அறிந்து கொள்ளுங்கள் குப்ர் மூன்று வகைப்படும் :

- தஷ்பீஹ்
- தக்தீப்
- தஃதீல்

**அவற்றில் முதலாவது தஷ்பீஹ்:** அதாவது அல்லாஹ்வை அவனது படைப்புகளுடன் ஒப்பிடுவதாகும். உதாரணமாக புதிதாக உண்டாகியிருத்தல், அழிவு, உடல், நிறம், வடிவம், அளவு அதாவது சடத்தின் அளவு போன்றவற்றைக் கொண்டு அல்லாஹ்வை வர்ணிக்கும் ஒருவனைப் போல. மேலும் ஹதீஸில்

إن الله جميل

என்று வந்துள்ளதானது "அவன் அழகிய தோற்றமுடையவன்" என்பது அதன் பொருளல்ல. மாறாக அதன் பொருள் "அவன் அழகிய பண்புகளையுடையவன்" அல்லது "அவன் பேருபகாரம் செய்பவன்" என்பதேயாகும்.

**அவற்றில் இரண்டாவது தக்தீப்:** அதாவது புனித குர்ஆனில் வந்துள்ளதை அல்லது நிரூபனமான அமைப்பில் றஸூலுல்லாஹி ﷺ அவர்கள் கொண்டு வந்ததை –அது மார்க்கத்தில் பகிரங்கமாக அறியப்பட்டவற்றில் நின்றும் உள்ள நிலையில்- பொய்ப்பித்தல்.

உதாரணமாக சுவர்க்கமும், நரகமும் அழிந்துபோய்விடும் என்று நம்புவதையும்

அல்லது சுவர்க்கம் உணர்வுபூர்வமற்ற இன்பங்களையுடையது, நரகம் யதார்த்தமற்ற வலிகளையுடையது என்பதை நம்புவதையும்

அல்லது மறுமையில் உடல்களும், உயிர்களும் ஒன்றாக எழுப்பாட்டப்படுவதை நிராகரிப்பதையும்

அல்லது தொழுகை அல்லது நோன்பு அல்லது ஸகாத் கடமை என்பதை மறுப்பதையும்

அல்லது தலாக் விடுப்பதை ஹறாம் என்று அல்லது மது ஹலால் என்று நம்பிக்கை கொள்வதையும்

மேலும் உறுதியான அமைப்பில் நிரூபனமாகி, முஸ்லிம்களுக்கு மத்தியில் வெளிப்படையானவற்றில் மேற்குறித்ததல்லாதவற்றை மறுப்பதையும் குறிப்பிடலாம்.

இச்சட்டமானது தொழுகை கடமை என்பதை ஏற்று, தொழாமலிருக்கும் ஒருவருக்கான சட்டத்தைப் போன்றதல்ல. ஏனெனில் இவ்வாறு தொழுகையை விடுபவர் பாவியாகிவிடுகின்றார். மாறாக தொழுகை கடமை இல்லை என்று நம்பும் ஒருவர் காபிராகுவதைப் போன்று அவர் காபிராகமாட்டார்.

**அவற்றில் மூன்றாவது தஃதீல்:** அதாவது அழ்ழாஹ் உள்ளான் என்பதை மறுத்தல். இதுவே குப்ரில் மிகக் கொடியதாகும். அழ்ழாஹு தஆலாவை அவனது படைப்புகளுடன் ஒப்பாக்கும் ஒருவரின் சட்டம் எந்த மாற்றுக்கருத்துமின்றி அவர் காபிரென்பதாகும்.

எனவே அழ்ழாஹ்வைப் படைப்புகளுக்கு ஒப்பிடுவதைத் தடுப்பதற்கான வழி “நீ உனது உள்ளத்தினால் எவ்வாறெல்லாம் கற்பனை செய்தாலும் அழ்ழாஹ் அவற்றுக்கு மாற்றமானவனாகவே இருக்கிறான்” என்ற உறுதிமிக்க இந்த விதியை பின்பற்றுவதாகும். மற்றும் இக்கூற்று நேர்வழியிலுள்ள அறிஞர்களால் ஏகோபிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டதுமாகும். மற்றுமிது “அழ்ழாஹ்விற்கு ஒப்பாகக்கூடியது எதுவுமில்லை” என்பதை விளக்கும் ﴿لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ﴾ என்ற குர்ஆன் வசனத்திலிருந்து எடுக்கப்பட்டதுமாகும்.

அபூபக்ர் அஸ்ஸித்தீக் றழியழ்ழாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத் செய்யப்பட்ட கவனிக்கத்தக்க குறிப்பொன்று

العَجْزُ عَنْ دَرَكِ الإدْرَاكِ إدْرَاكُ　　والبَحثُ عنْ ذَاتِه كُفرٌ وإشراكُ

“அழ்ழாஹ்வின் யதார்த்தத்தை அறிவதை விட்டும் நம் இயலாமையை ஏற்பதே ஈமானின் யதார்த்தத்தை சரியாக உணர்ந்துகொள்வதாகும்.

அவனின் யதார்த்தம் பற்றி ஆராய்வது குப்ர் மற்றும் ஷிர்கின் பால் இட்டுச்செல்லக்கூடியதாகும்.”

சில அறிஞர்கள் கூறுகின்றார்கள்: “அழ்ழாஹ்வின் யதார்த்தத்தை அவனையன்றி வேறெவரும் அறியமாட்டார்கள்”

மேலும் நாங்கள் அழ்ழாஹ்வை அறிவதென்பது அவனது யதார்த்தத்தை சூழ்ந்தறிவதன் மூலமல்ல. மாறாக அழ்ழாஹ்வுக்கு ஆரம்பமில்லாத தன்மை அவசியமென்பது போன்ற அவனுக்கு வாஜிபாக இருக்கக்கூடிய பண்புகளை அறிவதன் மூலமும், அவனுக்கு இணை இருப்பது சாத்தியமற்றது போன்ற அவன் மீது சாத்தியமற்றவற்றை விட்டும் அவனைப் பரிசுத்தப்படுத்துவதன் மூலமும், ஒன்றைப் படைத்தல் அல்லது படைக்காமல் விடுதல் போன்ற அவனுக்கு ஜாஇஸான தன்மைகளை அறிவதன் மூலமுமாகும்.

இமாம் அர்ரிபாஈ ரழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்:

"غايةُ المعْرفةِ باللهِ الإيقانُ بوجُودِه تعالى بلا كيفٍ ولا مَكانٍ"

“அழ்ழாஹ்வை அறிவதன் உச்சநிலை அவன் விதமோ, இடமோ இன்றி உள்ளான் என உறுதி கொள்வதாகும்.”

**فائدة**

قَالَ الغَزَاليُّ في إحيَاءِ علوم الدّين34: "إنّهُ (أي الله) أَزَليٌّ لَيسَ لوجُودِه أوّلٌ وليسَ لوجُودِه ءاخِرٌ. وإنّه ليسَ بجَوهر يَتَحيّزُ بَل يَتَعالى ويَتَقَدّسُ عن مُنَاسَبَةِ الحوادِثِ وإنّه لَيسَ بِجِسمٍ مؤلّفٍ مِن جَواهِرَ، ولَو جَازَ أنْ يُعتَقدَ أنّ صانِعَ العَالَم جِسمٌ لَجازَ أنْ تُعتَقدَ الأُلوهيّةُ للشّمْسِ والقَمرِ أو لشَيءٍ ءاخرَ من أقسَامِ الأجسَام فإذًا لا يُشْبهُ شَيئًا ولا يُشبِهُه شيءٌ بل هوَ الحيُّ القيّومُ الذي ليس كَمثْلِه شَيءٌ وأنّى يُشْبهُ المخْلوقُ خالقَه والمقَدّرُ35 مُقدِّرَه والمصَوّرُ مُصَوِّرَهُ" اهــ.فليسَ هذَا الكلامَ الذي عابَه العلماءُ وإنّما عابَ السلفُ كلامَ المبتدِعَةِ في الاعتقادِ كالمشبهةِ

34 إحياء علوم الدين (1/128-127).

35 الخلق المقدر أي له كمية هذا شكله مربع وهذا شكله غير ذلك وهذا حار وهذا بارد.

والمعتزلةِ والخوارجِ وسائرِ الفرقِ التي شذت عما كان عليه الرسولُ والصحابةُ الذين افترقوا إلى اثنتينِ وسبعينَ فرقة كما أخبرَ الرسولُ بذلك في حديثِه الصحيحِ الثابتِ الذي رواه ابنُ حبانَ[36] بإسنادِه إلى أبي هريرة قال قال رسول الله صلى الله عليه وسلم: "افترقت اليهود إحدى وسبعينَ فرقة وافترقت النصارى على اثنتينِ وسبعينَ فرقة وستفترقُ أمتي إلى ثلاث وسبعينَ فرقة كلُّهم في النارِ إلا واحدة وهي الجماعة" أي السواد الأعظم.

وأما علمُ الكلامِ الذي يشتغلون به أهلُ السنة من الأشاعرةِ والماتريديةِ فقد عُمل به من قبل الأشعري والماتريدي كأبي حنيفةَ فإن له خمسَ رسائل في ذلك والإمام الشافعي كان يتقنهُ حتى إنه قال[37]: "أتقنّا ذاك قبل هذا"، أي أتقنّا علمَ الكلامِ قبل الفقهِ.

## பயன்மிக்க விடயமொன்று

(الإمام الغزالي) இமாம் கஸாலீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் 'இஹ்யாஉ உலூமித்தீன்' என்ற அவரது நூலில் கூறுகிறார்கள்:

"إنّهُ (أي الله) أَزَليٌّ لَيسَ لوجُودِه أوّلٌ وليسَ لوجُودِه ءاخرٌ. وإنّه ليسَ بجَوهرٍ يَتَحيّزُ بَل يَتَعالى ويَتَقَدّسُ عن مُنَاسَبَةِ الحوادثِ وإنّه لَيسَ بجسمٍ مُؤلّفٍ من جَواهرَ، وَلَو جَازَ أنْ يُعتَقدَ أنّ صانعَ العَالَمِ جسمٌ لَجازَ أنْ تُعتَقدَ الأُلوهيّةُ للشّمْسِ والقَمرِ أو لشَيءٍ ءاخرَ من أقسَامِ الأجسَامِ فإذًا لا يُشْبهُ شَيئًا ولا يُشبهُه شيءٌ بل هوَ الحيُّ القيّومُ الذي ليس كَمثْلهِ شَيءٌ وأنّى يُشْبهُ المخْلوقُ خالقَه والمقَدّرُ[38] مُقدِّرَه والمصَوَّرُ مُصَوِّرَهُ" اهـ

"நிச்சயமாக அழ்ழாஹு தஆலா ஆரம்பமில்லாதவன். அவனது உள்ளமைக்கு ஆரம்பமுமில்லை. முடிவுமில்லை. அவன் இடம் எடுத்துக்கொள்ளும் உடல் கொண்டவனுமல்ல. மாறாக அவன் படைப்புக்களுக்கு ஒப்பாகுவதை விட்டும் தூய்மையானவன், பரிசுத்தமானவன். மேலும் அவன் அணுக்கள் மூலம் இணைக்கப்பட்ட சடமுமல்ல. உலகத்தை படைத்தவன் உடல் கொண்டவன் என நம்பப்பட முடியுமானால் சூரியனுக்கோ, சந்திரனுக்கோ அல்லது உடற்தன்மை கொண்டவற்றின் வகைகளிருந்து வேறொன்றுக்கோ தெய்வீகத்தன்மை இருப்பதை நம்பப்படுவது ஆகுமானதாக

36 الإحسان بترتيب صحيح ابن حبان (48/8).

37 رواه البيهقي في مناقب الشافعي (457/1).

38 الخلق المقدر أي له كمية هذا شكله مربع وهذا شكله غير ذلك وهذا حار وهذا بارد.

ஆகியிருக்கும். எனவே அழ்ழாஹ் எதற்கும் ஒப்பாகவும்மாட்டான். எந்தவொன்றும் அவனுக்கு ஒப்பாகவும்மாட்டாது. மேலும் அவன் எவ்விதத்திலும் எதுவும் அவனைப் போல் இல்லாதவனாகவும், பிறரின் பால் தேவைகாணதவனாகவும், மரணமில்லாதவனாகவும் உள்ளான். படைக்கப்பட்டவை அவற்றைப் படைத்தவனுக்கு எவ்வாறு ஒப்பாக முடியும்? அளவு கொடுக்கப்பட்டவை அந்த அளவைக் கொடுத்தவனுக்கு எவ்வாறு ஒப்பாக முடியும்? உருவமைக்கப்பட்டவை அவ்வுருவங்களை அமைத்தவனுக்கு எவ்வாறு ஒப்பாக முடியும்''?

இதுவானது அறிஞர்கள் குறைகூறிய இல்முல்கலாம் (அகீதாவுடைய அறிவு) அல்ல. மாறாக ஸலபுகள் குறைகூறியதெல்லாம் நபி ﷺ அவர்களும், ஸஹாபாக்களும் இருந்த கொள்கையை விட்டும் தனித்துச்சென்ற முஷப்பிஹாக்கள், முஃதஸிலஹ்கள், (الخوارج) கவாரிஜ்கள் மற்றும் ஏனைய பிரிவினர்கள் போல நம்பிக்கைக் கோட்பாட்டில் எழுபத்திரெண்டு பிரிவுகளாகப் பிரிந்த பித்அத்வாதிகளின் கொள்கைகளையாகும்.

இமாம் இப்னு ஹிப்பான் ரஹிமஹுழ்ழாஹ் அவர்கள் அபூஹுரைரா றழியழ்ழாஹு அன்ஹு வரையிலான தன்னுடைய அறிவிப்பாளர் வரிசை வாயிலாக அறிவிப்புச் செய்த நிரூபனமான ஹதீஸில் றஸூலுழ்ழாஹி ﷺ அவர்கள் அதனை பின்வருமாறு அறிவித்திருப்பது போல. "யஹூதிகள் எழுபத்தியொரு பிரிவினர்களாக பிரிந்தனர், நஸாராக்கள் எழுபத்திரெண்டு பிரிவினர்களாக பிரிந்தனர். எனது உம்மத்தும் எழுபத்தி மூன்று பிரிவினர்களாக பிரிந்துவிடுவர். அவர்கள் அனைவரும் நரகம் செல்வர். ஒரு பிரிவினரைத் தவிர, அவர்களே பெரும்பான்மையினராவார்கள்."

அஷாஇரா மற்றும் மாதுரீதியாக்களான அஹ்லுஸ்ஸுன்னஹ் வல்ஜமாஅத்தினர்கள் ஈடுபட்ட இல்முல்கலாமானது இமாம் அஷ்அரீ, இமாம் மாதுரீதீ ஆகியோருக்கு முன்னர் இமாம் அபூஹனீபா றழியழ்ழாஹு அன்ஹு போன்றோரால் இக்கல்விக்கு பணிபுரியப்பட்டு வந்துள்ளது. ஏனெனில் இமாம் அபூஹனீபா றழியழ்ழாஹு அன்ஹு அவர்களுக்கு அதிலே ஐந்து சிறு நூல்கள்

உள்ளன. மேலும் இமாம் ஷாபிஈ றழியல்லாஹு அன்ஹு அவர்கள் "அதற்கு முன்னர் இதிலே அதாவது சட்டக்கலைக்கு முன்னர் அகீதா கலையிலே தேர்ச்சி பெற்றிருந்தோம்" என்று கூறும் அளவுக்கு அதை திறன்பட கற்றிருந்தார்கள்.

### الوقاية من النار

قال الله تعالى: ﴿يَا أَيُّهَا الَّذِينَ ءامَنُوا قُوا أَنفُسَكُمْ وَأَهْلِيكُمْ نَارًا وَقُودُهَا النَّاسُ وَالْحِجَارَةُ عَلَيْهَا مَلائِكَةٌ غِلاظٌ شِدَادٌ لا يَعْصُونَ اللهَ مَا أَمَرَهُمْ وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُونَ (6)﴾ [سورة التحريم]. وجاءَ في تَفْسِيرِ الآية أنَّ اللهَ يَأْمُرُ المؤمنينَ أنْ يَقُوا أَنْفُسَهم وأَهْلَهُم النَّارَ التي وَقُودُها الناسُ والحجارةُ بتَعلُّم الأمُور الدِّينية، وتَعليم أهليهم ذَلكَ39، أي مَعْرِفَة ما فَرضَ الله فعلَه أو اجتنابَه أي الواجبَات والمحرّمات وذَلكَ كَي لا يَقَعَ في التَّشبيه والتَّمثيل والكُفرِ والضَّلالِ ذَلكَ لأنَّهُ من يُشَبِّهُ الله تعَالى بشَيءٍ ما لَمْ تَصِحّ عبَادَتُه، لأنّه يَعبدُ شيئًا تَخيّلَه وتَوهّمَه في مخيّلَته وأوْهامِه، قال أبو حامد الغزاليُّ: "لا تَصِحُّ العِبَادَةُ إلا بَعْدَ مَعْرِفَةِ المَعْبُودِ".

### مَا جَاءَ في بَدءِ الخَلْقِ

قَالَ رسول الله صلى الله عليه وسلم عِنْدَمَا سُئِلَ عَن بَدءِ الأمر: "كَانَ اللهُ وَلَم يَكُنْ شَيءٌ غَيْرُهُ وكَانَ عَرْشُهُ عَلَى الماءِ، وكَتبَ في الذّكْرِ كُلَّ شَيءٍ، ثُمَّ خَلَقَ السَّموات والأَرْضَ" رَوَاهُ البُخَارِيُّ40. أَجَابَ الرّسولُ صلى الله عليه وسلم علَى هَذا السُّؤالِ بأنَّ اللهَ لا بدَايةَ لوُجوده أي أزليٌّ ولا أزليَّ سِواه، وَبعبارَةٍ أُخْرَى فَفِي الأَزَلِ لَم يكُنْ إلا اللهُ تعَالى، واللهُ تعَالى خَالقُ كُلِّ شَيءٍ، أي مخرجُه من العدم إلى الوجود.

وحكمُ مَن يَقُولُ: "اللهُ خَلَقَ الخَلْقَ فَمن خَلَقَ اللهَ" التكفيرُ قَطْعًا لأنّه نَسَبَ إلى الله تَعالى العَدَمَ قبلَ الوُجود، ولا يُقالُ ذلكَ إلا في الحَوادث أي المخلُوقات، فَاللهُ تَعالى واجب الوُجُود أي لا يُتَصَوَّرُ في العَقلِ عدَمُه، فَلَيسَ وجودُه كوُجُودنا الحَادث لأنَّ وجُودَنا بإيجاده تَعَالى وكُلُّ ما سِوى الله جَائزُ الوجودِ أي يُمكِنُ عقلا وجُودُه بَعْدَ عَدَمٍ وإعْدامُه بعدَ وجُودِه بالنَّظَرِ لذَاتِه في حُكْمِ العَقْلِ.

---

39 جاء ذلك عن سيدنا علي بن أبي طالب بإسناد قوي فقد رواه الحاكم في المستدرك (494/2) وقال: "هذا حديث صحيح الإسناد و لم يخرجاه"، والبيهقي في المدخل إلى السنن (337/1).

40 أخرجه البخاري في صحيحه: كتاب بدء الخلق: باب ما جاء في قوله الله تعالى {وَهُوَ الَّذِي يَبْدَأُ الخَلْقَ ثُمَّ يُعِيدُهُ وَهُوَ أَهْوَنُ عَلَيْهِ (27)} [سورة الروم].

واعْلَم أنّ أقْسَامَ المَوْجود ثَلاثَةٌ:

الأوّلُ: أزَلِيٌّ أَبديٌّ وهوَ الله تعالى فقط أي لا بدايةَ ولا نهايةَ لوجوده.

وحكمُ من يقولُ إنّ هناكَ شَيئًا أزَليًّا سوى الله التكفيرُ قَطعًا ولذلك كَفَرت الفَلاسِفَةُ باعتقادهِمُ السَّفيهِ أنّ العالَم قَديمٌ أزَلِيٌّ لأنّ الأزَلِيّةَ لا تَصِحُّ إلا لله تَعالى فقط.

والثّاني: أَبديٌّ لا أَزَلِيٌّ أي أنّ لهُ بدايةً ولا نهايةَ لهُ وهُو الجنّةُ والنارُ فَهما مَخلوقَتان أي لَهُما بدايةٌ إلا أنّه لا نهايَة لَهُما أي أبديّتان فَلا يَطرأُ عليهما خَرابٌ أو فَناءٌ لمشيْئَة الله بَقاءَهُما، أمّا من حَيْثُ ذَاتُهما فَيجوزُ عَلَيْهما الفَناءُ عَقْلا. والثّالثُ: لا أزَلِيٌّ ولا أبَديٌّ أي أنّ لَهُ بدايةً ولَه نهايةً وهو كُلُّ مَا في هَذه الدُّنيا منَ السموات السّبْعِ والأَرْضِ فَلا بدّ من فَنائهما وفَناء مَا فيْهما منْ إنْسٍ وجنّ ومَلائكَة. واعلَم أَنّه جَرتْ عَادةُ العُلَماء عَلى ذكْر أنّ الحُكْمَ العَقْليّ يَنْقَسمُ إلى ثَلاثَة الوُجُوبُ والاسْتحَالةُ والجَوازُ، وقَالوا الوَاجبُ مَا لا يُتَصَوّرُ عدمُه وهو الله وصفاتُه. والمسْتَحيلُ: مَا لا يُتَصَوّرُ في العَقْلِ وجُودُهُ، وقَدْ يُعَبّرُونَ عَنْهُ بالممْتَنعِ. والجائزُ: ما يُتَصَوّرُ في العَقْلِ وجُودُه وعدَمُه ولذَلكَ يَصفونَ الله بالوَاجبِ الوجود.

## நரகத்தை விட்டும் பாதுகாப்புப் பெறல்

அழ்ழாஹு தஆலா குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்.

﴿يَا أَيُّهَا الَّذينَ ءَامَنُوا قُوا أَنْفُسَكُمْ وَأَهْلِيكُمْ نَارًا وَقُودُهَا النَّاسُ وَالْحِجَارَةُ عَلَيْهَا مَلائِكَةٌ غِلاظٌ شِدَادٌ لا يَعْصُونَ اللَّهَ مَا أَمَرَهُمْ وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُونَ﴾

இவ்வசனத்திற்கான விரிவுரையில் வந்துள்ளது: மார்க்க விடயங்களை அதாவது அழ்ழாஹ் செய்யுமாறு கட்டளையிட்டவற்றையும், தவிர்ந்து கொள்ளுமாறு கட்டளையிட்டவற்றையும் தானும் கற்று, அதனை தனது குடும்பத்தினர்களுக்கு கற்றுக்கொடுப்பதன் மூலம் தங்களையும், தங்கள் குடும்பத்தினரையும் மனிதர்களும், கற்களும் எரிபொருளாக இருக்கும் நரகை விட்டும் பாதுகாத்துக்கொள்ளுமாறு முஃமின்களுக்கு அழ்ழாஹ் கட்டளையிட்டுள்ளான். இக்கட்டளையானது அழ்ழாஹ்வை படைப்புகளுக்கு ஒப்பாக்குதல், உவமை செய்தல் மற்றும் குப்ர், வழிகேடு ஆகியவற்றில் சிக்கிவிடாமல் இருப்பதற்காகவாகும். ஏனெனில் யார் அழ்ழாஹ்வை ஏதாவதொன்றுக்கு ஒப்பாக்குவாரோ அவர் செய்யும் வணக்கம்

நிறைவேறாது என்பதற்காகவாகும். காரணம் அவர் உள்ளத்தில் கற்பனை செய்த ஒன்றை வணங்குவதற்காகவாகும். (**الإمام أبو حامد الغزالي**) இமாம் அபூ ஹாமித் அல்-கஸாலீ அவர்கள் கூறுகிறார்கள்:

"لا تَصِحُّ العِبَادَةُ إلا بَعْدَ مَعْرِفَةِ المَعْبُودِ"

“வணங்கப்பட வேண்டிய அழ்ழாஹ்வை முறைப்படி அறியாமல் மேற்கொள்ளப்படும் வணக்கம் நிறைவேறமாட்டாது.”

## படைப்புகளின் ஆரம்பம் பற்றி வந்துள்ள சில தகவல்கள்

இவ்வுலக விடயத்தின் ஆரம்பம் பற்றி கேட்கப்பட்ட போது அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள்

"كَانَ اللهُ وَلَم يَكُنْ شَيءٌ غَيْرُهُ وكَانَ عَرْشُهُ عَلَى الماءِ، وكَتَبَ فِي الذِّكْرِ كُلَّ شَيءٍ، ثُمَّ خَلَقَ السَّموات والأَرْضَ"

“அழ்ழாஹ் அவனன்றி வேறேதும் இல்லாத போது இருந்தான். மேலும் தண்ணீரின் மீது அவனது அர்ஷ் உண்டாகியிருந்தது. (திக்ர் எனும்) லௌஹுல் மஹ்பூலில் அனைத்தையும் பதிவிட்டான். பின்பு வானங்களையும் பூமியையும் படைத்தான்” எனக் கூறினார்கள். அறிவித்தவர் இமாம் புகாரீ .

இந்தக் கேள்விக்கு “அவனது உள்ளமைக்கு எவ்வித ஆரம்பமும் கிடையாது அதாவது அவன் ஆரம்பமற்றவன். மேலும் அவனையன்றி வேறெதுவும் ஆரம்பமற்றதாக இல்லை.” என றஸூலுழ்ழாஹி ﷺ அவர்கள் பதிலளித்தார்கள். மற்றுமொரு வாசகத்தில் “ஆரம்பமற்ற தன்மையில் அழ்ழாஹு தஆலாவைத் தவிர வேறெதுவும் இல்லை” என்றும் கூற முடியும். மேலும் அழ்ழாஹு தஆலா அனைத்தையும் படைத்துள்ளான்.” அதாவது “இல்லாமையிலிருந்து உள்ளமைக்கு அவற்றை வெளிப்படுத்தியுள்ளான்.” அனைத்தையும் அவன் படைத்தான் என்பதன் கருத்து இருப்பவை (படைக்கப்பட்டவை) அனைத்தையும் இல்லாமையிலிருந்து உள்ளமைக்கு வெளியாக்கினான் என்பதாகும்.

அழ்ழாஹ் மரணமில்லாத ஹயாத்தையுடையவன். அவன் மரணிக்க மாட்டான். ஏனெனில் அவனது உள்ளமைக்கு எவ்வித முடிவுமில்லை (அதாவது முடிவற்றவன்) எனவே அவனுக்கு இல்லாமை குறுக்கிடமாட்டாது. காரணம் அவனுக்கு இல்லாமை சாத்தியமாக இருந்திருந்தால் பூர்வீகம் (அதாவது ஆரம்பமின்மை) அவனுக்கு சாத்தியமற்றதாகிவிடும்.

“அழ்ழாஹ் படைப்புகளைப் படைத்தான். அழ்ழாஹ்வை யார் படைத்தான்” என்று சொல்லக்கூடியவனுக்கான சட்டம் கருத்துவேற்றுமையின்றி அவன் காபிர் என்பதாகும். ஏனெனில் அவன் உள்ளமைக்கு முன்பு இல்லாமையை அழ்ழாஹ்வுக்கு இணைத்தமைக்காகவாகும். இவ்வாறு படைப்புகளுடைய விடயத்திலே தவிர கூறப்படமாட்டாது. அழ்ழாஹு தஆலா உள்ளமை கட்டாயமானவன் அதாவது அவனது இல்லாமையை பகுத்தறிவிலே கற்பனைசெய்ய முடியாது. எனவே அவனது உள்ளமை தொடக்கம் கொண்ட எங்களது உள்ளமையைப் போன்றில்லை. ஏனெனில் எங்களுடைய உள்ளமை தூய்மையான அவனது உருவாக்கத்தின் மூலமாகும். மேலும் அழ்ழாஹ்வைத் தவிரவுள்ள அனைத்தும் உள்ளமை சாத்தியமானதாகும். அதாவது பகுத்தறிவின் தீர்ப்பில் இவற்றின் யதார்த்தத்தை கவனிக்கையில் அவை இல்லாமையிலிருந்து உண்டாகுவதும், உண்டாகியதன் பின் அது இல்லாமலாகுவதும் பகுத்தறிவில் சாத்தியமாகும்.

## “உள்ளமையில் இருப்பவை மூன்று பிரிவுகளாகும்” என்பதை நீ அறிந்து கொள்!

**முதலாவது** : பூர்வீகமானதும், நிரந்தரமானதுமாகும். (அதாவது: ஆரம்பமும் முடிவுமற்றது). அது அழ்ழாஹு தஆலா மாத்திரமே. அதாவது அவனது உள்ளமைக்கு எவ்வித ஆரம்பமோ, முடிவோ கிடையாது. “அழ்ழாஹ்வையன்றி வேறொன்று ஆரம்பமின்றி உள்ளது” என்று சொல்பவனுடைய சட்டம் கருத்துவேற்றுமையின்றி அவன் காபிர் என்பதாகும். அதனால்தான் (மூல முதற்காரணம் பற்றிய சிந்தனையாளர்களாகிய) பல்ஸபாக்கள் “உலகம் பூர்வீகமானது,

ஆரம்பமற்றது" என்ற அவர்களது மடத்தனமான நம்பிக்கையின் மூலம் காபிர்களானார்கள். ஏனெனில் ஆரம்பமின்மை அல்லாஹ்விற்கு மாத்திரமே உரியதாகும்.

**இரண்டாவது** : முடிவற்றதும், ஆரம்பமுடையதுமாகும். அதாவது அதற்கு ஆரம்பம் இருக்கும். முடிவு இருக்காது. அது சுவர்க்கமும், நரகமுமாகும். அவ்விரண்டும் படைக்கப்பட்டவை. அதாவது அவற்றிற்கு ஆரம்பம் உள்ளது. என்றாலும் முடிவு இல்லை. அதாவது நிரந்தரமானவை. எனவே அல்லாஹ் அவை நிலைத்திருப்பதை நாடியிருப்பதனால் நாசமோ, அழிவோ அவற்றிற்கு ஏற்படாது. ஆனால் அவற்றின் (**ذات**) யதார்த்தத்தை கவனிக்கும் போது அவற்றிற்கு அழிவு ஏற்படுவது பகுத்தறிவில் சாத்தியமானதாகும்.

**மூன்றாவது** : ஆரம்பமுடையதும், முடிவுடையதுமாகும். அவை ஏழு வானங்கள், பூமிகள் போன்ற இவ்வுலகிலுள்ள அனைத்துமாகும். எனவே அவையும், அவற்றிலுள்ள மனிதர்கள், ஜின்கள், மலக்குமார்கள் போன்ற அனைவரும் அழிந்தே தீருவர்.

அறிந்து கொள்ளுங்கள்: பகுத்தறிவு ரீதியான தீர்ப்பு வாஜிப், முஸ்தஹீல், ஜாஇஸ் என்று மூன்று பங்குகளாகப் பிரிகின்றது எனக் கூறுவதன் அடிப்படையில் அறிஞர்களின் வழமை இருந்து வந்துள்ளது. அவர்கள் கூறினார்கள்:

- வாஜிப் என்பது: அது இல்லாதிருப்பதை கற்பனை செய்ய முடியாது. அது அல்லாஹ்வும், அவனது பண்புகளுமாகும்.
- முஸ்தஹீல் என்பது: அது இருப்பதை கற்பனை செய்ய முடியாது. இதற்கு சிலர் (**ممتنع**) "மும்தனிஃ" என்றும் வாசகமிடுவர்
- ஜாஇஸ் என்பது: அது இருப்பதையும், இல்லாதிருப்பதையும் கற்பனை செய்ய முடியும்.

இதனால்தான் அவர்கள் அல்லாஹ்வை (**واجب الوجود**) "வாஜிபுல் வுஜூத்" (உள்ளமை கட்டாயமானவன்) என்று வர்ணிக்கிறார்கள்.

### قِدَمُ الله لَيسَ زَمَانِيًّا

الله تعالى كانَ قبلَ الزّمانِ وقبلَ المكانِ، وقبلَ الظُّلُماتِ وقبلَ النُّورِ، فَهُوَ تَعالى لَيسَ مِنْ قَبِيلِ العَالَمِ الكَثِيْفِ كالأَرْضِ والحَجَرِ والكَوَاكِبِ والنَّبَاتِ والإِنْسَانِ، ولَيْسَ من قَبِيلِ العَالَمِ اللّطِيْفِ كالنُّورِ والرُّوحِ والهَوَاءِ والجِنِّ والملائكَةِ لمخَالفته للحَوادث أي لمخَالَفَته جَميعَ المخلوقات.

فإنْ قِيلَ: أَلَيسَ من أسمائه اللّطِيفُ؟ فالجَوَابُ: أنّ مَعْنَى اللّطِيفِ الذي هُوَ اسمٌ لله: الرّحِيمُ بعبادِه أو الذي احتَجبَ عَنِ الأَوْهَامِ فلا تُدْرِكُهُ.

فَلا نَظِيْرَ لَهُ تَعَالَى أي لا مَثِيْلَ لَه ولا شَبْهَ في ذاتِه ولا في صِفَاتِه ولا في فِعْلِه، لأَنّهُ لَو كانَ مُمَاثِلا لمخلُوقَاتِه بوجه من الوجُوه كالحجمِ والحركةِ والسكونِ ونحوِ ذلك لَم يكُنْ خَالقًا لَها.

فَالله تَعَالَى مُنَزّهٌ عَنِ الاتّصَافِ بالحَوادِث، وكَذَلِكَ صِفَاتُ الله تَعَالَى هِيَ قَدِيْمَةٌ أي أَزَلِيّةٌ.

ولأَهَمّيّة هَذا البَحْثِ قالَ الإِمَامُ أبو حَنِيفَة41: "مَنْ قالَ بحدُوثِ صِفاتِ الله أو شَكّ أَوْ تَوَقّفَ فهو كافرٌ"، ذَكَرَهُ في كتاب الوَصِيّة42.

وقَالَ الطّحَاويُّ43: "ومَن وصَفَ الله بمَعْنًى من مَعاني البَشَرِ فَقَد كَفَر".اهـ

## அழ்ழாஹ்வின் ஆரம்பமின்மை காலம் தொடர்புடையதல்ல

அழ்ழாஹு தஆலா காலம், இடம், இருள், ஒளி ஆகியவற்றைப் படைப்பதற்கு முன்னர் உள்ளவன். அவன் படைப்புகளுக்கு மாற்றமானவனாக இருப்பதனால் பூமி, கற்கள், நட்சத்திரங்கள், செடிகள், மனிதர்கள் போன்ற கையினால் பிடிக்க முடியுமான படைப்பினத்தைச் சார்ந்தவனுமில்லை. ஒளி, உயிர், காற்று, ஜின்கள், மலக்குமார்கள் போன்ற கையினால் பிடிபடாத படைப்பினத்தைச் சார்ந்தவனுமில்லை.

(**اللطيف**) “அல்லதீப்” என்பது அழ்ழாஹ்வின் நாமங்களில் உள்ளதில்லையா? என வினவப்பட்டால் அதற்கு பதில்:

---

41 الفقه الأكبر بشرح القاري (ص/47).

42 وهي إحدى رسائله الخمس التي هي ثابتة عنه كما ذكر ذلك الحافظ اللغوي مرتضى الزبيدي في شرح الإحياء (13/2-14).

43 العقيدة الطحاوية (ص/5).

அல்லாஹ்வின் நாமமாக இருக்கும் (اللطيف) “அல்லதீப்” என்பதன் அர்த்தம் அடியார்களுக்கு அருள் புரிபவன் அல்லது கற்பனையால் அடைந்துகொள்ளப்படாதவன். எனவே அவனை கற்பனைகளால் அறிந்துகொள்ள முடியாது என்பதாகும்.

அவனுக்கு நிகரானது எதுவுமில்லை. அதாவது அவனது (ذات) தாதிலோ, அவனது பண்புகளிலோ, அவனது செயலிலோ அவனுக்கு ஒப்பான, அவனைப் போன்ற எதுவுமில்லை. ஏனெனில் அவன் சடம், அசைவு, அமைதி போன்ற மற்றும் அவை மாதிரியான ஏதோ ஒரு விதத்தில் தனது படைப்புகளுக்கு ஒப்பாகக்கூடியவனாக இருந்திருந்தால் அவன் அவற்றைப் படைத்தவனாக இருக்க முடியாது. அல்லாஹு தஆலா இல்லாமையிலிருந்து உருவாக்கப்பட்டவற்றைக் கொண்டு வர்ணனை பெறுவதை விட்டும் தூய்மையானவன். மேலும் பரிசுத்தமான அல்லாஹ்வின் பண்புகள் ஆரம்பமற்றவை. (இல்லாமையிலிருந்து உருவானவையல்ல)

இந்த ஆய்வின் முக்கியத்துவம் கருதி இமாம் அபூ ஹனீபா றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள் :

"مَنْ قالَ بِحدُوثِ صِفاتِ الله أو شَكَّ أوْ تَوقّفَ فهو كافرٌ"

“யார் அல்லாஹ்வின் பண்புகள் புதிதாக உண்டானவை என கூறுகிறாரோ அல்லது புதிதாக உண்டானதாக இருக்குமோ என சந்தேகம் கொள்கிறாரோ அல்லது அவை புதிதாக உண்டானவை என்றோ அல்லது புதிதாக உண்டானவை அல்ல என்றோ கூறமாட்டேன் என தன்னைத் தடுத்துக்கொள்கிறாரோ அவர் காபிராவார்”. இமாமவர்கள் இக்கூற்றை (الوصية) ‘அல் வஸிய்யஹ்’ எனும் நூலில் பதிவிட்டுள்ளார்கள்.

மேலும் இமாம் அத்தஹாவீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியுள்ளார்கள்:

"ومَن وصَفَ الله بمَعْنًى من مَعاني البَشَرِ فَقَد كَفَر"

“மனிதர்களின் பண்புகளில் ஒரு பண்பைக் கொண்டேனும் அல்லாஹ்வை வர்ணித்தவர் காபிராகிவிட்டார்.”

## تنزيهُ الله عَن المَكَانِ
## وتَصْحيحُ وجُودِه بلا مكانٍ عَقْلا

والله تعَالى غَنيٌّ عن العَالمينَ أي مُسْتَغنٍ عَن كُلّ ما سِوَاهُ أَزَلا وأَبَدًا فَلا يَحْتَاجُ إلى مَكَانٍ يتحيز فيه أو شَىءٍ يَحُلُّ به أو إلى جِهَةٍ لأنه ليس كشىءٍ منَ الأشياء ليس حجمًا كثيفًا ولا حجمًا لطيفًا والتحيزُ من صفات الجسم الكثيف واللطيف فالجسمُ الكثيفُ والجسمُ اللطيفُ متحيزٌ في جهةٍ ومكانٍ قال الله تعالى: ﴿وَهُوَ الَّذِي خَلَقَ اللَّيْلَ وَالنَّهَارَ وَالشَّمْسَ وَالْقَمَرَ كُلٌّ فِي فَلَكٍ يَسْبَحُونَ (33)﴾ [سورة الأنبياء] فأثبتَ الله تعالى لكل من الأربعة التحيز في فلكه وهو المدار.

ويَكفي في تَنزيه الله عن المكَان والحَيّز والجهَة قَولُه تَعالى: ﴿لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ (11)﴾ [سورة الشورى] لأنه لَو كَانَ لَه مَكانٌ لَكَانَ لَهُ أَمثَالٌ وأبعَادٌ طُولٌ وعَرْضٌ وعُمْقٌ، ومَنْ كَانَ كَذَلِكَ كَانَ مُحْدَثًا مُحْتَاجًا لِمَنْ حَدّهُ بهَذَا الطُّولِ وبهَذَا العَرْضِ وبهَذَا العُمْقِ، هذَا الدليلُ منَ القُرءان.

أمّا منَ الحَديث فما رَواه البُخَاريُّ وابنُ الجارود والبَيْهقيُّ[44] بالإسْناد الصَّحيح أنّ رسولَ الله صلى الله عليه وسلم قالَ: "كانَ الله ولَم يكن شَىءٌ غَيرُهُ"، ومَعناهُ أنّ الله لم يَزَلْ مَوْجُودًا في الأَزَل لَيسَ مَعَهُ غيرُه لا مَاءٌ ولا هَواءٌ ولا أَرْضٌ ولا سَماءٌ ولا كُرْسيٌّ ولا عَرْشٌ ولا إنْسٌ ولا جنٌّ ولا مَلائكَةٌ ولا زَمَانٌ ولا مَكانٌ ولا جهاتٌ، فَهُو تَعَالَى مَوجُودٌ قَبْلَ المكَان بلا مَكانٍ، وهُو الّذي خَلَقَ المكَانَ فَلَيسَ بحَاجَةٍ إلَيه، وهَذا ما يُسْتَفادُ منَ الحديث المذْكُور.

وقالَ البيهقيُّ في كتابه "الأسماءُ والصّفَاتُ"[45]: "استَدَلّ بَعْضُ أصْحَابنا في نَفْي المكَان عَنْهُ بقَول النّبي صلى الله عليه وسلم: "أَنْتَ الظّاهرُ فَلَيسَ فَوقَكَ شَىءٌ وأَنْتَ البَاطِنُ فَلَيْسَ دُوْنَكَ شىءٌ"[46] وإذَا لَم يَكُن فوقَهُ شَىءٌ وَلا دُونَهُ شَىءٌ لَم يَكُن فِي مَكَانٍ" اهـ.

---

44 السنن الكبرى (3/9)، أخرجه البخاري في صحيحه: كتاب بدء الخلق: باب ما جاء في قول الله تعالى ﴿وَهُوَ الَّذِي يَبْدَأُ الْخَلْقَ ثُمَّ يُعِيدُهُ (27)﴾ [سورة الروم].

45 الأسماء والصفات (ص/400).

46 أخرجه مسلم في صحيحه: كتاب الذكر والدعاء: باب ما يقول عن النوم وأخذ المضجع.

وهَذَا الحَديثُ فيه الرّدُّ أَيضًا عَلى القَائلينَ بالجِهَة في حَقّه تَعَالَى. وقَد قَالَ عليٌّ رضيَ الله عنه: "كانَ الله ولا مكانَ وهوَ الآنَ على ما عليْه كَانَ" رواهُ أبو منْصُورٍ البَغْدَادي47.

ولَيْسَ محْورُ الاعْتقَاد علَى الوَهْمِ بَل عَلَى ما يَقْتَضيه العَقْلُ الصّحيحُ السّليمُ الذي هُوَ شَاهِدٌ للشّرْعِ، وذَلكَ أن المحدودَ محتاجٌ إلى من حدّه بذلكَ الحدّ فلا يكُون إلهًا.

“அழ்ழாஹ் வானங்களுக்கு மேலுள்ள அவனது அர்ஷின் மீது இருக்கிறான்” என்ற வெளித்தோற்ற அர்த்தத்திலுள்ள "إِنَّ اللهَ عَلَى عَرْشِهِ فَوْقَ سَمَوَاتِهِ، وَسَمَوَاتُهُ فَوْقَ أَرَاضِيْهِ مِثْلَ القُبَّةِ" என்று நபி பெருமானார் ﷺ அவர்களைத் தொட்டும் (**جبير بن مطعم**) ஜுபைர் இப்னு முத்இம் றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் அறிவிப்பு செய்த ஹதீஸை இமாம் புகாரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் தனது ஸஹீஹ் புகாரியிலே பதிவு செய்யவில்லை. எனவே (அழ்ழாஹ் அர்ஷின் மீது இருக்கிறான் என்பதற்கு) இந்த ஹதீஸில் எவ்வித ஆதாரமும் கிடையாது. மேலும் இந்த ஹதீஸின் அறிவிப்பு தொடரில் ஆதாரம் பிடிக்க முடியாத பலகீனமான ஒருவர் இருப்பதாக (**الإمام ابن الجوزي**) இமாம் இப்னுல் ஜவ்ஸீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களும் அவர்கள் அல்லாதோரும் குறிப்பிட்டுள்ளார்கள்.

அதே போன்று அழ்ழாஹ் வானத்தில் இருக்கின்றான் என்ற வெளித்தோற்ற அர்த்தத்தில் உள்ள "لَمَّا كَلَّمَ اللهُ مُوسَى كَانَ نِدَاؤُهُ فِي السَّمَاءِ وَكَانَ اللهُ فِي السَّمَاءِ" என்று இப்னு அப்பாஸ் றழியழ்ழாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் இமாம் புகாரி றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் அவர்களது (**خلق أفعال العباد**) ‘ஹல்கு அப்ஆலில் இபாத்’ எனும் நூலில் அறிவிப்புச் செய்த ஹதீஸானது நிரூபனமற்றதாகும். எனவே (அழ்ழாஹ் வானத்தில் உள்ளான் என்பதற்கு) இந்த ஹதீஸையும் ஆதாரமாக எடுத்துக்கொள்ள முடியாது.

மேலும் அழ்ழாஹ் வானத்திலிருக்கிறான் என்ற வெளித்தோற்ற அர்த்தத்தில் "اللهُ فِي السَّمَاءِ وَعِلْمُهُ فِي كُلِّ مَكَانٍ لا يَخْلُو مِنْهُ شَيء" என இமாம் மாலிக் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் கூறியதாக சொல்லப்படக்கூடிய இந்த வார்த்தையானது இமாம் மாலிக் அவர்களைத் தொட்டும் நிரூபனமற்றதாகும். இமாம் அபூ தாவூத் அவர்கள் இதனை ‘அல்-மஸாஇல்’ எனும் நூலில் கொண்டுவந்துள்ளாரே தவிர இதை சரியானதொரு அறிவிப்புத் தொடர் கொண்டு அவர்களவில்

இணைத்துக் கூறவில்லை. வெறுமனே ஒன்றை அறிவிப்புச் செய்வது அதனை நிரூபணமாக்கிவிடாது.

## صِفَاتُ اللهِ الثَّلاثَ عَشْرَةَ

جرَتْ عادَةُ العُلماءِ المؤلفينَ في العَقيدةِ منَ المتأخّرينَ103 على قَوْلِهم إنّ الوَاجِبَ العَيْنِيّ المفْرُوْضَ علَى كُلّ مُكَلّف "أَي البَالِغ العَاقِلِ" أَنْ يَعْرِفَ مِن صِفاتِ اللهِ ثلاثَ عَشْرَةَ صِفَةً **الوجودَ والقِدَمَ والمخالفةَ للحوادثِ والوَحدانيّةَ والقيامَ بنَفْسِه والبقاءَ والقُدْرَةَ والإرادةَ والحياةَ والعِلْمَ والكَلامَ والسّمْعَ والبَصرَ** وأنّه يَستحيلُ على اللهِ ما ينافي هذه الصّفات**.** وَلَمّا كَانَت هَذِه الصِّفَاتُ ذُكِرَتْ كَثيرًا في النُّصُوص الشّرْعيّة قَالَ العلماءُ104: يَجبُ مَعْرِفَتُها وُجُوبًا عَيْنيًّا أي على كلّ مكلّف بعَيْنِه، وقال بعضُهم105 بِوجوبِ مَعْرِفَةِ عِشْرِينَ صِفَةً، فَزَادُوا سَبْعَ صِفاتٍ مَعْنَويّةٍ قالُوا وكَونُه تعالى قادِرًا ومُرِيدًا وحَيًّا وعَالِمًا ومُتَكلّمًا وسَمِيعًا وبَصِيرًا، والطّرِيقَةُ الأُولَى هِيَ الرّاجِحَةُ.

## அல்லாஹ்வின் பதின்மூன்று பண்புகள்

- உள்ளமை.
- ஆரம்பமின்மை.
- படைப்புகளுக்கு மாற்றமாக இருத்தல்.
- இணையின்றித் தனித்திருத்தல்.
- பிறரின் பால் தேவைகாணாதிருத்தல்.
- முடிவின்மை.
- வல்லமை.
- நாட்டம்.
- மரணமில்லாமை.
- அறிவு.
- பேச்சு.
- கேட்டல்.
- பார்த்தல்.

103 ذكر ذلك عبد المجيد الشرنوبي في شرح تائية السلوك (ص/60)، وأبو بكر الدمياطي في كتابه إعانة الطالبين (25/1).

104 ذكر ذلك عبد المجيد الشرنوبي في شرح تائية السلوك (ص/60)، وأبو بكر الدمياطي في كتابه إعانة الطالبين (25/1).

105 قاله الفضالي الشافعي في كتابه كفاية العوام، انظر حاشية البيجوري على الكفاية (ص/25).

ஆகிய இப்பதின்மூன்று பண்புகளாவன அழ்ழாஹ்வுக்கு இருக்கவேண்டியவை என்றும் அவற்றிற்கு எதிர்மாற்றமானவை அழ்ழாஹ்வுக்கு சாத்தியமற்றவை என்றும் அறிந்திருப்பது பருவத்தை எத்திய, புத்தியுள்ள அனைவர் மீதும் கட்டாயக் கடமையாகும் என்று கூறுவதன் பிரகாரமே அகீதாக் கலையில் கோர்வை செய்த பின்னால் வந்த அறிஞர்களின் வழமை இருந்து வந்துள்ளது. இந்தப் பண்புகள் மார்க்க நேரடிக்கூற்றுக்களில் அதிகமாக கூறப்பட்டிருப்பதனால் "அவற்றை அறிவது மார்க்கக் கடமைகளை செய்யப்பணிக்கப்பட்ட ஒவ்வொருவரின் மீதும் கட்டாயக் கடமையாகும்" என மார்க்க அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் சில அறிஞர்கள் மேற்குறித்த பண்புகளுடன் (معنوية) மஃனவிய்யத்தான ஏழு பண்புகளை அதிகரித்து, இருபது பண்புகளை அறிவது கடமையெனக் கூறியுள்ளனர்.

அவையாவன:

- அவன் வல்லமையுடையவனாக இருத்தல்.
- நாடக்கூடியவனாக இருத்தல்.
- மரணமற்றவனாக இருத்தல்.
- அறிந்தவனாக இருத்தல்.
- பேசுபவனாக இருத்தல்.
- கேட்பவனாக இருத்தல்.
- பார்ப்பவனாக இருத்தல்.

முதலில் கூறப்பட்டதே மிக ஏற்றமானது.

## الوُجُودُ

اعلَم رحمَكَ الله أنّ الله تعالى مَوْجُودٌ أزَلا وأبَدًا فَلَيْسَ وجُودُه تَعالى بإيجاد موجد. وقَد اسْتَنكَرَ بَعْضُ النّاسِ قَولَ "اللهُ مَوجُودٌ" لكَونه علَى وَزْنِ مَفْعول والجَوابُ أَنّ مَفْعُولا قَد يُطلَقُ علَى مَنْ لم يَقعْ علَيه فعْلُ الغَيْرِ كَما نَقُولُ اللهُ مَعْبُودٌ وهَؤُلاءِ ظَنُّوا بأَنْفُسهِم أَنّ لَهُم نَصيبًا في علْمِ اللُّغَة ولَيْسُوا كمَا ظَنُّوا.

قَالَ اللُّغَويُّ الكَبيرُ شَارحُ القَامُوسِ الزّبيديُّ في شَرْحِ الإحْياءِ مَا نَصُّه106: "والبَارِئ تَعالى مَوْجودٌ فصَحّ أَن يُرَى".

وقَالَ الفَيُّوميُّ اللُّغَويُّ صَاحِبُ المِصْبَاحِ107: المَوْجُودُ خِلافُ المعْدُوْمِ.

## القِدَمُ

يَجبُ لله القدَمُ بمَعنى الأزَليّة لا بمَعْنَى تَقَادُمِ العَهْدِ والزّمَنِ لأَنّ لَفْظَ القَديم والأَزَلِيّ إذَا أُطْلقَا علَى الله كَانَ المَعْنَى أنّهُ لا بدَايَةَ لوجُوده، فَيُقَالُ اللهُ أزليٌّ، اللهُ قَديمٌ، وإذَا أُطلقَا على المخْلُوق كَانَا بمَعْنَى تَقَادُمِ العَهْدِ والزّمَنِ، قالَ اللهُ تعَالى في القَمرِ ﴿حَتّى عَادَ كَالْعُرْجُونِ الْقَدِيمِ (39)﴾ [سورة يس]، وقَالَ صَاحِبُ القاموس الفَيروزءابادي108: "الهَرَمَان بناءَان أَزَلِيّان بمصْرَ".

وأَمّا بُرهَانُ قدَمه تَعَالَى فَهُو أنّه لَو لَم يكنْ قَديمًا للَزمَ حُدُوثُه فيفتَقرُ إلى مُحْدِثٍ فيلزَمُ الدّورُ أو التّسَلْسُلُ وكلٌّ منهُما مُحَالٌ، فَثَبَتَ أنّ حُدوثَه تعالى مُحالٌ وقِدَمُهُ ثابتٌ.

## الوجود
## உள்ளமை

அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு றஹ்மத் செய்வானாக. நிச்சயமாக அல்லாஹு தஆலா ஆரம்பம், முடிவின்றி உள்ளவன். அவனது உள்ளமை வேறொருவரால் ஏற்படுத்தப்பட்டதல்ல.

சிலர் (**الله موجود**) அல்லாஹு மவ்ஜூத் என்று கூறுவதை நிராகரிக்கின்றனர். அவ்வாறு நிராகரிப்பது தவறானதாகும்.

---

106 إتحاف السادة المتقين (119/2).

107 المصباح المنير (ص/248).

108 القاموس المحيط (ص/1509).

அல்லாஹ்வுக்கு (معبود) மஃபூத் என்று சொல்லப்படுவது போன்று الله) (موجود அல்லாஹ் மவ்ஜூத் என்று சொல்லப்படவும் முடியும். அல்லாஹு மவ்ஜூத் என்று கூற முடியும் என்பது பின்வரும் அறிஞர்களின் கூற்றுகளிலிருந்து விளங்க முடிகின்றது.

'காமூஸ்' எனப்படும் நூலின் விரிவுரையாளரான அறபுக் கலை பேரறிஞர் என்றழைக்கப்படும் இமாம் அஸ்ஸபீதீ அவர்கள் இஹ்யாவினுடைய விரிவுரையில் கூறுவதாவது: "படைப்புகளுக்கு ஒப்பாகுவதை விட்டும் தூய்மையான அல்லாஹ் (موجود) உள்ளான். அவனைப் பார்க்க முடியும்." மேலும் 'அல் மிஸ்பாஹ்' எனப்படும் நூலை இயற்றியவரான அறபுக் கலை அறிஞர் அல் பய்யூமீ அவர்கள் கூறுகிறார்கள் : "மவ்ஜூத் என்பது மஃதூமுக்கு மாற்றமானதாகும்." இங்கு (موجود) 'மவ்ஜூத்' என்ற வார்த்தை இல்லாமைக்கு எதிரானதற்கு உபயோகிக்கப்பட்டுள்ளது.

## القدم

## பூர்வீகம் அதாவது ஆரம்பமின்மை

நீண்ட காலம் கடந்து செல்லல் என்ற அர்த்தத்தைக் கொண்டல்லாமல் ஆரம்பமில்லாதிருத்தல் எனும் அர்த்தத்தில் (القدم) பூர்வீகம் எனும் தன்மை அல்லாஹ்வுக்கிருப்பது அவசியமாகும். ஏனெனில் قديم மற்றும் أزلي எனும் வார்த்தைகள் அல்லாஹ்வுக்கு உபயோகிக்கப்பட்டால் அவற்றின் அர்த்தம் அவனது உள்ளமைக்கு எவ்வித ஆரம்பமுமில்லை என்பதாகும். எனவே (الله قديم ، الله أزلي) அல்லாஹு கதீம், அல்லாஹு அஸலிய்யு எனக் கூறப்படும். மேலும் அவ்விரு வார்த்தைகளும் படைப்புக்களுக்கு உபயோகிக்கப்பட்டால் நீண்ட காலம் கடந்து செல்லல் எனும் அர்த்தத்தைக் கொண்டதாக ஆகிவிடும்.

ஆல்லாஹ் சந்திரனுடைய விடயத்தில் கூறுகிறான்

﴿حَتَّى عَادَ كَالْعُرْجُونِ الْقَدِيمِ﴾

விளக்கம் : "உலர்ந்து வளைந்த பழைய பேரீச்ச மடலைப் போலாகும் வரையில்..."

அத்தியாயம் : யாஸீன் வசனம் : 39

(**القاموس المحيط**) 'அல் காமூஸுல் முஹீத்' எனும் நூலை எழுதியவரான (**الفيروز آبادي**) அல் பைரூஸ் ஆபாதீ அவர்கள் கூறுகிறார்கள்:

"الهَرَمَان بِناءَانِ أَزَلِيّانِ بِمِصْرَ".

"மிஸ்ர் நாட்டிலுள்ள இரு பிரமிட்களும் (அஸலிய்யான) மிக பழைமைவாய்ந்த கட்டிடங்களாகும்."

## (الدور) "அத்தவ்ர்" (சுற்று), (التسلسل) "அத்தஸல்ஸுல்" (முடிவில்லா சங்கிலித் தொடர்)

அல்லாஹு தஆலா ஆரம்பமற்றவன் என்பதற்கான பகுத்தறிவு ரீதியான ஆதாரம் யாதெனில், அல்லாஹ் ஆரம்பமற்றவனாக இருக்கவில்லையென்றால், அவன் இல்லாமையிலிருந்து உருவானவனாக இருப்பது அவசியமாகிவிடும். எனவே அவனை உருவாக்கிய ஒருவனின் பால் தேவைகண்டுவிடுவான். அப்பொழுது (**الدور**) "அத்தவ்ர்"[109] (சுற்று) அல்லது (**التسلسل**) "அத்தஸல்ஸுல்"[110] (முடிவில்லா சங்கிலித் தொடர்) ஏற்பட்டுவிடும். அவ்விரண்டும் சாத்தியமற்றதே. எனவே அல்லாஹ் இல்லாமையிலிருந்து உருவானவன் என்பது அசாத்தியமாகி, அவன் ஆரம்பமற்றவன் என்பது நிரூபனமாகிவிட்டது.

### البَقَاءُ

يَجبُ البقاءُ لله تعالى بمعنَى أنّهُ لا يلحقُهُ فناءٌ، لأنه لمّا ثبتَ وجوبُ قِدَمِه تعالى عَقلا وجبَ لهُ البقاءُ لأنّهُ لو أمكن أنْ يلحقَهُ العدَمُ لانتفَى عنهُ القِدمُ، فهوَ تباركَ وتعالى الباقي لِذاتِهِ لا باقيَ لذاتِهِ غيرُهُ، وأمّا الجنّةُ والنارُ فبقاؤهما

109 ஒரு பொருள் உண்டாவதற்கு அதன் மூலம் உண்டாக்கப்பட்ட பொருளே அதற்கு காரணமாக இருப்பதாகும்.

110 ஒரு பொருள் உண்டாவதற்கு அதற்கு முன்னுள்ள பொருள் காரணமாகும். அப்பொருள் உண்டாவதற்கு அதற்கு முன்னுள்ள பொருள் காணரமாகும். இவ்வாறே முடிவில்லாமல் தொடர்தல்.

ليسَ بالذّات بل لأنّ الله شاءَ لهما البقاء، فالجنّةُ باعتبارِ ذاتِهَا يجوزُ عليها الفناءُ وكذلكَ النّارُ باعتبارِ ذاتِها يجوزُ عليها الفناءُ.

## السّمْعُ

وَهُوَ صفَةٌ أزَلِيّةٌ ثَابتَةٌ لذَات الله. فَهُو يَسْمَعُ الأصوات بِسَمْعٍ أزَلِيّ أبديّ لا كسَمْعنا، لَيْسَ بأُذُن وصمَاخ، فَهُو تَعالى لا يَعْزُبُ أي لا يَغيبُ عن سَمْعه مَسْمُوعٌ وإنْ خَفي – أي علينا – وبَعُدَ – أي عنّا – كما يَعْلَمُ بغيْرِ قلب. ودَليلُ وجُوب السّمْع لهُ عَقْلا أنّه لَو لَم يكن مُتّصفًا بالسّمْع لَكانَ مُتّصفًا بالصّمَم وهُو نَقْصٌ على الله، والنّقْصُ عليهِ مُحَالٌ، فمنْ قَال إنّه يَسْمَعُ بأذُن فَقَدْ ألْحدَ وكَفَرَ.

## البَصَرُ

يَجب لله تعالى عَقْلا البَصَرُ أي الرُّؤْيةُ، فَهُو يرى برُؤْية أزَلِيّة أبديّة المَرْئيّات جَميْعَها فيَرَى ذَاتَه بغَيْر حَدَقَة وجَارحَة لأَنّ الحَوَاسّ منْ صفَات المخلوقينَ. والدّليلُ عَلى ثُبوت البَصَر لَهُ عَقْلا أنّهُ لَو لَم يكُنْ بَصيرًا رَائيًا لَكَانَ أَعْمَى، والعَمَى أيْ عَدَمُ الرُّؤْية نَقْصٌ على الله، والنّقْصُ عَلَيْه مُسْتَحيلٌ. ودَلِيْلُ السّمْع والبَصَر السّمْعيُّ الآياتُ والأحَاديْثُ كَقَوْله تَعَالى ﴿**وَهُوَ السَّمِيعُ البَصِيرُ (11)**﴾ [سورة الشورى]، وقَوْله صلى الله عليه وسلم في تَعْدَاد أَسْمَاءِ الله الحُسْنَى "**السّمِيعُ البَصِيرُ**" وهُوَ في حَديث أخْرجَهُ التّرْمذيُّ وصححه ابن حبان111.

## البقاء

## முடிவின்மை

அல்லாஹு தஆலாவுக்கு அழிவு ஏற்படமாட்டாது என்ற அர்த்தத்தைக் கொண்டு முடிவின்மை அவனுக்கு இருப்பது கட்டாயமாகும். ஏனெனில் அவனுக்கு ஆரம்பமின்மை அவசியமென்பது பகுத்தறிவு ரீதியில் நிரூபணமானதால் முடிவின்மையும் அவனுக்கு அவசியமாகிவிட்டது. காரணம் அல்லாஹ்வுக்கு இல்லாமை ஏற்படுமாக இருந்தால், ஆரம்பமில்லாமை அவனுக்கு இல்லாமல் போய்விடும். பரிசுத்தமான அல்லாஹ்

111 أخرجه الترمذي في سننه: كتاب الدعوات: "باب ما جاء في عقد التسبيح باليد. وقال "هذا حديث غريب" وقال: "ولا نعلم في كثير شيء من الروايات له إسناد صحيح ذكر الأسماء إلا فيهذا الحديث"، وصححه ابن حبان، انظر الإحسان بترتيب صحيح ابن حيان: كتاب الرقائق: باب الأذكار (2/89-88).

மாத்திரமே யதார்த்தத்தில் முடிவில்லாதவன். அவனல்லாத எதுவும் யதார்த்தத்தில் முடிவில்லாததாக இல்லை. சுவர்க்கமும் நரகமும் முடிவில்லாமலிப்பது அவற்றின் யதார்த்தத்தினால் அல்ல. என்றாலும் அல்லாஹ் அவ்விரண்டிற்கும் முடிவில்லாத் தன்மையை நாடிவிட்டதனாலாகும். சுவர்க்கத்தின் யதார்த்தத்தை கவனிக்கையில் அது அழிவை ஏற்கக்கூடியதாகவே உள்ளது. அவ்வாறே நரகமும் அதன் யதார்த்தத்தை கவனிக்கையில் அது அழிவை ஏற்கக்கூடியதாகவே உள்ளது.

## السمع
## கேட்டல்

அது அல்லாஹ்வுடைய யதார்த்தத்திற்கு தரிபாடான ஆரம்பமற்ற பண்பாகும். எனவே அவன் ஆரம்பம், முடிவற்ற கேட்டல் எனும் பண்பைக் கொண்டு சத்தங்களைக் கேட்கின்றான். அது எங்களது கேட்டல் எனும் பண்பைப் போன்றல்ல. அதாவது அவனது கேட்டலெனும் பண்பானது காது மற்றும் செவிக்குழாயைக் கொண்டு அல்ல. அல்லாஹு தஆலாவின் கேட்டல் எனும் பண்பை விட்டும் கேட்கப்படக்கூடிய எதுவும் மறைந்துவிடாது. அது எங்களுக்கு மறைந்ததாகவோ, எங்களை விட்டும் தூரமானதாகவோ இருந்தாலும் சரியே. அவன் உள்ளமின்றி அறிவதைப்போன்று காது மற்றும் செவிக்குழாயின்றி கேட்கின்றான்.

அல்லாஹ்வுக்கு கேட்டல் எனும் பண்பு இருப்பது கட்டாயம் என்பதற்கு பகுத்தறிவு ரீதியான ஆதாரம் அல்லாஹ் கேட்டல் எனும் பண்பைக் கொண்டவனாக இல்லையென்றால் செவிடு எனும் பண்பைக் கொண்டவனாக ஆகிவிடுவான். இது அல்லாஹ்வுக்கு குறையாகும். அவனுக்கு குறை ஏற்படுவது அசாத்தியமானதாகும். எவரொருவர் அல்லாஹ் காதின் மூலம் கேட்கிறான் எனக் கூறுவாரோ அவர் காபிராக ஆகிவிடுகிறார்.

## البصر
## பார்த்தல்

பார்த்தல் எனும் தன்மை அழ்ழாஹு தஆலாவுக்கு இருப்பது பகுத்தறிவு ரீதியில் கட்டாயமானதாகும். எனவே அழ்ழாஹ் அவனது ஆரம்பம், முடிவற்ற பார்வை எனும் தன்மையின் மூலம் பார்க்கப்படக்கூடிய அனைத்தையும் பார்க்கிறான். மேலும் அவன் கண்விழியோ, உறுப்புக்களோ இன்றி தனது (ذات) "தாத்"தையும் பார்க்கின்றான். ஏனெனில் புலன்கள் படைப்புகளின் தன்மைகளில் உள்ளதாகும்.

மேலும் அழ்ழாஹ்வுக்கு பார்த்தல் எனும் தன்மை தரிபட்டுள்ளமைக்கு பகுத்தறிவு ரீதியான ஆதாரம்: அழ்ழாஹ் பார்ப்பவனாக இல்லையென்றிருந்தால் அவன் குருடனாக இருந்திருப்பான். குருடு அதாவது பார்வையின்மையானது அழ்ழாஹ்வுக்கு குறையாகும். எனவே குறை அவனுக்கு சாத்தியமற்றதாகும்.

கேட்டல், பார்த்தல் ஆகிய தன்மைகளுக்குரிய அறிவிப்பு ரீதியான ஆதாரம் பல வசனங்களும், ஹதீஸ்களுமாகும்.

﴿وَهُوَ السَّمِيعُ البَصِيرُ﴾ அவன் கேட்பவனும், பார்ப்பவனுமாவான்) எனும் அழ்ழாஹு தஆலாவுடைய கூற்றையும் மேலும் அழ்ழாஹ்வுடைய அழகிய திருநாமங்களைக் கணக்கிடுகையில் "السَّمِيعُ البَصِيرُ" (கேட்பவன் பார்ப்பவன்) என்ற அழ்ழாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் கூற்றையும் போன்றதாகும். இந்த வார்த்தையானது இமாம் திர்மிதீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் அறிவித்த ஹதீஸிலே இடம் பெற்றுள்ளது. அதனை இமாம் இப்னு ஹிப்பான் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்.

## الكَلامُ

الكَلامُ هُو صِفةٌ أزَليّةٌ أبديّةٌ هُوَ متكَلِمٌ بها ءامِرٌ نَاه وَاعِدٌ مُتوعّدٌ لَيْسَ ككَلامِ غَيْرِه بلْ أزَليٌّ بأَزَليّةِ الذّاتِ لا يُشْبِهُ كَلامَ الخَلْقِ ولَيْسَ بصَوْتٍ يَحدُثُ منَ انْسِلالِ الهَواء أو اصطِكَاكِ الأَجْرامِ ولا بحَرفٍ ينْقَطِعُ بإطباقِ شَفَةٍ أو تَحْريكِ لسَان.

ونَعتَقدُ أنّ مُوسَى سَمِعَ كَلامَ اللهِ الأَزَليّ بغَيْرِ حَرْفٍ ولا صَوْتٍ كمَا يَرَى المؤمنُونَ ذاتَ اللهِ في الآخرَةِ من غيرِ أن يَكُونَ جَوْهَرًا ولا عَرَضًا لأنّ العَقْلَ لا يُحيلُ سَماعَ مَا لَيْسَ بحَرفٍ ولا صَوْت.

وكَلامُه تَعالَى الذّاتيُّ لَيْسَ حُرُوفًا مُتَعَاقِبَةً ككَلامِنا، وإذَا قرأ القَارئ منّا كَلامَ اللهِ فقِرَاءَتُه حَرْفٌ وصَوْتٌ لَيْسَتْ أَزَليّةً.

وقد نُقِلَ هذا التفصيلُ عن أبي حنيفةَ رضي اللهُ عنه وهو من السلفِ أدركَ شيئًا من المائة الأولى ثم توفيَ سنة مائة وخمسينَ هجرية قال[112]: "واللهِ يتكلمُ لا بآلةٍ وحرفٍ ونحنُ نتكلم بآلةٍ وحرفٍ" فليُفهم ذلكَ. وليسَ الأمرُ كما تقولُ المشبهةُ بأن السلفَ ما كانوا يقولون بأن اللهَ متكلمٌ بكلامٍ ليسَ بحرفٍ وإنما هذا بدعةُ الأشاعرة وهذا الكلامُ من أبي حنيفة ثابتٌ ذكرهُ في إحدى رسائله الخمس.

والقُرْءانُ لَهُ إطْلاقَان يُطْلَقُ علَى اللّفْظِ المنــزّلِ على محمد وعلَى الكَلامِ الذّاتيّ الأزلي الذي لَيْسَ هُوَ بحَرْفٍ ولا صَوْتٍ ولا لُغَةٍ عَربيّةٍ ولا غَيْرِها. فَإن قُصِدَ به الكَلامُ الذّاتيُّ فهو أزليٌّ ليس بحرفٍ ولا صوت، وإن قُصدَ به وبسائرِ الكتبِ السماوية اللّفظُ المنَزّلُ فمنه ما هو باللغة العبرية ومنهُ ما هو باللغة السُّريانية وهذه اللغاتُ وغيرُها من اللغاتِ لم تكن موجودةً فخلقَهَا اللهُ تعالى فَصَارت موجودةً واللهُ تعالى كانَ قبلَ كلِّ شيء، وكانَ متكلمًا قبلَها ولم يزل متكلمًا وكلامُهُ الذي هو صفتُهُ أزليٌّ أبديٌّ وهو كلام واحد وهذه الكتبُ المنزلةُ كُلُّها عباراتٌ عن ذلكَ الكلامِ الذاتيّ الأزلي الأبدي، ولا يلزمُ من كونِ العبارة حادثةً كونُ المعبّرِ عنه حادثًا ألا تَرَى أننا إذا كَتَبنَا على لوحٍ أو جدارٍ "الله" فقيلَ هذا اللهُ فهل معنَى هذا أن أشكالَ الحروفِ المرسومة هي ذات الله لا يتوهّمُ هذا عاقلٌ إنّما يُفهمُ من ذلكَ أن هذه الحروف عبارةٌ عن الإله الذي هو موجودٌ معبودٌ خالقٌ لكلّ شيءٍ ومعَ هذا لا يقالُ القرءانُ مخلوقٌ لكن يُبَيّن في مقامِ التّعليمِ أن اللفظَ المنزّلَ ليسَ قائمًا بذاتِ الله بل هو مخلوقٌ لله لأنه حروفٌ يسبِقُ بعضُها بعضًا وما كانَ كذلك حادثٌ مخلوقٌ قطعًا. لكنّه لَيْسَ منْ تصنيفِ مَلَكٍ ولا بَشَرٍ فَهُوَ عِبَارَةٌ عَن

---

112 الفقه الأكبر بشرح ملا علي القاري (ص/58).

الكَلامِ الذَاتِيّ الذي لا يُوصفُ بأنّه عَرَبِيٌّ ولا بأَنّهُ عِبْرانِيٌّ، ولا بأَنّهُ سُرْيَانِيٌّ، وكُلٌّ يُطْلَق علَيْه كَلامُ الله، أيْ أنّ صِفَةَ الكَلامِ القَائمَة بذَات الله يُقالُ لَها كَلامُ الله، واللّفْظُ المُنَزّلُ الذي هُو عِبارَةٌ عَنْهُ يقَالُ لَه كَلامُ الله.

وتَقْرِيبُ ذَلكَ كما تقدم أَنّ لَفْظَ الجَلالَة "الله" عبارَةٌ عن ذَات أزَلِيّ أبَدِيّ، فإذَا قُلْنا نَعْبُدُ الله فَذَلكَ الذّاتُ هُوَ المَقْصُودُ، وإذَا كُتِبَ هذَا اللّفْظُ فقِيْلَ: مَا هَذا؟ يُقَال: الله، بمعنًى أنّ هذه الحُروفَ تَدُلُّ على ذلكَ الذّاتِ الأزَلِيّ الأبَدِيّ لا بمَعْنى أنّ هذه الحُروفَ هي الذّاتُ الذي نَعْبُدُه.

## الكلام
## பேச்சு

பேச்சு எனும் பண்பானது அது ஆரம்பம், முடிவற்ற ஒரு பண்பாகும். அவன் அப்பண்பின் மூலம் பேசக்கூடியவனாகவும், ஏவக்கூடியவனாகவும், தடுக்கக்கூடியவனாகவும், வாக்குறுதியளிக்கக் கூடியவனாகவும், எச்சரிக்கை செய்யக்கூடியவனாகவும் உள்ளான். அவனது பேச்சு ஏனைய படைப்புகளின் பேச்சைப் போன்றதல்ல. மாறாக அவனது “தாத்” ஆரம்பமற்றதாக இருப்பதனால் அவனது பேச்சும் ஆரம்பமற்றதாகவே உள்ளது. அவனது பேச்சு படைப்புகளின் பேச்சுக்கு ஒப்பாகமாட்டாது. மேலும் அவனது பேச்சு காற்று வெளியாகுவதன் மூலமோ அல்லது சடங்கள் ஒன்றோடொன்று மோதுவதன் மூலமோ எழக்கூடிய சத்தத்தை கொண்டதுமல்ல, மேலும் அது இரு உதடுகள் இணைவதன் மூலம் அல்லது நாவை அசைப்பதன் மூலம் நிறைவடையக்கூடிய எழுத்தையோ கொண்டதுமல்ல.

எவ்வாறு முஃமின்கள் மறுமையில் அல்லாஹ்வை உடல் அவற்றின் தன்மை கொண்டவனாக இல்லாமல் காண்பார்களோ அவ்வாறே நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வின் ஆரம்பமற்ற பேச்சை எழுத்துக்களோ, சத்தமோ இன்றி கேட்டார்கள். என நாங்கள் உறுதி கொள்கிறோம். எழுத்துக்கள், சத்தங்களில்லாத ஒன்றை கேட்பது புத்தி ஏற்கமறுக்குமொரு விடயமல்ல. மேலும் அல்லாஹ்வின் யதார்த்தமான பேச்சு நமது பேச்சைப்போன்று ஒன்றன் பின் ஒன்றாக வரும் எழுத்துக்களாக இல்லை. எங்களிலொருவர் குர்ஆனை

வாசித்தால் (ஓதினால்) அவரின் வாசிப்பு (ஓதல்) எழுத்து, சத்தங்களைக் கொண்டு காணப்படும். எனவே அவற்றுக்கு ஆரம்பமுள்ளன.

இந்த விளக்கம் ஸலபுகளில் ஒருவரான, முதல் நூற்றாண்டின் ஒரு பகுதியில் வாழ்ந்து ஹிஜ்ரி - 150ல் மரணித்தவரான இமாம் அபூ ஹனீபா றழியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கூறுகிறார்கள் : "அல்லாஹ் நாவு மற்றும் உதடுகள் போன்ற உறுப்புகள், எழுத்துக்கள் இன்றி பேசுகிறான்." இதனை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ்வை படைப்புகளுடன் ஒப்பிடும் வழிகேடர்களான முஷப்பிஹாக்கள் எனப்படுவோர் "அல்லாஹ் எழுத்துக்களற்ற பேச்சைக் கொண்டு பேசுகிறான் என்று ஸலபுகள் கூறக்கூடியவர்களாக இருக்கவில்லை. அஷ்அரிய்யஹ்கள்தான் இவ்வாறான ஒரு கருத்தை உருவாக்கினார்கள்" என்று கூறுவது தவறானதொரு குற்றச்சாட்டாகும். ஏனெனில் சலபுகளைச் சேர்ந்த இமாம் அபூ ஹனீபா றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறிய கருத்து ஆதாரபூர்வமானது. அவர்கள் இக்கருத்தை அவரது ஐந்து ரிஸாலாக்களில் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் முஹம்மத் ﷺ அவர்கள் மீது இறக்கப்பட்ட வசனங்களுக்கும் 'குர்ஆன்' என்று கூறப்படும், மேலும் (ذاتي) தாத்திய்யத்தான, ஆரம்பமற்ற, எழுத்துக்களோ, சத்தமோ அற்ற மேலும் அறபு மொழியோ அல்லது வேறு மொழியோ இல்லாத அல்லாஹ்வின் பேச்சுக்கும் 'குர்ஆன்' என்று கூறப்படும். எனவே குர்ஆன் மூலம் அல்லாஹ்வின் பேச்சை நாடப்பட்டால், அது ஆரம்பமற்ற மற்றும் எழுத்து, சத்தங்களற்ற அவனது பேச்சைக் குறிக்கும். மேலும் அதன் மூலமோ ஏனைய வான வேதங்களின் மூலமோ இறக்கப்பட்ட வசனங்களை நாடப்பட்டால், அவற்றில் அறபு மொழியிலானதும், ஸுர்யானி மொழியிலானதும் உள்ளது. இந்த மொழிகளும் மற்றும் ஏனைய மொழிகளும் ஆரம்பத்தில் இருக்கவில்லை. பின்னரே அல்லாஹ் அவற்றைப் படைத்தான். ஆனால் அல்லாஹு தஆலா அனைத்தையும் படைக்க முன்பு அவை எதுவுமின்றி உள்ளான். மேலும் அவன் அம்மொழிகளைப் படைக்க முன்னரும்

அம்மொழிகள் எதுவுமின்றி பேசக் கூடியவனாகவே உள்ளான். அவனது பேசும் தன்மை ஆரம்பமும், முடிவுமற்றது. மேலும் அவனது பேச்சானது பங்குபிரியக்கூடியதாக இல்லை. இறக்கப்பட்ட வேதங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் ஆரம்பமற்ற, முடிவற்ற யதார்த்தமான பேச்சை அறிவிக்கக்கூடிய வாசகங்களாகும். (அல்லாஹ்வின் ஆரம்பமற்ற, முடிவற்ற பேச்சை அறிவிக்கக்கூடியதாகும்.) இவ்வாசகம் படைக்கப்பட்டது என்பதனால் அது அறிவிக்கக்கூடிய அல்லாஹ்வின் தாத்திய்யத்தான ஆரம்பமற்ற, முடிவற்ற பேச்சும் படைக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்ற கட்டாயத்தை ஏற்படுத்தமாட்டாது.

நீங்கள் பார்கவில்லையா? நாம் ஒரு பலகையின் மீது அல்லது ஒரு சுவற்றின் மீது "الله" என்ற வாசகத்தை எழுதிவிட்டு "இது அல்லாஹ்" என கூறப்பட்டால், எழுதப்பட்ட எழுத்துக்களின் வடிவங்கள்தான் அல்லாஹ் என்று அர்த்தம் கொள்ளப்படமாட்டாது. ஏனெனில் அதன் மூலம் விளங்கப்படுவது என்னவென்றால் இந்த எழுத்துக்கள் அனைத்து வஸ்த்துக்களையும் படைத்த, வணங்கப்படக்கூடிய கடவுளை அறிவிக்கக்கூடிய ஒரு வாசகமாகும்.

இன்னும் குர்ஆனையோ, இறக்கப்பட்ட ஏனைய வேதங்களையோ படைக்கப்பட்டது என்று கூறப்படமாட்டாது. என்றாலும் கற்பிக்கும் சந்தர்ப்பங்களில் தெளிவுபடுத்தப்பட வேண்டியது யாதெனில், இறக்கப்பட்ட வசனங்கள் அல்லாஹ்வின் ஆரம்பமற்ற பேச்சல்ல. மாறாக அது அல்லாஹ்வால் படைக்கப்பட்டது. ஏனெனில் அது சிலது சிலதை முந்தும் எழுத்துக்களைக் கொண்டதாகும். இவ்வாறிருக்ககூடியது எதுவோ அது படைக்கப்பட்டதாகத்தான் இருக்கும். என்றாலும் அது ஒரு மலக்காலோ அல்லது ஒரு மனிதனாலோ இயற்றப்பட்டதல்ல. மாறாக அது அல்லாஹ்வின் தாத்திய்யத்தான பேச்சை அறிவிக்கக்கூடிய வாசகங்களாகும். அது அறபு மொழியென்றோ, இப்றானீ மொழியென்றோ, ஸுர்யானீ மொழியென்றோ கூறப்படமாட்டாது. அவை ஒவ்வொன்றுக்கும் அதாவது அல்லாஹ்வின் (ذاتي) தாதிய்யத்தான பேச்சுக்கு 'கலாமுல்லாஹ்' (அல்லாஹ்வின் பேச்சு) என்று சொல்லப்படும். மேலும் அல்லாஹ்வின் யதார்த்தமான பேச்சை அறிவிக்கக்கூடிய,

அவனால் இறக்கப்பட்ட வாசகங்களுக்கும் 'கலாமுழ்ழாஹ்' (அழ்ழாஹ்வின் பேச்சு) என்றும் சொல்லப்படும்.

மேற்கூறியதைப் போன்று மேலும் அதனை தெளிவுபடுத்துவதானது "அழ்ழாஹ்" எனும் கண்ணியமிக்க வார்த்தை, ஆரம்பமற்ற, முடிவற்ற தாத்தை அறிவிக்கக்கூடியதாகும். எனவே நாம் அழ்ழாஹ்வை வணங்குகிறோம் என்று கூறினால், அங்கு நாடப்படுவது அவனது தாத்தேயாகும். மேலும் இவ்வார்த்தை எழுதப்பட்டு, இது என்னவென்று கேட்கப்பட்டால், அழ்ழாஹ் என்றுதான் பதிலளிக்கப்படும். அதாவது எழுதப்பட்ட இந்த எழுத்துக்களானது ஆரம்பமற்ற முடிவற்ற அந்த தாத்தின் மீது அறிவிக்க்கூடியது எனும் அர்த்தத்திலாகும். மாறாக இந்த எழுத்துக்களே நாம் வணங்கும் தாத் எனும் அர்த்தத்திலல்ல.

## الإِرَادَةُ

اعْلَم أنّ الإرادَةَ وهي المشِيْئَةُ واجبةٌ لله تعالَى، وهي صِفَةٌ أَزلِيّةٌ أبَدِيّةٌ يُخصّصُ اللهُ بِهَا الجَائِزَ العَقْلِيّ بالوجُودِ بدَلَ العدَمِ، وبصفَةٍ دُوْنَ أُخرَى وبوَقت دُوْنَ ءاخر.

وبُرْهَانُ وُجُوبِ الإرادَةِ لله أَنّه لَوْ لَم يَكُن مُرِيدًا لَم يُوْجَدْ شَيءٌ مِنْ هَذَا العَالَمِ، لأَنّ العَالَم مُمْكِنُ الوُجُودِ فَوُجُودُهُ لَيْسَ وَاجبًا لِذَاته عقْلا والعَالَمُ مَوْجُودٌ فَعَلِمْنَا أَنّهُ مَا وُجِدَ إلا بتَخْصِيصِ مُخصِّصٍ لوُجُودِهِ وتَرْجِيحه لَهُ على عَدَمه، فثَبتَ أَنّ الله مُرِيْدٌ شَاء.

ثُمّ الإرادَةُ بمَعْنَى المشيْئَة عنْدَ أَهْلِ الحَقّ شَامِلَةٌ لأَعْمال العبَاد جَمِيعها الخَيْرِ منْها والشّرّ، فكُلُّ مَا دَخَل في الوُجُود منْ أَعْمَالِ الشّرّ والخَيْرِ ومنْ كُفْرٍ أَو مَعَاصٍ أوْ طَاعَةٍ فبمشيئَة الله وقَعَ وحَصَلَ وهَذا كَمالٌ في حَقّ الله تَعَالَى، لأَنّ شُمُولَ القُدْرَةِ والمَشِيئَةِ لائِقٌ بجَلالِ الله، لأَنّهُ لَو كَانَ يَقَعُ فِي مِلْكِهِ مَا لا يَشَاءُ لَكانَ ذَلكَ دَلِيلَ العَجْزِ والعَجْزُ مُسْتَحِيلٌ علَى الله.

والمشيئةُ تابعَةٌ للعلْم أَي أَنّهُ ما علِمَ حُدُوْثَهُ فقَدْ شَاءَ حُدُوْثَهُ ومَا علِمَ أنّه لا يكُونُ لم يَشَأْ أنْ يكُونَ.

ولَيْسَت المشيْئَةُ تَابعَةً للأَمْرِ بدَلِيْل أنّ الله تعالى أمَرَ إبراهِيْمَ بذَبْحِ ولَدِهِ إسْماعيلَ ولَمْ يَشَأ لهُ ذَلكَ.

فإنْ قِيْلَ كَيْفَ يأمُرُ بما لَم يَشَأْ وقُوْعَهُ؟ فَالجَوابُ أَنّهُ قَدْ يأمُرُ بِمَا لم يَشَأْ، كَمَا أَنّهُ عَلِمَ بوقُوْعِ شَيءٍ مِنَ العَبْدِ ونَهَاهُ عنْ فِعْلِهِ.

## الإرادة

## நாட்டம்

அறிந்து கொள்ளுங்கள்! நாட்டம் என்பது அல்லாஹு தஆலாவுக்கு கட்டாயம் இருக்கவேண்டிய பண்பாகும். அது ஆரம்பமற்ற, முடிவற்ற பண்பாகும். இதன் மூலம் பகுத்தறிவு ரீதியாக சாத்தியமானவற்றில் இல்லாமைக்குப் பகரமாக உள்ளமையைக் கொண்டும், ஒரு பண்பின்றி மற்றொரு பண்பு கொண்டும் மேலும் ஒரு நேரமின்றி மற்றொரு நேரம் கொண்டும் குறிப்பாக்குகின்றான்.

அல்லாஹ்வுக்கு நாட்டம் எனும் தன்மை இருப்பது அவசியம் என்பதற்கு பகுத்தறிவு ரீதியான ஆதாரமானது: அவன் நாடக்கூடியவனாக இருக்கவில்லையென்றிருந்தால், இந்த உலகில் எந்தவொன்றும் உண்டாகியிருக்கமாட்டாது. ஏனெனில் உலகம் உண்டாகுவது சாத்தியமானதாகும். மேலும் அது உண்டாகியிருப்பது பகுத்தறிவு ரீதியில் சுயமாக அல்ல. எனவே உலகம் உண்டாகியிருக்கின்றது ஆகையால் அது இல்லாமலிருப்பதை விட அது உண்டாகியிருப்பதை குறிப்பாக்கக்கூடிய ஒருவனின் குறிப்பாக்குதலைக் கொண்டே உண்டானது என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம். எனவே நிச்சயமாக அல்லாஹ் நாடக்கூடியவன் என்பது நிரூபனமாகிவிட்டது. சத்தியவான்களிடத்தில் அல்லாஹ்வின் நாட்டமானது அடியார்களுடைய செயல்களில் நல்லவை, கெட்டவை அனைத்தையும் உள்ளடக்கிக் கொள்ளக்கூடியதாகும்.

மேலும் நல்ல, கெட்ட செயல்கள், குப்ர், பாவம், வழிபாடு ஆகிய படைக்கப்பட்ட அனைத்துமே அல்லாஹ்வின் நாட்டப்படியே நிகழ்ந்துள்ளன. இதுவே அல்லாஹ்வின் விடயத்தில் பரிபூரணமாகும். ஏனெனில் அல்லாஹ்வின் வல்லமையும், நாட்டமும் அனைத்தையும் உள்ளடக்கிக் கொள்வதே அல்லாஹ்வின் கண்ணியத்திற்கு தகுதியானதாகும். ஏனெனில் அல்லாஹ்வின் ஆட்சியில் அவன் நாடாத ஒன்று நிகழுமென்றிருந்தால் அது இயலாமையை அறிவிக்கக்கூடியதாக ஆகிவிடும். இயலாமையானது அல்லாஹ்வுக்கு சாத்தியமற்றதாகும்.

மேலும் நாட்டம் எனும் பண்பு அறிவு எனும் பண்பை துயரக்கூடியதாகும். அதாவது எது உண்டாகுவதை அல்லாஹ் அறிந்திருந்தானோ, அது உண்டாகுவதை அவன் நாடியுள்ளான். மேலும் எது உண்டாகாமாட்டாது என்பதை அவன் அறிந்திருந்தானோ, அவன் அது உண்டாகுவதை நாடவில்லை என்பதாகும்.

அல்லாஹ்வின் கட்டளையை அவனது நாட்டம் துயரக்கூடியதல்ல. அல்லாஹு தஆலா நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அவர்களது மகன் இஸ்மாஈல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை பலியிடுமாறு கட்டளையிட்டான். எனினும் அது நடைபெறுவதை அவன் நாடவில்லை என்பதை அதற்கு சான்றாக எடுத்துக்கொள்ளலாம்.

“அல்லாஹ் நாடாத ஒன்றை செய்யுமாறு எவ்வாறு அவன் கட்டளையிடுவான்?” என்று வினவப்பட்டால், அதற்கு பதில்: ஒரு அடியானிடமிருந்து ஒரு விடயம் நிகழ்வதை அல்லாஹ் அறிந்தும் அதை செய்ய வேண்டாமென அவனைத்தடுப்பது போல் அவன் நாடாத ஒன்றை செய்யுமாறு சில வேளை கட்டளையிடுவான்.

### القُدْرَةُ

يَجبُ لله تعالى القُدْرَةُ عَلى كُلِّ شَىءٍ والمرَادُ بالشّىءِ هُنَا الجَائزُ العَقْليُّ فَخَرجَ بذَلكَ المسْتَحيلُ العَقْليُّ لأنّه غَيْرُ قَابلٍ للوُجُود فَلَمْ يَصْلُحْ أَنْ يَكُونَ مَحَلا لتعَلُّقِ القُدْرَة، وخَالَفَ في ذَلك ابنُ حَزْمٍ فقال[113]: "إنّ اللهَ عزّ وجلّ قادرٌ أنْ يَتّخذَ ولَدًا، إذْ لَوْ لم يَقْدرْ عَلَيْه لكَانَ عَاجزًا"، وهَذَا الذي قَالَهُ غَيْرُ لازم لأَنّ اتّخاذَ الولَد مُحَالٌ عَلى الله والمحَالُ العَقْليُّ لا يَدْخُلُ تَحْتَ القُدْرة، وعَدَمُ تَعَلُّق القُدْرة بالشّىء تَارَةً يَكُونُ لقُصُورهَا عَنْهُ وذَلكَ في المخْلُوق، وتارَةً يَكونُ لعَدَم قَبُول ذلكَ الشّىءِ الدّخولَ في الوُجُود أي حُدوث الوجود لكَوْنه مُسْتَحيْلا عَقْليًّا، وتارةً يكون لعدَم قبُول ذلك الشّىء العدَمَ لكونه واجبًا عقليًّا. والعَجْزُ هُوَ الأَوّلُ المنْفيُّ عَن قُدْرَته تَعَالى لا الثّاني، فَلا يَجُوزُ أنْ يُقَالَ إنّ اللهَ قَادرٌ عَلَى ذَلكَ ولا عَاجزٌ، قَالَ بَعْضُهم: كَما لا يُقَالُ عن الحَجَر عَالمٌ ولا جَاهلٌ. وكَذَلكَ يُجَابُ

113 انظر المحلى (33/1).

عَلَى قَولِ بَعْضِ المُلحدينَ: "هل الله قَادِرٌ علَى أنْ يَخْلُقَ مِثْلَه" وهَذا فِيهِ تجويزُ المُحَالِ العَقْلِيّ، وبَيانُ ذَلِكَ أنَّ اللهَ أَزَلِيٌّ وَلَوْ كَانَ لَهُ مِثْلٌ لَكانَ أَزَلِيًّا، والأَزَلِيُّ لا يُخْلَقُ لأنه موجودٌ فكيف يُخْلَقُ الموجود.

أما المستحيلُ العقليُّ فعدمُ قَبولِه الدخولَ فِي الوجودِ ظاهرٌ وَأَمَّا الواجبُ العقليُّ فَلا يقبلُ حدوثَ الوجودِ لأنَّ وجودَهُ أَزليٌّ، فرقٌ بينَ الوجودِ وبينَ الدخولِ فِي الوجود، فالوجودُ يشمَلُ الوجودَ الأزليّ والوجودَ الحادثَ أما الدخولُ في الوجودِ فَهو الوجودُ الحادثُ. فالواجبُ العقليُّ اللهُ وصفاتُه، فاللهُ واجبٌ عقليٌّ وجودُه أزليٌّ وصفاتُه أزليّةٌ ولا يُقال للهِ ولا لصفاته داخلٌ في الوجودِ لأنَّ وجودَهما أزليٌّ، فقولُنا إنّ الواجبَ العقليَّ لا يقبلُ الدخولَ في الوجودِ صحيحٌ لكن يقصُرُ عنه أفهامُ المبتدئينَ في العقيدةِ، أَمّا عِندَ مَن مَارسَ فَهي واضحةُ المرادِ.

## القدرة

## வல்லமை

அனைத்தின் மீதும் வல்லமை கொண்டிருப்பது அழ்ழாஹு தஆலாவுக்கு கட்டாயமாகும். இங்கு "அனைத்தும்" என்பதைக் கொண்டு பகுத்தறிவில் சாத்தியமானவற்றையே நாடப்படும். எனவே அதன் மூலம் பகுத்தறிவில் சாத்தியமற்றது வெளியேறிவிட்டது. ஏனெனில் அது உள்ளமை பெறுவதை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல ஆகையால் வல்லமை சம்மந்தப்படுவதற்கான தளமாக அது ஆகியிருப்பது இணக்கமாகமாட்டாது.

மேற்குறித்த இந்த விடயத்தில் இப்னு ஹஸ்ம் (**ابن حزم**) முரண்பட்டு பின்வருமாறு கூறுகிறார்: "அழ்ழாஹ் ஒரு பிள்ளையை எடுத்துக்கொள்வதற்கு வல்லமையுள்ளவன், ஏனெனில் அதற்கவன் சக்தி பெற்றவனாக இல்லையெனில் அவன் இயலாதவனாக ஆகிவிடுகின்றான்." அவர் கூறிய இந்த விடயம் அவசியமில்லாத ஒன்று. ஏனெனில் பிள்ளையை எடுத்துக்கொள்வது அழ்ழாஹ்வுக்கு சாத்தியமற்ற ஒரு விடயமாகும். பகுத்தறிவு ஏற்காத விடயம் அவனது வல்லமையுடன் சம்மந்தப்படமாட்டாது.

சில வேளை ஒரு விடயத்துடன் வல்லமை சம்மந்தப்படாமலிருப்பது அது பலயீனமாக இருப்பதற்காக வேண்டியாகும். இது

படைப்புகளுடைய விடயத்திலாகும். இன்னும் சிலவேளை ஒரு விடயத்துடன் வல்லமை சம்மந்தப்படாமலிருப்பது அந்த விடயம் பகுத்தறிவில் சாத்தியமற்றதாக இருப்பதினால் புதிதாக உண்டாகுவதை (படைக்கப்படுவதை) அது ஏற்றுக்கொள்ளாமலிருப்பதற்காக வேண்டியாகும். அல்லது அந்த வஸ்து பகுத்தறிவில் அவசியமானதாக இருப்பதினால் இல்லாமையை அது ஏற்றுக்கொள்ளாமலிருப்பதற்காக வேண்டியாகும்.

இயலாமையே அல்லாஹு தஆலாவுடைய வல்லமையை விட்டும் இல்லமலாக்கப்பட்ட முதல் விடயமாகும். இரண்டாவதாகக் கூறப்பட்ட விடயமல்ல. எனவே அல்லாஹ் அதற்கு வல்லமையுடையவன் என்றோ இயலாதவன் என்றோ சொல்லப்படுவது ஆகுமாகமாட்டாது. அதற்கு உதாரணமாக சிலர் "கல்லிற்கு அறிவாளியென்றோ, முட்டாள் என்றோ சொல்லப்படமாட்டாது" என்று கூறியுள்ளனர்.

சில நிராகரிப்பாளர்களின் கேள்வியான "அல்லாஹ் அவனைப் போன்ற ஒருவனைப் படைக்க வல்லமையுடையவனா"? என்ற கேள்விக்கும் மேற்குறித்தவாறே பதிலளிக்கப்படும். மேலும் இக்கேள்வியிலே புத்தி ஏற்க மறுக்கக்கூடிய விடயத்தை ஆகுமாக்கக்கூடிய ஒரு கருத்தும் உள்ளது.

அது பற்றிய தெளிவானது, நிச்சயமாக அல்லாஹ் ஆரம்பமற்றவன் அவனைப் போன்ற ஒருவன் இருப்பானேயானால் அவனும் ஆரம்பமற்றவனாக ஆகிவிடுவான். ஆரம்பமற்றவன் படைக்கப்படமாட்டான். ஏனெனில் அவன் உள்ளமையுடையவன் எனவே உள்ளமையுடையவன் எவ்வாறு படைக்கப்படுவான். பகுத்தறிவில் சாத்தியமற்றது என்பதானது அது உள்ளமைக்குள் நுழைவதை ஏற்றுக்கொள்ளாதென்பது தெளிவான விடயமாகும்.

மேலும் பகுத்தறிவில் அவசியம் என்பதானது இது புதிதாக உருவாகுவதை (இல்லாமலிருந்து உள்ளமைக்குள் நுழைவதை) புத்தி ஏற்காது. ஏனெனில் இதன் உள்ளமை ஆரம்பமற்றதாகும். உள்ளமை கொண்டிருப்பதற்கும், உள்ளமைக்குள் நுழைவதற்கும் மத்தியில் வேறுபாடு இருக்கின்றது.

உள்ளமை எனும் வார்த்தையானது: அது ஆரம்பமற்ற உள்ளமையையும், ஆரம்பமுள்ள (இல்லாமலிருந்து உள்ளமைக்குள் நுழைந்த) உள்ளமையையும் பொதிந்து கொள்ளும்.

மேலும் உள்ளமைக்குள் நுழைதல் எனும் வார்த்தையானது அது புதிதான (இல்லாமையிலிருந்து உள்ளமைக்குள் நுழைந்த) உள்ளமையையே குறிக்கும்.

பகுத்தறிவின் தீர்ப்பில் உள்ளமை கொண்டிருப்பது அவசியம் என்பதானது அல்லாஹ்வும் அவனது பண்புகளுமேயாகும். எனவே அல்லாஹ் பகுத்தறிவின் தீர்ப்பில் உள்ளமை கொண்டிருப்பது அவசியமாகும். ஏனெனில் அவனும் அவனது பண்புகளும் ஆரம்பமற்றதாகும். இதனால்தான் அல்லாஹ்வுக்கோ, அவனது பண்புகளுக்கோ உள்ளமையில் நுழைந்தவை என சொல்லப்பட மாட்டாது. ஏனெனில் அதன் உள்ளமை ஆரம்பமற்றதாகும்.

பகுத்தறிவின் தீர்ப்பில் அவசியமானது உள்ளமையில் நுழைவதை ஏற்கமாட்டாது என்ற எமது கூற்றானது சரியானதாகும். என்றாலும் அகீதாத்துறையில் தொடக்க நிலையில் இருப்பவர்கள் சிலவேளை இதனை விளங்கமுடியாமலிருக்கலாம். அகீதாத்துறையில் பயிற்றுவிக்கப்பட்டவர்களிடத்தில் இவ்வாசகத்தின் நோக்கம் தெளிவானதாகும்.

## العِلمُ

اعلَم أَنّ عِلْمَ الله قَديْمٌ أزَليٌّ كَما أَنّ ذَاتَه أزَليٌّ، فلَم يزَلْ عالمًا بذَاته وصفَاته وَما يُحْدثُه من مَخلُوقَاته، فَلا يتّصفُ بعلْم حَادث لأنّه لَو جَازَ اتّصَافُه بالحَوادث لانْتَفَى عَنْهُ القدمُ لأَنّ مَا كَانَ مَحَلا للحَوادث لا بُدّ أنْ يكُوْنَ حَادثًا. وَمَا أَوْهَمَ تَجَدُّدَ العِلْمِ لله تَعَالَى مِنَ الآيَاتِ القُرْءانِيّة كَقَوْلِه تَعَالى **﴿الآنَ خَفَّفَ اللهُ عَنكُمْ وَعَلِمَ أَنَّ فِيكُمْ ضَعْفًا(66)﴾** [سورة الأنفال] فَلَيْسَ المرَادُ به ذَلكَ، وقَولُه: **﴿وَعَلِمَ** (66)**﴾** لَيْسَ رَاجعًا لقَوْله **﴿الآنَ** (66)**﴾** بل المعْنَى أَنّهُ تَعالى خَفّفَ عَنْكُم الآنَ لأَنّه عَلِمَ بعلْمِه السّابِقِ في الأَزَلِ أَنّهُ يَكُونُ فِيكُم ضَعْفٌ.

وكَذَلكَ قَوْلُه تَعَالَى: ﴿وَلَنَبْلُوَنَّكُمْ حَتَّى نَعْلَمَ الْمُجَاهِدِينَ مِنكُمْ وَالصَّابِرِينَ(31)﴾ [سورة محمد] مَعْنَاهُ ولَنَبْلُوَنَّكُم حَتّى نُمَيِّزَ أي نُظْهِرَ للخَلْقِ مَنْ يُجَاهِدُ ويَصْبِرُ مِنْ غَيْرِهم، وكَانَ اللهُ عَالمًا قَبْلُ كَما نَقَلَ البُخَاريُّ[114] ذَلكَ عَنْ أبي عُبَيْدَةَ مَعْمَرِ بنِ المثَنّى، وَهَذَا شَبِيْهٌ بِقَوْلِه تَعَالى ﴿لِيَمِيزَ اللّهُ الْخَبِيثَ مِنَ الطَّيِّبِ(37)﴾ [سورة الأنفال].

## الحَيَاةُ

يَجبُ لله تَعَالَى الحَيَاةُ، فَهُوَ حَيٌّ لا كالأَحْياء، إِذْ حَيَاتُهُ أَزَلِيّةٌ أَبَدِيّةٌ لَيْسَت بِرُوْحٍ وَدَمٍ. والدّليلُ علَى وُجُوبِ حَيَاته وجُودُ هَذا العَالَمِ، فَلَوْ لَم يَكُنْ حَيًّا لَم يُوْجَدْ شَىءٌ مِنَ العَالَم، لَكنّ وُجُودَ العَالَمِ ثَابتٌ بالحِسّ والضّرُوْرَةِ بلا شَك.

## الوَحْدانيّةُ

مَعْنى الوَحْدانيّة أنّه لَيْسَ ذَاتًا مُؤَلّفًا من أَجْزَاء، فَلا يُوْجَدُ ذاتٌ مثْلُ ذَاته ولَيْسَ لغيره صفةٌ كصفته أو فعلٌ كفعله وليسَ المرَادُ بوَحْدَانيّته وَحْدَانيّةَ العَدَد إذ الوَاحدُ في العَدَد لَه نصْفٌ وأَجْزَاءٌ أَيْضًا، بَل المرَادُ أَنّه لا شبيه لَه.

وبُرهَانُ وَحْدانيّته هو أَنّهُ لا بُدّ للصّانعِ منْ أَن يَكُونَ حَيًّا قَادرًا عالمًا مُريدًا مُخْتَارًا، فَإِذَا ثَبَتَ وَصْفُ الصّانعِ بمَا ذَكَرنَاهُ قُلْنَا لَوْ كَانَ للْعَالَم صَانعَان وَجَبَ أَنْ يَكونَ كُلُّ وَاحد منْهُمَا حَيًّا قَادرًا عَالمًا مُرِيْدًا مُخْتَارًا وَالمخْتَارَان يَجُوزُ اخْتلافُهُمَا في الاخْتيَار لأَنّ كُلّ وَاحد منْهُما غَيْرُ مُجْبَرٍ عَلَى مُوَافقَة الآخَرِ في اخْتيَاره، وإلا لكانا مَجبُورَيْن والمجبُورُ لا يكونُ إلــهًا، فإذَا صَحّ هَذا فَلو أَرَاد أَحَدُهُما خلافَ مُرَاد الآخَرِ في شَىء كأَنْ أَرادَ أَحدُهما حَياةَ شخْصٍ وأَرادَ الآخرُ مَوتَه لَمْ يَخْلُ منْ أَنْ يَتمّ مُرادُهُما أَوْ لا يَتمّ مُرادُهُما أَوْ يتمّ مُرادُ أَحَدهما وَلا يَتمّ مُرادُ الآخَر، وَمُحَالٌ تَمَامُ مُرَادَيْهما لتَضَادّهما أي إنْ أَرادَ أَحَدهُما حَياةَ شخص وأَرادَ الآخرُ مَوتَه يَسْتَحيلُ أَنْ يكونَ هَذا الشّخصُ حَيًّا وميّتًا في ءانٍ وَاحد، وإنْ لم يَتمّ مُرَادُهما فَهُمَا عَاجزَان والعَاجزُ لا يكُونُ إلــهًا، وإنْ تَمّ مُرَادُ أَحَدهما ولَم يَتمّ مُرَادُ الآخَرِ فَإِنّ الذي لَم يَتمّ مُرَادُهُ عَاجزٌ وَلا يَكُونُ العَاجزُ إلــهًا ولا قَديْمًا، وهَذه الدّلالة مَعْروفَةٌ عنْدَ الموَحّدين تُسَمّى بدلالَة التّمَانُعِ قَالَ تَعالى: ﴿لَوْ كَانَ فِيهِمَا ءالِهَةٌ إِلاَّ اللهُ لَفَسَدَتَا(22)﴾ [سورة الأنبياء].

---

114 صحيح البخاري: كتاب التفسير: باب سورة العنكبوت.

## العلم

## அறிவு

அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வின் (ذات) தாத் ஆரம்பமற்றதைப் போன்று அவனது அறிவும் ஆரம்பமற்றதாகும். அவன் அவனது தாத்தையும், அவனது பண்புகளையும் மற்றும் அவனது படைப்புகளில் புதிதாக அவன் படைப்பவைகளையும் அறிந்தவனாகவே இருக்கின்றான். புதிதாக உண்டாகும் அறிவைக் கொண்டு அவன் வர்ணிக்கப்படமாட்டான். ஏனெனில் புதிதாக உண்டாகுபவற்றைக் கொண்டு அவன் வர்ணணை பெறுபவனாக இருந்திருந்தால், பூர்வீகம் எனும் தன்மை அவனுக்கு இல்லாமலிருந்திருக்கும். ஏனென்றால் எது புதிதாக உண்டாகுபவற்றுக்குத் தளமாக இருக்குமோ அதுவும் அவசியம் புதிதாக உருவான ஒன்றாகவே இருக்கும்.

﴿الآنَ خَفَّفَ اللهُ عَنكُمْ وَعَلِمَ أَنَّ فِيكُمْ ضَعْفًا﴾

என்ற அத்தியாயம் அல் அன்பாலின் 66 ம் வசனம் போன்ற குர்ஆன் வசனங்களில் நின்றும் அல்லாஹு தஆலாவுக்கு அறிவு புதிதாக உண்டாகுவதை சந்தேகிக்கச் செய்யக்கூடியதானது அதனை அவ்வசனத்தின் மூலம் நாடப்படமாட்டாது.

மாறாக இவ்வசனத்தின் கருத்தானது அல்லாஹு தஆலா உங்களில் பலயீனம் ஏற்படும் என்பதை அவனுடைய ஆரம்பமற்ற அறிவைக் கொண்டு அறிந்திருந்ததனால் தற்சமயம் அவன் உங்களுக்கு இலகுபடுத்தியுள்ளான் என்பதாகும். மேலும் அத்தியாயம் முஹம்மத் 31 ஆவது வசனமான

﴿وَلَنَبْلُوَنَّكُمْ حَتَّى نَعْلَمَ الْمُجَاهِدِينَ مِنكُمْ وَالصَّابِرِينَ﴾

என்ற வசனமும் அவ்வாறே.

அதன் அர்த்தமானது “நிச்சயமாக நாங்கள் மனிதர்களில் யுத்தம் செய்து பொறுமையோடு இருப்பவரை ஏனையோரை விட்டும் படைப்புகளுக்கு வேறுபடுத்திக் காட்டுவதற்காக உங்களை நாம் சோதிப்போம். அல்லாஹ் அதற்கு முன்னரே அதனை அறிந்தவனாக உள்ளான்” என்பதாகும். அதனை (أبو عبيدة معمر بن المثنى) அபூ உபைதா

மஃமரிப்னுல் முஸன்னா றழியழ்ழாஹு அன்ஹு என்பவரைத் தொட்டும் இமாம் புகாரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதுவானது

﴿لِيَمِيزَ اللهُ الْخَبِيثَ مِنَ الطَّيِّبِ﴾

என்ற அழ்ழாஹு தஆலாவின் கூற்று போன்றதாகும்.

அத்தியாயம் : அல் அன்பால் வசனம் : 37

## الحياة

## மரணமில்லாமை

அழ்ழாஹு தஆலாவுக்கு மரணமில்லாமை எனும் பண்பு இருப்பது கட்டாயமானதாகும். எனவே அவன் உயிருள்ளவைகளைப் போன்றல்லாத ஹயாத்தையுடையவன். ஏனெனில் அவனது ஹயாத் எனும் பண்பு ஆரம்பம், முடிவுகளற்றது. அது "ரூஹ்" மற்றும் இரத்தத்தைக் கொண்டதல்ல.

அவனுக்கு மரணமில்லாமை அவசியம் என்பதற்கான பகுத்தறிவு ரீதியான ஆதாரம்: இவ்வுலகம் உண்டாகியிருப்பதாகும். ஏனெனில் அவன் ஹயாத்துடையவனாக இல்லாமலிருந்திருந்தால் இவ்வுலகில் எதுவுமே உண்டாகியிருக்கமாட்டாது. என்றாலும் இவ்வுலகம் உண்டாகியிருப்பது புலன் மற்றும் நிர்ப்பந்தத்தின் மூலம் எவ்வித சந்தேகமுமின்றி நிரூபனமானதாகும்.

## الوحداينة

## இணையின்றித் தனித்தல்

"வஹ்தானிய்யஹ்" என்பதன் கருத்தானது அழ்ழாஹ் பகுதிகளால் இணைக்கப்பட்ட (ذات) தாத்தாக இல்லை என்பதாகும். எனவே அவனது தாத் போன்று வேறு எந்தவொரு தாத்தும் கிடையாது. மேலும் அவனுடைய பண்பு போன்ற ஒரு பண்போ அல்லது அவனது செயல் போன்ற ஒரு செயலோ எவருக்கும் கிடையாது. அவனது வஹ்தானிய்யஹ்வின் மூலம் நாடப்படுவதானது எண்ணிக்கையில் ஒருவன் என்பதையல்ல. ஏனெனில் எண்ணிக்கையில் ஒன்று எனும்

பொழுது அதற்கு அரைவாசி மற்றும் பல பங்குகள் காணப்படும். மாறாக அதன் மூலம் நாடப்படுவதானது அவனுக்கு ஒப்பாக எதுவுமில்லை என்பதாகும்.

அவனது வஹ்தானியத்திற்குரிய பகுத்தறிவு ரீதியான ஆதாரமானது: படைப்பாளன் மரணமில்லாதவனாகவும், வல்லமை யுடையவனாகவும், அறிந்தவனாகவும், நாடக்கூடியவனாகவும், சுயவிருப்பம் உடையவனாகவும் இருப்பது அவசியமாகும் என்பதாகும்.

## دلالة التمانع "திலாலதுத் தமானுஃ" என்றால் என்ன?

எனவே நாம் கூறிய பண்புகளைக் கொண்டு படைப்பாளனை வர்ணிப்பது அவசியமென்றாகி விட்டால் நாம் கூறுவோம் இவ்வுலகுக்கு இரு படைப்பாளர்கள் இருக்குமாக இருந்தால், அவ்விருவரில் ஒவ்வொருவரும் மரணமில்லாதவர்களாகவும், வல்லமையுடையவர்களாகவும், அறிந்தவர்களாகவும், நாடக்கூயவர்களாகவும், சுயவிருப்பம் உடையவர்களாகவும் இருப்பது அவசியமாகிவிடும்.

சுயவிருப்பு சார்ந்த விடயத்திலே சுயவிருப்பம் கொண்ட இருவர் ஒருவருக்கொருவர் முரண்பாடு கொள்ளலாம். ஏனெனில் அவ்விருவரில் ஒவ்வொருவரும் மற்றவருடைய தேர்விலே அவருடன் உடன் படுவதன்மீது நிர்ப்பந்திக்கப்பட்டவரல்ல. அவ்வாறு இல்லையெனில் அவ்விருவரும் நிர்ப்பந்திக்கப்பட்டவர்களாக ஆகிவிடுவர். நிர்ப்பந்திக்கப்பட்டவர் கடவுளாக இருக்க முடியாது.

இது சரியென்றால் ஒரு மனிதன் உயிர்வாழ்வதை அவ்விருவரில் ஒருவர் நாடுகிறார். அதே மனிதர் மரணிப்பதை மற்றவர் நாடுகிறார் என்பதைப் போல. அவ்விருவரில் ஒருவர் ஒரே விடயத்தில் ஒருவருடைய நாட்டத்திற்கு மாற்றமாக மற்றவர் நாடினால் அப்பொழுது ஒன்றோ இருவரின் நாட்டங்களும் நிறைவேறும். அல்லது இருவருடைய நாட்டங்களும் நிறைவேறாமல் போகும். அல்லது இருவரில் ஒருவரின் நாட்டம் நிறைவேறி, மற்றவரின் நாட்டம் நிறைவேறாமல் போகும். அவ்விரு நாட்டங்களும் வேறுபட்டதாக

இருப்பதனால் அவ்விரண்டுமே நிறைவேறுவது சாத்தியமற்றதாகும். அதாவது அவ்விருவரில் ஒருவர் ஒரு மனிதன் வாழ்வதை நாடி மற்றவர் அம்மனிதன் மரணிப்பதை நாடினால் அம்மனிதன் ஒரே நேரத்தில் வாழ்பவனாகவும், மரணித்தவனாகவும் இருப்பது சாத்தியமற்றதாகும். மேலும் அவ்விருவரினதும் நாட்டங்களும் நிறைவேறாவிட்டால் அவ்விருவருமே இயலாதவர்களாகிவிடுவார்கள். இயலாதவர் கடவுளாக இருக்கமுடியாது. மேலும் அவ்விருவரில் ஒருவரின் நாட்டம் நிறைவேறி மற்றவரின் நாட்டம் நிறைவேறவில்லையாயின் எவரது நாட்டம் நிறைவேறவில்லையோ அவர் இயலாதவராவார். இயலாதவர் கடவுளாகவோ, ஆரம்பமற்றவனாகவோ இருக்கமுடியாது. அகீதாக்கலை அறிஞர்களிடத்தில் இந்த ஆதாரமானது **دلالة التمانع** "திலாலதுத் தமானுஃ" எனும் பெயர் கொண்டு அறியப்பட்டதாகும்.

அழ்ழாஹ் குர்ஆனில் கூறியுள்ளான்:

﴿لَوْ كَانَ فِيهِمَا ءالِهَةٌ إِلاَّ اللهُ لَفَسَدَتَا﴾

விளக்கம் : "வானங்களுக்கும் பூமிகளுக்கும் அழ்ழாஹ்வைத் தவிர வேறு கடவுள்கள் இருந்திருந்தால் அவை இரண்டுமே அழிந்தே போயிருக்கும்"

அத்தியாயம் : அல் அன்பியாஉ வசனம் : 22

## القِيَامُ بالنّفْسِ

اعْلَم أَنّ مَعْنَى قِيَامه بنَفْسه هُوَ اسْتغْنَاؤُهُ عَنْ كُلّ مَا سِوَاهُ فَلا يَحْتَاجُ إِلى مُخَصّصٍ لَهُ بالوُجُوْدِ لأَنّ الاحْتِيَاجَ إِلى الغَيْرِ يُنَافِي قِدَمَهُ وَقَدْ ثَبَتَ وُجُوْبُ قِدَمِهِ وبَقَائِهِ.

## المخَالَفَةُ للحَوادِث

يَجِبُ للهِ تَعالى أنْ يكونَ مُخَالِفًا للحَوادِثِ بِمَعْنى أَنّهُ لا يُشْبِهُ شَيئًا من خَلْقِه فلَيْسَ هُوَ بِجَوْهَرٍ يَشْغَلُ حَيّزًا ولا عَرَضٍ. والجَوْهَرُ مَا لَهُ تَحيّزٌ وقِيَامٌ بِذَاتِهِ كالأَجْسَام، والعَرَضُ مَا لا يَقُومُ بِنَفْسِهِ وإنّما يَقُوْمُ بِغَيْرِهِ كالحَرَكَةِ

والسُّكُونِ والاجْتِماعِ والافْتِراقِ والأَلْوَانِ والطُّعُوْمِ والرَّوَائِحِ، ولِذَلِكَ قَالَ الإمَامُ أَبُو حَنِيفَةَ فِي بعضِ رسائله في علمِ الكلامِ115: أَنّى يُشْبِهُ الخَالِقُ مَخْلُوقَهُ معناهُ لا يصحُّ عقلا ولا نقلا أن يُشْبِهَ الخَالِقُ مَخْلُوقَه، وقال أبو سُلَيمَانَ الخَطّابِيُّ: "إنّ الذي يَجبُ عَلَيْنَا وعلَى كُلِّ مُسْلِمٍ أَنْ يعْلَمَهُ أَنّ رَبَّنَا لَيْسَ بذِي صُورَةٍ وَلا هَيْئَةٍ فإنّ الصُّوْرَةَ تَقْتضِي الكَيْفِيَّةَ وهي عن الله وعَنْ صفَاته مَنْفِيّةٌ" رَواهُ عنه البَيْهَقِيُّ في الأَسْماءِ والصِّفَاتِ116.

وقَالَ أَبُو جَعْفَرٍ الطَّحَاوِيّ: "وَمَنْ وَصَفَ اللهَ بِمَعْنًى مِنْ مَعَانِي البَشَرِ فَقَدْ كَفَرَ". وهوَ مِنْ أَهْلِ القَرْنِ الثَّالث، فَهُوَ دَاخلٌ فِي حَدِيث: **"خَيْرُ القُرُونِ قَرْنِي ثُمّ الذِيْنَ يَلُونَهُم ثُمّ الذِيْنَ يَلُونَهُم"** رواهُ الترمذيُّ117. والقرنُ المرادُ به مائة سنة كما قالَ ذلكَ الحافظُ أبو القاسمِ بنُ عساكرَ في كتابهِ تَبيين كذبِ المفتري118 الذي أَلّفهُ في التنويهِ بأبي الحسنِ الأشعري رضيَ اللهُ عنه.

## القيام بالنفس

## தன்னிலே நிலைத்திருத்தல் (பிற பொருளின் தேவையற்றிருத்தல்)

அறிந்து கொள்ளுங்கள்! அழ்ழாஹ் தன்னிலே நிலைத்திருத்தல் என்பதன் அர்த்தமானது அவன் அவனல்லாத அனைத்தை விட்டும் தேவையற்றிருத்தல் என்பதாகும்.

எனவே உள்ளமையைக் கொண்டு அவனை குறிப்பாக்கக்கூடியனின் பால் அவன் தேவைகாணமாட்டான். ஏனெனில் பிறரின் பால் தேவைகாண்பதென்பது அவனுடைய ஆரம்பமின்மைக்கு முரணானதாகும். எனவே அவனது ஆரம்பமின்மையும், முடிவின்மையும் அவசியம் என்பது நிரூபனமாகிவிட்டது.

115 انظر الفقه الأكبر مع شرح ملا علي (ص/323) بنحوه.

116 الأسماء والصفات (ص/296).

117 أخرجه الترمذي في سننه: كتاب الفتن: باب ما جاء في القرن الثالث. وقال "هذا حديث حسن صحيح".

118 تبيين كذب المفتري فيما نسب إلى الإمام أبي الحسن الأشعري (ص/144).

## المخالفة للحوادث

## படைப்புகளுக்கு மாற்றமாயிருத்தல்

அல்லாஹு தஆலா அவன் தனது படைப்புக்களில் எதற்கும் ஒப்பாகமாட்டான் எனும் அர்த்தத்தில் படைப்புகளுக்கு மாற்றமானவனாக இருப்பது அவனுக்கு அவசியமாகும். எனவே அவன் ஒரு இடத்தை நிரப்பிவிடும் சடப்பொருளாகவுமில்லை, அதன் பண்பாகவுமில்லை.

“ஜவ்ஹர்” (جوهر) என்பது இடம் எடுத்துக் கொள்ளவும், சுயமாக நிலை பெறவும் முடியுமான சடங்களைப் போன்றதாகும்.

“அரழ்” (عرض) சடப்பொருளின் பண்பானது அது சுயமாக நிலைபெறமாட்டாது. மாறாக அசைதல், அசையாதிருத்தல், இணைதல், பிரிதல், நிறங்கள், சுவைகள் வாடைகள் ஆகியவற்றைப் போன்று இன்னொன்றின் உதவியைக் கொண்டே நிலைபெறும்.

இதனாலே இமாம் அபூ ஹனீபா றஹிமஹுல்லாஹ் அவர்கள் இஸ்லாமிய அடிப்படை கோட்பாடு சம்பந்தமான அவர்களது சிறு நூல்களில் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்: “படைப்பாளன் தனது படைப்புக்களுக்கு எவ்வாறு ஒப்பாக முடியும்!?” இமாம் அபூ ஹனீபா றஹிமஹுல்லாஹ் அவர்களின் இந்த வார்த்தையின் விளக்கமானது படைப்பாளனாகிய அல்லாஹ் அவனது படைப்புகளுக்கு ஒப்பாகுவது பகுத்தறிவு ரீதியாகவும் குர்ஆன், ஹதீஸ் ரீதியாகவும் சரியானதல்ல என்பதாகும்.

மேலும் (الإمام أبو سليمان الخطابي) இமாம் அபூ ஸுலைமான் அல்-ஹத்தாபீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகையில், “எங்கள் மீதும், அனைத்து முஸ்லிம்கள் மீதும் கடமையானதாகிறது எங்கள் றப்பு அல்லாஹ் தோற்றமோ, அமைப்போ உடையவனல்ல என்று அறிவதாகும். ஏனெனில் தோற்றமானது விதத்தைத் அவசியப்படுத்தும். அதுவுமோ அல்லாஹ்வுக்கும், அவனது பண்புகளுகளுக்கும் கிடையவே கிடையாது.” எனக் கூறியுள்ளார்கள். இதை இமாம் பைஹகீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் (الأسماء والصفات) ‘அல் அஸ்மாஉ

வஸ்ஸிபாத்' எனும் அவர்களது நூலில் இமாம் அபூ ஸுலைமான் அல்-ஹத்தாபீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களைத் தொட்டும் அறிவித்துள்ளார்கள்.

**(الإمام أبو جعفر الطحاوي)** இமாம் அபூஜஃபர் அத்தஹாவீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் கூறுகிறார்கள்:

"وَمَنْ وَصَفَ اللهَ بِمَعْنًى مِنْ مَعَانِي البَشَرِ فَقَدْ كَفَرَ"

"மனிதர்களின் பண்புகளில் ஒரு பண்பைக்கொண்டேனும் அழ்ழாஹ்வை வர்ணித்தவர் காபிராகிவிட்டார்."

இமாம் அபூஜஃபர் அத்தஹாவீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள், அழ்ழாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் ஒரு ஹதீஸில்

"خَيْرُ القُرُونِ قَرْنِي ثُمَّ الذِيْنَ يَلُونَهُم ثُمَّ الذِيْنَ يَلُونَهُم"

"நூற்றாண்டுகளில் சிறந்தது நான் இருக்கும் நூற்றாண்டு. பின்பு அதையடுத்துவரும் நூற்றாண்டு. பின்பு அதையடுத்து வரும் நூற்றாண்டு." எனக் கூறிய சிறந்த நூற்றாண்டுகளில் ஒன்றில் வாழ்ந்தவராவார்.

மேலும் "கர்ன்" (**قرن**) என்றால் நூறு வருடங்களாகும். இவ்வாறே அல் ஹாபிழ் அபுல் காஸிம் இப்னு அஸாகிர் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் இமாம் அபுல் ஹஸன் அல்-அஷ்அரீ றழியழ்ழாஹு அன்ஹு அவர்களை நிரபராதியாக்கின்ற விடயத்தில் கோர்வை செய்த (**تبيين كذب المفتري**) 'தப்யீனு கதிபில் முப்தரீ' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

## صِفَاتُ اللهِ كُلُّها كاملةٌ

صِفَاتُ اللهِ أَزَلِيَةٌ أَبَدِيَةٌ لأَنَّ الذَّاتَ أَزَلِيٌّ فَلا تَحْصُلُ لَهُ صِفَةٌ لَم تَكُنْ فِي الأَزَلِ، أَمَّا صِفَاتُ الخَلْقِ فَهِيَ حَادِثَةٌ تَقْبَلُ التَّطَوُّرَ مِنْ كَمَالٍ إِلى أَكْمَلَ فَلا يتجدّدُ عَلى عِلْمِ اللهِ تَعَالَى شَىءٌ. واللهُ تَعَالَى خَلَقَ كُلَّ شَىءٍ بِعِلْمِهِ الأَزَلِيِّ وقُدْرَتِهِ الأَزَلِيَّةِ ومَشِيْئَتِهِ الأَزَلِيَّةِ. فَالَمَاضِي والحَاضِرُ والمُسْتَقْبَلُ بِالنِّسْبَةِ للهِ أَحَاطَ بِهِ بِعِلْمِهِ الأَزَلِيِّ.

وأما قولُهُ تَعالى: ﴿وَلَنَبْلُوَنَّكُمْ حَتَّى نَعْلَمَ الْمُجَاهِدِينَ مِنكُمْ وَالصَّابِرِينَ (31)﴾ [سورة محمد] فَلَيسَ مَعْنَى ذَلِكَ أَنّه سَوْفَ يَعْلَمُ المُجَاهِدينَ بَعْدَ أَنْ لَم يَكُنْ عَالماً بِهِم بالامْتِحَانِ والاختِبَارِ، وَهَذا يَسْتَحِيلُ عَلَى الله تَعَالَى، بَلْ مَعْنَى الآيَةِ حَتّى نُمَيِّزَ أي حَتّى نُظْهِرَ للْعِبَادِ المُجَاهِدينَ مِنْكُمْ وَالصّابِرِينَ مِنْ غَيْرِهِم.

ويَكْفُرُ مَنْ يَقُولُ إنّ الله تَعَالى يَكْتَسِبُ عِلْمًا جَدِيدًا.

وَصِفَاتُ الله تَعَالَى كُلُّها كاملةٌ قَالَ تَعَالَى: ﴿وَلِلَّهِ الأَسْمَاءُ الْحُسْنَى (180)﴾ [سورة الأعراف]. وقالَ تَعالى: ﴿وَلِلَّهِ الْمَثَلُ الأَعْلَىَ (60)﴾ [سورة النحل] فَيَسْتَحِيلُ في حَقّه تَعالى أيُّ نَقْصٍ. وأَمّا قَولُه تَعَالى: ﴿وَمَكَرُواْ وَمَكَرَ اللّهُ وَاللّهُ خَيْرُ الْمَاكِرِينَ (54)﴾ [سورة ءال عمران] فَالمَكْرُ مِنَ الخَلْقِ خُبْثٌ وخِداعٌ لإِيْصَالِ الضَّرَرِ إلى الغَيْرِ باسْتِعْمَالِ حِيلَةٍ، وَأَمّا مِنَ الله تَعالى فَهُو مُجَازَاةُ المَاكِرينَ بالعُقُوبَةِ مِنْ حَيْثُ لا يَدْرُونَ. وبعبَارَةٍ أُخْرَى إنّ الله أَقْوَى في إيصَالِ الضَّرَرِ إلى المَاكِرِينَ مِنْ كُلِّ مَاكِرٍ جَزَاءً لَهُم على مَكْرِهم، فَالمَكْرُ بِمَعْنى الاحْتِيَالِ مُسْتَحِيلٌ علَى الله.

وكَذَلكَ قَوْلُه تعالى: ﴿اللّهُ يَسْتَهْزِئُ بِهِمْ (15)﴾ [سورة البقرة] أَيْ يُجَازِيْهِم عَلَى اسْتِهزَائِهِم. واعلَم أنّ العُلمَاءَ يقولونَ نؤمنُ بإِثْباتِ ما وَرَدَ في القُرءَانِ والحَديثِ الصَّحيحِ كالوَجْهِ واليَدِ والعَيْنِ والرِّضَا والغَضَبِ وغَيْرِه علَى أَنّها صِفَاتٌ يَعلَمُها الله لا علَى أَنها جَوارِحُ وانْفعالاتٌ كأَيْدِينا وَوُجُوهِنا وعيُونِنا وغَضَبِنا فَإِنّ الجَوَارِحَ مُسْتَحِيْلَةٌ علَى الله لقَوْلِه تَعَالى ﴿لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ (11)﴾ [سورة الشورى]، وقوله ﴿وَلَمْ يَكُن لَّهُ كُفُوًا أَحَدٌ (4)﴾ [سورة الإخلاص].

قَالُوا لَو كَانَ لله عَيْنٌ بمَعْنَى الجَارِحَةِ والجِسْمِ لَكَانَ لَهُ أَمْثَالٌ فَضْلا عَنْ مِثْلٍ وَاحِدٍ ولَجَازَ عَلَيه ما يَجُوزُ على المُحْدَثَاتِ مِنَ المَوْتِ والفَناءِ والتّغَيُّرِ والتّطَورِ، ولَكَانَ ذَلِكَ خُرُوْجًا مِنْ مُقْتَضَى البُرْهَانِ العَقْليّ على اسْتِحَالَةِ التّغَيُّرِ والتّحوُّلِ مِنْ حَالٍ إلى حَالٍ علَى الله لأنّ الدلائلَ العقلية على حدوث العالم طروءُ صفاتٍ لم تكن عليه والتحولَ من حال إلى حال.

ولا يَصِحُّ إِهْمالُ العَقْلِ لأَنّ الشّرْعَ لا يَأْتِي إلا بمُجَوّزَاتِ العَقْلِ أي إلا بما يقبَلُهُ العَقلُ لأَنّه شَاهِدُ الشّرْعِ، فَالعَقْلُ يَقْضِي بأَنّ الجِسْمَ والجِسْمانيّات أَي الأَحْوالَ العَارِضَةَ للجسْمِ مُحْدَثَةٌ لا مَحَالَةَ وأَنّها مُحْتَاجَةٌ لِمُحْدِثٍ، فَيَلْزَمُ مِنْ ذَلِكَ أَنْ يَكُونَ المُتّصِفُ بها لَهُ مُحْدِثٌ ولا تَصِحُّ الأُلُوهِيَّةُ لِمنْ يَحْتَاجُ إلى غَيْرِه.

## அழ்ழாஹ்வின் பண்புகள் அனைத்தும் பரிபூரணமானவையே

அழ்ழாஹ்வின் பண்புகள் பூர்வீகமான நிரந்தரமானவை அதாவது ஆரம்பம் முடிவற்றவை. ஏனெனில் அவனுடைய (ذات) தாத் பூர்வீகமானதாகும். ஆரம்பமற்றதாகும். எனவே பூர்வீகத்திலில்லாத எந்தப்பண்பும் அவனுக்கு புதிதாக ஏற்படாது. படைப்புகளின் பண்புகள் அவை பூரணத்திலிருந்து பரிபூரணமளவில் முன்னேற்றமடைவதை ஏற்றுக்கொள்ளும் பண்புகளேயாகும். ஆகவே அழ்ழாஹு தஆலாவின் அறிவிலே ஏதும் புதிதாக ஏற்படமாட்டாது. ஆழ்ழாஹு தஆலா அனைத்தையும் அவனது பூர்வீகமான அறிவு மேலும் பூர்வீகமான அவனது வல்லமை இன்னும் பூர்வீகமான அவனது நாட்டத்தைக்கொண்டு படைத்தான். எனவே அழ்ழாஹ்வுடன் தொடர்புபடுத்துகையில் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை அவனுடைய பூர்வீகமான அறிவின் மூலம் நன்கறிகின்றான். குர்ஆனில் வந்துள்ள,

﴿وَلَنَبْلُوَنَّكُمْ حَتَّى نَعْلَمَ الْمُجَاهِدِينَ مِنكُمْ وَالصَّابِرِينَ﴾

என்ற வசனமானது போர் புரிபவர்களை அழ்ழாஹ் அறியாமலிருந்து பின்னர் சோதனை மூலம் அவர்களை அறிந்து கொள்வான் என்பது அதன் அர்த்தமல்ல. இது அழ்ழாஹ்வுக்கு சாத்தியமற்றதாகும். என்றாலும் மேற்குறித்த வசனத்தின் சரியான அர்த்தம்: “உங்களில் போர் புரிந்து பொறுமையாக இருப்பவர் மற்றும் பொறுமையை இழப்பவர் யார் என்று அடியார்களுக்கு தெரியப்படுத்துவதற்காக வேண்டியதாகும்.” என்பதாகும். மேலும் எவர் “அழ்ழாஹ் புதிய அறிவைப் பெறுகிறான்” என்று கூறுவாரோ அவர் காபிராகிவிடுவார்.

அழ்ழாஹ்வின் பண்புகள் அனைத்தும் பரிபூரணமானவையாகும். அழ்ழாஹ் பின்வருமாறு கூறியுள்ளான்

﴿وَلِلَّهِ الأَسْمَاءُ الْحُسْنَى﴾

விளக்கம் : “அழ்ழாஹ்வுக்கு மிக அழகிய திருநாமங்கள் உள்ளன.”

அத்தியாயம் : அல் அஃராப் வசனம் : 180

என்றும், மேலும்

﴿وَلِلَّهِ الْمَثَلُ الأَعْلَى﴾

விளக்கம் :

“படைப்புக்களின் பண்புகளுக்கு ஒப்பாகாத பண்புகள் அல்லாஹ்வுக்கு உள்ளன.” என்றும் கூறியுள்ளான்.

அத்தியாயம் : அன் நஹ்ல் வசனம் : 60

ஆகவே அல்லாஹ்வுக்கு எவ்வித குறைபாடும் இருக்க முடியாது.

## ﴿وَمَكَرُواْ وَمَكَرَ اللهُ وَاللهُ خَيْرُ الْمَاكِرِينَ﴾ என்ற அல்லாஹ்வின் கூற்றின் விளக்கம்

அத்தியாயம் ஆல இம்ரான் வசனம் 180 இல் இடம்பெற்றுள்ள

﴿وَمَكَرُواْ وَمَكَرَ اللهُ وَاللهُ خَيْرُ الْمَاكِرِينَ﴾

என்ற அல்லாஹ்வின் கூற்றானது இந்தக்கூற்றில் “மக்ர்” (**مكر**) எனும் வார்த்தை அல்லாஹ் அளவிலும், படைப்பு அளவிலும் இணைத்துக்கூறப்பட்டு வந்துள்ளது. இதில் இடம்பெற்றுள்ள படைப்பினத்தாரிடமிருந்து உண்டான “மக்ர்” ஆனது தந்திரத்தை உபயோகித்து பிறருக்கு தீங்கை ஏற்படுத்துவதற்காக ஏமாற்றுவதும் இழிவானதுமாகும். அல்லாஹு தஆலாவின் பால் இணைத்துக் கூறப்படும் “மக்ர்” ஆனது அது மேற்குறித்த ஏமாற்று வேலையை செய்யக்கூடியவர்களுக்கு அவர்கள் அறியாத புறத்தில் தண்டனை வழங்குவதாகும். மற்றுமொரு வாசகத்தின் மூலம் மேற்குறித்த ஏமாற்று வேலையைச் செய்பவர்களுக்கு கூலியாக தீங்கை ஏற்படுத்துவதில் அல்லாஹ் மிக்க வல்லமையுடையவன் என்றும் கூற முடியும். தந்திரத்தை உபயோகிக்கும் அர்த்தத்தில் மக்ர்; அல்லாஹ்வுக்கு சாத்தியமற்றாகும்.

## ﴿اللهُ يَسْتَهْزِئُ بِهِمْ﴾ என்ற அல்லாஹ்வின் கூற்றின் விளக்கம்

அத்தியாயம் அல் பகரஹ் வசனம் 15 இல் இடம்பெற்றுள்ள

﴿اللهُ يَسْتَهْزِئُ بِهِمْ﴾

என்ற அல்லாஹு தஆலாவுடைய கூற்றும் அவ்வாறுதான். அதாவது அவன் அவர்களுடைய பரிகசிப்புக்கான கூலியை அவர்களுக்கு வழங்குவான் என்பதாகும்.

அறிந்து கொள்! வஜ்ஹு (وجه) யது (يد) ஐன் (عين) கலப் (غضب) மற்றும் அவை அல்லாதவை போன்று குர்ஆனிலும், ஸஹீஹான ஹதீஸிலும் வந்தவற்றை அல்லாஹ் அறிந்த ஸிபாத்கள் என்ற அடிப்படையில் மற்றும் அவை எங்கள் கைகள், முகங்கள், கண்கள், கோபம் போன்ற உணர்வுகளோ, உறுப்புக்களோ அல்ல என்ற அடிப்படையில் தரிபடுத்தி ஈமான் கொள்வோம் என்று உலமாக்கள் சொல்கின்றனர். ஏனெனில ﴿لَيْسَ كَمِثْلِهِ شَىْءٌ﴾ என்றும் ﴿وَلَمْ يَكُن لَّهُ كُفُوًا أَحَدٌ﴾ என்றும் அல்லாஹ் கூறியிருப்பதற்காக வேண்டி உடலுறுப்புகள் அல்லாஹ்விற்கு சாத்தியமற்றவையாகும்.

மேலும் அறிஞர்கள் கூறினார்கள்: உறுப்பு மற்றும் சடம் எனும் அர்த்தத்தில் அல்லாஹ்வுக்கு கண் இருந்திருந்தால் ஒரு உவமை ஒரு புறமிருக்க பல உவமைகள் அவனுக்கு உண்டாகியிருந்திருக்கும். மேலும் மரணம், அழிவு, மாற்றமடைதல், வளர்ச்சியடைதல் போன்ற படைப்புகளின் மீது சாத்தியமானவையும் அவனுக்கு சாத்தியமாகிவிடும். மேலும் அது மாற்றமடைதல், ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு நிலை மாறுதல் ஆகியவை அல்லாஹ்வுக்கு சாத்தியமற்றதாகும் என்ற பகுத்தறிவு ரீதியான ஆதாரத்தின் தீர்வை விட்டும் வெளிப்பட்டதாகவும் ஆகிவிடும். ஏனெனில் உலகம் புதிதாக உண்டானது என்பதற்கான பகுத்தறிவு ரீதியான ஆதாரங்களானது அதற்கு இருக்காத சில பண்புகள் ஏற்படுவதும், ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு நிலைமாறுவதுமாகும். பகுத்தறிவு மார்க்கத்தின் சாட்சியாக இருப்பதால் அது ஏற்றுக்கொள்ளக்கூடியவற்றையே மார்க்கம் கொண்டு வரும். அதனால் பகுத்தறிவை வீணாக்குவது சரியாகமாட்டாது. எனவே சடப்பொருளும், சடப்பொருளுக்கு

உண்டாகும் நிலைகளும் எவ்வித சந்தேகமுமின்றி படைக்கப்பட்டவை என்றும், மேலும் அவை அவற்றைப் படைத்தவனின் பால் தேவைகாணக்கூடிவை என்றும் பகுத்தறிவு தீர்ப்புச் செய்கின்றது. எனவே அவற்றைக் கொண்டு வர்ணிப்புப் பெற்றவன் அவனுக்கு படைத்த ஒருவன் இருப்பது அதன் மூலம் கட்டாயமாகிவிடுகின்றது. பிறரில் தேவைகாணக்கூடியவர் கடவுளாக இருப்பது சாத்தியமாகமாட்டாது.

## سَبَبُ نُزُولِ الإخلاصِ

قَالَت اليَهُودُ للرّسُولِ صلى الله عليه وسلم: "صِفْ لَنَا رَبّكَ"[119]. قَدْ كَانَ سُؤالُهم تَعَنّتًا (أي عِنَادًا) لا حُبًّا للعِلْم واسْتِرْشَادًا به، فَأَنْزَلَ الله سُورَةَ الإخْلاص: **﴿قُلْ هُوَ اللهُ أَحَدٌ (1)﴾** أَي الذي لا يَقْبَلُ التّعَدُّدَ والكَثْرَةَ ولَيْسَ لَهُ شَرِيكٌ في الذّاتِ أَو الصّفَاتِ أَو الأَفْعَالِ، ولَيْسَ لأَحَدٍ صِفَةٌ كَصِفَاتِه، بَلْ قُدْرَتُه تَعَالى قُدْرَةٌ وَاحِدَةٌ يَقْدِرُ بِهَا عَلَى كُلّ شَىءٍ وعِلْمُهُ وَاحِدٌ يَعْلَمُ به كُلّ شَىءٍ.

قولُهُ تعالى **﴿اللهُ الصّمَدُ (2)﴾** أي الذي تَفتَقِرُ إليه جَمِيْعُ المَخلُوقَات، معَ استغْنَائِه عنْ كُلّ مَوْجُودٍ، والذي يُقْصَدُ عندَ الشّدّةِ بجَميعِ أنْواعِها ولا يَجْتَلِبُ بخَلْقِه نَفْعًا لنَفْسِه ولا يَدْفَعُ بهِمْ عَن نَفْسِه ضرًّا.

قوله تعالى: **﴿لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ (3)﴾** نَفْيٌ للْمَادّيّةِ والانْحِلالِ وَهُوَ أَنْ يَنْحَلّ مِنْهُ شَىءٌ أَوْ أَنْ يَحُلّ هُوَ في شَىءٍ. وَمَا وَرَدَ في كتاب "مَوْلِدِ العَرُوسِ" مِنْ أنّ اللهَ تَعالى قَبَضَ قَبْضَةً من نُورِ وجْهِه فَقَالَ لها كُوْنِي مُحمّدًا فَكَانَتْ مُحمّدًا فَهذه منَ الأَبَاطِيلِ المَدْسُوسَة، وحُكْمُ مَنْ يَعْتَقِدُ أنّ مُحمّدًا صلى الله عليه وسلم جُزْءٌ منَ اللهِ تَعَالى التّكْفِيرُ قَطْعًا، وكَذَلِكَ الذي يَعْتَقِدُ في المَسِيحِ أَنّه جُزْءٌ منَ اللهِ.

وليسَ هذا الكتاب لابنِ الجَوزيّ رحمه الله، ولم يَنسبْهُ إليهِ إلا المُستَشرِق بُروكلمَان. قولُهُ تعالى: **﴿وَلَمْ يَكُن لّهُ كُفُوًا أَحَدٌ (4)﴾** أَيْ لا نَظِيْرَ لَهُ بِوَجْهٍ منَ الوُجُوهِ.

---

119 أخرج البيهقي في الأسماء والصفات (ص/279) عن ابن عباس: أن اليهود اتوا إلى النبي فقالوا: يا محمد صف لنا ربك الذي تعبده. فنزلت: **قل هو الله أحد ...**" إلى ءاخر السورة قال رسول الله: "**هذه صفة ربي عز وجل**".

## இஹ்லாஸ் எனும் அத்தியாயம் இறங்கியதன் காரணம்

யஹூதிகள் முஹம்மத் ﷺ அவர்களிடம் வந்து “உமது இறைவனைப் பற்றி எமக்குக் கூறுவீராக!” எனக் கேட்டனர். அவர்களது இந்தக்கேள்வி அறிவை நேசித்தற்காக வேண்டியோ அதைக்கொண்டு நேர்வழி பெறுவதற்காகவேண்டியோ அல்லாமல் பிடிவாதத்திற்காக வேண்டியே இருந்தது. எனவே அப்போது அல்லாஹ் ஸூறதுல் இஹ்லாஸை இறக்கிவைத்தான்.

﴿قُلْ هُوَ اللهُ أَحَدٌ﴾

நபியவர்களே நீங்கள் கூறுங்கள்! அல்லாஹ் இணையின்றித் தனித்தவன் அதாவது எண்ணிக்கை பெறுவதையும் மேலும் அதிகமாவதையும் ஒப்புக்கொள்ளாதவன். மேலும் யதார்த்தத்திலும், பண்புகளிலும், செயல்களிலும் அவனுக்கு இணையாக ஏதுமில்லை. அவனுடைய பண்புகளைப் போன்ற பண்பு எவருக்குமில்லை.

மேலும் அல்லாஹ்வுடைய வல்லமையானது ஒரே வல்லமையாகும். அதைக்கொண்டே அனைத்தின் மீதும் வல்லமையுடையனாக இருக்கின்றான். மேலும் அவனுடைய அறிவானது ஒரே அறிவாகும். அதைக் கொண்டே அனைத்தையும் அறிகின்றான்.

﴿اللهُ الصَّمَدُ﴾ என்ற வசனத்தின் கருத்தானது அனைத்து படைப்புகளை விட்டும் அல்லாஹ் தேவையற்றிருப்பதுடன் படைப்புக்கள் யாவும் தேவைகாணும் ஒருவன். அனைத்து கஷ்டங்களின் போதும் நாடப்படுபவன். மேலும் அவன் படைப்பின் மூலம் தனக்கு எவ்வித பிரயோசனத்தையும் எடுத்துக்கொள்ளவும்மாட்டான். அவர்களின் மூலம் கெடுதியிலிருந்து தன்னைப் பாதுகாத்துகொள்ளவும் மாட்டான்.

﴿لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ﴾ என்ற வசனமானது அல்லாஹ் மூலப் பொருளோ, துணைப்பொருளோ அல்ல என்பதைக் குறிக்கின்றது. அவனிலிருந்து எதுவும் பிரியவுமில்லை. மேலும் அவன் எந்த ஒரு பொருளிலும் சங்கமிக்கவுமில்லை.

(مولد العروس) ‘மவ்லிதுல் அரூஸ்’ எனும் நூலில் வந்துள்ள, “அல்லாஹ் தன்னுடைய முகத்தின் ஒளியிருந்து ஒரு பிடியை எடுத்து அதற்கு நீ

முஹம்மதாக ஆகு என்று கூறியதும் அது முஹம்மதாக மாறியது'' என்ற கூற்றானது இட்டுக்கட்டப்பட்ட, பிழையான விடயங்களிலொன்றாகும். ''முஹம்மத் ﷺ அவர்கள் அழ்ழாஹ்வின் ஒரு பகுதி'' என்று நம்பிக்கை கொள்பவன் காபிர் என்றே தீர்ப்பளிக்கப்படுவான். அவ்வாறே ''ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் அழ்ழாஹ்வின் ஒரு பகுதி'' என்று நம்பிக்கை கௌ்பவன் காபிர் என்றே தீர்ப்பளிக்கப்படுவான்.

மேற்கூறப்பட்ட இந்நூலானது (**الإمام ابن الجوزي**) இமாம் இப்னுல் ஜவ்ஸீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களுக்குரியதல்ல. மாறாக கிழக்கத்தியவாதியான புரூகல்மன் **بروكلمان** என்பவன்தான் அதனை அவர்களின் நூல் என குறிப்பிட்டுள்ளான்.

﴿وَلَمْ يَكُن لَّهُ كُفُوًا أَحَدٌ﴾ என்ற வசனத்தின் கருத்தானது அதாவது எவ்விதத்திலும் அவனுக்கு நிகராக எதுவுமே இல்லை என்பதாகும்.

## الآياتُ المُحْكَمَاتُ والمُتشَابِهَاتُ

لِفَهْمِ هَذا المَوضُوعِ كَما يَنْبَغي يَجبُ مَعْرِفَةُ أنَّ القرءانَ تُوجَدُ فيْه ءاياتٌ مُحْكَمَاتٌ وءاياتٌ مُتشَابهاتٌ، قَالَ تَعَالى ﴿هُوَ الَّذِي أَنزَلَ عَلَيْكَ الْكِتَابَ مِنْهُ ءايَاتٌ مُّحْكَمَاتٌ هُنَّ أُمُّ الْكِتَابِ وَأُخَرُ مُتَشَابِهَاتٌ فَأَمَّا الَّذِينَ فِي قُلُوبِهِمْ زَيْغٌ فَيَتَّبِعُونَ مَا تَشَابَهَ مِنْهُ ابْتِغَاءَ الْفِتْنَةِ وَابْتِغَاءَ تَأْوِيلِهِ وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُ إِلاَّ اللهُ وَالرَّاسِخُونَ فِي الْعِلْمِ يَقُولُونَ ءامَنَّا بِهِ كُلٌّ مِّنْ عِندِ رَبِّنَا وَمَا يَذَّكَّرُ إِلاَّ أُوْلُواْ الأَلْبَابِ (7) [سورة ءال عمران].

### الآياتُ المُحْكَمَةُ

هِيَ مَا لا يَحْتمِلُ مِنَ التَّأويْلِ بِحَسَبِ وَضْعِ اللُّغَةِ إلا وَجْهًا وَاحِدًا، أَوْ مَا عُرِفَ المُرادِ بِهِ بِوُضُوْحٍ كقَولِه تَعَالى ﴿لَيْسَ كَمِثْلِهِ شَىْءٌ (11)﴾، وقَولِه: ﴿وَلَمْ يَكُن لَّهُ كُفُوًا أَحَدٌ (4)﴾، وقَولِه: ﴿هَلْ تَعْلَمُ لَهُ سَمِيًّ (65)﴾ [سورة مريم].

### الآياتُ المُتشَابِهَةُ

والمُتَشَابِهُ هُو مَا لَم تَتّضِح دِلالتُه أوْ يَحتَمِلُ أَوْجُهًا عَدِيْدَةً واحتَاجَ إلى النَّظَرِ لِحَمْلِهِ علَى الوَجْهِ المُطَابِقِ كقَولِه تَعالى ﴿**الرَّحْمَنُ عَلَى الْعَرْشِ اسْتَوَى (5)**﴾ [سورة طه].

وَقَوْله تعالى ﴿إِلَيْهِ يَصْعَدُ الْكَلِمُ الطَّيِّبُ وَالْعَمَلُ الصَّالِحُ يَرْفَعُهُ (10)﴾ [سورة فاطر] أيْ أَنَّ الكَلِمَ الطَّيّبَ كَلا إلهَ إلا الله يَصْعَدُ إلى مَحَلّ كَرَامَته وهُوَ السَّمَاءُ، والعَمَلُ الصَّالحُ يرفَعُه أي الكلِمُ الطيبُ يرفَعُ العملَ الصالحَ وَهَذَا مُنْطَبِقٌ ومُنْسَجِمٌ مَعَ الآيَة المُحكَمَة: ﴿لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ (11)﴾.

فَتَفْسيرُ الآيَات المُتَشَابِهَة يَجبُ أنْ يُرَدَّ إلى الآيَاتِ المُحْكَمَة هَذا في المُتَشَابِهِ الذي يَجُوزُ للعُلَماءِ أَنْ يَعْلَمُوهُ، وأمّا المتشَابِهُ الذي أُريدَ بقوله: ﴿وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُ إِلاَّ اللهُ (7)﴾ [سورة ءال عمران] على قراءة الوَقفِ على لفظِ الجَلالة فهو ما كانَ مثلَ وجْبَة القيامة وخروجِ الدجالِ على التّحديد، فلَيسَ مِن قَبْلِ ءاية الاستواء.

وَقَدْ وَرَدَ عَنْهُ صلى الله عليه وسلم: "**اعْمَلُوا بِمُحْكَمِهِ وءامِنُوا بِمُتَشَابِهِه**"120 ضَعيفٌ ضَعْفًا خَفيفًا. فَهُنَا مَسلكَان كُلٌّ منْهُمَا صَحيحٌ:

الأوّلُ مَسْلَكُ السّلَفِ وهُم أَهْلُ القُرونِ الثّلاثَة الأُولى أي أكثرهم فإِنّهُم يُؤوِّلونَها تأويْلا إجْماليًّا بالإيمان بها واعتِقَاد أنها ليسَت من صفاتِ الجسمِ بل أنَّ لَها مَعْنًى يَليقُ بجَلالِ الله وعظَمَته بلا تعْيينٍ بَلْ رَدُّوا تِلْكَ الآيَاتِ إلى الآياتِ المحكَمَةِ كقوله تعالى ﴿لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ (11)﴾ [سورة الشورى].

وهُو كمَا قالَ الإمامُ الشّافعيُّ رضيَ الله عنه121: "ءامنْتُ بما جَاءَ عن الله على مُرادِ الله وبما جَاءَ عن رسولِ الله صلى الله عليه وسلم على مُرادِ رَسُولِ الله" يعني رضي الله عنه لا علَى ما قد تذهَبُ إليه الأوْهَامُ والظُّنونُ من المَعاني الحِسّيّةِ الجِسْمِيّةِ التي لا تَجُوزُ في حَقّ الله تعالى.

ثم نفيُ التأويلِ التفصيلي عن السلف كما زعمَ بعضٌ مَرْدُودٌ بما في صَحيحِ البُخَاريّ في كتابِ تَفْسير القُرءانِ وعبارتُه هُناكَ: "سورةُ القصَص ﴿كُلُّ شَيْءٍ هَالِكٌ إِلاَّ وَجْهَهُ (88)﴾ [سورة القصص] إلا مُلْكَهُ122 ويقال ما يتقرب به إليه" اهـ. فمُلكُ الله123 صفةٌ من صفاته الأزلية أي سلطانه ليس كالملكِ الذي يعطيه للمَخلوقينَ. وَفيهِ غَيرُ هَذَا المَوْضِعِ كتَأْوِيلِ الضّحكِ الوَارِدِ في الحَديث بالرّحْمَة124

120 رواه ابن حبان في صحيحه انظر الإحسان بترتيب صحيح ابن حبان (63/2).

121 ذكره الحصني في كتابه دفع شبه من شبه وتمرد (ص/56).

122 قاله البخاري في صحيحه: كتاب تفسير القرءان: باب سورة القصص.

123 أي سلطان الله.

124 حكاه البيهقي في الأسماء والصفات (ص/470) عن الخطابي.

وصَحّ أَيْضًا التّأْويلُ التّفصيليُّ عَن الإمام أحمَدَ وهُوَ منَ السّلَف فَقد ثَبَتَ عنْه أنّه قالَ في قَوله تعالى **﴿وَجَاء رَبُّكَ (22)﴾** [سورة الفجر] إنما جَاءَتْ قُدْرتُه، صَحّحَ سَنَدَهُ الحافظُ البَيْهقيُّ 125 الذي قالَ فيه الحافظُ صَلاحُ الدّينِ العَلائيُّ: "لَم يَأْتِ بَعْدَ البَيْهقيّ والدّارَ قُطنيّ مثْلُهمَا ولا من يُقارِبُهُما". أما قولُ البيهقيّ ذلك ففي كتاب مَناقب أحمدَ، وأمّا قَولُ الحافظ أبي سَعيد العَلائيّ في البَيهقيّ والدّارَ قُطنيّ فذلكَ في كتَابه "الوَشْيُ المُعْلَمُ"، وأَمّا الحَافظُ أَبو سَعيد فَهُو الذي يَقُولُ فيه الحَافظُ ابنُ حَجَر 126: "شَيْخُ مَشَايخنا" (وكان من أهل القرن الثامن الهجري).

وهُنَاكَ خَلْقٌ كَثيْرٌ منَ العُلَماء ذَكَرُوا في تآليْفهم أنّ أحْمدَ أوّلَ منْهُمُ الحافظُ عبدُ الرحمن بنُ الجَوزيّ الذي هُو أحَدُ أساطين المَذْهَب الحنبليّ لكَثْرة اطّلاعه عَلى نُصُوص المذهَب وأحوال أحْمدَ. الثّاني مَسْلَكُ الخَلَف: وهم يُؤَوّلُونَها تَفْصيلا بتَعْيين مَعَان لَهَا ممّا تَقْتَضيه لُغَةُ العَرَب وَلا يَحْملُونَها علَى ظَوَاهرها أيْضًا كَالسّلَف، ولا بَأْسَ بسُلُوكه ولا سيّمَا عنْدَ الخَوف منْ تَزَلزُل العَقيْدة حفْظًا منَ التّشبيه مثْلُ قَوله تَعالى في تَوبيخ إبْليسَ **﴿مَا مَنَعَكَ أَن تَسْجُدَ لِمَا خَلَقْتُ بِيَدَيَّ (75)﴾** [سورة ص] فيجوز أن يقال المراد باليدين العناية والحفظ.

---

125 نقل ذلك ابن كثير في البداية والنهاية (327/10) وعزاه للبيهقي في مناقب أحمد.

126 دفع شبه التشبيه (ص/110).

## الآياتُ المُحْكَمَاتُ والمُتَشَابِهَاتُ

## முஹ்கமான, முதஷாபிஹான வசனங்கள்

இத்தலைப்பை முறைப்படி விளங்குவதற்கு குர்ஆனில் முஹ்கமத், முதஷாபிஹத் எனும் இரு வகையான வசனங்கள் உள்ளன என்பதை முதலில் அறிந்து கொள்வது அவசியமாகும்.

அழ்ழாஹ் குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்:

﴿هُوَ الَّذِي أَنزَلَ عَلَيْكَ الْكِتَابَ مِنْهُ ءايَاتٌ مُّحْكَمَاتٌ هُنَّ أُمُّ الْكِتَابِ وَأُخَرُ مُتَشَابِهَاتٌ فَأَمَّا الَّذِينَ فِي قُلُوبِهِمْ زَيْغٌ فَيَتَّبِعُونَ مَا تَشَابَهَ مِنْهُ ابْتِغَاءَ الْفِتْنَةِ وَابْتِغَاءَ تَأْوِيلِهِ وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُ إِلاَّ اللهُ وَالرَّاسِخُونَ فِي الْعِلْمِ يَقُولُونَ ءامَنَّا بِهِ كُلٌّ مِّنْ عِندِ رَبِّنَا وَمَا يَذَّكَّرُ إِلاَّ أُوْلُواْ الأَلْبَابِ﴾

விளக்கம் :

“அவனே இவ்வேதத்தையும் உங்கள் மீது இறக்கிவைத்தான். இதில் முற்றிலும் தெளிவான பொருள்கொண்ட வசனங்களும் இருக்கின்றன. இவைதான் இவ்வேதத்தின் அடிப்படையாகும். மேலும் பல பொருளுக்கு இடம்பாடான அல்லது தெளிவற்ற வசனங்களும் இருக்கின்றன. எவர்களின் உள்ளங்களில் மாறுபாடு இருக்கின்றதோ அவர்கள் தெளிவற்ற பொருள்களுடைய வசனங்களையே தேடிப்பின்பற்றுவார்கள். குழப்பத்தை உண்டுபண்ணக் கருதியும் அதை தங்களின் தவறான நோக்கத்திற்கேற்ப மாற்றுவதற்காகவும் இவ்வாறு செய்கின்றனர். ஆயினும் இதன் தெளிவை அழ்ழாஹ்வும், அறிவில் தேர்ச்சியுடையோருமே அறிவார்கள். மேலும் அவர்கள் இதனையும் நாங்கள் நம்பிக்கை கொண்டோம். இவ்விருவகை வசனங்கள் அனைத்தும் எங்கள் இறைவனிடமிருந்து வந்தவைதான் என்று கூறுவார்கள். அறிவுடையவர்களையன்றி மற்ற எவரும் இவைகளைக் கொண்டு நல்லுபதேசம் அடையமாட்டார்கள்.”

அத்தியாயம் : ஆல இம்ரான் வசனம் : 07

## الآياتُ المحْكَمَةُ
## முஹ்கமதான வசனங்கள்

முஹ்கமதான வசனங்கள் என்பது அறபு மொழி அடிப்படையில் ஒரே ஒரு அர்த்தத்தைத் தவிர வேறு எந்தவொரு அர்த்தத்துக்கும் இடம்பாடாகாததாகும் அல்லது தெளிவான முறையில் அர்த்தம் அறியப்பட்டதாகும். முஹ்மத்தான ஆயத்திற்கு உதாரணமாக ﴿لَيْسَ كَمِثْلِهِ شَىْءٌ﴾ அதாவது எவ்விதத்திலும் அவனைப் போல எதுவுமே இல்லை எனும் அழ்ழாஹ்வுடைய கூற்றையும், ﴿وَلَمْ يَكُن لَّهُ كُفُوًا أَحَدٌ﴾ அதாவது அழ்ழாஹ்வுக்கு நிகராக எதுவுமே இல்லை எனும் அழ்ழாஹ்வுடைய கூற்றையும், மேலும் ﴿هَلْ تَعْلَمُ لَهُ سَمِيًّا﴾ அதாவது அழ்ழாஹ்வுக்கு ஒப்பு, உவமைகள் கிடையாது எனும் அழ்ழாஹ்வுடைய கூற்றையும் போல.

## الآياتُ المتَشَابِهَةُ
## முதஷாபிஹான வசனங்கள்

முதஷாபிஹான வனசம் என்பது அதில் அறிவிக்கப்படுவது தெளிவற்றதாகும். அல்லது அது பல அர்த்தங்களுக்கு இடம்பாடானதாகும். சரியான அர்த்தத்தின் மீது அதனை சுமத்தாட்டுவதற்கு ஆய்வு செய்வது அவசியமாகும். ﴿الرَّحْمَنُ عَلَى الْعَرْشِ اسْتَوَى﴾ என்ற அத்தியாயம் தாஹா வசனம் 05 இல் இடம்பெற்றுள்ள அழ்ழாஹு தஆலாவுடைய கூற்றைப்போல.

இன்னும் அல்பாதிர் என்ற அத்தியாயத்தின் 10ம் வசனமான பின்வரும் குர்ஆன் வசனமும் அவ்வாறே.

﴿إِلَيْهِ يَصْعَدُ الْكَلِمُ الطَّيِّبُ وَالْعَمَلُ الصَّالِحُ يَرْفَعُهُ﴾ அதாவது لا إله إلا الله போன்ற நல்ல வார்த்தைகள் அழ்ழாஹ்வினால் சங்கையாக்கப்பட்ட இடத்தின் பால் அதாவது வானத்தின் பால் உயர்ந்து செல்கிறது. இன்னும் நல்ல வார்த்தைகள் நல்ல அமல்களை உயர்த்துகின்றது. மேலும் இவ்வசனத்தின் விளக்கமானது ﴿لَيْسَ كَمِثْلِهِ شَىْءٌ﴾ எனும் முஹ்கமான வசனத்தின் விளக்கத்துக்கு நேர்படுகின்றது.

முதஷாபிஹான வசனங்களின் தெளிவைப் பெற முஹ்கமான வசனங்களின் பால் அவற்றைத் திருப்புவது அவசியமாகும். இது உலமாக்களால் அறிந்துகொள்ள முடியுமான முதஷாபிஹான வசனங்களிலாகும். அல்லாஹ் எனும் வார்த்தையின் மீது வக்பு செய்து ﴿وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُ إِلاَّ اللَّهُ﴾ என்று ஓதுகையில் இங்கு முதஷாபிஹ் என்பதைக் கொண்டு நாடப்படுவது கியாமத் நாள் சரியாக எப்போது ஏற்படும், சரியாக எப்போது தஜ்ஜால் வெளிப்படுவான் போன்ற விடயங்களைக் குறிக்கும். இது (استوى) இஸ்திவாவுடைய ஆயத்தின் வகையைச் சாரமாட்டாது.

"اعْمَلُوا بِمُحْكَمِهِ وءامِنُوا بِمُتَشَابِهِهِ"

“முஹ்கமான வசனங்களை வைத்து அமல் செய்யுங்கள் முதஷாபிஹதான வசனங்களை ஈமான் கொள்ளுங்கள்” என முஹம்மத் ﷺ அவர்கள் கூறியதாக வந்துள்ளது. ஆயினும் இது இலேசான பலகீனத்தையுடைய ஒரு ஹதீஸாகும்.

## முதஷாபிஹான வசனங்களை கையாளுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட இரு வழிமுறைகள்

இங்கு முதஷாபிஹான வசனங்களை கையாளுவதற்கு இரு வழிமுறைகள் இருக்கின்றன. அவ்விரண்டுமே சரியானதாகும்.

**அவ்விரண்டில் முதலாவதானது** ஸலபுகள் கையாண்ட வழிமுறையாகும். அவர்கள் ஆரம்ப மூன்று நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள். அவர்கள் சுருக்கமாக தஃவீல் (வலிந்துரை) செய்வார்கள். அதாவது முதஷாபிஹானவற்றை அவற்றுக்கு உடல் தன்மைகளின் பொருள் இல்லையென்று உறுதி கொண்டு அவற்றுக்கு எவ்வித பொருளையும் குறிப்பாக்காமல் அல்லாஹ்வுக்கு தகுதியான பொருள் அவற்றுக்கு இருக்கின்றன என்று கூறி ﴿لَيْسَ كَمِثْلِهِ شَىْءٌ﴾ அதாவது எவ்விதத்திலும் அவனைப்போல எதுவும் இல்லை என்ற வசனம் போன்ற முஹ்கமான வசனங்களுக்கு நேர்படும் விதமாக விளக்கம் கொடுப்பார்கள்.

மேற்குறித்த வழிமுறையானது இமாம் ஷாபிஈ றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் பின்வருமாறு கூறியதைப் போன்றாகும். "ءامنْتُ بما جَاَءَ عن الله على مُرادِ الله وبما جَاَءَ عن رسولِ الله صلى الله عليه وسلم على مُرادِ رَسُولِ الله" "நான் அழ்ழாஹ்வைத் தொட்டும் வந்த விடயங்களை அவன் நாடிய பிரகாரமும், அழ்ழாஹ்வின் தூதரிடமிருந்து வந்த விடயங்களை அவர்கள் நாடிய பிரகாரமும் ஈமான் கொள்கின்றேன்." அதாவது அழ்ழாஹ்வுடைய விடயத்திலே சாத்தியமாகாத உடல் மற்றும் உணர்வு சார்ந்த பண்புகளில் நின்றும் யூகங்களின், எண்ணங்களின் பிரகாரமில்லாமல் ஈமான் கொள்வதையே அவர்கள் நாடுகிறார்கள்.

ஸலபுகள் விரிவான தஃவீல் **التأويل التفصيلي** (வலிந்துரை) செய்யவில்லை என்று சிலர் நம்பியிருந்ததானது ஸஹீஹுல் புகாரியில் தப்ஸீருல் குர்ஆன் எனும் பாடத்தில் கூறப்பட்டு வந்துள்ள விடயத்தின் மூலம் மறுக்கப்படுகிறது.

### ﴿كُلُّ شَيْءٍ هَالِكٌ إِلاَّ وَجْهَهُ﴾ என்ற வசனத்தின் விளக்கம்

அல் - கஸஸ் எனும் அத்தியாயத்தின் 88 ம் வசனமான

﴿كُلُّ شَيْءٍ هَالِكٌ إِلاَّ وَجْهَهُ﴾

என்ற வசனத்தில் இடம் பெற்றுள்ள إِلاَّ وَجْهَهُ என்ற சொல்லிற்கு "அவனுடைய ஆட்சியைத் தவிர" என்று ஸஹீஹுல் புகாரியிலே விளக்கமளிக்கப்பட்டுள்ளது. மேலும் அதற்கு "அவனது திருப்பொருத்தத்தை நாடி செய்யப்பட்ட நற்கருமங்களைத் தவிர" என்றும் விளக்கமளிக்கப்படும். எனவே அழ்ழாஹ்வின் ஆட்சியானது அவனது ஆரம்பம், முடிவு அற்ற பண்புகளில் ஒரு பண்பாகும். மாறாக அது அழ்ழாஹ் அவனுடைய படைப்புகளுக்கு கொடுக்கப்படும் ஆட்சியைப் போன்றல்ல. இன்னும் ஸஹீஹுல் புகாரியில் மேற்குறித்ததல்லாத வேறு இடங்களிலும் (தஃவீல் தப்ஸீலிய்) விரிவான (தஃவீல்) வலிந்துரை செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக ஹதீஸில் வந்துள்ள **ضحك** எனும் வார்த்தைக்கு "ரஹ்மத்" என்று தஃவீல் (வலிந்துரை) செய்யப்பட்டுள்ளதைப் போல.

மேலும் இமாம் அஹ்மத் றஹிமஹுல்லாஹ் அவர்களும் (தஃவீல் தப்ஸீலிய்) விரிவான தஃவீல் செய்ததாக நிரூபணமாகியுள்ளது. அவர்கள் ஸலபுகளில் ஒருவராகும். ﴿وَجَاءَ رَبُّكَ﴾ என்ற அல்லாஹு தஆலாவுடைய கூற்று தொடர்பாக "அல்லாஹ்வின் வல்லமையின் பிரதிபளிப்புகள் வரும்" என்று இமாம் அஹ்மத் றஹ்மஹுல்லாஹ் அவர்கள் விரிவான தஃவீல் செய்துள்ளது நிரூபணமாகியுள்ளது. இதன் (ஸனதை) அறிவிப்பாளர் வரிசையை அல்ஹாபிழ் பைஹகீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் (مناقب أحمد) 'மனாகிப் அஹ்மத்' என்ற தனது நூலிலே "ஸஹீஹ்" என்பதாக கூறியுள்ளார்கள்.

(الإمام البيهقي) இமாம் பைஹகீ றஹிமஹுல்லாஹ் அவர்களைப் பற்றி (الحافظ صلاح الدين العلائي) அல்ஹாபிழ் ஸலாஹுத்தீன் அல்அலாயீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் "இமாம் பைஹகீ றஹிமஹுல்லாஹ் மற்றும் (الإمام الدارقطني) இமாம் தாரகுத்னீ றஹிமஹுல்லாஹ் ஆகியோருக்குப் பின்னால் அவ்விருவரைப் போன்றோரோ, அவ்விருவரை அண்மித்தோரோ வரவில்லை" என்று (الوَشْيُ المُعَلَّم) "அல் வஷ்யுல் முஃலம்" எனும் நூலில் கூறியுள்ளார்கள்.

(الحافظ أبو سعيد) அல்-ஹாபிழ் அபூஸஈத் றஹிமஹுல்லாஹ் அவர்களைப் பற்றி (الحافظ ابن حجر) அல்-ஹாபிழ் இப்னு ஹஜர் றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகையில், "எங்களது ஷைகுமார்களுக்கெல்லாம் ஷைகு" என்பதாக கூறிப்பிட்டுள்ளார்கள். இமாம் இப்னு ஹஜர் றஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹிஜ்ரி எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிஞர்களில் ஒருவராவார்.

உலமாக்களில் அதிகமானோர் இமாம் அஹ்மத் றஹிமஹுல்லாஹ் அவர்கள் தஃவீல் (வலிந்துரை) செய்ததாக தங்களது நூற்களில் கூறியுள்ளார்கள். அவர்களில் அல்-ஹாபிழ் அப்துர்ரஹ்மான் இப்னுல் ஜௌஸீ றஹிமஹுல்லாஹ் அவர்களும் ஒருவராகும். அவர்கள் இமாம் அஹ்மத் றஹிமஹுல்லாஹ் அவர்களின் நிலமைகள் பற்றியும், மத்ஹபின் கூற்றுகள் பற்றியும் அதிகமாக அறிந்திருந்ததன் காரணமாக ஹன்பலி மத்ஹபின் முக்கியஸ்தர்களான அறிஞர்களில் ஒருவராக கருதப்படுகிறார்கள்.

**இரண்டாவது கலபுகள் (الخلف) கையாண்ட வழிமுறையாகும்.** கலபுகள் எனப்படுவோர் ஹிஜ்ரி ஆரம்ப மூன்று நூற்றாண்டிற்கு பின்னால் வந்த அறிஞர்களாகும். இவர்கள் முதஷாபிஹான வசனங்களுக்கு அறபு மொழி ஏற்றுக்கொள்ளக்கூடிய அமைப்பில் உள்ள சில அர்த்தங்களை அதற்கு குறிப்பாக்குவதன் மூலம் (தஃவீல் தப்ஸிலீய்) விரிவான தஃவீலை செய்வார்கள். மேலும் அவர்கள் ஸலபுகள் கையாண்டது போன்று வசனங்களை கையாளுவார்கள். அதாவது இவ்வசனங்களின் வெளித்தோற்ற கருத்தை அவற்றிற்கு கொடுக்கமாட்டார்கள். இந்தப் போங்கிலும் எவ்வித பிரச்சனையும் இல்லை. அதிலும் குறிப்பாக அகீதஹ் சார்ந்த விடயங்களில் தடம்பிரலுதலை அஞ்சியும், படைப்புகளுக்கு அழ்ழாஹ்வை ஒப்பாக்கிவிடுவதிலிருந்து பாதுகாக்கவும் இவ்வாறு தஃவீல் (வலிந்துரை) செய்வதில் எவ்வித குற்றமும் இல்லை. இதற்கு உதாரணமாக (ص) "ஸாத்" எனும் அத்தியாத்தில் இப்லீஸை கேவலப்படுத்தும் விடயத்தில்

﴿مَا مَنَعَكَ أَن تَسْجُدَ لِمَا خَلَقْتُ بِيَدَيَّ﴾

என்ற அழ்ழாஹு தஆலாவுடைய கூற்றைப்போல. எனவே இங்கு **يدين** என்பதைக் கொண்டு நாடப்படுவது விஷேடக் கவனிப்பும் மற்றும் பாதுகாப்புமாகும் என்று சொல்லப்பட முடியும்.

### تفسير قوله تعالى: ﴿مِن رُّوحِنَا (91)﴾
### وقوله تعالى: ﴿مِن رُّوحِي (72)﴾

لِيُعْلَمْ أنّ الله تَعالى خَالِقُ الرُّوح والجَسَد فَلَيسَ رُوحًا ولا جَسَدًا، ومَعَ ذلكَ أضَافَ الله تَعَالى رُوحَ عِيسَى صلى الله عليه وسلم إلى نَفْسه على مَعْنى المِلْكِ والتّشْرِيفِ لا للجُزْئيّةِ في قَولِه تَعالى ﴿ **مِن رُّوحِنَا (91)**﴾ [سورة الأنبياء]، وكذلكَ في حَقّ ءادَمَ قولُهُ تعَالى ﴿**مِن رُّوحِي (72)**﴾ [سورة ص] فَمعنَى قَولِه تَعالَى ﴿**فَنَفَخْنَا فِيهِ مِن رُّوحِنَا (12)**﴾ [سورة التحريم] أَمَرْنَا جِبْرِيلَ عليه السّلامُ أنْ يَنفُخَ في مَرْيَمَ الرّوحَ التي هِي مِلْكٌ لَنا ومُشَرَّفَةٌ عِنْدَنَا، لأَنّ الأَرْوَاحَ قِسْمَان أَرْوَاحٌ مُشَرَّفَةٌ وَأَرْوَاحٌ خَبِيثَةٌ، وَأَرْوَاحُ الأَنْبِيَاءِ منَ القِسْمِ الأوّلِ، فَإضَافَةُ رُوحِ عِيسَى ورُوح ءادَمَ إلى نَفْسه إضَافَةُ ملك وتَشْرِيف. ويَكفُر من يَعتَقدُ أنّ الله تعالى روحٌ، فالرّوحُ مخلوقةٌ تَنَزّهَ الله عن ذلكَ.وكذَلكَ قَولُه تَعَالى في الكَعْبة ﴿**بَيْتِيَ (26)**﴾ [سورة الحج] فَهِيَ إضَافَةُ مِلكٍ للتشريفِ لا إضَافَةُ صِفَةٍ أو مُلابَسَةٍ لاسْتِحَالَةِ المُلامَسَةِ أو المُماسّةِ بَيْنَ الله والكَعْبَةِ.

وكذلك قولُ الله تعالى: ﴿رَبُّ الْعَرْشِ (86)﴾ [سورة المؤمنون] ليسَ إلا للدلالةِ على أن الله خالقُ العرشِ الذي هو أعظمُ المخلوقاتِ ليسَ لأن العرشَ له ملابَسَةٌ لله بالجلوسِ عليه أو بمحاذاته من غيرِ جلوسٍ، ليس المعنى أن الله جالسٌ على عرشه باتصالٍ وليس المعنى أن الله محاذٍ للعرشِ بوجودِ فراغٍ بينَ اللهِ وبينَ العَرشِ إن قُدِّرَ ذلكَ الفراغُ واسعًا أو قصيرًا، كلُّ ذلكَ مستحيلٌ على الله، وإنما مزيةُ العرشِ أنه كعبةُ الملائكَةِ الحافينَ من حولِه كمَا أن الكعبةَ شُرفَت بطوافِ المؤمنينَ بها. ومن خواصِّ العرشِ أنه لم يُعصَ اللهُ تعالى فيه لأنَّ مَن حولَهُ كُلُّهم عبادٌ مكرمونَ لا يَعصونَ اللهَ طرفةَ عينٍ، ومن اعتقدَ أن الله خلقَ العرشَ ليجلسَ عليه فقد شَبَّهَ اللهَ بالملوكِ الذين يعملونَ الأسرةَ الكبارَ ليجلسوا عليها، ومن اعتقدَ هذا لم يَعرف اللهَ. ويَكفُرُ من يَعتَقدُ المُمَاسّةَ لاسْتِحالتِها في حَقِّ اللهِ تَعَالى.

## تَفسِيرُ الآيَةِ: ﴿الرَّحْمَنُ عَلَى الْعَرْشِ اسْتَوَى (5)﴾ [سورة طه]

يَجبُ أن يكونَ تفسيرُ هذه الآية بغيرِ الاستقْرارِ والجلُوسِ ونحوِ ذلكَ ويَكْفُر منْ يعتقدُ ذَلكَ، فَيَجبُ تَركُ الحَمْلِ علَى الظّاهرِ بَلْ يُحمَلُ على مَحْملٍ مُسْتَقيمٍ في العُقُولِ فتُحمَلُ لفْظَةُ الاستواءِ علَى القَهْرِ ففي لُغَةِ العَرَبِ يُقَالُ اسْتَوى فُلانٌ على المَمَالكِ إذَا احْتَوَى علَى مَقَاليدِ المُلْكِ واسْتَعْلَى علَى الرِّقَابِ كَقَوْلِ الشّاعِر: [الزجر]

قَد اسْتَوَى بِشْرٌ علَى العراقِ مِنْ غَيْرِ سَيْفٍ ودَمٍ مُهْراقِ

وفَائدَةُ تَخْصِيصِ العَرْشِ بالذّكْرِ أَنّهُ أعْظَمُ مَخلُوقَاتِ الله تَعَالى حجمًا فيُعلَمُ شُمُولُ ما دُونَهُ منْ بَابِ الأَوْلَى. قَالَ الإمَامُ عَليٌّ: "إنّ اللهَ تَعَالى خَلَقَ العَرْشَ إظْهَارًا لقُدْرَته، و لمْ يتّخذْهُ مَكَانًا لذَاته"، رواهُ الإمامُ المحدثُ الفقيهُ اللغويُّ أبو منصورٍ التميميُّ في كتابهِ الفرق بين الفرق 127، أَوْ يُقَالُ اسْتَوَى اسْتِوَاءً يَعْلَمُهُ هُوَ مَعَ تَنزِيهِهِ عن اسْتِواءِ المخْلُوقِيْنَ كَالجُلوسِ والاسْتقرارِ.

واعْلَم أَنّه يَجبُ الحَذَرُ منْ هؤلاءِ الذينَ يُجيزُوْنَ علَى الله القُعُودَ علَى العَرْشِ والاسْتقْرارَ عليه مُفَسّرينَ لقَوله تعالى: ﴿الرَّحْمَنُ عَلَى الْعَرْشِ اسْتَوَى (5)﴾ بالجُلُوسِ أو المحاذاة من فوق، ومُدّعينَ أَنّه لا يُعْقَلُ مَوْجُودٌ إلا في مَكَانٍ، وحُجّتُهم دَاحِضَةٌ، ومُدّعيْنَ أيضًا أنّ قَوْلَ السّلَفِ استوى بلا كَيْفٍ مُوافِقٌ لذَلكَ وَلم يَدْرُوا أنّ الكَيْفَ الذي نَفاهُ السّلَفُ هُوَ الجُلُوسُ والاسْتقْرارُ والتّحَيُّزُ في المَكَانِ والمُحَاذاةُ وكلُّ الهيئات من حركةٍ وسكونٍ وانتقالٍ.

قالَ الحافظ الزبيدي128: "والذي يَدْحَضُ شُبَهَهُم أَنْ يُقالَ لَهُم: قَبْلَ أَنْ يَخْلُقَ العَالَمَ أو المَكَانَ هَلْ كَانَ موجودًا أمْ لا؟ فَمنْ ضَرُورَةِ العَقْلِ أنْ يَقُول بَلَى فَيَلْزَمُه لَوْ صَحّ قَولُه لا يُعْلَمُ مَوجُودٌ إلا في مَكَانٍ أَحَدُ أمْرَينِ إمّا أنْ يَقُولَ

---

127 ذكره الحافظ التميمي في كتابه الفرق بين الفرق (ص/333).

128 ذكره الحافظ مرتضى الزبيدي في شرح الإحياء (109/2).

المكانُ والعَرْشُ والعَالَمُ قَديمٌ، وإمّا أَنْ يَقُولَ: الرّبُّ تعالى مُحْدَثٌ، وهذا مآلُ الجَهَلة الحشويّة، لَيْسَ القَديمُ بالمُحْدَثِ والمُحْدَثُ بالقَديمِ" اهـ.

وقَالَ القشيريّ أَيْضًا في التّذكرَة الشّرقيّة129: "فَإنْ قيلَ أَلَيْسَ الله يَقُولُ ﴿**الرَّحْمَنُ عَلَى الْعَرْشِ اسْتَوَى (5)**﴾ [سورة طه] فَيجبُ الأَخْذُ بظَاهره، قُلْنا الله يَقُولُ أَيْضًا ﴿**وَهُوَ مَعَكُمْ أَيْنَ مَا كُنتُمْ (4)**﴾ [سورة الحديد]، ويقول تعالى ﴿**أَلا إِنَّهُ بِكُلِّ شَيْءٍ مُّحِيطٌ (54)**﴾ [سورة فصلت] فَيَنْبَغي أَيْضًا أَنْ نَأْخُذَ بظَاهر هَذه الآيات حَتّى يَكُونَ عَلَى العَرْشِ وعِنْدَنا ومَعَنا ومُحيطًا بالعَالَم مُحْدقًا به بالذّات في حَالَة وَاحدَة. والوَاحدُ يَسْتَحيلُ أَنْ يَكُونَ بذَاته في حَالَة وَاحدَة بكُلّ مَكَان. قَالُوا قَولُه ﴿**وَهُوَ مَعَكُمْ (4)**﴾ يَعْني بالعِلْم، و:﴿**بِكُلِّ شَيْءٍ مُّحِيطٌ (54)**﴾ إحَاطَةَ العِلْمِ، قُلْنَا: وقَوْلُه ﴿**عَلَى الْعَرْشِ اسْتَوَى (5)**﴾ قَهَرَ وحَفظَ وأَبْقَى" انتهى. يعني أَنّهُم قَد أَوّلُوا هَذه الآيَاتِ ولَمْ يَحْمِلُوها علَى ظَواهِرِهَا فَكَيفَ يَعِيبُونَ عَلى غَيْرِهم تَأْوِيلَ ءاية الاستواء بالقَهْر، فما هَذا التّحَكُّمُ؟!

قال القشيري رحمه الله130: "وقَدْ نَبغَتْ نَابِغَةٌ منَ الرّعَاعِ لَوْلا استْنزَالُهم للعَوامّ بمَا يَقْرُبُ من أَفْهامِهم ويُتَصَوَرُ في أوْهَامِهم لأَجْلَلتُ هذَا الكتَابَ عن تلطيخه بذكْرِهم، يَقولونَ: نَحنُ نأْخُذُ بالظّاهِرِ ونجري الآياتِ الموهمة تَشْبيهًا والأخْبارَ المُوهِمَةَ حَدًّا وعُضْوًا علَى الظّاهر ولا يَجُوزُ أنْ نُطَرّقَ التّأْويلَ إلى شَيءٍ من ذَلكَ، ويَتَمَسّكُونَ131 بقَولِ الله تعالى ﴿**وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُ إِلاَّ اللَّهُ (7)**﴾ [سورة ءال عمران]، وهَؤلاءِ والذي أَرْوَاحُنا بيَده أَضَرُّ علَى الإسْلامِ منَ اليَهُود والنّصَارَى والمَجُوسِ وعَبَدَة الأَوْثَان لأَنّ ضَلالات الكُفّارِ ظَاهِرَةٌ يَتَجَنّبُها المُسْلمُونَ، وهؤلاء أَتَوا الدّينَ والعَوَامّ منْ طَرِيقٍ يَغْتَرُّ به المُستَضْعَفُونَ فَأَوْحَوا إلى أَوْلِيَائِهمْ بهَذه البدَعِ وأَحَلُّوا في قُلُوبهم وَصْفَ المَعْبُود سُبْحَانَه بالأَعْضاءِ والجوارِحِ والرُّكوب والنُّزول والاتّكاء والاسْتلْقاء والاسْتواء بالذّات وَالتّرَدُّد في الجهَات. فَمن أَصْغَى إلى ظَاهِرِهم يُبَادِرُ بوَهْمه إلَى تَخيُّلِ المَحْسُوسَات فَاعْتَقَدَ الفَضَائِحَ فَسَالَ به السّيْلُ وَهُوَ لا يَدْرِي". اهـ.

---

129 ذكره الحافظ مرتضى الزبيدي في شرح الإحياء (108/2).

130 ذكره الحافظ مرتضى الزبيدي في شرح الإحياء (109/2).

131 أي على زعمهم.

فَتبيّنَ أنّ قَوْلَ مَنْ يَقُولُ: "إنّ التّأْوِيلَ غيرُ جَائزٍ" خَبْطٌ وَجَهْلٌ وهُوَ مَحْجُوجٌ بقَولِه صلى الله عليه وسلم لابنِ عَبّاسٍ: "**اللّهُمّ عَلّمْهُ الحِكْمَةَ وتَأْوِيلَ الكِتَابِ**" رواه ابنُ مَاجَه وغَيْرُهُ[132] بأَلْفَاظٍ مُتَعَدّدَةٍ وأوّله عند البخاري[133]. قَالَ الحَافظُ ابنُ الجَوْزِيّ في كِتَابه "المَجَالِسُ"[134]: "ولا شَكّ أنّ الله اسْتَجَابَ دُعَاءَ الرّسُولِ صلى الله عليه وسلم هذا" اهـــ وشَدّدَ النّكيرَ والتّشْنيعَ علَى مَنْ يَمْنَعُ التّأْوِيلَ ووَسّعَ القَوْلَ في ذَلكَ، فَلْيُطَالعْهُ مَنْ أَرَادَ زِيَادَةَ التّأَكّدِ. ومَعْنَى قَوْلِه تَعَالى ﴿**يَخَافُونَ رَبَّهُم مِّن فَوْقِهِمْ (50)**﴾ [سورة النحل] فَوْقيّةُ القَهْرِ دُونَ المكانِ والجِهَةِ أي لَيْسَ فوقيةَ المَكانِ والجِهَةِ. ومَعْنَى قَولِه تعالى ﴿**وَجَاءَ رَبُّكَ وَالْمَلَكُ صَفًّا صَفًّا (22)**﴾ [سورة الفجر] لَيْسَ مَجيءَ الحَرَكَةِ والانْتِقَالِ والزّوَالِ وإفْراغِ مَكَانٍ ومَلْءِ ءاخَرَ بالنسبة إلى الله ومَن اعْتَقَدَ ذَلكَ يَكْفُرُ.

فالله تَعَالى خَلَقَ الحَرَكَةَ والسُّكُونَ وكُلّ مَا كَانَ مِنْ صِفَاتِ الحَوَادث فلا يُوْصَفُ الله تعَالى بالحَرَكَةِ وَلا بالسُّكُونِ، والمَعْنِيُّ بقَوْلِه﴿**وَجَاءَ رَبُّكَ (22)**﴾ جاءَ أَمْرُ رَبّكَ أيْ أَثَرٌ مِنْ ءاثَارِ قُدْرَتِه. وقَدْ ثَبَتَ عَنِ الإمَامِ أَحْمَدَ أَنّهُ قَالَ في قَولِه تَعَالَى ﴿**وَجَاءَ رَبُّكَ (22)**﴾ إنّمَا جَاءَتْ قُدْرَتُهُ، رَوَاهُ البَيهَقِيُّ في مَنَاقِبِ أَحْمَدَ وقَدْ مَرّ ذكره.

## تفسير قوله تعالى من روحنا وقوله من روحي
## ﴿مِن رُّوحِي﴾ என்ற அழ்ழாஹ்வின் கூற்றின் மற்றும் ﴿ مِن رُّوحِنَا ﴾ விளக்கங்கள்

அறிந்து கொள்ளட்டும். நிச்சயமாக அழ்ழாஹ்தான் ரூஹையும், உடலையும் படைத்தவன். எனவே அவன் ரூஹுமல்ல, உடலுமல்ல. அவ்வாறிருந்தும் அழ்ழாஹு தஆலா ﴿مِن رُّوحِنَا﴾ என்ற அவனுடைய கூற்றிலே ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ரூஹை தன்னுடன் இணைத்து கூறியதானது அந்த ரூஹ் அவனால் கண்ணியப்படுத்தப்பட்டதும், அவனுக்கு உடந்தையானதும் எனும் அர்த்தத்திலாகும். மாறாக பகுதி பிரிதல் எனும் அர்த்தத்திலல்ல. இதே போன்றுதான் ஆதம் அலைஹிஸ்ஸலாம் தொடர்பாக அழ்ழாஹ் கூறிய ﴿مِن رُّوحِي﴾ எனும் அவனது கூற்றுமாகும்.

---

132 أخرجه ابن ماجه في سننه: المقدمة: باب فضل ابن عباس، والطبراني في المعجم الكبير (95/9). قال الهيثمي (276/9): "ولأحمد طريقان رجالهما رجال الصحيح".

133 أخرجه البخاري في صحيحه: كتاب العلم: باب قول النبي اللهم علمه الكتاب.

134 مجالس ابن الجوزي (ص/13).

﴿فَنَفَخْنَا فِيهِ مِن رُّوحِنَا﴾

என்ற அத்தியாயம் அத்தஹ்ரீம் வசனம் 12இன் விளக்கமாகிறது "எங்களிடத்தில் சிறப்பாக்கப்பட்ட, எங்களுக்கு சொந்தமான ரூஹை மர்யம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஊதுமாறு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நாம் கட்டளையிட்டோம்." என்பதாகும். ஏனெனில் நிச்சயமாக ரூஹூகள் சிறப்பாக்கப்பட்ட ரூஹூகள் என்றும், கெட்ட ரூஹூகள் என்றும் இரு வகைப்படும். நபிமார்களின் ரூஹூகளாவன முதல் வகையைச் சார்ந்ததாகும். எனவே ஈஸா அலைஹிஸ்ஸலாம், ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ரூஹூகளை தன்னுடன் இணைத்து அழ்ழாஹ் கூறியிருப்பது சிறப்புமிக்கது இன்னும் தனக்கு சொந்தமானது எனும் அர்த்தத்திலாகும். பரிசுத்தமான அழ்ழாஹூ தஆலாவை "ரூஹ்" என்று நம்பிக்கை கொள்பவர் காபிராகிவிடுவார். ஏனெனில் ரூஹானது படைக்கப்பட்டதாகும். எனவே அழ்ழாஹ் அதை விட்டும் தூய்மையானவன்.

கஃபாவின் விடயத்தில் அத்தியாயம் அல்-ஹஜ்ஜில் இடம்பெற்றுள்ள ﴿بَيْتِيَ﴾ என்ற அழ்ழாஹ்வின் கூற்றும் அவ்வாறுதான். இங்கு கஃபாவை அழ்ழாஹ்வுடன் இணைத்து கூறப்பட்டதானது அது அழ்ழாஹ்விடத்தில் கண்ணியப்படுத்தப்பட்ட அவனுக்கு சொந்தமான வீடு எனும் அர்த்தத்திலாகும். மாறாக அது அழ்ழாஹ்வின் தன்மை என்ற அர்த்தத்திலோ அல்லது சேர்ந்திருத்தல் என்ற அர்த்தத்திலோ அவனுடன் அதனை இணைத்துக் கூறப்படவில்லை. ஏனெனில் அழ்ழாஹ்வும் கஃபாவும் ஒன்றுக்கொன்று சேர்ந்து இணைந்திருப்பது சாத்தியமற்றதாகும்.

மேலும் சூறா அல்-முஃமினூன் என்ற அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ள ﴿رَبُّ الْعَرْشِ﴾ என்ற அழ்ழாஹ்வின் கூற்றும் அவ்வாறுதான். படைப்புக்களில் பிரமாண்டமான அளவைக் கொண்ட படைப்பாகிய அர்ஷை அழ்ழாஹ்தான் படைத்துள்ளான் என்பதை அறிவிப்பதற்காகவேண்டியே அழ்ழாஹ்வின் பால் அர்ஷை இணைத்துக் கூறப்பட்டுள்ளது. மாறாக அர்ஷின் மீது உட்கார்ந்து

அதனுடன் சேர்ந்து இருக்கின்றான் அல்லது உட்காராமல் அதற்கு நேராக இருக்கின்றான் என்பதற்காகவல்ல.

இன்னும் அர்ஷுடன் இணைந்து அதன் மீது உட்கார்ந்திருக்கின்றான் என்றோ அல்லது அர்ஷுக்கும் அழ்ழாஹ்வுக்கும் மத்தியில் இடைவெளி இருப்பதுடன் அர்ஷுக்கு நேராக இருக்கின்றான் என்றோ அர்த்தம் கொள்ளப்படமாட்டாது. அந்த இடைவெளி விசாலமானதாக இருப்பினும், நெருக்கமானதாக இருப்பினும் சரியே. இவை அனைத்தும் அழ்ழாஹ்வுக்கு சாத்தியமற்றவையாகும்.

கஃபாவானது முஃமீன்கள் அதனை தவாப் செய்வது கொண்டு சிறப்பாக்கப்பட்டுள்ளது. அது போன்று அர்ஷானது அதனை சூழவுள்ள மலக்குமார்களின் கஃபாவாக இருப்பது கொண்டு தனிச்சிறப்புப் பெற்றுள்ளது. மேலும் அர்ஷுடைய தனித்துவங்களில் உள்ளதுதான் அங்கு அழ்ழாஹ்வுக்கு மாறுசெய்யப்படவில்லை என்பதாகும். ஏனெனில் அந்த அர்ஷை சூழ்ந்திருக்கக்கூடிய அனைவரும் கண் இமைக்கும் நேரம் கூட அழ்ழாஹ்வுக்கு மாறு செய்யாத அழ்ழாஹ்வினால் கண்ணியப்படுத்தப்பட்ட அடியார்களாவர்.

“அழ்ழாஹ் அர்ஷை அதன் மீது அமர்வதற்காக படைத்துள்ளான்” என்பதாக நம்பிக்கை கொள்பவர் நிச்சயமாக தாம் அமர்வதற்காக பெரும் கட்டில்களை செய்து கொண்ட அரசர்களுக்கு அழ்ழாஹ்வை ஒப்பாக்கியவராக ஆகிவிடுகின்றார். இன்னும் யார் இவ்வாறு நம்பிக்கை கொள்கிறாரோ அவர் அழ்ழாஹ்வை அறியாதவராகும். மேலும் யார் அழ்ழாஹ்வுடைய (ذات) தாத் இன்னொன்றுடன் சேர்ந்து இருக்கின்றது என்று நம்பிக்கை கொள்கிறாரோ அவர் காபிராகிவிடுவார். ஏனெனில் இது அழ்ழாஹ்வுக்கு சாத்தியமற்றதாகும்.

## تفسير الآية الرحمن على العرش استوى
## ﴿الرَّحْمَنُ عَلَى الْعَرْشِ اسْتَوَى﴾ என்ற வசனத்தின் விளக்கம்

இந்த வசனத்திற்கு அமைவு பெறுதல், உட்காருதல் மேலும் இது போன்றதல்லாததைக்கொண்டு விளக்கமளிப்பது கட்டாயமாகும்.

யார் இந்த வசனத்திற்கு உட்காருதல், அமைவுபெறுதல் போன்ற அர்த்தம் இருப்பதாக நம்பிக்கை கொள்கின்றாரோ அவர் காபிராகிவிடுகின்றார். எனவே வெளிரங்கமான பொருள் கொடுப்பதை விட்டு விட்டு சீரான புத்தி ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் அதற்குப் பொருள் கொடுப்பது காட்டாயமாகும். எனவே இவ்விடயத்தில இஸ்திவா என்ற வார்த்தைக்கு அடக்கி ஆளுதல் என்ற அர்த்தம் கொடுக்கப்படும்.

ஒரு கவிதையில் வந்துள்ளது….

قَد اسْتَوَى بِشْرٌ عَلَى العِراقِ مِنْ غَيْرِ سَيْفٍ ودَمٍ مُهْراقِ

இந்தக் கவியின் அர்த்தம்:

“பிஷ்ர் எனும் அரசன் யுத்தமோ, இரத்தம் ஓட்டுதலோயின்றி ஈராக் நாட்டை அதிகாரப்படுத்தினார்”.

இக்கவியில் இடம்பெற்றுள்ள ‘இஸ்தவா’ (اسْتَوَى) எனும் சொல்லானது அதிகாரப்படுத்தினார் என்ற அர்த்தத்திலே பயன்படுத்தப்பட்டுள்ளது. மாறாக ‘இஸ்தவா’ எனும் வார்த்தைக்கு ஈராக் மீது உட்கார்ந்தார் அல்லது ஈராக் மீது தரிபட்டார் என்று அர்த்தம் கொள்வது மொழி ரீதியாகவும், பகுத்ததறிவு ரீதியாகவும் பிழையானதாகும்.

இவ்வசனத்தில் அர்ஷை மாத்திரம் குறிப்பிட்டுக் கூறுவதன் பிரயோஜனம், நிச்சயமாக அர்ஷ் என்பது பெறுமானத்தால் அல்லாஹ்வின் படைப்புகளில் மிகப் பிரமாண்டமானதாகும். எனவே அர்ஷை விட குறைந்த பெறுமானத்தில் உள்ளவை அல்லாஹ்வின் கட்டுப்பாட்டில் உள்ளன என்பதை தெளிவாக அறிய முடியும். அலீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியுள்ளார்கள்:

"إنّ الله تَعَالى خَلَقَ العَرْشَ إِظْهَارًا لقُدْرَتِهِ، و لَمْ يَتّخِذْهُ مَكَانًا لِذَاتِهِ"

‘‘அல்லாஹ் அர்ஷை தனது வல்லமையை வெளிப்படுத்துவதற்காகவே படைத்தான். தனக்கு இடமாக எடுத்துக்கொள்வதற்கு அல்ல.’’ இதனை (**الإمام المحدث الفقيه اللغوي أبو منصور التميمي**) இமாம் அல் முஹத்திஸ் அல்-பகீஹ் அல்லுகவீ அபூ மன்ஸூர் அத்தமீமீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் அவர்களது (**الفرق بين الفرق**) ‘அல்-பர்கு பைனல் பிரக்’ என்ற நூலில் அறிவித்துள்ளார்கள்.

அல்லது படைப்புகளின் தன்மையான உட்காருதல், தரிபடுதல் போன்ற கருத்துக்களை விட்டும் அல்லாஹ்வை பரிசுத்தப்படுத்துவதுடன், ‘‘அவனே அறிந்த இஸ்திவாவாக இஸ்திவாவானான்’’ என்று ‘இஸ்தவா’ என்ற வார்த்தைக்கு விளக்கம் வழங்கப்படும்.

## ﴿الرَّحْمَنُ عَلَى الْعَرْشِ اسْتَوَى﴾ எனும் வசனத்தை வைத்து அல்லாஹ்வுக்கு இடமுண்டு என வாதிடுவோருக்கான மறுப்பு

அல்லாஹ் அர்ஷில் அமர்ந்திருக்கின்றான் அல்லது அதற்கு மேல் நேராக இருக்கின்றான் என்று ﴿الرَّحْمَنُ عَلَى الْعَرْشِ اسْتَوَى﴾ என்ற அல்லாஹு தஆலாவுடைய கூற்றிற்கு விளக்கமளித்தவர்களாகவும், மேலும் உள்ளமை கொண்ட ஒரு பொருள் ஒரு இடத்திலே இல்லாமல் அதனை அறிய முடியாது (அவர்களின் இந்த ஆதாரமெடுப்பானது மறுக்கப்பட்டதாகும்) என்று வாதிட்டவர்களாகவும், மேலும் ஸலபுகள் **بلا كيف** (விதமின்றி) என்பதைக் கொண்டு மறுத்ததானது உட்காருதல், தரிபடுதல், ஒரு இடத்தில் அமைவுபெறல், நேர்படல், அசைவு, அமைதி போன்றவைகளாகும் என்பதை அறியாமல், ஸலபுகள் **استوى بلا كيف** (எவ்விதமுமின்றி இஸ்திவாவானான்) என்று கூறியது தங்களுக்கு நேர்பாடானது என்று வாதிட்டவர்களாக, அல்லாஹ்வுக்கு அர்ஷின் மீது உட்காரும் தன்மையையும், அதன் மீது தரிபடுவதையும் ஆகுமாக்கக் கூடிய இவர்களை விட்டும் எச்சரிக்கையாக இருப்பது அவசியம் என்பதை அறிந்து கொள்!

அவர்களின் போலி ஆதாரங்களை முறியடிப்பதற்கு "அழ்ழாஹ் உலகை அல்லது இடத்தை படைப்பதற்கு முன்னர் அவன் இருந்தானா? அல்லது இருக்கவில்லையா?" என்று அவர்களிடம் கேட்கப்படும். அப்பொழுது அவர்கள் பகுத்தறிவின் நிர்ப்பந்தத்தால் "அவைகளைப் படைக்க முன்னர் அழ்ழாஹ் இருந்தான்" என்று கூறவேண்டும். எனவே "உள்ளமை கொண்ட ஒரு பொருள் ஒரு இடத்திலே இல்லாமல் அதனை அறிய முடியாது" என்ற அவர்களின் கூற்று சரியாக இருக்குமாயின் இரு விடயங்களில் ஒன்று அவசியமாகிவிடும். ஒன்று இடம், அர்ஷ், உலகம் ஆரம்பமற்றவையாகும் என்று அவர்கள் கூறுவது அவசியமாகிவிடும். அல்லது படைப்பாளனுக்கு ஆரம்பம் உண்டு என்று கூறுவது அவசியமாகிவிடும். இதுவே மடையர்களான ஹஷ்விய்யஹ்களின் கருத்தின் முடிவாகும். ஏனெனில் ஆரம்பமற்றது ஆரம்பமுள்ளதாகவும் மற்றும் ஆரம்பமுள்ளது ஆரம்பமற்றதாகவும் ஆகிவிட முடியாது.

மேலும் (**التذكرة الشرقية**) 'அத்தத்கிரதுஷ் ஷர்கிய்யஹ்' எனும் நூலில் (**الإمام القشيري**) இமாம் அல்குஷைரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் கூறியுள்ளார்கள்:

"அழ்ழாஹ் குர்ஆனில் ﴿الرَّحْمَنُ عَلَى الْعَرْشِ اسْتَوَى﴾ என்று கூறியுள்ளான் அல்லவா? எனவே அதன் வெளிரங்க பொருளைத் தான் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டால், நாங்கள் கூறுவோம் அழ்ழாஹ் அத்தியாயம் அல்-ஹதீதின் 4ம் வசனத்தில்

﴿وَهُوَ مَعَكُمْ أَيْنَ مَا كُنتُمْ﴾

என்பதாகவும் இன்னும் அத்தியாயம் புஸ்ஸிலத்தின் 54ம் வசனத்தில்

﴿أَلَا إِنَّهُ بِكُلِّ شَيْءٍ مُّحِيطٌ﴾

என்பதாகவும் கூறியுள்ளான். எனவே உங்கள் கருத்தின் பிரகாரம் இந்த வசனங்களையும் வெளிரங்க பொருளின் பிரகாரம் எடுப்பது அவசியமாகிவிடும். அப்போது அவன் ஒரே சந்தர்ப்பத்தில் அர்ஷின் மீதும், எங்களுடனும் இன்னும் உலகத்தை சூழ்ந்தவனாகவும்

இருக்கின்றான் என்று பொருள் ஆகிவிடும். எனவே ஒருவன் ஒரே சந்தர்ப்பத்தில் எல்லா இடங்களிலும் இருப்பது சாத்தியமற்றதாகும்.

﴿وَهُوَ مَعَكُمْ﴾ என்ற வசனத்தின் விளக்கம் "நீங்கள் எங்கிருந்தாலும் அல்லாஹ் உங்களை மிக அறிந்தவனாக உள்ளான்" என்றும், இன்னும் ﴿أَلا إِنَّهُ بِكُلِّ شَيْءٍ مُّحِيطٌ﴾ என்ற வசனத்தின் விளக்கம் "அல்லாஹ் அனைத்தையும் சூழ்ந்தறிந்தவன்" என்பதாக அவர்கள் கூறுவார்கள். எனவே நாங்கள் கூறுவோம் இது போன்றுதான் ﴿الرَّحْمَنُ عَلَى الْعَرْشِ اسْتَوَى﴾ என்ற வசனத்தின் விளக்கம் அதிகாரப்படுத்தினான், பாதுகாத்தான், தரிபடுத்தினான் என்பதாகும்.

அதாவது நிச்சயமாக அவர்கள் மேற்கூறிய சில வசனங்களின் வெளிரங்க கருத்தை எடுக்காமல் தஃவீல் (வலிந்துரை) செய்துள்ளனர். எனவே இவர்கள் **استوى** என்ற வார்த்தைக்கு "அதிகாரம் செய்தான்" என்று தஃவீல் (வலிந்துரை) செய்பவர்களை எவ்வாறு குறை கூறுவார்கள்? இது ஆதாரமற்ற வாதமல்லவா!?

இமாம் அல்குஷைரீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள்: "மடமையான ஒரு கூட்டம் வெளிப்பட்டுள்ளது. இவர்கள் மக்களிடம் தவறான விளக்கங்கள், யூகங்கள் என்பவற்றை ஏற்படுத்தவில்லையென்றால் அவர்களைப் பற்றிக் கூறுவதை இந்நூலிலே விட்டிருப்பேன். இவர்கள் கூறுகின்றனர் "அல்லாஹ்வை படைப்புகளுக்கு ஒப்பாக்குவதை யூகிக்கக்கூடிய வசனங்களையும் இன்னும் அளவு, உறுப்புக்களை யூகிக்கக்கூடிய செய்திகளையும் தஃவீல் செய்யாது வெளிப்படையாக எடுப்போம்." மேலும் இதற்கு ஆதாரமாக ﴿وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُ إِلاَّ اللهُ﴾ என்ற வசனத்தை பற்றிப்பிடிக்கின்றனர். அல்லாஹ்வின் மீது சத்தியமாக! இவர்கள் யஹூதிகள், நஸாராக்கள் நெருப்பு வணங்கிகள் சிலை வணங்கிகளை விடவும் இஸ்லாத்துக்கு கடும் தீங்கை ஏற்படுத்தக்கூடியவர்களாவர். ஏனெனில் காபிர்களின் வழிகேடுகளை ஒரு முஸ்லிம் வெளிப்படையாக அறிந்து அவற்றை தவிர்ந்து கொள்வார். ஆனால் இவர்கள் மார்க்க அறிவு போதிய அளவு இல்லாதவர்களிடம் மார்க்கம் எனும் பெயரில் அவர்களை ஏமாற்றிவிடுகிறார்கள். எனவே இவ்வாறான புதுமையான

கருத்துக்களை அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கு கற்பித்து வணங்கப்படக்கூடிய அழ்ழாஹ்வை உறுப்புகள், ஏறுதல், இறங்குதல், சாய்தல், மல்லாந்து தூங்குதல், அமருதல், திசைகளில் இருத்தல் போன்ற படைப்புகளின் தன்மைகளைக் கொண்டு வர்ணிக்கும் கெட்ட குணத்தை அவர்களுடைய உள்ளங்களிலே பதித்துவிட்டார்கள். எனவே யார் இவர்களின் வெளிரங்க கருத்தை செவிமடுக்கின்றாரோ அவர் உணர்வு ரீதியான கற்பனையின் பால் தனது யூகத்தை கொண்டு சென்று தவறானவற்றை நம்பிக்கை வைத்து அவரை அறியாமல் பெரும் அழிவில் மாட்டிவிடுவார். எனவே தஃவீல் (வலிந்துரை) செய்வது ஆகுமானதல்ல என்று கூறக்கூடியவரின் கூற்று மடத்தனமானதாகும் என்பது தெளிவாகிவிட்டது.

மேலும் அக்கூற்று "اللّٰهُمَّ عَلِّمْهُ الحِكْمَةَ وتَأْوِيلَ الكِتَابِ" (யா அழ்ழாஹ் அவர்களுக்கு ஹிக்மத்தையும் இன்னும் அல்-குர்ஆனுக்கு தஃவீல் (வலிந்துரை) செய்யும் ஆற்றலையும் கற்றுக் கொடுப்பாயாக!) என்று ரஸூலுழ்ழாஹி ﷺ அவர்கள் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களுக்கு கூறிய வார்த்தையின் மூலம் முறியடிக்கப்படுகிறது. இதனை இப்னு மாஜஹ் மற்றும் அவர்கள் அல்லாத ஏனையோரும் பல சொற்பிரயோகங்களில் அறிவிப்பு செய்துள்ளார்கள். இதன் ஆரம்பம் புகாரியில் உள்ளது.

அல்ஹாபிழ் இப்னுல் ஜௌஸீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் தன்னுடைய ‘அல்மஜாலிஸ்’ எனும் நூலில் கூறியுள்ளார்கள். “நிச்சயமாக அழ்ழாஹ் எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ அவர்களின் இந்த பிரார்த்தனையை அங்கீகரித்துள்ளான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை”.

இன்னும் அவர் தஃவீலை (வலிந்துரையை) தடுக்கக்கூடியவர்களைக் கடுமையாக கேவலப்படுத்தியும் எதிர்த்துமுள்ளார்கள். இன்னும் அது தொடர்பாக விரிவாக பேசியுமுள்ளார்கள். உறுதிப்படுத்திக்கொள்ள விரும்புபவர் அவர்களது அந்நூலை வாசித்துக் கொள்ளவும்.

இன்னும் ﴿يَخَافُونَ رَبَّهُم مِّن فَوْقِهِمْ﴾ என்ற அழ்ழாஹ்வின் கூற்றின் கருத்தானது, ஆட்சியின் உயர்வையே குறிக்கும். மாறாக இடத்தின்,

திசையின் உயர்வையல்ல. இன்னும் ﴿وَجَاءَ رَبُّكَ وَالْمَلَكُ صَفًّا صَفًّا﴾ என்ற அழ்ழாஹு தஆலாவின் கூற்றின் கருத்தானது அவனை பொறுத்தமட்டில் அசைதல், இடம் பெயர்தல், நீங்குதல், ஒரு இடத்தை காலியாக்கி மற்றொரு இடத்தை நிரப்புதல் ஆகிய தன்மைகளைக் கொண்ட வருகையல்ல. இன்னும் யார் இதனை நம்புகிறாரோ அவர் காபிராகிவிடுவார்.

எனவே அசைதல், அமைதி பெறல் மற்றும் படைப்புக்களின் அனைத்து பண்புகளையும் அழ்ழாஹ்தான் படைத்தான். எனவே அவன் அசைதல், அசையாதிருத்தலைக் கொண்டு வர்ணிப்புப்பெறமாட்டான். ﴿وَجَاءَ رَبُّكَ﴾ என்ற அழ்ழாஹ்வின் கூற்றில் சொல்லப்பட்டுள்ளதானது உமது றப்பின் கட்டளை அதாவது அவனின் வல்லமையின் பிரதிபலிப்பு வந்துள்ளது என்பதாகும்.

இன்னும் இமாம் அஹ்மத் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் அழ்ழாஹ்வின் வார்த்தையான ﴿وَجَاءَ رَبُّكَ﴾ என்பதற்கு அழ்ழாஹ்வின் வல்லமை (பிரதிபளிப்பு) வந்தது என்று கூறியுள்ளதாக நிரூபணமாகியுள்ளது. இதனை இமாம் பைஹகீ மனாகிப் அஹ்மத் எனும் நூலில் அறிவிப்புச் செய்துள்ளார்கள். இன்னும் இக்கருத்து முன்னரும் கூறப்பட்டுள்ளது.

## تفسيرُ مَعيّةِ اللهِ المَذْكُورَةِ في القُرْءانِ

ومَعْنَى قَولِهِ تَعَالى: ﴿وَهُوَ مَعَكُمْ أَيْنَ مَا كُنتُمْ (4)﴾ [سورة الحديد] الإحاطةُ بالعِلْمِ، وتَأْتي المَعِيّةُ أيْضًا بمعْنى النُّصْرَةِ والكلاءَةِ، كقَولِهِ تعَالى ﴿إِنَّ اللهَ مَعَ الَّذِينَ اتَّقَواْ (128)﴾ [سورة النحل].

ولَيسَ المعْنيُّ بهَا الحلولَ والاتّصالَ ويكْفرُ مَنْ يَعتَقدُ ذَلكَ لأنّهُ سُبْحانَهُ وتَعَالى مُنَزّهٌ عن الاتّصالِ والانْفصَالِ بالمَسَافَةِ. فَلا يُقَالُ إنّه مُتّصِلٌ بالعَالَم ولا مُنْفَصِلٌ عَنْهُ بالمَسَافَةِ لأَنّ هذهِ الأمُور منْ صفَاتِ الجَسمِ والجسمُ هو الذي يَقبَلُ الأمرَينِ واللهُ جلّ وعَلا لَيسَ بحادث، نفَى ذلكَ عن نفسه بقوله ﴿لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ (11)﴾.

وَلا يُوصَفُ اللهُ تَعَالى بالكبَرِ حَجْمًا[135] ولا بالصّغَرِ، ولا بالطُّولِ ولا بالقِصَرِ لأَنّهُ مُخالِفٌ للحَوادِثِ، ويَجبُ طَرْدُ كُلّ فِكْرَةٍ عَنِ الأَذْهَانِ تُفْضِي إلى تَقْدِيرِ اللهِ تَعالى وتَحديدِه.

كَانَ اليَهُودُ قَدْ نَسَبُوا إلى اللهِ تعالى التّعَبَ، فَقَالوا إنّه بَعْدَ خَلْقِ السّمواتِ والأرْضِ استَراحَ فاسْتَلْقَى علَى قَفَاهُ، وقولهم هَذَا كُفرٌ.

واللهُ تعَالى مُنزّهٌ عَنْ ذَلكَ وعَنِ الانْفعالِ كالإحْسَاسِ بالتّعبِ والآلامِ واللذّاتِ فالذي تَلحَقُهُ هَذه الأحْوالُ يَجبُ أنْ يكُونَ حَادِثًا مَخْلُوقًا يَلْحقُه التّغَيُّرُ، وهَذا يَستَحيلُ عَلى اللهِ تعَالى.

قالَ تَعالى: ﴿وَلَقَدْ خَلَقْنَا السَّمَوَاتِ وَالأَرْضَ وَمَا بَيْنَهُمَا فِي سِتَّةِ أَيَّامٍ وَمَا مَسَّنَا مِن لُّغُوبٍ (38)﴾ [سورة ق].إنّما يَلْغَبُ مَن يَعْمَلُ بالجَوارحِ واللهُ سُبْحَانَهُ وتَعَالى مُنَزّهٌ عن الجارحَةِ.

قال تَعالى: ﴿إِنَّ اللهَ هُوَ السَّمِيعُ الْبَصِيرُ (20)﴾ [سورة غافر]. فَاللهُ تَعالى سَميعٌ وبَصيرٌ بلا كيْفيّةٍ، فالسّمْعُ والبَصَرُ هُمَا صفَتَانِ أزَليّتانِ بلا جَارحَةٍ، أيْ بلا أُذُنٍ أوْ حَدَقَةٍ وبلا شَرْطِ قُرْبٍ أو بُعْدٍ أو جِهَةٍ، وبدُوْنِ انبعَاثِ شُعاعٍ منَ البَصَرِ، أو تَموُّجِ هَوَاءٍ.

ومَنْ قَالَ للهِ أُذُنٌ فَقَدْ كَفَرَ ولَو قَالَ لَه أُذُنٌ لَيْسَت كآذانِنا، بخلافِ مَنْ قالَ لهُ عَيْنٌ ليسَتْ كعُيُونِنا ويَدٌ لَيْسَت كأَيدِينَا بل بمَعْنَى الصّفَةِ فَإنّهُ جَائِزٌ لوُرُودِ إطْلاقِ العَيْنِ واليَدِ في القرءانِ ولَم يَرِدْ إطْلاقُ الأُذُنِ عَلَيْه.

---

135 فقولنا: "الله أكبر" معناه أكبر من كل كبير قدرًا ودرجة وقوة وعلمًا لا امتدادًا، وهذا مراد السلف بقولهم في الآيات المتشابهة: "أمرُّوها كما جاءت بلا كيفية" ليس معناه أن له كيفية ليست معلومة لنا. وليس موافقًا للسلف من يقول بناء على ذلك استواء الله تعالى على العرش جلوس ولكن لا نعلم كيفية ذلك الجلوس.

## تَفسيرُ قَوله تَعالى فَثَمَّ وَجْهُ اللهِ

قَالَ تَعَالى ﴿**وَلله الْمَشْرِقُ وَالْمَغْرِبُ فَأَيْنَمَا تُوَلُّواْ فَثَمَّ وَجْهُ الله (115)**﴾ [سورة البقرة]. المَعْنَى فأَيْنما تُوَجّهُوا وجُوْهَكُم في صَلاة النّفْلِ في السّفرِ فَثمّ قِبلَةُ الله136، أيْ فتلْكَ الوِجْهَةُ التي تَوجّهْتُم إلَيْها هيَ قِبْلَةٌ لَكُم، ولا يُرادُ بالوَجْه الجَارِحَةُ. وحُكْمُ مَنْ يَعتَقدُ الجَارحَةَ لله التّكْفيْرُ لأَنّهُ لَو كَانَتْ لَهُ جَارِحَةٌ لكانَ مِثْلا لَنَا يَجُوزُ عَليه مَا يَجُوزُ عَلَيْنا منَ الفَناء. وَقَدْ يُرادُ بالوَجْه الجِهَةُ التي يُرادُ بها التّقرُّبُ إلى الله تَعالى كَأَنْ يَقُولَ أَحَدُهُم "فَعَلْتُ كَذا وكَذا لِوَجْهِ الله"، ومَعْنَى ذلكَ "فَعَلْتُ كَذا وكذا امْتِثالا لأَمْرِ الله تَعَالى".

## تفسير ﴿اللهُ نُورُ السّمَوَاتِ وَالأَرْضِ (35)﴾

فَقَوْلُه تَعالى: ﴿**اللهُ نُورُ السّمَوَاتِ وَالأَرْضِ (35)**﴾ [سورة النور] مَعنَاهُ أنّ الله تَعالى هَادي أهْلِ السّموات والأَرْضِ لنُورِ الإيْمان، رَوَاهُ البَيهَقيُّ137 عن عَبد الله بنِ عبّاسٍ رَضي الله عَنْهُما، فَالله تعَالى لَيْسَ نُوراً بمَعنى الضّوْء، بلْ هوَ الذي خَلَقَ النُّورَ، قَالَ تَعَالى:﴿**وَجَعَلَ الظُّلُمَاتِ وَالنُّورَ (1)**﴾ [سورة الأنعام] أي خَلقَ الظُّلمات والنورَ، فكيفَ يُمكنُ أنْ يكُونَ نُوراً كَخَلْقه، تَعالى الله عَنْ ذَلكَ عُلُوًّا كَبيْراً.

وحُكْمُ من يَعتقدُ أنّ الله تعَالى نُورٌ أيْ ضَوءٌ التّكفيرُ قَطْعًا. وهذه الآيةُ ﴿**الْحَمْدُ لله الَّذِي خَلَقَ السّمَوَاتِ وَالأَرْضَ وَجَعَلَ الظُّلُمَاتِ وَالنُّورَ (1)**﴾ أصرحُ دليلٍ على أن الله ليسَ حجمًا كثيفًا كالسموات والأرض وليس حجمًا لطيفًا كالظلمات والنور، فمن اعتقدَ أن الله حجمٌ كثيفٌ أو لطيفٌ فقد شبّه الله بخلقه والآية شاهدةٌ على ذلكَ. أكثرُ المشبهةِ يعتقدونَ أن الله حجمٌ كثيفٌ وبعضُهم يعتقدُ أنه حجمٌ لطيفٌ حيث قالوا إنه نورٌ يتلألأ، فهذه الآيةُ وحدَها تكفي للرد على الفريقين.

وهُنَاكَ العَديدُ منَ العَقَائِدِ الكُفْريّةِ كَاعْتِقادِ أنّ الله تعَالى ذُو لَوْنٍ أو ذُو شَكْلٍ فلْيَحْذَرِ الإنسَانُ مِنْ ذَلِك جَهْدَهُ علَى أيّ حَالٍ.

---

136 هذا تفسير مجاهد ذكره الطبري في تفسيره (1/505-504).

137 الأسماء والصفات (ص/81).

## تفسير معية الله المذكورة في القرءان

## ‘மஅ’ (مع) எனும் அறபுப் பதம் அல்லாஹ்வுடன் இணைத்துக் கூறப்பட்டு வந்த குர்ஆன் வசனங்களின் விளக்கம்

அத்தியாயம் அல் ஹதீத் வசனம் 4 ல் இடம்பெற்றுள்ள

﴿وَهُوَ مَعَكُمْ أَيْنَ مَا كُنتُمْ﴾

என்ற அல்லாஹு தஆலாவின் கூற்றின் விளக்கம்: “நீங்கள் எங்கிருந்த போதிலும் அல்லாஹ் உங்களை நன்கறிந்தவனாக உள்ளான்” என்பதாகும். இவ்வசனத்தில் இடம்பெற்றுள்ள (مع) ‘மஅ’ எனும் அறபுப் பதம் “நன்கறிதல்” எனும் அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்நஹ்ல் எனும் அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ள ﴿إِنَّ اللهَ مَعَ الَّذِينَ اتَّقَوْا﴾ “தக்வாவுடையோருக்கு நிச்சயமாக அல்லாஹ்வின உதவி இருக்கின்றது” என்ற அல்லாஹ்வின் கூற்றைப் போன்று (مع) ‘மஅ’ எனும் அறபுப் பதம் “உதவி” எனும் அர்த்தத்திலும் உபயோகிக்கப்படும்.

மேற்கூறப்பட்ட குர்ஆன் வசனங்களில் இடம்பெற்றுள்ள (مع) ‘மஅ’ எனும் அறபுப் பதத்தை வைத்து “அல்லாஹ் ஒன்றில் இறங்குகின்றான், இன்னொன்றுடன் சங்கமிக்கின்றான்” என்று விளக்கம் கொள்ளப்படமாட்டாது. இவ்வாறு நம்பிக்கை கொள்பவன் காபிராகிவிடுகின்றான். ஏனெனில் அல்லாஹ் தொலைவு மூலம் சேர்ந்திருத்தல், பிரிந்திருத்தல் ஆகியவற்றை விட்டும் தூய்மையானவன்.

எனவே “அல்லாஹ் தொலைவு மூலம் உலகத்துடன் சேர்ந்திருக்கின்றான் என்றோ அதனை விட்டும் பிரிந்து இருக்கின்றான்” என்றோ சொல்லப்படமாட்டாது. ஏனெனில் இவ்வாறான விடயங்கள் உடற்தன்மைகளைச் சார்ந்ததாகும். உடல்தான் சேர்ந்து இருத்தல், பிரிந்திருத்தல் எனும் தன்மையை ஏற்றுக்கொள்ளும். படைப்புகளின் தன்மைகளை விட்டும் தூய்மையான அல்லாஹ் புதிதாக உண்டானவனாக இல்லை.

﴿لَيْسَ كَمِثْلِهِ شَىْءٌ﴾ அதாவது எவ்விதத்திலும் அவனைப் போல எதுவும் இல்லை எனும் குர்ஆன் வசனத்தின் மூலம் படைப்புக்களின் பண்புகளை விட்டும் அல்லாஹ் தன்னைப் பரிசுத்தப்படுத்தியுள்ளான்.

மேலும் அல்லாஹ் பெரிது, சிறிது, நீளம், குட்டை எனும் அளவுகளைக் கொண்டு வர்ணிக்கப்படமாட்டான். ஏனெனில் அவன் படைப்புகள், அவற்றின் பண்புகளுக்கு மாற்றமானவன். மேலும் அல்லாஹ்வுக்கு பெறுமானம், எல்லையை ஏற்படுத்துவதன் பால் இட்டுச் செல்லும் சிந்தனைகள் அனைத்தையும் நிராகரித்து விடுவது கட்டாயமாகும்.

யஹூதிகள் "அல்லாஹ் வானங்களையும், பூமிகளையும் படைத்த பின்பு களைப்படைந்து, மல்லாந்து ஓய்வெடுத்தான்" என்று கூறி "களைப்பு" எனும் பண்பை அல்லாஹ்வுக்கு தரிபடுத்தியுள்ளார்கள். அவர்களின் இவ்வார்த்தையானது குப்ராகும்.

மேலும் அல்லாஹு தஆலா அதை விட்டும் இன்னும் களைப்படைதல், வேதனைகள், இன்பங்களை கொண்டு உணர்வதைப் போன்ற உணர்ச்சிகளை விட்டும் பரிசுத்தமானவன். எவருக்கு இந்நிலைகள் ஏற்படுமோ அவர் நிச்சயமாக மாற்றத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய படைப்பாக இருந்தாக வேண்டும். இது அல்லாஹ்வுக்கு சாத்தியமற்றதாகும்.

அல்லாஹ் குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்

﴿وَلَقَدْ خَلَقْنَا السَّمَوَاتِ وَالأَرْضَ وَمَا بَيْنَهُمَا فِي سِتَّةِ أَيَّامٍ وَمَا مَسَّنَا مِن لُّغُوبٍ﴾

விளக்கம்:
"நிச்சயமாக நாங்கள் வானங்களையும், பூமிகளையும் அவ்விரண்டுக்கு இடைப்பட்டவைகளையும் ஆறு நாட்களில் படைத்தோம். எங்களுக்கு களைப்பேதும் ஏற்படவில்லை."

அத்தியாயம் : காஃப் வசனம் : 38

உறுப்புக்களினால் செயல்படுவனே களைப்படைகின்றான். அல்லாஹு தஆலா உறுப்பை விட்டும் பரிசுத்தமானவன்.

அழ்ழாஹ் குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்:

﴿إِنَّ اللهَ هُوَ السَّمِيعُ الْبَصِيرُ﴾

விளக்கம்: "நிச்சயமாக அழ்ழாஹ் கேட்கக்கூடியவனாகவும், பார்க்கக்கூடியவனாகவும் உள்ளான்"

எனவே அழ்ழாஹு தஆலா எவ்விதமுமின்றி பார்க்கின்றான், கேட்கின்றான். அவனது கேட்டல், பார்த்தல் என்பன உறுப்புக்களற்றதும், ஆரம்பமற்றதுமான இரு பண்புகளாகும். அதாவது காது அல்லது கண் விழி இன்றியும் மேலும் அண்மை அல்லது தொலைவு அல்லது திசை ஆகிய நிபந்தனை இன்றியும் மேலும் பார்வையிலிருந்து ஒளிக்கதிர்கள் வெளியாகாமலும் அல்லது காற்றலையில்லாமலும் பார்ப்பவனாகவும், கேட்பவனாகவும் உள்ளான்.

மேலும் யார் அழ்ழாஹ்வுக்கு காது உள்ளது என்று கூறுவாரோ நிச்சயமாக அவர் காபிராகிவிடுவார். மேலும் அவர் அழ்ழாஹ்வின் காது எங்களின் காதுகள் போன்றல்ல என்று கூறினாலும் சரியே காபிராகி விடுவார். ஆனால் அழ்ழாஹ்வுக்கு அய்ன் (عين) உள்ளது. எங்களின் அய்னைப் போன்றதல்ல. இன்னும் அவனுக்கு யதுன் (يد) உள்ளது அது எங்களின் யத் போன்றதல்ல. மாறாக அவை அவனுடைய பண்புகளாகும் என்று கூறும் ஒருவருக்கு மாற்றமாக இவர் காபிராகிவிடமாட்டார். ஏனெனில் 'அய்ன்', 'யத்' என்பவை குர்ஆனில் அழ்ழாஹ்வுக்கு பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதனால் அது ஆகுமாகும். ஆனால் (أذن) 'உதுன்' எனும் வார்த்தை அழ்ழாஹ்வுக்கு பயன்படுத்தப்பட்டு வரவில்லை.

## تفسير قوله تعالى فثم وجه الله

## ﴿ فَأَيْنَمَا تُوَلُّواْ فَثَمَّ وَجْهُ اللهِ ﴾ என்ற அல்லாஹு தஆலாவின் கூற்றின் விளக்கம்

அல்லாஹ் அத்தியாயம் அல் பகரஹ்வின் வசனம் 115 இல் பின்வருமாறு கூறியுள்ளான்:

﴿وَلِلهِ الْمَشْرِقُ وَالْمَغْرِبُ فَأَيْنَمَا تُوَلُّواْ فَثَمَّ وَجْهُ اللهِ﴾

விளக்கம்: "பிரயாணத்தின் போது ஸுன்னத்தான தொழுகையில் உங்களது முகங்களை எங்கு முன்னோக்கினாலும் அங்கே அல்லாஹ்வின் கிப்லா உள்ளது. அதாவது வாகனத்தில் பிரயாணிக்கும் போது நீங்கள் முன்னோக்கிய திசையானது உங்களுக்குரிய கிப்லாவாகும்."

இங்கு (وَجْهُ) 'வஜ்ஹ்' எனும் அறபுப் பதத்தின் மூலமாக அதனுடைய வெளித்தோற்ற கருத்தான முகத்தை நாடப்படமாட்டாது.

மேலும் அல்லாஹ்வுக்கு உடலுறுப்பு இருப்பதாக நம்பிக்கை கொள்பவர் காபிராகிவிடுவார். ஏனெனில் அவனுக்கு உடலுறுப்பு இருக்குமேயானால் அவன் எங்களைப் போன்றவனாக இருந்திருப்பான். எனவே எங்களுக்கு ஏற்படக்கூடிய தன்மைகளில் அழிவு மற்றும் ஏனைய தன்மைகள் அல்லாஹ்வுக்கு ஏற்படமுடியுமானதாக ஆகிவிடும்.

மேலும் சில சந்தர்ப்பங்களில் (وَجْهُ) 'வஜ்ஹ்' எனும் வார்த்தையின் மூலம் அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடப்படும். உதாரணமாக **فعلت كذا وكذ لوجه الله** இதன் அர்த்தம் "நான் அல்லாஹ்வின் பொருத்தத்திற்காக இதனை செய்தேன்" என்று சொல்வதைப் போல அதாவது அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து இவ்வாறு செய்தேன் என்பதாகும். இங்கு 'வஜ்ஹ்' என்பது அல்லாஹ்வின் பொருத்தம் என்ற அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது.

## تفسير الله نور السموات والأرض

## ﴿اللهُ نُورُ السَّمَوَاتِ وَالأَرْضِ﴾ என்ற வசனத்தின் விளக்கம்

அத்தியாயம் அந் நூர் வசனம் 35 இல் இடம்பெற்றுள்ள

﴿اللهُ نُورُ السَّمَوَاتِ وَالأَرْضِ﴾

எனும் அழ்ழாஹ்வின் கூற்றின் விளக்கம்: "நிச்சயமாக அழ்ழாஹு தஆலா வானங்களில் இன்னும் பூமிகளில் இருக்கக்கூடியவர்களுக்கு ஈமான் எனும் ஒளியைக் கொண்டு நேர்வழிகாட்டுகின்றான்." என்பதாகும். இதனை அப்துழ்ழாஹ் இப்னு அப்பாஸ் றழியழ்ழாஹு அன்ஹுமா அவர்களை தொட்டும் இமாம் அல்-பைஹகீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் அறிவிப்பு செய்துள்ளார்கள். எனவே "வெளிச்சம்" என்ற அர்த்தத்தில் அழ்ழாஹ்வுக்கு "நூர்" என்று கூறப்படமாட்டாது. ஏனெனில் அழ்ழாஹ்தான் வெளிச்சத்தைப் படைத்தான். அழ்ழாஹ் குர்ஆனில் ﴿وَجَعَلَ الظُّلُمَاتِ وَالنُّورَ﴾ அதாவது இருள்களையும், வெளிச்சத்தையும் அவனே படைத்தான் என்பதாக கூறியுள்ளான். எனவே எவ்வாறு அழ்ழாஹ் தனது படைப்பை போன்று வெளிச்சமாக இருக்க முடியும்? அழ்ழாஹ் படைப்புகளுக்கு ஒப்பாகுவதை விட்டும் பரிபூரணமாக தூய்மையாகிவிட்டான்.

இன்னும் "அழ்ழாஹ் ஒளி" என்று நம்பிக்கை கொள்பவன் எவ்விதக் கருத்து வேறுபாடுமின்றி காபிராகிவிடுகின்றான். இன்னும்

﴿الْحَمْدُ للهِ الَّذِي خَلَقَ السَّمَوَاتِ وَالأَرْضَ وَجَعَلَ الظُّلُمَاتِ وَالنُّورَ﴾

"வானங்களையும் பூமியையும் மற்றும் ஒளியையும் இருள்களையும் படைத்த அழ்ழாஹ்வுக்கே எல்லாப் புகழும்" என்ற வசனம் நிச்சயமாக அழ்ழாஹ் கையினால் பிடிபடக்கூடிய வானங்கள், பூமிகள் போன்ற சடமாகவும் இல்லை. மேலும் கையினால் பிடிபடாத இருள், ஒளி போன்ற சடமாகவும் இல்லை என்பதனை மிகத்தெளிவாக அறிவிக்கக்கூடிய ஆதாரமாகும். எனவே அழ்ழாஹ் கையினால் பிடிபடும் சடமென்றோ அல்லது கையினால் பிடிபடாத சடமென்றோ நம்பிக்கை கொள்பவன் அழ்ழாஹ்வை அவனது படைப்புகளுக்கு

ஒப்பாக்கியவனாக ஆகிவிடுகின்றான். மேற்கூறப்பட்ட வசனம் இதற்கு சான்றாகும்.

முஷப்பிஹாக்களில் அதிகமானோர் "அல்லாஹ் கையினால் பிடிபடும் சடம்" என்பதாக நம்பிக்கை கொள்கின்றனர். இன்னும் அவர்களில் சிலர் "அவன் இலங்கக்கூடிய பிரகாசம்" என்று கூறிய போது கையினால் பிடிபடாத சடம் என்பதாக அவனை நம்பிக்கை கொள்கின்றனர். எனவே இவ்வசனம் மாத்திரம் அவ்விரு பிரிவினர்களுக்கும் மறுப்புத் தெரிவிக்க போதுமானதாகும்.

உதாரணம்: அல்லாஹ் நிறமுடையவன் அல்லது தோற்றமுடையவன் என்று நம்பிக்கை கொள்வதைப் போன்ற குப்ரிய்யத்தான நம்பிக்கைகள் அதிகம் உள்ளன. எனவே மனிதன் இயன்றளவு எந்நிலையிலும் அவற்றிலிருந்து எச்சரிக்கையாக இருந்து கொள்ளட்டும்.

## مَعْنى القَدَرِ والإيمانِ به

قَالَ بَعْضُ العُلَماءِ: القَدَرُ هُوَ تَدْبيرُ الأَشْياءِ علَى وجْهٍ مُطَابقٍ لِعلْمِ اللهِ الأزَليّ ومَشيئَته الأزَليّة فيُوجدُها في الوَقْتِ الذي عَلِمَ أَنّها تَكُونُ فيه فيَدخُلُ في ذَلكَ عَمَلُ العَبْدِ الخَيْرَ والشّرّ باختيَاره. ويَدُلُّ علَيه قولُ رَسُولِ اللهِ إلى جبْريلَ حينَ سَأَلَهُ عن الإيمانِ: "**الإيمانُ أنْ تُؤْمِنَ باللهِ ومَلائِكتِه وكتُبِه ورُسُلِهِ واليَوم الآخِرِ وتُؤمِنَ بالقَدَرِ خَيْرِه وشَرّه**"138 رواه مسلم.

ومَعْنَاهُ أنّ المَخْلُوقَاتِ التي قَدّرَها اللهُ تَعالى وفيها الخَيرُ والشّرُّ وُجدَت بتَقْديرِ اللهِ الأزليّ، وأمّا تَقْديرُ اللهِ الذي هُوَ صِفَةُ ذاتِه فَهُوَ لا يُوصَفُ بالشّرّ بل تقديرُ اللهِ للشرِ الكفرِ والمعصية وتقديرُه للإيمانِ والطاعةِ حسنٌ منه ليس قبيحًا، فإرادةُ اللهِ تعالى نَافِذَةٌ في جميعِ مُرادَاته على حَسَبِ علمه بها، فما علمَ كَونَهُ أرادَ كونَه في الوقتِ الذي يكونُ فيه، وما عَلِمَ أنّه لا يكونُ لم يُرِدْ أن يكون، فلا يَحدُثُ في العالم شيءٌ إلا بمشيئتِه ولا يُصيبُ العبدَ شيءٌ من الخيرِ أو الشرّ أو الصحةِ أو المرضِ أو الفقْرِ أو الغِنى أو غيرِ ذلك إلا بمشيئةِ اللهِ تعالى، ولا يُخطئُ العبدَ شيءٌ قدّرَ اللهُ وشاءَ أن يصيبَهُ، فقد وَرَدَ أنّ النبيّ صلى الله عليه وسلم عَلّمَ بعضَ بناتِه: "**ما شاءَ اللهُ كانَ وما لم يشأ**

138 أخرجه مسلم في صحيحه: كتاب الإيمان: باب بيان الإيمان والإسلام والإحسان.

**لم يَكُن"** رواهُ أبو داودَ في السُّنَنِ139 ثمّ تَواتَرَ واستفاضَ بين أفراد الأمّة.

وَرَوى البيهقيُّ140 رحمَه الله تعَالى عن سيّدنا عَليّ رضيَ الله عنْه أنّه قالَ: "إنّ أحَدَكُم لَنْ يَخلُصَ الإيمانُ إلى قَلبه حتّى يَستيقنَ يَقيناً غَيرَ شَكٍّ أنّ مَا أصَابَه لم يَكُن لِيُخطِئَهُ ومَا أخطأَهُ لم يكن لِيُصيبَهُ، ويُقِرَّ بالقَدَرِ كلِّه".

أيْ لا يَجوزُ أن يُؤْمنَ ببعْض القَدَر ويَكْفُرَ ببعض.

ورَوَى أيْضًا141 بالإسْناد الصّحيح أنّ عمرَ بنَ الخَطّاب كانَ بالجَابية – وهي أرْضٌ من الشّام – فقامَ خطيبًا فَحَمدَ الله وأثْنَى عليه ثمّ قالَ "من يَهْد الله فلا مُضلّ لهُ ومَنْ يُضْلِلْ فلا هاديَ لهُ"، وكان عندَهُ كافرٌ من كفّارِ العجَم من أهْلِ الذّمّة فقال بلُغَته "إنّ الله لا يُضِلُّ أحدًا"، فقالَ عُمَرُ للتّرجُمان "ماذا يقولُ"؟ قال إنّه يقولُ إنّ الله لا يُضِلُّ أحدًا، فقالَ عمرُ "كذَبتَ يا عَدُوّ الله ولَولا أنّكَ من أهل الذّمّة لضَرَبتُ عنُقَكَ هُوَ أضَلّك وهُوَ يُدخلُكَ النّارَ إن شاءَ"142.

ورَوَى الحَافظُ أبُو نُعَيْم143 عن ابنِ أخي الزّهْريّ عن عمّه الزُّهريّ أنّ عُمرَ بنَ الخطابِ كان يحبُّ قصيدةَ لَبيدِ بنِ رَبيعَةَ التي منها هذه الأبْياتُ، وهيَ: [الرمل]

إنّ تَقْوى ربّنَا خَيرُ نَفَلْ وبإذنِ الله رَيْثي وعَجَلْ

أحْمَدُ اللهَ فَلا ندّ لهُ بيَدَيْه الخيرُ ما شَاءَ فَعلْ

مَنْ هَداهُ سُبُلَ الخَيْرِ اهتَدى ناعِمَ البَالِ ومَنْ شَاءَ أضَلّ

ومَعنى قوله "إنّ تَقْوى ربّنا خَيرُ نفَل"، أي خَيرُ ما يُعطاه الإنسانُ.

ومَعْنى قَوله "وبإذن الله رَيْثي وعَجَل"، أي أنّه لا يُبطِئ مُبْطِئ ولا يُسْرِعُ مُسْرِعٌ إلا بمشيئَةِ الله وبإذنه.

وقَوْله "أحْمَدُ اللهَ فَلا ندّ لَهُ"، أيْ لا مثْلَ له.

وقولِه "بيديه الخَيْرُ"، أيْ والشّرُّ.

---

139 أخرجه أبو دواد في سننه: كتاب الأدب: باب ما يقول إذا اصبح.

140 كتاب القضاء والقدر (ص/299).

141 كتاب القضاء والقدر (ص/260).

142 أي إن شاء أن تموت على كفرك هذا.

143 حلية الأولياء (3/370-369).

وإنّما اقتصَرَ على ذِكر الخَير من باب الاكتفاء كقَوله تعالى ﴿**سَرَابِيلَ تَقِيكُمُ الْحَرَّ (81)**﴾ [سورة النحل]، أي والبردَ لأن السرابيلَ تقي منَ الأمرينِ ليسَ منَ الحرّ فقط.

وقوله "ما شَاءَ فَعَل"، أي ما أرادَ الله حُصولَهُ لا بُدّ أن يَحصُلَ وما أرادَ أن لا يَحصلُ فَلا يَحْصُلُ.

وقوله "من هَداهُ سُبُلَ الخَيْرِ اهتَدَى"، أي من شَاءَ الله له أن يكونَ على الصّراطِ الصّحيحِ المستَقيمِ اهتَدَى.

وقوله "ناعمَ البال"، أي مُطمئنّ البَال.

وقوله "ومَنْ شاءَ أضَلّ"، أي مَن شَاءَ له أن يكونَ ضَالا أضَلّهُ.

وروى البيهقيُّ عن الشافعيّ أنّه قَالَ حينَ سُئِل عن القَدَرِ: [متقارب تام]

ما شئتَ كانَ وإن لم أشأ وما شئتُ إن لم تشأ لم يكن
خَلقتَ العبادَ على ما علمتَ ففي العلمِ يجري الفَتَى والمُسن
على ذا مَنَنْتَ وهذا خذلْتَ وهذا أَعنتَ وذا لم تُعَنْ
فمنهم شَقيٌّ ومنهم سَعيدٌ وهذا قبيحٌ وهذا حَسَن

فتبيّنَ بهذا أنّ الضّميرَ في قوله تعالى ﴿**يُضِلُّ مَن يَشَاء وَيَهْدِي مَن يَشَاء (93)**﴾ [سورة النحل] يعودُ إلى الله لا إلى العبد كما زعمت القَدريّةُ بدليلِ قوله تعالى إخبارًا عن سيّدنا موسى: ﴿**إِنْ هِيَ إِلاَّ فِتْنَتُكَ تُضِلُّ بِهَا مَن تَشَاء وَتَهْدِي مَن تَشَاء (155)**﴾ [سورة الأعراف].

وَكَذَلِكَ قَالَتْ طَائِفَةٌ يَنْتَسِبُونَ إلى أَمِين شَيخُو الذينَ زَعِيمُهُمُ اليَومَ عَبدُ الهادي البَاني الذي هُوَ بدمَشْقَ فَقَدْ جَعَلُوا مَشِيْئَةَ الله تَابعَةً لمشيئَة العَبْد حَيْثُ إنّ مَعْنى الآية عنْدَهُم إنْ شَاءَ العَبْدُ الاهتداء شاء الله له الهدى وإنْ شَاءَ العَبْدُ أَنْ يَضلّ أضَلّهُ الله، فكَذّبوا بالآيَة: ﴿**وَمَا تَشَاؤُونَ إِلاَّ أَن يَشَاء اللَّهُ (29)**﴾ [سورة التكوير]. فَإنْ حَاوَلَ بَعْضُهُم أَنْ يَسْتَدلّ بآيَة منَ القُرءان لضدّ هَذَا المَعْنَى قيلَ لَهُ القُرءانُ يَتَصادَقُ ولا يَتَنَاقَضُ فَلَيْسَ في القرءان ءايةٌ نَقيضَ ءاية وَلَيْسَ هَذَا منْ بَاب النّاسخ والمَنْسُوخ، لأَنّ النّسْخَ لا يَدْخُلُ العَقائدَ ولَيْسَ مُوجبًا للتّنَاقُضِ فالنسخُ لا يدخلُ في الأخبارِ إنما هو في الأمرِ والنهي. إنّما النّسْخُ بَيَانُ انْتهاءِ حُكْمِ ءايةٍ سَابقَةٍ بحُكْمِ ءايَةٍ لاحقَة، عَلَى أَنّ هَذه الفئَةَ لا تُؤمنُ بالنّاسخِ والمَنْسُوخ.

ومنْ غَبَاوتهمُ العَجيبَة أَنّهُم يُفَسّرُونَ قولَه تعالى ﴿**وَعَلَّمَ ءادَمَ الأَسْمَاء كُلَّهَا (31)**﴾ [سورة البقرة] بأسماء الله الحُسْنى، فَإنْ قيلَ لَهُم لَوْ كَانَت الأَسْماءُ هي أسْمَاءَ الله الحُسْنَى لَمْ يَقُل الله ﴿**فَلَمَّا أَنبَأَهُمْ بِأَسْمَآئِهِمْ (33)**﴾ [سورة البقرة] بَلْ لَقَالَ فَلَمّا أَنْبأَهُم بأَسْمائِي انقطَعُوا، لَكنّهُم يُصرّونَ على جَهْلِهِم وتَحْريفِهِمْ للقُرءانِ.

ورَوَى الحَاكِمُ رحمَهُ اللهُ تَعالى أنَّ عَليَّ الرِّضَى بنَ مُوسَى الكَاظِمِ كانَ يَقْعُدُ في الرَّوْضَةِ وهُوَ شَابٌّ مُلْتَحِفٌ بمَطْرَفِ خَزٍّ فَيَسْأَلُهُ النَّاسُ ومَشَايخُ العُلَمَاءِ في المَسْجِد، فسُئِلَ عن القَدَرِ فقَالَ: قالَ اللهُ عَزَّ مِنْ قَائلٍ **﴿إِنَّ الْمُجْرِمِينَ فِي ضَلالٍ وَسُعُرٍ (47) يَوْمَ يُسْحَبُونَ فِي النَّارِ عَلَى وُجُوهِهِمْ ذُوقُوا مَسَّ سَقَرَ (48) إِنَّا كُلَّ شَيْءٍ خَلَقْنَاهُ بِقَدَرٍ (49)﴾** [سورة القمر].

ثُمَّ قَالَ الرِّضَى: "كَانَ أَبِي يَذْكُرُ عَن ءابَائِه أَنَّ أَمِيرَ المُؤمنِيْنَ عَلِيَّ بنَ أَبِي طالبٍ كانَ يَقُولُ "إنَّ اللهَ خَلقَ كُلَّ شَيءٍ بقَدَرٍ حَتّى العَجْزَ والكَيْسَ وإلَيْه المشيئَةُ وبه الحَوْلُ والقُوّةُ" اهــ.

فَالعِبَادُ مُنْسَاقُونَ إلى فِعْلِ ما يَصْدُرُ عَنْهُم باختِيَارِهم لا بالإكْراهِ والجَبْرِ كالريشةِ المعلقةِ تُميلُها الرياحُ يمنةً ويسرةً كما تقولُ الجبريةُ.

ولَوْ لَمْ يَشَأ اللهُ عصْيَانَ العُصَاةِ وكُفْرَ الكَافِرِيْنَ وإيمانَ المؤمنينَ وطَاعَةَ الطّائعِيْنَ لَمَا خَلَقَ الجنّةَ والنّارَ.

ومَنْ يَنْسُبُ للهِ تَعالى خَلْقَ الخَيْرِ دُوْنَ الشّرِّ فَقَدْ نَسَبَ إلى اللهِ تعالى العَجْزَ ولَوْ كَانَ كَذَلكَ لَكَانَ للعَالَمِ مُدَبّرانِ مُدَبّرُ خَيْرٍ ومُدَبّرُ شرٍّ وهَذا كفرٌ وإشْراكٌ.

وهَذَا الرَّأْيُ السّفيهُ من جهَةٍ أخْرَى يَجْعَلُ اللهَ تَعالى في مُلْكِه مَغْلُوبًا لأنّهُ على حَسَبِ اعتِقَاده اللهُ تَعَالى أرَادَ الخَيْرَ فَقَط فَيكُونُ قَدْ وقَعَ الشّرُّ مِنْ عَدُوّه إبْليس وأعْوانه الكُفّارِ رَغْمِ إرادته.

ويَكْفُرُ مَنْ يَعْتَقِدُ هَذَا الرّأْيَ لمخَالفَته قَولَه تَعالى: **﴿وَاللَّهُ غَالِبٌ عَلَى أَمْرِهِ (21)﴾** [سورة يوسف] أيْ لا أحَدَ يَمْنَعُ نَفَاذَ مَشيئَته. وحُكْمُ مَنْ يَنْسُبُ إلى اللهِ تعَالى الخَيرَ ويَنْسُبُ إلى العَبْدِ الشّرَّ أدَبًا أنّه لا حَرَجَ عليه، أمّا إذَا اعْتَقدَ أنّ اللهَ خَلَقَ الخَيْرَ دُوْنَ الشّرّ فَحكمُهُ التّكفيرُ. واعْلَمُوا رَحمَكُمُ اللهُ أنّ اللهَ تَعَالى إذَا عَذّبَ العَاصيَ فَبعَدْله منْ غَيْرِ ظُلْم، وَإذَا أثَابَ المُطيعَ فَبفَضْله منْ غَيرِ وجُوب عليه، لأَن الظُّلْمَ إنّما يُتَصَوّرُ ممّن لهُ ءامِرٌ ونَاه ولا ءامِرَ للهِ ولا نَاهيَ لَهُ، فَهُوَ يَتَصَرّفُ في مُلْكه كَما يَشَاءُ لأَنّهُ خالقُ الأشياءِ ومَالكُها، وَقَدْ جَاءَ في الحَديث الصّحيح الذي رَوَاهُ الإمَامُ أحْمَدُ في مُسْنَده144 والإمَامُ أبُو دَاودَ في سُنَنه145 وابن حبان146 عَن ابنِ الدّيْلَميّ قَالَ: "أَتيتُ أُبَيَّ بنَ كَعْبٍ فَقُلْتُ يَا أبَا المُنْذرِ، إنّهُ حَدَثَ في نَفْسي شَيءٌ منْ هَذا القَدَرِ فَحدّثْني لَعَلّ اللهَ يَنْفَعُني"، قَالَ **"إنَّ اللهَ لَوْ عَذّبَ أَهْلَ أرْضِهِ وسَمواتِه لعَذّبَهُم وهُوَ غَيْرُ ظَالِمٍ لَهُم وَلَوْ رَحِمَهُم كَانَت رَحْمَتُه خَيْرًا لَهُم مِنْ**

144 أخرجه أحمد في مسنده (182/5).

145 أخرجه أبو داود في سننه: كتاب السنة: باب في القدر.

146 الإحسان بترتيب صحيح ابن حبان (55/2).

**أعْمَالهم، ولَو أنفقْتَ مثلَ أحُد ذَهَبًا في سَبيْلِ الله مَا قَبلَهُ الله منْكَ حَتّى تُؤمنَ بالقَدَر، وتَعْلَمَ أنَّ مَا أصَابَكَ لم يَكُن ليُخْطِئَكَ ومَا أخْطأكَ لم يكنْ ليُصيبَكَ ولو متَّ علَى غَيْرِ هَذا دَخَلْتَ النَّارَ".**

قَالَ: ثُمَّ أتَيتُ عَبدَ الله بنَ مَسْعُود فَحدّثَني مثْلَ ذَلكَ، ثُمّ أتَيْتُ حُذَيفَةَ بنَ اليَمان فحدّثَني مثلَ ذلكَ، ثمّ أتَيْتُ زَيْدَ بنَ ثابت فحدّثني مثلَ ذلكَ عن النبيّ صلى الله عليه وسلم.

ورَوَى مُسْلمٌ في صَحيحه147 والبَيْهقيُّ في كتَاب القَدَر148 عنْ أبي الأسْوَد الدُّؤليّ قال: قالَ لي عمْرانُ بنُ الحُصَيْن أرَأَيْتَ ما يَعْمَلُ النّاسُ اليَومَ ويَكْدَحُونَ فيه أشَيءٌ قُضيَ علَيهم ومَضَى علَيهم منْ قَدَرٍ قدْ سَبَقَ أوْ فيمَا يُسْتَقبَلُونَ به ممّا أتَاهُم به نَبيُّهُم وثَبَتَت الحُجّةُ علَيْهم؟ فقُلتُ بَلْ شَيءٌ قُضيَ عَليهم ومضَى علَيْهم، قَالَ فَقَالَ أفَلا يَكُونُ ظُلْمًا، قَالَ فَفَزعْتُ منْ ذلكَ فزَعًا شَديدًا وقُلْتُ كُلُّ شَيء خَلْقُهُ ومِلْكُ يده لا يُسْئَلُ عَمّا يَفْعَلُ وهُمْ يُسْأَلُونَ، قال فَقَالَ لي يَرْحَمُكَ الله إنّي لَمْ أُرِدْ بمَا سَأَلْتُكَ إلاّ لأَحْزرَ عَقْلَكَ، إنّ رَجُلَيْنِ منْ مُزَيْنَةَ أتَيا رَسُولَ الله فقَالا يا رَسُولَ الله أرَأيتَ ما يَعْمَلُ النّاسُ اليومَ ويَكْدَحُونَ فيه أشَيءٌ قُضيَ عَلَيهم ومَضَى عَلَيهم منْ قَدَرٍ قَدْ سَبقَ أَوْ فيمَا يُستَقْبَلُون به ممّا أتَاهم به نبيُّهُم وثبَتَت الحُجّةُ عَلَيهم؟ فَقَالَ "**بَلْ شَيءٌ قُضيَ علَيهم ومضَى عَلَيْهم**"، ومصْدَاقُ ذَلكَ قَوْلُ الله تَبَارَكَ وتَعَالى **﴿وَنَفْسٍ وَمَا سَوَّاهَا﴾ (7) ﴿فَأَلْهَمَهَا فُجُورَهَا وَتَقْوَاهَا (8)﴾** [سورة الشمس].وصَحّ حديثُ: "**فمنْ وجَدَ خَيْرًا فليحمَد الله ومنْ وجدَ غيرَ ذلك فلا يلومَنّ إلا نفسَه**" رواه مسلمٌ149 منْ حَديث أبي ذرّ عن النبيّ صلى الله عليه وسلم عَن الله عزّ وجلّ.

أمّا الأوّلُ وهو من وجدَ خيرًا فلأَنّ الله تعالى متفضّلٌ عليه بالإيجاد والتّوفيقِ من غيرِ وجوبٍ عليه، فليَحمد العبدُ ربّهُ على تفضّله عليه.أمّا الثاني وهو من وجَدَ شرًّا فلأنّهُ تعالى أبرزَ بقدرَته ما كانَ من ميلِ العبد السيّء فمن أضلّهُ الله فبعدله ومن هَدَاهُ فَبفَضله.ولو أنّ الله خلقَ الخلقَ وأدخَلَ فريقًا الجنّةَ وفريقًا النّارَ لسابقِ علمه أنّهم لا يؤمنونَ لكانَ شأنُ المعَذّب منهم ما وصفَ الله بقوله: **﴿وَلَوْ أَنَّا أَهْلَكْنَاهُم بِعَذَابٍ مِّن قَبْلِهِ لَقَالُوا رَبَّنَا لَوْلا أَرْسَلْتَ إِلَيْنَا رَسُولاً فَنَتَّبِعَ ءايَاتِكَ مِن قَبْلِ أَن نَّذِلَّ وَنَخْزَى (134)﴾** [سورة طه].

فأَرْسَلَ الله الرسُلَ مُبَشّرينَ ومُنذرينَ ليُظْهرَ ما في استعْداد العَبْد منَ الطّوْعِ والإباءِ فَيَهْلكَ مَنْ هَلَكَ عَن بيّنة ويَحْيَا مَنْ حَيّ عن بَيّنة.فأَخْبَرَنَا أنّ قسْمًا منْ خَلْقه مَصيرُهُمُ النّارُ بأعْمالهمُ التي يَعْمَلُونَ باخْتيَارهم، وكانَ تَعالى عَالمًا بعلْمه الأزَليّ أنّهُم لا يُؤمنُونَ، قالَ تَعالى: **﴿وَلَوْ شِئْنَا لآتَيْنَا كُلَّ نَفْسٍ هُدَاهَا وَلَكِنْ حَقَّ الْقَوْلُ مِنِّي لأَمْلأَنَّ جَهَنَّمَ**

---

147 أخرجه مسلم في صحيحه: كتاب القدر: باب كيفية خلق الآدمي.

148 القضاء والقدر (ص/123).

149 أخرجه مسلم في صحيحه: كتاب البر والصلة والآداب: باب تحريم الظلم.

**مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ أَجْمَعِينَ (13)﴾** [سورة السجدة] أَخْبَرَ اللهُ تَعالى في هذه الآيةِ أنَّهُ قالَ في الأزلِ **﴿لأَمْلأَنَّ جَهَنَّمَ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ أَجْمَعِينَ (13)﴾** وقَوْلُه صِدْقٌ لا يَتَخَلَّفُ لأنّ التّخلُّفَ أي التّغيُّرَ كذِبٌ والكذِبُ مُحالٌ على الله.

واعْلَمْ أنَّ مَا ذَكَرنَاهُ منْ أَمْرِ القَدَرِ لَيْسَ مِنَ الخَوْضِ الذي نَهَى النبيُّ صلى الله عليه وسلم عنْهُ بقوله: "**إِذَا ذُكِرَ القَدَرُ فأَمْسكُوا**" رَواهُ الطَّبَرانيُّ150، لأنّ هَذَا تفسيرٌ للقَدَرِ الذي ورَدَ به النّصُّ، وأَمّا المنْهيُّ عَنْهُ فهُوَ الخَوْضُ فيه للوُصُولِ إلى سِرِّه، واعْلَم أيضًا أنّ رَسُولَ الله صلى الله عليه وسلم قَدْ ذَمَّ القَدَرِيّةَ وهُمْ فِرَقٌ، فمنْهُم مَنْ يَقُولُ العبدُ خَالِقٌ لجميْعِ فِعْلِه الاختِيَارِيّ، ومنْهُم مَنْ يَقولُ هُوَ خَالِقُ الشَّرّ دُونَ الخَيْرِ وكِلا الفريقَيْنِ كفّارٌ، قالَ رسُولُ الله صلى الله عليه وسلم: "**القَدَرِيّةُ مَجُوسُ هَذِه الأُمّة**"151 وَفي روايةٍ لهذَا الحديث "**لكُلِّ أمّةٍ مَجُوسٌ، ومَجُوسُ هذه الأُمّة الذينَ يَقُولونَ لا قَدَرَ**" رَواهُ أبُو داود152 عنْ حُذَيفَةَ عنِ النّبي صلى الله عليه وسلم. وفي كتَابِ "القَدَرِ" للبَيهقيّ153 وكتابِ "تَهذيبِ الآثَار"154 للإمامِ ابنِ جَريرٍ الطَّبَريّ رحمهما الله تعالى عن عبدِ الله بنِ عمرَ أنّ رسولَ الله صلى الله عليه وسلم قال: "**صِنْفَانِ من أُمّتي ليسَ لَهُما نَصيبٌ في الإسْلامِ القَدَرِيَّةُ والمرجئَةُ**"155.

فالمعتزلةُ همُ القَدَرِيّةُ لأنّهُم جَعلُوا اللهَ والعَبدَ سَواسيَةً بنَفْيِ القُدْرَةِ عَنْهُ عزّ وجَلّ على مَا يُقْدِرُ عليه عَبْدَه، فَكأنّهُم يُثْبتُونَ خَالقَيْنَ في الحَقيقةِ كَمَا أَثْبتَ المجُوسُ خَالقَيْنِ خَالقًا للخَيْرِ هوَ عندَهُم النّورُ وخالقًا للشّرّ هو عندَهُمُ الظّلامُ.والهدَايَةُ علَى وَجْهَين:

**أحدُهُما** إبَانَةُ الحَقّ والدُّعاءُ إلَيه، ونَصْبُ الأَدلّة عليه، وعلَى هذَا الوَجْه يَصحُّ إضَافَةُ الهدَاية إلى الرُّسُلِ وإلَى كُلّ دَاعٍ لله كَقَولِه تَعالى في رَسُولِه محمّدٍ صلى الله عليه وسلم: **﴿وَإِنَّكَ لَتَهْدِي إِلَى صِرَاطٍ مُّسْتَقِيمٍ (52)﴾** [سورة

---

150 أخرجه الطبراني في المعجم الكبير من حديث عبد الله بن مسعود (116/2). قال الهيثمي في مجمع الزوائد (202/7) "وفيه مسهر بن عبد الله وثقه ابن حبان وغيره وفيه خلاف وبقية رجاله رجال الصحيح".

151 رواه البيهقي في السنن الكبرى (207/10).

152 رواه أبو دواد في سننه: كتاب السنة: باب في القدر.

153 القضاء والقدر (ص/288-289).

154 تهذيب الآثار (180/2).

155 المرجئة هم طائفة انتسبوا للإسلام كانوا يعتقدون أن العبد المؤمن مهما عمل من الكبائر ومات بلا توبة ليس عليه عذاب.

الشورى].

**والثّاني** منْ جهَة هدَايَة الله تعالى لعباده، أيْ خلْقِ الاهتداء في قُلوبهم كقَوْله تعَالى ﴿**فَمَن يُرِدِ اللهُ أَن يَهْدِيَهُ يَشْرَحْ صَدْرَهُ لِلإِسْلاَمِ وَمَن يُرِدْ أَن يُضِلَّهُ يَجْعَلْ صَدْرَهُ ضَيِّقًا حَرَجًا (125)**﴾ [سورة الأنعام].

والإضْلالُ خَلْقُ الضّلالِ في قُلُوبِ أهْلِ الضّلالِ فالعبادُ مشيئَتُهم تابعةٌ لمشيئةِ الله قال تعالى ﴿**وَمَا تَشَاؤُونَ إِلاَّ أَن يَشَاء اللهُ (30)**﴾ [سورة الإنسان].

وهذه الآيةُ من أوضحِ الأدلة على ضلالِ جماعَةِ أمين شيخو لأنهم يقولونَ إن شاءَ العبدُ الهدايةَ يهديه الله وإن شاءَ العبدُ الضلالَ يضلهُ الله[156]،

## مَعْنَى القَدَرِ والإيمانِ به

## கதர் (விதி) பற்றிய விளக்கமும் அதனை ஈமான் கொள்வதும்

சில அறிஞர்கள் கூறியுள்ளார்கள்: “கதர் என்பது அழ்ழாஹ் அவனுடைய ஆரம்பமற்ற அறிவுக்கும், நாட்டத்துக்கும் நேர்படக்கூடிய விதத்தில் வஸ்துக்களை நிர்ணயிப்பதாகும். அதாவது அவை எந்நேரத்தில் உருவாக்கப்படும் என அறிந்துள்ளானோ அந்நேரத்தில் அவற்றை உருவாக்குவான்.”

எனவே அடியான் சுயவிருப்பத்துடன் செய்யக்கூடிய நல்ல, தீய செயல்களும் அதில் உள்ளடங்கும். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அழ்ழாஹ்வின் தூதர் ﷺ அவர்களிடத்தில் ஈமானைப் பற்றி கேட்டபோது, அவர்கள் கூறிய பதில் இதற்கு ஆதாரமாக அமைகிறது. ஈமான் என்பது அழ்ழாஹ்வையும் அவனது மலக்குமார்களையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்களையும், இறுதி நாளையும் நம்பிக்கை கொள்வதும், மேலும் நலவு, கெடுதி அனைத்துமே அழ்ழாஹ்வின் ஏற்பாட்டின் மூலமே உண்டாகின்றன என நம்பிக்கை கொள்வதுமாகும்.

நலவு, கெடுதி அனைத்துமே அழ்ழாஹ்வின் ஏற்பாட்டின் மூலமே உண்டாகின்றன என்பதின் விளக்கம்: அழ்ழாஹு தஆலா நிர்ணயித்த அனைத்துப் படைப்புக்களும் அவற்றில் நலவு கெடுதி வேறுபாடின்றி அவனுடைய ஏற்பாட்டைக் கொண்டே அவை அனைத்துமே

---

156 انظر الكتاب المسمى التفسير الفريد: القسم الثاني (ص267/268).

உருவாகின என்பதாகும். அல்லாஹ்வுக்கு இருக்கும் (تقدير) நிர்ணயித்தல் எனும் பண்பு கெடுதியானது என்று வர்ணிக்கப்படமாட்டாது. மேலும் குப்ர், பாவம் இவ்வாறான கெடுதியை நிர்ணயிப்பதும் மேலும் வணக்கங்களை அவன் நிர்ணயிப்பதும் அவனிடமிருந்து நல்லதென்றே கூறப்படும். அல்லாஹ் அறிந்ததன் பிரகாரம் அவனால் நாடப்பட்ட அனைத்திலும் அவனுடைய நாட்டம் அமுலாகும். எவை எந்நேரத்தில் உருவாகும் என்பதை அல்லாஹ் அறிந்திருந்தானோ அவை அந்நேரத்தில் உருவாகுவதை நாடியுமுள்ளான். மேலும் எவை உண்டாகமாட்டாது என அறிந்திருந்தானோ அவை உண்டாகுவதை அவன் நாடவுமில்லை. எனவே இவ்வுலகில் எந்த ஒன்றும் அல்லாஹ்வின் நாட்டமின்றி உண்டாகமாட்டாது. மேலும் நலவு, கெடுதி, ஆரோக்கியம், நோய், ஏழ்மை, செல்வம் மற்றும் அவைகளல்லாத எதுவும் அல்லாஹ்வின் நாட்டமின்றி அடியானுக்கு ஏற்பட மாட்டாது. மேலும் அல்லாஹ் அடியானுக்கு எது கிடைப்பதை நிர்ணயம் செய்து நாடியுள்ளானோ அது அவனுக்கு கிடைக்காமல் போகாது. ஹதீஸிலே வந்துள்ளது: நிச்சயமாக முஹம்மத் ﷺ அவர்கள் தனது பெண்பிள்ளைகளில் சிலருக்கு பின்வருமாறு கற்றுக் கொடுத்தார்கள்.

"ما شاءَ اللهُ كانَ وما لم يشأ لم يكُن"

“எவை ஏற்படுவதை அல்லாஹ் நாடியுள்ளானோ நிச்சயமாக அவை நடந்தே தீரும். மேலும் எவை ஏற்படுவதை அல்லாஹ் நாடவில்லையோ அவை நடைபெறவேமாட்டாது.” இதனை ஸுனன் எனும் நூலில் இமாம் அபூதாவுத் றஹிமஹுல்லாஹ் அறிவித்துள்ளார்கள். பின்பு இவ்வாக்கியம் இந்த உம்மத்தின் தனி நபர் மத்தியிலும் பிரபல்யமடைந்துள்ளது.

ஸைய்யிதுனா அலீ றழியல்லாஹு அன்ஹு அவர்கள் பின்வருமாறு கூறியதாக இமாம் பைஹகீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் அறிவித்துள்ளார்கள்:

"إنّ أحَدَكُم لَنْ يَخلُصَ الإيمانُ إلى قَلبِهِ حتّى يَستَيْقِنَ يَقِينًا غَيْرَ شَكٍّ أنّ مَا أصَابَهُ لم يَكُن لِيُخطِئَهُ ومَا أخطأَهُ لم يكن لِيُصِيبَهُ، ويُقِرّ بالقَدَرِ كلّهِ"

“உங்களில் ஒருவருக்கு கிடைத்தது அவரை தப்பிச் செல்லக்கூடியதாக இருக்கவில்லை. மேலும் அவருக்கு கிடைக்காமல் சென்றது அவருக்கு கிடைக்க வேண்டுமென்றும் இருக்கவில்லை. என்று எவ்வித சந்தேகமுமின்றி உறுதியாக நம்பி, கழா கதரை முழுமையாக ஏற்றுக் கொள்ளும் வரை ஈமான் அவருடைய உள்ளத்தை சென்றடைய மாட்டாது.” இங்கு அலீ றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் கூறிய وَيُقِرَّ بِالقَدَرِ كُلِّهِ என்பதின் கருத்தானது அழ்ழாஹ்வின் ஏற்பாட்டின் சிலவற்றை ஈமான் கொண்டு மற்ற சிலவற்றை நிராகரிப்பது ஆகுமாகமாட்டாது என்பதாகும்.

மேலும் ஸஹீஹான அறிவிப்பாளர் வரிசையில் இமாம் பைஹகீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் அறிவித்துள்ளர்கள்: உமர் இப்னு ஹத்தாப் றழியழ்ழாஹு அன்ஹு ஷாம் தேசத்தில் ஜாபியா என்றழைக்கப்படக்கூடிய ஒரு பகுதியில் இருக்கும் போது பிரசங்கம் நிகழ்த்தினார்கள். அப்போது அழ்ழாஹ்வை புகழ்ந்து பின்னர் “அழ்ழாஹ் யாரை நேர்வழிப்படுத்துவானோ அவரை யாராலும் வழி தவறச் செய்ய முடியாது. மேலும் அழ்ழாஹ் எவனை வழிதவறச் செய்வானோ அவனை யாராலும் நேர்வழிப்படுத்தவும் முடியாது” எனக் கூறினார்கள். அப்போது அங்கிருந்த அரபி அல்லாத ஒரு திம்மிகாபிர் “அழ்ழாஹ் யாரையும் வழிதவறச் செய்வதில்லை” என தனது பாசையில் கூறினார். உமர் றழியழ்ழாஹு அன்ஹு “இவர் என்ன கூறுகின்றார்?” என தனது மொழி பெயப்பாளரிடம் வினவ, அதற்கு இவர் “அழ்ழாஹ் யாரையும் வழிதவறச் செய்வதில்லை” என்று கூறுகிறார் என மொழிபெயப்பாளர் கூறினார்கள் அதற்கு உமர் றழியழ்ழாஹு அன்ஹு அந்த காபிருக்கு கூறினார்கள்: “அழ்ழாஹ்வின் எதிரியே! நீ பொய் சொல்லிவிட்டாய். நீ திம்மி காபிராக இல்லாவிட்டால் உன் கழுத்தை துண்டித்திருப்பேன். அவனே உன்னை வழிதவறச் செய்தான். மேலும் நீ நிராகரிப்பில் (குப்ரில்) மரணிக்க அவன் நாடியிருந்தால் உன்னை அவனே நரகில் நுழைவிப்பான்” எனக் கூறினர்கள்.

## உமர் ரழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் விரும்பிக் கேட்ட கவிவரிகள்

மேலும் (الحافظ أبو نعيم) அல்ஹாபிழ் அபூநுஐம் றஹிமஹுழ்ழாஹ் அறிவித்துள்ளார்கள்: உமர் றழியழ்ழாஹு அன்ஹு (لبيد بن ربيعة) லபீத் இப்னு றபீஅஹ் றஹிமஹுழ்ழாஹ் என்பவரது கவியை விரும்பக் கூடியவர்களாக இருந்தார்கள்.

அக்கவியின் சில வரிகள் பின்வருமாறு :

إنّ تَقْوى ربّنَا خَيرُ نَفَلْ وبإذنِ الله رَيْثي وعَجَلْ

أحمَدُ اللهَ فَلا نِدّ لهُ بيَدَيْهِ الخيرُ ما شَاءَ فَعلْ

مَنْ هَداهُ سُبُلَ الخَيْرِ اهتَدى ناعِمَ البَالِ ومَنْ شَاءَ أضَل

- எங்களுடைய றப்பை அஞ்சி நடப்பது அதாவது கடமைகளை முழுமையாக நிறைவேற்றுவதும் பாவங்களைத் தவிர்ந்து கொள்வதும் ஒரு மனிதனுக்கு வழங்கப்படக்கூடிய அருள்களில் சிறந்ததாகும்.
- வேகமாக செயல்படக்கூடியவர் வேகமாகவும், தாமதமாக செயல்படக்கூடியவர் தாமதமாகவும் அழ்ழாஹ்வின் நாட்டப்படியே செயல்படுகின்றனர்.
- அழ்ழாஹ்வை நான் புகழ்கிறேன். அவனுக்கு எவ்வித நிகரும் கிடையாது.
- நலவுக்கும் கெடுதிக்கும் அவனே சொந்தக்காரன். அவன் நாடியதை செய்வான்.

எவர் நேர்வழியில் இருக்க அழ்ழாஹ் நாடியுள்ளானோ நிச்சயமாக அவர் அமைதி பெற்ற உள்ளத்துடன் நேர்வழிபெறுவார். மேலும் எவரை வழி தவற நாடியள்ளானோ அவனை வழிதவறச் செய்வான்.

## இமாம் ஷாபிஈ றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் கதர் பற்றி கூறிய கவிவரிகள்

இமாம் ஷாபிஈ றழியழ்ழாஹு அன்ஹு அவர்களிடம் கதரைப் பற்றிக் கேட்க்கப்பட்ட போது பின்வருமாறு கூறினார்கள். இதனை இமாம் பைஹகி றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் அறிவிக்கிறார்கள் :

ما شِئتَ كانَ وإن لم أشأ　　وما شئتُ إن لم تشأ لم يكن
خَلقتَ العبادَ على ما علمتَ　　ففي العلمِ يجري الفَتَى والمُسِن
على ذا مَنَنْتَ وهذا خذلْتَ　　وهذا أَعنتَ وذا لم تُعِنْ
فمنهم شَقِيٌّ ومنهم سَعيدٌ　　وهذا قبيحٌ وهذا حَسَن

- (யா அழ்ழாஹ்) நீ நாடியது நான் நாடாத போதிலும் அது நிறைவேறும். நான் நாடியது உனது நாட்டமின்றி நிறைவேறாது.
- வாலிபர்கள் மற்றும் வயோதிபர்களின் செயற்பாடுகள், முயற்சிகள் அழ்ழாஹ்வின் அறிவின் பிரகாரமாகும்.
- சிலருக்கு நீ ஈமானை அருளினாய். இன்னும் சிலருக்கு நீ அதனை அருளவில்லை. சிலருக்கு நல்லமல் செய்ய நீ உதவி செய்தாய். இன்னும் சிலருக்கு நல்லமல் செய்ய நீ உதவி செய்யவில்லை.
- அவர்களில் சீதேவிகளும் உள்ளனர். மூதேவிகளும் உள்ளனர். அவர்களில் நல்லவர்களும். உள்ளனர் தீயவர்களும் உள்ளனர்.

அத்தியாயம் அல் அஃராபின் 155 ஆவது வசனத்தில் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியதை அழ்ழாஹ் பின்வருமாறு கூறியுள்ளான்

﴿إِنْ هِيَ إِلاَّ فِتْنَتُكَ تُضِلُّ بِهَا مَن تَشَاء وَتَهْدِي مَن تَشَاء﴾

“யாஅல்லாஹ் அது உனது சோதனையாகும். அதன் மூலம் நீ நாடியோரை வழிதவறச் செய்வாய்; மேலும் நீ நாடியோரை நேர்வழிப்படுத்துவாய்.”

என்ற அல்லாஹ்வுடைய கூற்றை ஆதாரமாகக் கொண்டு ﴿يُضِلُّ مَن يَشَاء وَيَهْدِي مَن يَشَاء﴾ “அவன் நாடியோரை வழிதவறச் செய்வான். மேலும் அவன் நாடியோரை நேர்வழிபடுத்துவான்” என்ற அல்லாஹு தஆலாவுடைய கூற்றிலே இடம்பெற்றுள்ள பிரதிப்பெயரானது அல்லாஹ்வையே குறிக்கின்றது. கதரிய்யஹ்கள் நம்பியிருப்பது போன்று அடியானை அல்ல என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

## அமீன் ஷைஹு அவர்களது ஜமாஅத்தினரின் வழிகேடுகள் சில

அமீன் ஷைஹு என்பவனின் பால் தம்மை இணைத்துக் கொள்ளக் கூடிய ஒரு கூட்டம் “அல்லாஹ்வுடைய நாட்டமானது அடியானுடைய நாட்டத்தை துயரக்கூடியது” எனக் கருதுகின்றனர். - இவர்களுடைய தற்காலத் தலைவர் டமஸ்கஸைச் சேர்ந்த அப்துல்ஹாதில்பானீ என்பவராவார்- அவர்களைப் பொறுத்தமட்டில் மேற்குறித்த வசனத்தின் கருத்தானது “அடியான் நேர்வழி பெறுவதை நாடினால் அல்லாஹ் அவனுக்கு நேர்வழியை நாடுவான். அடியான் வழி தவறுவதை நாடினால் அல்லாஹ் அவனை வழிகெடுப்பான்” என்பதாகும். இந்த நம்பிக்கையின் காரணமாக

﴿وَمَا تَشَاؤُونَ إِلاَّ أَن يَشَاء اللَّهُ﴾

“அல்லாஹ்வின நாட்டமின்றி அடியார்கள் எதனையும் நாடமுடியாது” என்ற அல்லாஹ்வுடைய கூற்றை அவர்கள் பொய்ப்பித்து விட்டனர்.

சிலர் இக்கருத்துக்கு எதிராக சில வசனங்களின் அர்த்தங்களை மாற்றி ஆதாரம் எனும் பெயரில் கொண்டுவர முயன்றால் இவர்களுக்கு “குர்ஆன் வசனங்கள் ஒன்றுக்கு ஒன்று நேர்படுமே தவிர முரண்படமாட்டாது. குர்ஆனில் எவ்வசனமும் இன்னொரு வசனத்திற்கு முரணாக இல்லை. மேலும் இவ்வசனம் (الناسخ والمنسوخ) நாஸிஹ் மன்ஸூஹ் எனும் வகையை சார்ந்ததல்ல.” என்று சொல்லப்படும். ஏனெனில் (ناسخ) நாஸிஹ் என்பது கொள்கை சார்ந்த

விடயங்களுக்குள் வரமாட்டாது. எனவே இந்த வசனம் ஏனைய வசனங்களுக்கு முரணாகமாட்டாது. (النسخ) 'நஸ்ஹ்' என்பது: செய்திகள், வரலாறுகள் போன்ற விடயங்களில் நுழையமாட்டாது. மாறாக ஏவல், விலக்கல் போன்ற விடயங்களில் நுழையும். 'நஸ்ஹ்' என்பது: வரக்கூடிய ஒரு வசனத்தின் சட்டத்தின் மூலம் முன்வந்த வசனத்தின் சட்டம் முடிவடைந்தது என்பதை தெளிவுபடுத்துவதாகும்.''

மேற்கூறப்பட்ட கூட்டம் (الناسخ والمنسوخ) நாஸிஹ், மன்ஸூஹ்கை நம்புபவர்களல்ல.

மேலும் இவர்களின் விசித்திரமான மடமையின் காரணமாக ﴿وَعَلَّمَ ءادَمَ الأَسْمَاء كُلَّهَا﴾ எனும் வசனத்திற்கு أسماء الله الحسنى அழ்ழாஹ்வுடைய நாமங்களைக் கற்றுக் கொடுத்தான் என்று பிழையாக விளக்கம் கொடுக்கின்றனர். இவ்வசனத்தின் சரியான விளக்கம் அழ்ழாஹ் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அனைத்து பொருள்களினதும் பெயர்களைக் கற்றுக்கொடுத்தான். மாறாக இவர்கள் கூறுவது போன்று அழ்ழாஹ் அல்-அஸ்மாஉல் ஹுஸ்னாவை கற்றுக் கொடுத்தான் என விளக்கம் சொல்வது கூடாது. அவர்கள் எண்ணிக்கொண்டிருப்பது போல் அந்த வசனத்தில் இடம்பெற்றுள்ள أسماء அழ்ழாஹ்வுடைய அஸ்மாவாக இருக்குமேயானால் அழ்ழாஹ் ﴿فَلَمَّا أَنبَأَهُمْ بِأَسْمَآئِهِمْ﴾ எனக் கூறாமல் فلما أنبأهم بأسمائي எனக் கூறியிருப்பான். இங்கு அவர்கள் வாயடைத்துப் போய் விடுவார்கள். என்றாலும் இவர்கள் தங்களது மடமையிலும் குர்ஆனுடைய அர்த்தங்களை மாற்றுவதிலும் பிடிவாதமாக உள்ளனர்.

:இமாம் ஹாகிம் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் அறிவித்துள்ளார்கள் அலி அர் றிழா இப்னு மூஸா அல் காழிம் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் வாலிப பருவத்தில் மதினாவிலே உள்ள றவ்ழா ஷரீபில் அமர்ந்திருக்கையில் பள்ளியில் மக்களும், அறிஞர்களும் அவர்களிடம் கேள்வி கேட்கக்கூடியவர்களாக இருந்தார்கள். அச்சமயம் அவர்களிடம் கதர் (விதி) பற்றிக் கேட்க்கப்பட்டது. அதற்கு அவர்கள்

﴿إِنَّ الْمُجْرِمِينَ فِي ضَلَالٍ وَسُعُرٍ * يَوْمَ يُسْحَبُونَ فِي النَّارِ عَلَى وُجُوهِهِمْ ذُوقُوا مَسَّ سَقَرَ * إِنَّا كُلَّ شَيْءٍ خَلَقْنَاهُ بِقَدَرٍ﴾

என்ற அத்தியாயம் அல் கமர் உடைய 47, 48, 49 வசனங்களை குறிப்பிட்டு பின்னர் பின்வருமாறு கூறினார்கள் "நிச்சயமாக அறிவு, விளப்பக்குறைவு உட்பட அனைத்தையும் அழ்ழாஹ்வே படைத்தான். அவன் நாட்டப்படியே அனைத்தும் நடைபெறுகின்றது. வணக்கத்தில் ஈடுபடுவதற்கு அவனே சக்தியை கொடுக்கின்றான் மேலும் பாவத்தை விட்டும் தவிர்ந்து கொள்வதற்கு அவனே உதவியும் செய்கிறான்." என்று அமீருல் முஃமினீன் அலீ இப்னு அபீ தாலிப் றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் கூறக்கூடியவர்களாக இருந்தார்கள் என என் தந்தை அவரின் தந்தைமார்களைத் தொட்டும் கூறுவார்கள்.

அடியார்கள் அவர்களிடமிருந்து ஏற்படுவதை தம் சுயவிருப்பத்தினால் செய்ய ஈர்க்கப்படுகிறார்கள். கட்டாயத்தினால் அல்லது வற்புறுத்தலினால் அல்ல. அதாவது ஜப்ரிய்யாக்கள் கூறுவதைப் போல் அடியார்களின் செயல்கள் காற்று வலப்பக்கம் இடப்பக்கமாக அசையவைக்கக்கூடிய, தொங்கவிடப்பட்ட இறக்கையைப் போன்றதாகும் என்பதல்ல.

பாவிகள் பாவம் செய்வதை, காபிர்கள் நிராகரிப்பதை, முஃமின்கள் ஈமான் கொள்வதை, வணக்கசாலிகள் வணங்குவதை அழ்ழாஹ் நாடியிருக்காவிட்டால் சுவர்க்கத்தையோ, நரகத்தையோ அவன் படைத்திருக்கமாட்டான்.

யார் "அழ்ழாஹ் நலவை மாத்திரம் படைக்கின்றான். பாவத்தைப் படைப்பதில்லை" என்று சொல்வாரோ அவர் அழ்ழாஹ்வுக்கு இயலாமை எனும் தன்மையை இணைத்துவிட்டார். விடயம் அவ்வாறு இருக்குமாயின் இவ்வுலகிற்கு நலவைப் படைப்பவன், கெடுதியைப் படைப்பவன் என இரு ஏற்பாட்டாளர்கள் இருந்திருப்பார்கள். இது குப்ரும், ஷிர்க்குமாகும். இந்த மடமையான கருத்தானது மற்றுமொரு வகையில் அழ்ழாஹ்வை அவனது ஆட்சியில் மிகைக்கப்பட்டவனாகவும் ஆக்கிவிடும்.

ஏனெனில் இவரின் நம்பிக்கையின் பிரகாரம் அழ்ழாஹ் நலவை மாத்திரம் நாடியுள்ளான் என்றிருந்தால், கெடுதி அழ்ழாஹ்வின் எதிரியான இப்லீஸிடமிருந்தும், அவனுடைய உதவியாளர்களான காபிர்களிடமிருந்தும் அழ்ழாஹ்வின் நாட்டத்துக்கு எதிராக நிகழ்ந்தது என்பதாக ஆகிவிடும். இக்கருத்து ﴿وَاللهُ غَالِبٌ عَلَى أَمْرِهِ﴾ என்ற அழ்ழாஹ்வின் கூற்றிற்கு முரண்படுவதனால் அதனை நம்பிக்கை கொள்பவர் காபிராகிவிடுகின்றார். இவ்வசனத்தின் விளக்கம்: “அழ்ழாஹ்வின் நாட்டம் நிறைவேறுவதை எவராலும் தடுக்க முடியாது”

ஒழுக்கத்துக்காக நலவை அழ்ழாஹ்வின் பாலும், கெடுதியை அடியானின் பாலும் இணைத்துக் கூறுபவருக்கு எக்குற்றமும் கிடையாது. எனினும் அழ்ழாஹ் நலவை மாத்திரம் படைத்துள்ளான் கெடுதியைப் படைக்கவில்லை என நம்பிக்கை கொள்வாராயின் அவர் காபிர் என தீர்ப்பளிக்கப்படுவார்.

அறிந்து கொள்ளுங்கள்! அழ்ழாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக! அழ்ழாஹ் பாவியை வேதனை செயவது அவனது நீதத்தின் மூலமாகும். அது அநீதியல்ல. மேலும் வழிபடுபவருக்கு நற்கூலி வழங்குவது அவனது கொடையின் மூலமாகும். அது அவனுக்கு கடமையல்ல.

ஏனெனில் அநீதி என்பது எவனுக்கு கட்டளையிடுபவனும், தடைவிதிப்பவனும் இருப்பானோ அவனிடமிருந்தே உண்டாக முடியும். அழ்ழாஹ்வுக்கு கட்டளையிடுபவனும் கிடையாது, தடைவிதிப்பவனும் கிடையாது. அழ்ழாஹ் அவனுக்கு சொந்தமானவைகளில் நாடியதை செய்பவன். ஏனெனில் அவனே அனைத்து வஸ்த்துக்களைப் படைத்தவனும், அவைகளுக்கு சொந்தக்காரனுமாவான்.

இமாம் அஹ்மத் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் தனது முஸ்னதிலும், இமாம் அபூதாவுத் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் தனது ஸுனனிலும் மேலும் இப்னு ஹிப்பான் றஹிமஹுழ்ழாஹ் அவர்களும் அறிவித்துள்ளார்கள். (الإمام الديلمي) இமாம் இப்னுத் தைலமீ

றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்: “நான் (أبي بن كعب) உபைய் இப்னு கஃப் றழியழ்ழாஹு அன்ஹு அவர்களிடம் வந்து, (أبو المنذر) அபுல் முன்திரே! எனது உள்ளத்தில் கதர் (ஏற்பாடு) தொடர்பான மோசமான ஒரு ஊசலாட்டம் ஏற்பட்டுள்ளது. அது தொடர்பாக எனக்கு விளக்கமளிப்பீராக அழ்ழாஹ் அதன்மூலம் எனக்கு பிரயோசனம் அளிக்கலாம்” எனக் கேட்டேன். அதற்கு அபுல் முன்திர் றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

"إنّ الله لَوْ عَذّبَ أهْلَ أرْضه وسَمواته لعَذّبَهُم وهُوَ غَيْرُ ظَالم لَهُم وَلَوْ رَحمَهُم كَانَت رَحْمَتُه خَيْرًا لَهُم مِنْ أعْمَالِهم، ولَو أنفقْتَ مثلَ أحُد ذَهَبًا في سَبيْل الله مَا قَبلَهُ الله منْكَ حَتّى تُؤمنَ بالقَدَرِ، وتَعْلَمَ أنّ مَا أصَابَكَ لم يَكُن لِيُخْطِئَكَ ومَا أخْطأَكَ لم يكنْ لِيُصِيبَكَ ولو مِتّ علَى غَيْرِ هَذا دَخَلْتَ النّارَ"

“அழ்ழாஹ் பூமியில், வானங்களில் இருப்போர் அனைவரையும் தண்டிக்க நாடியிருந்திருப்பானேயானால் அவர்களை தண்டித்திருப்பான். அப்போதும் அவன் அவர்களுக்கு எதுவித அநீதி செய்தவனாகவும் ஆகமாட்டான். மேலும் அவன் அவர்களுக்கு அருள் புரிந்திருந்தால் அவனுடைய அருள் அவர்களுடைய அமல்களை விடவும் சிறந்ததாக இருந்திருக்கும். கழா கதரை நம்பி, மேலும் “உனக்கு கிடைத்த ஒன்று உன்னை தப்பிச் செல்லக்கூடியதாக இருக்கவில்லை. மேலும் உனக்கு கிடைக்காமல் சென்ற ஒன்று அது உனக்கு கிடைக்க வேண்டுமன்றும் இருக்கவில்லை” என்பதை நீ அறிந்து கொள்ளும் வரையில் உஹது மலையளவு அழ்ழாஹ்வின் பாதையில் தங்கம் செலவழித்தாலும் அழ்ழாஹ் அதனை ஏற்றுக் கொள்ளமாட்டான். இதுவல்லாத கோட்பாட்டின் மீது நீ மரணித்துவிட்டால் நரகம் நுழைந்துவிடுவாய்” எனக் கூறினார்கள்.

மேலும் இப்னுத் தைலமி றழியழ்ழாஹு அன்ஹு கூறினார்கள்: நான் (عبد الله بن المسعود) அப்துழ்ழாஹ் இப்னு மஸ்ஊத் மேலும் (حذيفة بن اليمان) ஹுதைபா இப்னுல் யமானி றழியழ்ழாஹு அன்ஹுமா அவர்களிருவரிடமும் சென்று இது பற்றிக் கேட்ட போது அவ்விருவரும் மேற்கூறியது போன்றே பதிலளித்தார்கள். அதனையடுத்து நான் (زيد بن ثابت) ஸைத் இப்னு ஸாபித் றழியழ்ழாஹு அன்ஹு அவர்களிடம் சென்று இது பற்றிக் கேட்ட போது

அவர்களும் அவ்வாறே ரஸூலுல்லாஹி ﷺ அவர்களைத் தொட்டும் எனக்கு அறிவித்தார்கள்.

(أبو الأسود الدؤلي) அபுல் அஸ்வதுத் துஅலீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியதாவது "என்னிடம் (عمران بن الحسين) இம்ரான் இப்னுல் ஹுஸைன் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் மனிதர்கள் இன்று செயல்களை மேற்கொள்வதும் அதற்காக முனைந்து செயலாற்றுவதும் ஏற்கனவே அவர்கள் மீது தீர்மானிக்கப்பட்ட முன்பே முடிவுசெய்யப்பட்ட விதியின் அடிப்படையிலா? அல்லது மனிதர்கள் இன்று செயல்களை மேற்கொள்வதும் அதற்காக முனைந்து செயலாற்றுவதும் ஏற்கனவே தீர்மானிக்கப்படாத புதுமையாக தோன்றக்கூடியவைகளா? அவ்வாறு கூறுவோருக்கெதிராக ஆதாரத்தை நிலைநிறுத்தும் வகையில் அவர்களுடைய இறைத்தூதர்கள் அவர்களிடம் கொண்டு வந்துள்ளவற்றிலிருந்து ஆதாரத்தை நிலை நாட்டுவீராக?" எனக்கூற, அதற்கு நான் "ஏற்கனவே அவர்கள் மீது தீர்மானிக்கப்பட்டு, அல்லாஹ்வின் ஏற்பாட்டைக் கொண்டு முந்திய விதியின் அடிப்படையில்தான்" என்று சொன்னேன். அதற்கு இம்ரான் இப்னுல் ஹுஸைன் அவர்கள் "இது அநீதியாகாதா?" என்று கேட்டார்கள். அதைக்கேட்ட நான் கடுமையாக அதிர்ந்து விட்டேன். மேலும் "அனைத்தும் அல்லாஹ்வின் படைப்பே. அவனது அதிகாரத்துக்குட்பட்டவையே. அவன் செய்வது குறித்து யாரும் கேள்வி கேட்க முடியாது. ஆனால் மனிதர்களே விசாரிக்கப்படுவார்கள்" என்று சொன்னேன். அப்போது இம்ரான் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் "அல்லாஹ் உங்களுக்கு அருள் புரியட்டும் நான் உங்களிடத்தில் இவ்வாறு கேள்வி கேட்டதானது உங்கள் அறிவை பரிசோதிப்பதற்காக வேண்டியே தவிர வேறெதற்காகவுமல்ல. முஸைனா கோத்திரத்தைச் சேர்ந்த இரு நபர்கள் அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களிடத்தில் வந்து "அல்லாஹ்வின் தூதரே! மனிதர்கள் இன்று செயல்களை மேற்கொள்வதும் அதற்காக முனைந்து செயலாற்றுவதும் ஏற்கனவே அவர்கள் மீது தீர்மானிக்கப்பட்ட முன்பே முடிவுசெய்யப்பட்ட விதியின் அடிப்படையிலா? அல்லது மனிதர்கள் இன்று செயல்களை

மேற்கொள்வதும் அதற்காக முனைந்து செயலாற்றுவதும் ஏற்கனவே தீர்மானிக்கப்படாத புதுமையாக தோன்றக்கூடியவைகளா? அவ்வாறு கூறுவோருக்கெதிராக ஆதாரத்தை நிலை நிறுத்தும் வகையில் அவர்களுடைய இறைத்தூததர்கள் அவர்களிடம் கொண்டு வந்துள்ளவற்றிலிருந்து ஆதாரத்தை நிலை நாட்டுவீராக"? என்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் "ஏற்கனவே அவர்கள் மீது தீர்மானிக்கப்பட்ட, அல்லாஹ்வின் ஏற்பாட்டைக் கொண்டு முந்திய விதியின் அடிப்படையில்தான்" என்று கூறிவிட்டு "இதை உண்மைப்படுத்தும் சான்று வல்லமையும், மாண்புமிக்க அல்லாஹ்வின் வேதத்தில் உள்ளது" என்று கூறி அத்தியாயம் அஷ்ஷம்ஸ் உடைய பின்வரும் வசனங்களை ஓதிக்காட்டினார்கள்

﴿وَنَفْسٍ وَمَا سَوَّاهَا﴾ ﴿فَأَلْهَمَهَا فُجُورَهَا وَتَقْوَاهَا﴾

இவ்வசனம் அறிவிப்பது நலவும், கெடுதியும் அல்லாஹ்வின் ஏற்பாட்டின் பிரகாரமே உண்டாகிறது என்பதையாகும். இதனை இமாம் முஸ்லிம் றஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களது ஸஹீஹிலும், இமாம் பைஹகீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களது (كتاب القدر) 'கிதாபுல் கதரிலும்' அறிவிப்புச்செய்துள்ளனர்.

"فمنْ وجَدَ خَيْرًا فليحمَدِ الله ومنْ وجدَ غيرَ ذلك فلا يلومَنَّ إلا نفسَه"

"நலவை அடைந்துகொண்டவர் அல்லாஹ்வைப் புகழ்ந்து கொள்ளட்டும். மேலும் அது அல்லாததை அடைந்துகொண்டவர் அவரையே அவர் பழித்துக்கொள்ளட்டும்." எனும் ஹதீஸ் ஸஹீஹானதாகும். இதனை அல்லாஹு தஆலா கூறியதாக முஹம்மத் ﷺ அவர்கள் கூறியதை அபூதர் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸின் வாயிலாக இமாம் முஸ்லிம் றஹிமஹுல்லாஹ் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

"நலவை அடைந்துகொண்டவர் அல்லாஹ்வைப் புகழ்ந்து கொள்ளட்டும்" என்று கூறப்பட்டதின் காரணம் அல்லாஹ் அவரிலே நலவை ஏற்படுத்துவது கொண்டு அவருக்கு அருள் புரிந்துள்ளான் என்பதாகும். அவ்வாறு அருள் புரிவது அவனுக்கு அவசியம்

கிடையாது. எனவே அடியான் அவனுக்கு அளித்த அருளுக்காக அழ்ழாஹ்வை புகழ்ந்து கொள்ளட்டும்.

“கெடுதியைப் அடைந்துகொண்டவர் அவரையே அவர் பழித்துக்கொள்ளட்டும்” என்று கூறப்பட்டதன் காரணம் மோசமான அடியானிடமிருந்து ஏற்பட்டதை அழ்ழாஹ் அவனுடைய வல்லமையைக் கொண்டு வெளிப்படுத்தினான் என்பதற்காகவாகும். எனவே யாரை வழிதவறச் செய்தானோ அது அவனது நீதத்தைக்கொண்டாகும். மேலும் யாருக்கு அழ்ழாஹ் நேர்வழிகாட்டினானோ அது அவனது அருளைக் கொண்டாகும்.

மேலும் அழ்ழாஹ் படைப்புகளைப் படைத்து, ஒரு பிரிவினரை சுவனத்திற்கும் மற்றபிரிவினர் ஈமான் கொள்ளமாட்டார்கள் என்று அழ்ழாஹ் அறிந்திருப்பதற்காக வேண்டி அவர்களை நரகத்திற்கும் அனுப்பினால் அவர்களில் தண்டனை செய்யப்படுவோரின் விடயம் அழ்ழாஹு தஆலா பின்வரும் கூற்றில் வர்ணித்தவாறு ஆகிவிடும்.

﴿وَلَوْ أَنَّا أَهْلَكْنَاهُم بِعَذَابٍ مِّن قَبْلِهِ لَقَالُوا رَبَّنَا لَوْلَا أَرْسَلْتَ إِلَيْنَا رَسُولًا فَنَتَّبِعَ ءَايَاتِكَ مِن قَبْلِ أَن نَّذِلَّ وَنَخْزَى﴾

விளக்கம்: “ஒரு தூதர் அனுப்பப்படுவதற்கு முன்னதாகவே நாம் அவர்களை வேதனை செய்தால் ‘எங்கள் இறைவனே! நீ எங்களுக்கு ஒரு தூதரை அனுப்பியிருக்க வேண்டாமா? அவ்வாறு அனுப்பியிருந்தால் நாங்கள் இந்த இழிவுக்கும் நிந்தனைக்கும் உள்ளாவதற்கு முன்னதாகவே உன்னுடைய வசனங்களைப் பின்பற்றியிருப்போமே!’ என்று கூறுவார்கள்.”

அத்தியாயம் : தாஹா வசனம் : 134

ஆகவே அடியான் அழ்ழாஹ்வுக்கு வழிப்படுவதிலும், மாறுசெய்வதிலும் எந்த அளவு தயார்நிலையில் இருக்கிறார் என்பதை வெளிப்படுத்துவற்காக நன்மாராயம் கூறி, எச்சரிக்கை செய்யும் றஸூல்மார்களை அழ்ழாஹ் அனுப்பிவைத்தான். எனவே நாசமடைபவர் ஆதாரத்துடனே நாசமடைகிறார். நல்வாழ்வு வாழ்பவர் ஆதாரத்துடனே நல்வாழ்வு வாழ்கிறார். அவனுடைய படைப்பில் ஒரு பிரிவினர் அவர்களின் சுயவிருப்பத்தினால் செய்யக்கூடிய அமல்களின் மூலம் நரகம் நுழைவார்கள் என அழ்ழாஹ்

அறிவித்துள்ளான். அவர்கள் ஈமான் கொள்ள மாட்டார்கள் என்பதையும் அழ்ழாஹ் அவனது ஆரம்பமில்லாத அறிவின் மூலம் அறிந்தவனாக உள்ளான்.

அழ்ழாஹ் குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்

﴿وَلَوْ شِئْنَا لَآتَيْنَا كُلَّ نَفْسٍ هُدَاهَا وَلَكِنْ حَقَّ الْقَوْلُ مِنِّي لَأَمْلَأَنَّ جَهَنَّمَ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ أَجْمَعِينَ﴾

விளக்கம்: “நாம் நாடியிருந்தால் ஒவ்வொரு மனிதனுக்கும், அவன் நேரான வழியில் செல்லக்கூடிய வசதியைக் கொடுத்திருப்போம். எனினும், ஜின்களிலும், மனிதர்களிலுமுள்ள பாவிகளைக் கொண்டு நிச்சயமாக நரகத்தை நிரப்புவோம் எனும் வார்த்தை தீர்ப்பாகிவிட்டது.”

அத்தியாயம் : அஸ் ஸஜ்தஹ் வசனம் : 13

“எனினும், ஜின்களிலும், மனிதர்களிலுமுள்ள பாவிகளைக் கொண்டு நிச்சயமாக நரகத்தை நிரப்புவோம்” என்று அவன் அறிவித்துள்ளது உண்மையானது. அது மாறாது. ஏனெனில் வாக்குறுதிக்கு மாறுசெய்வது பொய்யாகும். பொய் அழ்ழாஹ்வின் விடயத்தில் சாத்தியமற்றதாகும்.

## إذا ذُكِرَ الْقَدَرُ فَأَمْسِكُوا என்ற ஹதீஸின் விளக்கம்

நாம் கதர் பற்றி விபரித்ததானது (إذا ذكر القدر فأمسكوا) "கதரைப் பற்றி கூறப்பட்டால் நிறுத்திக்கொள்ளுங்கள்."என்ற நபி ﷺ அவர்களின் வார்த்தையைக் கொண்டு தடுத்த ஆழமாக ஆராயப்படும் கதருக்கு உட்பட்டதல்ல. ஏனெனில் இங்கு கூறப்பட்டதானது மார்க்க நேரடிக்கூற்றுகளில் வந்திருக்கும் கதரைப் பற்றிய தெளிவாகும். எனவே தடைசெய்யப்பட்டதானது கதருடைய இரகசியத்தை அறிவதின் பால் சென்றடைவதற்காக அதனை ஆழமாக ஆய்வுசெய்வதாகும்.

நபி ﷺ அவர்கள் கதரிய்யஹ்களை இகழ்ந்துள்ளார்கள் என்பதை அறிந்துகொள். அவர்கள் பல பிரிவினர்களாவர். அவர்களில் சிலர் "அடியான் தனது சுயவிருப்பத்தின் மூலம் செய்யக்கூடிய அனைத்து செயல்களையும் படைக்கிறான்" எனக் கூறுகின்றனர். அவர்களில் இன்னும் சிலர் "அடியான் நலவையன்றி கெட்டதை படைக்கிறான்" எனக் கூறுகின்றனர். இவ்விரு பிரிவினர்களும் காபிர்களாவர்.

"القَدَرِيةُ مَجُوسُ هذهِ الأُمّةِ"

"கதரிய்யஹ்கள் இந்த சமுதாயத்தின் நெருப்பு வணங்கிகளாவர்" என ரஸூலுழ்ழாஹி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள். மற்றுமொரு அறிவிப்பில்

"لِكُلِّ أمّةٍ مَجُوسٌ، ومَجُوسُ هذهِ الأُمّةِ الذينَ يَقُولونَ لا قَدَرَ"

"ஒவ்வொரு சமுதாயத்திலும் நெருப்பு வணங்கிகள் உள்ளனர், இந்த சமுதாயத்தின் நெருப்பு வணங்கிகள் கதர் இல்லை எனக் கூறக்கூடியவர்களாகும்" என்பதாக வந்துள்ளது. இதனை இமாம் அபூ தாவூத் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் ஹுதைபா றழியழ்ழாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் அறிவித்துள்ளார்கள்.

அப்துழ்ழாஹ் இப்னு உமர் றழியழ்ழாஹ் அன்ஹுமா அவர்களைத் தொட்டும் இமாம் பைஹகீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் கிதாபுல் கதர் எனும் நூலிலும், (**الإمام ابن جرير الطبري**) இமாம் இப்னு ஜரீர் அத்தபரீ

றஹிமஹுல்லாஹ் அவர்கள் (تهذيب الآثار) 'தஹ்தீபுல் ஆஸார்' எனும் நூலிலும் அறிவித்துள்ளார்கள். "இரு பிரிவினருக்கு இஸ்லாத்தில் எந்தப்பங்கும் கிடையாது அவர்கள் கதரிய்யஹ் மற்றும் முர்ஜிஅஹ்களாகும்."

முஃதஸிலஹ்கள் எனப்படுவோரே கதரிய்யஹ்களாவார்கள். ஏனெனில் அவர்கள் அல்லாஹ், அடியார்களுக்கு சக்தியைக் கொடுத்ததன் மூலம் அவனுக்கு சக்தி கிடையாது எனக் கூறி அல்லாஹ்வையும் அடியார்களையும் சமமாகக் கருதுகிறார்கள். இவர்கள் யதார்த்தத்தில் இரு படைப்பாளர்கள் உள்ளார்கள் என நம்புகின்றார்கள். அதாவது மஜூஸிகள் (நெருப்பு வணங்கிகள்) இரு படைப்பாளர்கள் உள்ளார்கள் என கூறுவதைப் போன்று இவர்களும் இவ்வாறு கூறுகிறார்கள். மஜூஸிகள் ஒளி நலவைப்படைக்கக் கூடியது எனவும், இருள் கெடுதியைப் படைக்கக்கூடியது எனவும் கருதுகின்றனர்.

**"ஹிதாயத்" எனும் வார்த்தை இரு பொருளில் வரும்**

அதில் ஒன்று சத்தியத்தை தெளிவுபடுத்துவதும் அதன் பால் அழைப்பதும். மேலும் அதற்கான ஆதாரங்களை நிலைநாட்டுவதும் எனும் அர்த்தமாகும். இந்தப் பொருளில் ஹிதாயத்தை றஸூல்மார்களின் பாலும் ஏனைய அனைத்து தஃவா செய்யக்கூடியவர்களின் பாலும் இணைத்துக் கூறலாம். அல்லாஹ் முஹம்மத் ﷺ அவர்களுடைய விடயத்தில் கூறுகிறான்.

﴿وَإِنَّكَ لَتَهْدِي إِلَى صِرَاطٍ مُّسْتَقِيمٍ﴾

விளக்கம்: "முஹம்மதே ﷺ நீங்கள் சரியான பாதையை காண்பிக்கிறீர்கள்"

அத்தியாயம் : அஷ்ஷூறா வசனம் : 52

இரண்டாவது அல்லாஹ் அடியார்களை நேர்வழிப்படுத்துவது. அதாவது அவர்களுடைய உள்ளங்களிலே நேர்வழியைப் படைப்பதாகும்.

அழ்ழாஹ் குர்ஆனில் கூறுகின்றான்

﴿فَمَن يُرِدِ اللهُ أَن يَهْدِيَهُ يَشْرَحْ صَدْرَهُ لِلإِسْلاَمِ وَمَن يُرِدْ أَن يُضِلَّهُ يَجْعَلْ صَدْرَهُ ضَيِّقًا حَرَجًا﴾

விளக்கம்: “எனவே எவருக்கு அல்லாஹ் நேர்வழி காட்ட நாடுகின்றானோ அவருடைய நெஞ்சத்தை இஸ்லாத்திற்காக விரிவாக்கிவிடுகின்றான். எவனை வழிகேட்டிலாழ்த்த நாடுகின்றானோ அவனது நெஞ்சத்தை இறுக்கமாக்கி விடுகின்றான் எந்த அளவுக்கெனில் (இஸ்லாத்தைப் பற்றி நினைத்ததுமே) அவனுடைய உயிர் வானத்தை நோக்கி ஏறுவதைப் போல் உணர்கின்றான்.”

அத்தியாயம் : அல் அன்ஆம் வசனம் : 125

வழிதவறச் செய்வது என்பது அழ்ழாஹு தஆலா வழிகேடர்களின் உள்ளத்தில் வழிகேட்டைப் படைப்பதாகும். ஆகவே அடியார்களுடைய நாட்டம் அழ்ழாஹ்வுடைய நாட்டத்தைத் துயரக்கூடியதாகும்.

அழ்ழாஹ் குர்ஆனில் கூறியுள்ளான்:

﴿وَمَا تَشَاؤُونَ إِلاَّ أَن يَشَاءَ اللهُ﴾

விளக்கம் : “அழ்ழாஹ்வின் நாட்டமின்றி உங்களால் எதையும் நாடமுடியாது.”

அத்தியாயம் : அல்-இன்ஸான் வசனம் : 30

அமீன் ஷைஹு உடைய கூட்டத்தார் “ஓர் அடியான் நேர்வழியை நாடினால் அழ்ழாஹ் அவனுக்கு நேர்வழி காட்டுவான், அடியான் வழிகேட்டை நாடினால் அழ்ழாஹ் அவனை வழித்தவறச் செய்கிறான்” என்று கூறி வருவதனால் அவர்கள் வழிகேட்டில் உள்ளார்கள் என்பதற்கு இவ்வசனம் மிகத் தெளிவான ஒரு ஆதாரமாகும்.

பாகம் 01 நிறைவுற்றது

الحمد لله والصلاة والسلام عليك يارسول الله

**அல்-ஹாபிழ், அஷ்ஷைய்க் அப்துல்லாஹ் அல்-ஹறரீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் தனது மன்ஹஜ் பற்றி பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்கள்**

“நாங்கள் முஸ்லிம்களைச் சேர்ந்தவர்களே. நாம் புதுமையான ஒரு பாதையையோ அல்லது இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன் தோற்றுவிக்கப்பட்ட நவீன சிந்தனைகளையோ அல்லது சுமார் 200 வருடங்களுக்கு முன் தோற்றுவிக்கப்பட்ட நவீன சிந்தனைகளையோ அல்லது 600 வருடங்களுக்கு முன்னதாக உருவாக்கப்பட்ட நவீன சிந்தனைகளையோ பின்பற்றுபவர்களல்ல.

நமது பாதையானது, பல நூறு மில்லியன் முஸ்லிம்கள் பின்பற்றி வரும் பாதையாகும். நம்பிக்கைக் கோட்பாடுகளில் அஷ்அரிய்யஹ்களாகவும், - இது பல நூறு மில்லியன் முஸ்லிம்களின் நம்பிக்கைக் கோட்பாடாகும்- வணக்க வழிபாடுகளில் ஷாபிஇய்யஹ்களாகவும் இருக்கிறோம். இமாம் அபுல் ஹஸன் அல்-அஷ்அரீ றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் ஸஹாபாக்கள் மற்றும் தாபிஊன்களின் நம்பிக்கைக் கோட்பாட்டை ஒன்று திரட்டி, தொகுத்தளித்த அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅஹ்வின் பெரும் இமாமாவார். இவர்கள் ஹிஜ்ரீ மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும், ஹிஜ்ரீ நான்காம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் வபாத்தானவருமாவார். இவர்கள் குர்ஆன், ஹதீஸ் மற்றும் பகுத்தறிவு ரீதியான ஆதாரங்களைத் தவிர வேறு எதனையும் கொண்டு வரவில்லை. ஷாபிஈ மத்ஹபானது அதற்கு 1200 வருடங்கள் சென்றுவிட்டன.

அரச அதிகாரிகள், அரச யாப்புகளை முன்வைத்து தீர்ப்புச் செய்வதனால் அவர்களை படுகொலை செய்வதை நாம் ஆகுமாக்குவோரல்ல. அவர்களை விட்டும் முற்றிலும் நாம் நீங்கியவர்களே!.

குப்ரில் வீழ்த்திவிடும் வார்த்தைகளைத் தெளிவுபடுத்துவதில் நாம் ஒன்றும் புதிய பாதையொன்றை வகுக்கவில்லை. நாற்பெரும் மத்ஹபுகளைச் சார்ந்த அறிஞர்களையே இவ்விடயத்தில் நாம்

பின்பற்றுகின்றோம். இது தொடர்பாக அல்-ஹாபிழ் முர்தழா அஸ்ஸபீதீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் "இஹ்யாஉ உலூமித்தீன்" என்ற கிரந்தத்தின் விரிவுரையில் "நான்கு மத்ஹபுகளைச் சேர்ந்த இமாம்கள், குப்ரை ஏற்படுத்தும் வார்த்தைகளைத் தெளிவுசெய்து தொகுத்துள்ளனர்" எனக் கூறியுள்ளார்கள்.

பண உதவிக்காக நாம் எந்தவொரு நாட்டுக்கும் வசப்பட்டவர்களல்ல. அல்லாஹ்வே நன்கறிந்தவன்.

மேற்குறித்ததல்லாத ஒன்றை யார் எங்கள் பக்கம் இணைப்பாரோ அல்லாஹ்வே அவரை விசாரணை செய்யப் போதுமானவன்."